
# திருமுறைகளில் அகப்பொருள் மரபுகளும் தொண்டு நெறிகளும்



முனைவர் க. முருகேசன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# திருமுறைகளில் அகப்பொருள் மரபுகளும் தொண்டு நெறிகளும்

முனைவர் க. முருகேசன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை – 600 113

திருமிகு இராமலிங்கம் அபிராமி அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர் : முனைவர் ஏ.ஆர்.ஏ. சிவகுமாரன், சிங்கப்பூர்)

வரிசை எண் : 9 நாள்: 1.2.2013

# நூல் விவரக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | திருமுறைகளில் அகப்பொருள் மரபுகளும் தொண்டு நெறிகளும் |
| நூலாசிரியர் | : | முனைவர் க. முருகேசன்<br>'கவின் 'இல்லம்'<br>எண். 19, வீனஸ் தோட்டம்<br>வடக்கு வள்ளி அஞ்சல்<br>கோவை -641 029 |
| பொதுப்பதிப்பாசிரியர் | : | முனைவர் தி. மகாலட்சுமி<br>ஆய்வுஅலுவலர்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மைச் சாலை<br>தரமணி, சென்னை-600 113 |
| பதிப்பாளர் (ம) | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மைச் சாலை<br>தரமணி, சென்னை-600 113<br>Ph: 22542992 |
| வெளியீட்டு எண் | : | 740 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு ஆண்டு | : | 2012 |
| பயன்படுத்திய தாள் | : | 18.6 கி TNPL Maplitho |
| நூலின் அளவு | : | 1/8 டம்மி |
| பயன்படுத்திய அச்சின் அளவு | : | 10 அளவு |
| மொத்த பக்கம் | : | 8+160 |
| மொத்த நூட்கள் | : | 1200 |
| விலை | : | Rs.75/- (Rupees Seventy Five only) |
| அச்சகம் | : | லட்சுமி ஏஜென்ஸீஸ்<br>23/11, பெருமாள் முதலி தெரு, ராயப்பேட்டை<br>சென்னை-600 014 |
| பொருள் | : | சைவத் தத்துவம் |

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் கோ. விசயராகவன், எம்.ஏ., எம்.ஃபில், பி.எட்., பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

# அணிந்துரை

உலக மொழிகள் பலவற்றுள் செம்மொழித் தகுதியும், உலகமெல்லாம் பரவியுள்ள தனிச்சிறப்பும் பெற்றுத் திகழும் தமிழ்மொழியில் படைக்கப்படுகின்ற ஒவ்வொரு நூலும் இம்மைக்கும் மறுமைக்குமான வாழ்வியல் நெறிகளைக் காலந்தோறும் வலியுறுத்திக் கொண்டுள்ளன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் அத்தகைய பணியைச் செம்மையாகச் செய்து வருகின்றது.

இந்நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ள பல்வேறு அறக்கட்டளைகளின் சார்பாக அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியும், சொற்பொழிவு நிகழும் நாளிலேயே நூலாக வெளியிட்டும் தமிழ்கூறு நல்லுலகத்திற்கு அரும்பணியாற்றி வருகின்றது. அவ்வகையில் நிறுவனத்தின் செயல்பாடுகளுக்கு உறுதுணையாகத் திகழும் திருமிகு இராமலிங்கம் அபிராமி அறக்கட்டளைச் சொற்பொழிவாக முனைவர் க.முருகேசன் அவர்களின் **திருமுறைகளில் அகப்பொருள் மரபுகளும் தொண்டுநெறியும்** என்னும் இந்நூல் வெளியிடப்படுகின்றது.

மானுடப் பிறப்பெடுத்த உயிர் இறைவனை விரும்பி விரும்பிக் காதலித்து அவனோடு இரண்டறக் கலந்து பேரானந்தத்தில் திளைக்கத் துடிக்கும் உள்ளத்தின் வெளிப்பாட்டை **அகப்பொருள் மரபுகள்** என்னும் அத்தியாயம் அழகுற எடுத்தியம்புகின்றது.

சமய நெறியில் பற்றும், அந்நெறியிலிருந்து வழுவாத உயர்பண்பும் அடியார்களின் உள்ளக் கோவிலில் முழுமையாக நிறைந்திருந்தமையால் ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டாக தொண்டுகள் அனைத்தும் அடியார்களுக்குச் செய்யும் சேவையாக மாறிய தன்மையை இந்நூலாசிரியர் **தொண்டுநெறியில் சுந்தரர்** என்னும் அத்தியாயத்தில் விளக்கிச் செல்கின்றார்.

சைவ சமய முக்திச் சாதனங்கள் மனித மனங்களைத் தன்வயமாக்கி, மெய்ஞ்ஞான ஒளிகாட்டி அருள் உள்ளமாக மாற்றும் வலிமை கொண்டவை என்பதை மெய்ப்பிக்கும் வகையில் **திருவைந்தெழுத்தும் திருநீறும்** என்னும் அத்தியாம் அமைந்துள்ளது.

சமய இலக்கியத் திறனாய்வு வரிசையில் இந்நூல் இடம்பிடிக்கும் என்பதிலும், தமிழ் உலகம் ஏற்றுப் போற்றும் என்பதிலும் சிறிதும் ஐயமில்லை. நூலாசிரியருக்கு என் வாழ்த்துக்கள். இந்நூலின் முழுமையாக்கத்திற்கு உதவிய இவ்வறக்கட்டளையின் பொறுப்பாளர் முனைவர் தி. மகாலட்சுமி அவர்களுக்கு என் பாராட்டுக்கள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் மாண்புமிகு **பள்ளிக்கல்வி, தொல்லியல், விளையாட்டு(ம)இளைஞர் நலம், தமிழ் ஆட்சிமொழி, சட்ட அமைச்சர் என்.ஆர். சிவபதி** அவர்களுக்கு எமது இதயங்கனிந்த நன்றி.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழக அரசின் **தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறைச் செயலாளர் முனைவர் மூ.இராசாராம் இ.ஆ.ப.** அவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றி.

இவ்வறக்கட்டளை எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும் மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள், இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் திருமதி பா. கௌசல்யா ஆகியோருக்கும் எம் பாராட்டுகள். இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த இலட்சுமி ஏஜென்ஸீஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

**இயக்குநர்**

# நன்றியுரை

**திருமுறைகளில் அகப்பொருள் மரபுகளும் தொண்டுநெறியும்** என்னும் தலைப்பில் அறக்கட்டளைச் சொற்பொழிவு வழங்க திருமிகு இராமலிங்கம் அபிராமி அறக்கட்டளையின் சார்பாக அனுமதி வழங்கிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மேனாள் இயக்குநர் (பொறுப்பு) **முனைவர் கா.மு.சேகர்** அவர்களுக்கும், இச்சொற்பொழிவை உரிய நேரத்தில் நடத்துவதற்கு உகந்தளித்த இந்நாள் இயக்குநர் **முனைவர் கோ. விசயராகவன்** அவர்களுக்கும், சைவ இலக்கியம் குறித்த சொற்பொழிவை வழங்கி நூல் வடிவில் செய்தளிக்க எனக்கு அறிவுறுத்தி, பல்லாற்றானும் பேருதவி செய்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பேராசிரியர் **முனைவர் தி.மகாலட்சுமி அம்மையார்** அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகளை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பணியாற்றக்கூடிய பேராசிரியப் பெருமக்களுக்கும், அலுவலக நண்பர்களுக்கும் என் நன்றி உரியது.

என்னுடைய செயல்பாடுகள் எவையாக இருந்தாலும் அவற்றிற்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கி, தாயினும் சாலப்பரிந்தூட்டும் எம் செயலர் பெருந்தகை **முனைவர் மா.ஆறுச்சாமி** ஐயா அவர்களுக்கும். என்னுடைய வளர்ச்சியில் பெருவிருப்பம் காட்டக்கூடிய எம் கல்லூரியின் முதல்வர் **முனைவர் இரா.தேவி அம்மையார்** அவர்களுக்கும் என் பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்நூல் உருவாக்கத்திற்கான தரவுகளைத் தேடுவதில் துணைபுரிந்த ஆசிரியப் பெருமக்கள் முனைவர் சி.சிவகாமி, முனைவர் வெ.விஜயலட்சுமி ஆகியோருக்கு என் நன்றி. நூலின் தட்டச்சுப் பிரதிகளை வாசித்துப் பார்த்துப் பிழை திருத்தம் செய்தளித்த தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் ஆ.சரவணன் அவர்களுக்கு நான் பெரிதும் கடமைப் பட்டுள்ளேன்.

பேசவும் எழுதவும் தூண்டுகோலாக அமைந்து வழிநடத்திச் செல்லும் எம் கல்லூரியின் மேனாள் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் வி.மு.உமாபதி அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த வாய்ப்பு எனக்குக் கிடைப்பதற்கு முதன்முதலாக விதையூன்றிய சென்னை மீனாட்சி மகளிர் கல்லூரித் தமிழ்த்துறை இணைப்பேராசிரியர் முனைவர் இரா.கலாவதி அவர்களுக்குக் கட்டாயம் நான் நன்றி கூறவேண்டும்.

**க.முருகேசன்**

# முகவுரை

அறநெறியில் வாழ்வைச் செலுத்தி அனைத்துலக உயிர்களையும் அரவணைத்து வாழும் வாழ்க்கையில் இன்பம் உண்டு என்று உணர்ந்த போதும் இறைப் பேராற்றலுக்கு முன்பாக அனைத்து உயிர்களும் சமம் என்று உணரத் தலைப்பட்டபோதும் மனிதனின் நெஞ்சில் குடிகொண்டிருந்த அஞ்ஞானம் மெல்ல மெல்ல நீங்கப் பெற்று, இறைநெறி ஒளிவீசத் தொடங்கியது.


இறைவன் மானுடச் சட்டை தாங்கி அவதாரமாகவும், குருவின் வடிவமாகவும் இம்மண்ணில் வந்து உயிர்களின் மேன்மைக்காக அருள் செய்கின்றான். அருளாளர்கள் மெய்ந்நெறியின்கண் நின்று இறைவனின் அவதாரச் சிறப்புக்களை உணர்த்தும் இலக்கியங்களாக வடித்தளித்தனர்.

ஆன்மாவை இறைவனை நோக்கிச் செலுத்துதல் சமயமாகும். இவ்வகையில் **அகப்பொருள் மரபுகள்** என்னும் தலைப்பில் அமைந்துள்ள கட்டுரை சைவ சமய நாயன்மார்கள் அகப்பொருட்துறையில் நின்று பாடியருளிய பாடல்களின் உள்ளார்ந்த மனவெளிப்பாடுகளும், அவற்றின் வழியாக வெளிப்படுத்தப்படுகின்ற அடியார்களின் பக்தித்திறமும் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்தலினால் இம்மைக்கு மட்டுமல்ல மறுமைக்கும் பெருமை கிட்டும் என்பதை உலகிற்குப் பறைசாற்றியவை சைவத் திருமுறைகள். **தொண்டுநெறி** என்னும் தலைப்பில் அமைந்துள்ள கட்டுரை சமுதாயத் தொண்டு என்னும் அர்ப்பணிப்பால் மக்களின் இதயங்களில் நீங்காவண்ணம் ஒளிவீசிக் கொண்டிருக்கும் வகையில் சமய அடியார்கள் ஆற்றிய அரும்பணிகளும், அவற்றின் வழியாகச் சமுதாய முன்னேற்றம் ஒன்றே தங்களுடைய உயிர்மூச்சாகக் கொண்டு பணிசெய்த பாங்கும் முன்மொழியப்பட்டுள்ளன.

சுந்தரமூர்த்தி நாயனாரின் தொண்டு உள்ளத்தையும், அவருடைய மெய்யான பக்தியையும் தொண்டையும் அறிந்து கொண்ட பெரியபுராண அடியார்கள் அவர்மேல் வைத்திருந்த அளவற்ற அன்பை **தொண்டுநெறியில் சுந்தரர்** என்னும் கட்டுரை படம்பிடித்துக் காட்டுகின்றது.

சைவ சமயம் திருவைந்தெழுத்து, திருநீறு, கண்டிகை என்னும் மூன்றையும் முக்திச் சாதனங்களாகக் கொண்டுள்ளது. ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக்கூத்தில் ஐந்தொழில் புரிந்து, **சிவாயநம** எனும் ஐந்தெழுத்தால் திருவுருக்கொண்டு விளங்கக்கூடிய திருநீற்றின் பெருமைகளை புலப்படுத்திக் காட்டும் நோக்கில் **திருவைந்தெழுத்தும் திருநீறும்** என்னும் கட்டுரை அமைந்துள்ளது.



## ஆசிரியர் குறிப்பு

முனைவர் க.முருகேசன் கொங்குமண்டலமாம் கோவையில் 1965ஆம் ஆண்டு வேளாண் குடும்பத்தில் பிறந்தவர். கோவை அரசு கலைக் கல்லூரியிலும், பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரியிலும் பயின்றவர். தற்போது கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரி தமிழ்த்துறைத்தலைவராகப் பணியாற்றி வருகின்றார். தமிழ்ச்செம்மொழி இலக்கியங்களாகிய சங்க இலக்கியத்திலும், சைவத்திருமுறை இலக்கியங்களிலும் பெருவிருப்பம் கொண்டவர். இருபதாம் நூற்றாண்டின் புத்திலக்கிய வடிவங்களாகப் பரிணமித்துள்ள புதுக்கவிதை, சிறுகதை, புதினம் ஆகியவற்றில் தொடர்ந்த வாசிப்பும், தான் நேசித்துப் பயின்ற இலக்கியத்தின் சாரங்களைக் கட்டுரைகளாகவும், நூல்களாகவும் வெளியிடக்கூடிய ஆற்றலும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர். இவருடைய மேற்பார்வையின்கீழ் ஆய்வு செய்து 12ஆய்வாளர்கள் முனைவர் (Ph.D.) பட்டங்களையும், 67 ஆய்வாளர்கள் ஆய்வியல் நிறைஞர் (M.Phil) பட்டங்களையும் பெற்றுள்ளனர் என்பது சிறப்புக்குரியது. இவருக்கு வாய்க்கப் பெற்ற ஆய்வுப் புலமை கொண்டு நூலாசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் தமது பங்களிப்பை உறுதி செய்துள்ளார். அவ்வகையில் 10 நூல்களுக்கு நூலாசிரியராகவும், 13 நூல்களுக்குத் தொகுப்பாசிரியராகவும், 3 நூல்களுக்குப் பாடநூல் தொகுப்பாசிரியராகவும் பணியாற்றியுள்ளார். தமிழ்த்துறையின் சார்பாகப் பன்னாட்டுக் கருத்தரங்குகள், பயிலரங்குகள், தேசியக் கருத்தரங்குகள் ஆகியவற்றைத் திட்டமிட்டு நடத்தி வருவதுடன், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், பல்கலைக்கழக நிதி நல்கைக்குழு போன்ற நிறுவனங்களின் நிதியுதவியுடன் பல்வேறு ஆய்வுத்திட்டப் பணிகளைச் செம்மையாக மேற்கொண்டுள்ளார். கோவை கம்பன் கழகம், கோவை இளங்கோவடிகள் இலக்கிய மன்றம் ஆகிய அமைப்புகளின் இணைச்செயலராகவும், தமிழகத்திலுள்ள பல தன்னாட்சிக் கல்லூரிகளில் பாடத்திட்டக்குழு உறுப்பினராகவும் பணியாற்றி வரும் இவர் சிறந்த பேச்சாளர் ; அனைவரிடமும் எளிமையாகப் பழகக்கூடிய பண்பாளர் ; எடுத்த பணியைச் சிரமேற்கொண்டு வெற்றிகரமாக நிறைவு செய்யக்கூடிய வல்லமை பெற்றவர்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அகப்பொருள் மரபுகள் | 1 |
| 2. | தொண்டுநெறி | 70 |
| 3. | தொண்டுநெறியில் சுந்தரர் | 112 |
| 4. | திருவைந்தெழுத்தும் திருநீறும் | 136 |

# 1. அகப்பொருள் மரபுகள்

இல்லறமே நல்லறமாகப் போற்றக்கூடிய செழுமை சங்க இலக்கியங்களுக்கு மட்டுமின்றிப் பக்தி இலக்கியங்களுக்கும் உண்டு. மானுடர் இருவர் இணைந்து கூடிக் களித்து வாழும் வாழ்வில் மக்கட்பேறும், மகிழ்வுறு செல்வங்களும் இன்பத்தை நல்கியதைப் போலவே, மானுட உயிர் இறைவனை அடையும்போதும் இன்பத்தில் திளைக்கின்றது. படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில்களைச் செய்யும் இறைவனைப் பணிந்து போற்றித் துதிப்பதே மானுட உயிர்களின் வாழ்வியல் கடமை என உணர்த்தப்பட்டபோதும், அதற்கும் மேலாக இறைவனின்மேல் காதல் கொண்டு கசிந்துருகும் அகத்துறைச் சிந்தனைகளும் தோன்றலாயின. சைவ, வைணவ இலக்கியங்களில் அகத்துறையின்கண் நின்று இறைவனைத் தலைவனாகப் பாவித்துப் பாடும் பனுவல்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன.

வாழ்க்கையிலிருந்து தோன்றுகின்ற இலக்கியங்கள் மக்களுடைய வாழ்க்கையில் கண்டவை, நுகர்ந்தவை, எண்ணியவை ஆகியவற்றைப் புலப்படுத்துகின்ற பதிவேடுகளாகத் திகழ்வதால் அவை வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் காலக்கண்ணாடிகள் எனச் சுட்டப்படுகின்றன. மேலும் இவை ஒரு குறிப்பிட்ட மொழியினரின் பண்பாட்டையும் கலாச்சார மேன்மைகளையும் உணர்த்தக்கூடிய கருவூலங்களாகவும் திகழ்கின்றன. வாழ்க்கை என்பது இன்பம் துன்பம் ஆகியன இரண்டறக்கலந்த கலவையாகும். ஆதலின் சமுதாயத்தில் பல்வேறுபட்ட நிலையில் வாழும் மக்களின் நற்காதல் கூறுகளைத் தெரிவு செய்து அவற்றைக் கொண்டு பண்பும் பதமும் இனிமையும் கொண்ட இலக்கியங்களாகப் புலவர்கள் படைத்தளித்துள்ளனர்.

## அகமா? புறமா?

பல்வேறு விதமான கருத்துக்களுக்கும், விவாதங்களுக்கும் இடமளிக்கும் தன்மை கொண்டவை பக்திப் பனுவல்களாகும். பக்தி என்பது வரம்பில்லாத அன்பினால் உண்டாவது. கடவுளிடம் மனிதனுக்கு ஏற்படும் அன்பே பக்தி எனப்படுகிறது. கடவுளும் மனிதனும் ஒருவருக்கொருவர் தம் உள்ளத்து அன்பால் ஐக்கியமாவதே பக்தி என்று கூறப்படுகின்றது. பக்தனின் அன்பைக் கண்டு அவன்பால் பெரும் கருணைகொண்டு அவனோடு இறைவன் ஐக்கியமாகி விடுகிறார்.

> கடவுளிடத்தில் மனிதன் கொள்ளும் பக்தி அவன் ஆன்மா உய்வுபெற ஒரு பற்றுக்கோடாகப் பயன்படுகிறது. பக்தர்களுக்கும் கடவுள் அன்புச் செல்வம் ஆவார். அவர்தம் நெருங்கிய அன்புக்கு உரியவராவர் என்றும், தமிழில் அன்பு என்ற சொல்லிற்குக் காதல், நட்புரிமை, கருணை, பக்தி எனப் பல பொருள்களைக் கொள்ளலாம். சமய நூல்களில் அது கடவுள்பால் கொள்ளும் அன்பினை அல்லது கடவுளிடம் அடைக்கலம் அடைவதைக் குறிக்கிறது.

என்றும் சுட்டப்படும் கூற்று இங்குக் குறிப்பிடத்தக்கது (**மரியசூசை தவமணி, சைவ சித்தாந்தத்தில் கடவுளின் அன்பு, ப.43**). நெருங்கிய காதலுடைய இறைவனைத் தன்னகத்தே கொண்ட பக்தனின் அகமனவுணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளத் தக்கவன் இறைவன் என்பதை அகப்பொருள் துறைசார்ந்த பக்திப் பனுவல்கள் மெய்ப்பிக்கின்றன.

இறைவனிடம் காதல் கொண்ட அப்பர் பெருமான் இறைவனைக் **காதலான்** எனக் குறிப்பிடுகின்றார். காதல் புரிந்தால் குருடர்க்கும் காட்சியளிப்பன அவன் திருவடிகள் என்பது அப்பர் வாக்கு (அப்பர், **தேவாரம்**, பதிகம், 298, பா. 8, பதிகம், 261, பா. 8).

இறைவனிடத்தில் கொண்ட பக்தியின் காரணமாகத் தோன்றுவதே மெய்யுணர்வு என்று கூறலாம். இறைவனோடு கலந்து பெற்ற அனுபவத்தையே திருமாலடியார்களும் சிவனடியார்களும் முறையே நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலும், திருமுறைகளிலும் பாடிச் சென்றுள்ளனர்.

> மேலைநாட்டு அறிஞர்களின் கருத்துப்படி தியானம் கலந்துநிற்றல் அல்லது பிற உள் அனுபவங்களால் உள்ளொடுங்கி நிற்றல் அல்லது பேரின்பநிலையில் இறைவனோடு கூடி நிற்றலையே மெய்யுணர்வு என்று கூறுவர். மக்களுயிர் இறைவனோடு கொள்ளும் ஐக்கிய உறவையே இது உணர்த்தும்

என்று விளக்குகின்றார் தாஸ்குப்தா (**Das Gupta.S.M., Hindu Mysticism, Preface**, 1959). மானுடக் காதலாய் முன்பு பூத்த அகப்பொருள் பாடல்களில் இறை - உயிர்க்காதலாகப் பரிணாமம் பெற்றுள்ள வளர்ச்சியைக் காணமுடிகின்றது.

> நம்மாழ்வார், ஆண்டாள் பாசுரங்களிலும், மூவர் முதலிகள் பதிகங்களிலும், திருக்கோவையாரிலும், பிற திருமுறைகளிலும் காணப்படும் அகப்பொருள் கூறுகளை அப்பெயரால் அழைத்தலாகாது

எனத் த.வசந்தாள் கடுமையாக மறுத்து,

> அகப்பொருள் மானுடம் பற்றியது. இரு உள்ளங்களின் இரு உடல்களின் கூட்டுறவைப் பாடுவது; பக்தி இலக்கியம் ஆன்மாவுக்கும் பரமான்மாவுக்கும் இடையேயுள்ள உறவைப்பற்றியது; அகத்திணைக் காதல் அனைத்து மானுட உயிர்களும் அனுபவிக்கும் தன்மையது அன்று; எனவே மேற்காணும் நூல்கள் அகப்பொருள் என்று எண்ணத்தக்கன அல்ல

என அவர் கருத்துரைக்கின்றார். இதற்கு அரண்சேர்க்கும் வகையில் ஆண்டாள் காதல் அகத்திணையாகாது - மெய்யுறல் இன்மையின் எனக் கூறும் வ.சுப மாணிக்கம் கருத்தினை எடுத்துக்காட்டுகின்றார் (த.வசந்தாள், **தமிழிலக்கியத்தில் அகப்பொருள் மரபுகள்**, ப. 356).

ஆனால் சிற்பி பாலசுப்பிரமணியம் தமது படைப்பும் பார்வையும் என்னும் நூலில்,

> குறிப்பிட்ட எல்லை வகுத்துக்கொண்டு, ஆணும் பெண்ணுமாகிய மக்கட்கிடையே தோன்றும் மெய்யுறல் உணர்வோடு தோன்றுவதே தொல்காப்பியர் கண்ட அகம் என்பது உண்மையே. ஆயினும் இவ்வுணர்வு காலத்துக்கேற்ற மாறுதல்களை ஏற்காமல் தனித்து நிற்க வாய்ப்பில்லை. உடல்சாராது உள்ளங்கள் மட்டுமே நேசிக்கும் காதல் இன்று 'Platonic Love' என்ற வகையில் ஏற்கப்பட்டுள்ளது. அவ்வாறே ஒருவர். தம்மைப் பெண்பாலாகக் கற்பனை செய்து கொண்டோ அல்லது இயல்பாகவோ மானுடக் காதலைத் தெய்வத்தளத்துக்கு உயர்த்திக் காண்பதையும் அகப்பொருள் மரபின் இன்னொரு பரிமாணமாகக் கருதுவதில் தவறில்லை

எனக் கூறுகிறார். இந்நோக்கில் ஆண்டாள் திருப்பாடல்களைக் காண்பதற்கு இடமுண்டு (சிற்பி பாலசுப்பிரமணியம், **படைப்பும் பார்வையும்**, பக். 80-81).

இறைவனாகிய தலைவனைத் தம்நெஞ்சில் இருத்திக் தாமும் அவனுடன் கலந்து, எல்லையிலா உவகை கொண்டு அந்தத் தலைவனின்

பலவாகிய குணங்களைக் கூறி நெஞ்சுருகப் போற்றுதற்கு இறையடியார்களுக்கு அகத்துறைப் பாடல்கள் உத்தியாயின.

> சங்க காலத்தில் சிறப்புற்றிருந்த இயற்கை நெறியின் ஓர் அம்சமான உலகியற் காதல் பக்திப் போர்வையிலே மீண்டும் தலைகாட்டுகிறது. புலவர்கள் தங்கள் இதயங்களைத் திறந்து இயல்பாக எழும் காதலுணர்ச்சிகளைக் கடவுள்பேரில் வெளியிடுகின்றனர். கோகுலத்திலே, பிருந்தாவனத்திலே, கண்ணன் கோபிகைகளுடன் செய்த லீலைகள் ஆழ்வார்கள் பக்திக் காதலைப் பாடும்போது அடிப்படையாக அமைந்து அப்பாடல்களுக்கு இயற்கைத் தன்மையை அளிக்கின்றன

என்னும் கூற்று நோக்கத்தக்கது (ஆ.க.பார்த்தசாரதி, **பெரியாழ்வார் பாசுரங்கள்**, ப. 285).

சமயப் பாக்களில் இடம்பெறும் அகப்பொருள் பாடல்களின் தலைவன் இறைவன். ஆகவே தலைவன் கூற்றாக வரும் பகுதிகள் அரிதாகவும் தலைவி, தோழி, தாயர் ஆகியோர் கூற்றாக வரும் பாடல்கள் மிகுதியாகவும் காணப்படுகின்றன. அருளாளர்களின் பாடல்கள் ஆன்மாக்கள் இறைவனை அடைந்து இன்புறுவதையே குறிக்கோளாகக் கொண்டவை. எனவே தலைவனை அடைய விரும்பும் தலைவியின் நிலை இவற்றில் விரிவாகக் கூறப்படும். தோழி, தாயர் கூற்றாக வரும் பாக்களும் தலைவியின் உள்ள நிலையை விளக்குவனவாகவே உள்ளன. சமயச் சான்றோர்களின் இறையனுபவம் சிற்றின்பக் காதற்பாக்களாக வெளிவந்து, பேரின்பத் தேன் சொரியும் பக்தி மலர்களாகக் காட்சியளிக்கின்றன.

மனித வாழ்வியலை அகம், புறம் எனப் பகுத்துக்கொண்ட பண்பாட்டுச் சிறப்பு தமிழர்க்கு உண்டு. மாந்தர்தம் இன்ப ஒழுக்கத்தின் ஒழுகலாறுகளை, 'அன்பின் ஐந்திணை' என்ற வரையறைக்கு உட்படுத்திச் சங்கப்புலவர்கள் சொல்லோவியங்கள் தீட்டி மகிழ்ந்தனர். சங்கஇலக்கியம் கட்டமைக்கின்ற கற்புநிலை திரியாத அன்பொழுக்க ஒழுகலாறுகளை அடிப்படையாகக் கொண்டு அருளாளர்கள் தம் பக்தித்திறம் மாறாத இறைக்காதலையும் பாடி மகிழ்ந்துள்ளனர். புலனுணர்வுகள் கடந்து உணரத்தக்கதாகிய பேரின்ப உணர்வை, மனித அறிவுக்குப் புலப்படுத்துவதற்கு அவர்கள், புலனுணர்வுகளின் வழியமைந்த அன்பொழுக்க நிகழ்வுகளைக் கருவியாகக் கொண்டனர். சிற்றின்பத் துறைகாட்டிப் பேரின்பம் உணர்த்தவல்ல அவர்களின்

அகத்துறைப் பாடல்கள், கற்போரின் பேரின்பக் காதலை மிகுவித்து மேன்மைநிலை தரவல்லன.

இவ்உலகம் ஆணும், பெண்ணுமாக அமைந்த உயிர்த் தொகுதியால் ஆனது. உலக உயிர்களிடத்தில் மட்டுமல்லாது, உலகைக் காக்கின்ற இறைவனிடத்திலும் ஆண், பெண் என்ற நிலைகள் அமைந்துள்ளன.. ஆண் என்பது சிவம் என்றும், பெண் என்பது அச் சிவத்தை இயக்கும் சக்தி என்றும் சைவசித்தாந்தம் கூறுகிறது. உலகைக் காக்கின்ற பெருந்திறமும், பேராண்மையும் கொண்ட இறைவனான ஆண்மகனின் முன்பாக, உலக உயிர்கள் அனைத்தும் பெண்தன்மை உடையவையே என்று வைணவச்சித்தாந்தம் மொழிகின்றது.

இவ்வாறு ஆணும் பெண்ணுமாக அமைந்த உயிர்த்தொகுதிக்கு **'இன்ப நாட்டம்'** என்பது இயற்கைப் பண்பாகும்.

> **எல்லா உயிர்க்கும் இன்ப மென்பது**
> **தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும்**
>
> (தொல்.பொருளியல், நூற்பா 29)

என்பார் தொல்காப்பியர். தத்துவவியலார் இவ் இன்பநிலைகளை இரண்டாகப் பகுத்துரைப்பர். அவை: ஒன்று சிற்றின்பம்; மற்றொன்று பேரின்பம், நிலையில்லாத உடலைக்கொண்டு, புலனுணர்வுகளின் வழியே பெறுகின்ற நிலையில்லாத இன்பம் சிற்றின்பமாகும். இச் சிற்றின்ப நுகர்ச்சியென்பது உயிர்கொண்ட உடலுக்கேயன்றி, உயிர்க்கன்று. பேரின்பமென்பது, நிலையில்லாத உடலைப் பண்படுத்தி உயிர்பெறக்கூடிய நிலையான இன்பமாகும். புலனுணர்வுகள் கடந்த நிலையில், பேரின்பமயமான இறைவனோடு, உள்ளத்தால் ஒன்றி, உணர்வால் நிலைபெற்று, உயிர்பெறக்கூடிய இன்பமே பேரின்பமாகும்.

சிற்றின்ப நாட்டம் பெருகப் பெருக, உயிரின் வினைகள் பெருகிப் பிறவித்துயர் மிகும். மாறாகப் பேரின்ப நாட்டம் பெருகப் பெருக, பிறவித்தளைகள் நீங்கிப் பிறப்பறுந்து உய்வுபெறலாம்.

இப் பேருண்மையை உணர்ந்தே அருளாளர்கள், சிற்றின்ப நாட்டமொழித்துத் தம்மைப் பேரின்பப் பெருநெறியில் நிலைநிறுத்திக் கொண்டனர். அவர்கள், தாம்பெற்ற பேரின்பப் பெருநிலையை மக்களுக்கும் உணர்த்த எண்ணினர். அதற்கென, மக்களுக்குப் பேரின்பம் உணர்த்தப் பாடிய அருட்பாடல்களில், அகப்பொருளையும் பாடுபொருளாகக் கொண்டனர். இஃது சிற்றின்பத் துறைகாட்டிப் பேரின்பப் பயன் விளைவிக்கின்ற இலக்கிய உத்தி எனலாம். இறையடியார்கள் தம் திருப்பாடல்களில் சிற்றின்பத் துறையினைப் பேசி, பேரின்பம் உணர்த்துகின்ற தன்மையினை, ப.அருணாசலம்,

> அடியவர்கள் அனுபவித்த சிவபோதத்தை' விளக்க வேண்டின் உலகியல் இன்பத்தைத் துணையாகக் கொண்டே விளக்க முடியும். சாயுஜ்யப் பேற்றை விளக்கும் போதும், 'நாயகன் நாயகி' பாவத்தைக் கொண்டே விளக்குவர். சிவானந்தத்தை விளக்குவதற்கு உலகியல் மொழிகள் வலுவற்றதாக இருப்பதால் இவ்வாறு விளக்குகின்றார்கள் என்பதல்லாது சிவபோகம் நாயகன் நாயகி இன்பம் போன்றது என்பது பொருளன்று. அவ்வின்பம் இறைவன் போன்று ஒப்புமை கூற முடியாது ஆயினும் உவமானத்தாலேயே அறியப்படுவது எனலாம்

எனக் குறிப்பிடுகின்றார் (**பக்தி இலக்கியம்**, பக்.223-224).

## அகப்பொருள் மரபுகள்

இலக்கியங்கள் அகம், புறம் என்ற இரு வகைப்பாட்டிற்குள் அடங்கியிருக்கின்றன. மனித உணர்வுகள் எண்ணிறந்தவையாயினும், நுட்பமான காதல் உணர்வைப் பாடும் பகுதியை **அகம்** என்ற குறியீட்டில் அடக்கினர். **அகம்** என்ற சொல் **வீடு** என்ற பொருள் படும். **அகம் புகல் மரபின் வாயில்கள்** (தொல். பொருள். கற்பு. நூற்.11) என்று **தொல்காப்பியம்** குறிப்பிடுகின்றது. இளம்பூரணர், அகப்பொருளாவது **போகநுகர்ச்சியாகலான் அதனான் ஆயபயன் தானே அறிதலின் அகம் என்றார்** எனத் தமது உரையில் விளக்கம் தந்துள்ளார்.

**அகம்** என்ற சொல்லிற்கு **உள்ளம்** என்ற பொருளும் உண்டு. சுருங்கக் கூறின், ஆணும் பெண்ணும் கூடி இன்பம் நுகர்ந்து பின் ஊரும் உலகமும் அறியத் திருமணம் புரிந்து, சான்றோர் போற்ற வாழும் உலகியல் வாழ்க்கை பற்றிய பொருள்களை எல்லாம் உள்ளடக்கியதே அகப்பொருள் ஆகும். அகம் என்பது உள்ளத்தின் கண் நிகழ்வது. இதை உணர்வால் அறிய முடியுமேயன்றி, இவ்வாறெனப் புறத்து எடுத்துரைக்க இயலாதது. மனத்தினால் அறியும் மாண்புடையது.

> அகப்பொருளாவது போக நுகர்ச்சியாகலான் அதனான் ஆய பயன் தானே அறிதலின் அகம் என்றார்

(தொல்காப்பியர், தொல்காப்பியம், பொருளதிகாரம், இளம்பூரணர் உரை, ப.13) என்று இளம்பூரணரும்,

> ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக

> இவ்வாறிருந்தது எனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்புறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார்

என்று நச்சினார்க்கினியரும் (தொல்காப்பியர், **தொல்காப்பியம்**, பொருளதிகாரம்-அகத்திணையியல், நச்சினார்க்கினியர் உரை, ப.3) தமது உரையில் விளக்கம் அளிக்கின்றனர்.

மற்றொரு பகுதியான புறம் பற்றிப் பேசும்போது இதனை (அகத்தை ஒழிந்தன)

> ஒத்த அன்புடையார் தாமேயன்றி எல்லார்க்கும் துய்த்துணரப் படுதலாலும், இவை இவ்வாறு இருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுதலானும் அவை புறம் எனப்படும் என்று விளக்கம் தருவர்

(தொல்காப்பியர், **தொல்காப்பியம்**, பொருளதிகாரம்-அகத்திணையியல், நச்சினார்க்கினியர் உரை, நூ.3).

அகத்தே நிகழ்கின்ற அன்பாகிய ஒழுக்கத்தைப் பற்றியது அகத்திணை. காதலை இவ்வகையாகத்தான் பாடவேண்டும் என்ற கட்டுப்பாடே அகத்திணைக்குரிய சிறப்பாகும். அதனைச் சொல்லும் முறையிலும் கட்டுப்பாடுள்ளது. இது அன்புக்காதலை மட்டுமே பாடும். அறிவுறுத்தும் இயல்பாகச் சில சிக்கல்கள் தோன்றும்போது அவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்றும் காட்டும். இது களவு, கற்பு என்ற இருவகைக் கைகோள்களாகப் பிரியும்.

## களவு

அன்பு, அறிவு, அழகு முதலியவற்றால் ஒத்த தன்மையிலுள்ள தலைவனும், தலைவியும் நல் ஊழின் செயலால் தாமே ஒரு தனியிடத்தில் எதிர்ப்பட்டுப் பிறர் அறியாமல் கூடி ஒழுகுதல் ஆகும். தலைவன் ஒருவன் ஒத்த அன்புடைய தலைவியின் உடன்பாட்டினை அறிந்து, அவளது சுற்றத்தார் அறியாமல், அவளுடன் உள்ளம் கலந்து பழகுதல், ஆதலால் இது சிறப்புடைய அறமாகக் கருதப்படுகிறது. தலைவன் தலைவி ஆகிய இருவரும் தம்முள் வேறுபாடின்றி, ஒருவரையொருவர் இன்றியமையாத நட்பினராகி, உள்ளப் புணர்ச்சி கொண்டு, உயிர்வாழும் அளவும் அன்புடன் இயைந்த வாழ்க்கையினராய் ஆவதற்குக் களவு அடிப்படையாகின்றது. இக்களவொழுக்கம் பற்றி இளம்பூரணர்,

> களவாவது பிறர்க்குரிய பொருளை மறையிற்கோடல் இன்னதன்றி, ஒத்தார்க்கும், மிக்கார்க்கும், பொதுவாகிய

> கன்னியரைத் தமர் கொடுப்பக் கொள்ளாது, கன்னியர் தம் இச்சையினால் தமரை மறைத்துப் புணர்ந்த பின்னும் அறநிலை வழாமல் நிற்றலாலும் காத்தலால் இது அறமாயிற்று

என்று விளக்கம் அளிக்கின்றார்.

## கற்பு

களவின் பின் கட்டாயம் கற்பொழுக்கம் நடைபெற வேண்டும் எனச் சான்றோர் கருதினர்.

> **கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**
> **கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்**
> **கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே**

(தொல். பொருள். கற்பு. நூ.1)

கணவனே சிறந்த செல்வம் என்று தலைவிக்கு அவளுடைய பெற்றோர்கள் கற்பிப்பதாலும், சான்றோர்கள் இன்னவாறு நடந்து ஒழுகுதல் வேண்டும் எனத் தலைவன், தலைவியருக்குக் கற்பிப்பதலாலும் இது கற்பு எனப்பட்டது.

> **நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்**
> **வாய்மொழிப் புலவீர் கேண்மின் சிறந்தது**
> **காதல் காமம் காமத்துச் சிறந்தது**
> **விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி . . . .**
>
> **அதனால் அகறல் அறியா அணியிழை நல்லார்**
> **இகல்தலைக் கொண்டு துனிக்கும் தவறிலாத்**
> **தள்ளாப் பொருள் இயல்பின் தண்டமிழ் ஆய்வந்திலர்**
> **கொள்ளார் இக்குன்று பயன். . . .**

(பரிபாடல் : ஒன்பதாம் பாடல், வரிகள் : 12-15, 23-26)

என்று களவுநெறியாகிய அகப்பொருளே **தமிழர் நெறி** எனச் சுட்டுகின்றது பரிபாடல்.

இவ்வாறு களவின்வழி வந்ததும், களவின்வழி வாராமலும் கற்பொழுக்கத்தை மேற்கொண்ட கணவன்-மனைவி மக்களொடு மகிழ்ந்து மனையறம் காத்து, அறத்தினை விரும்பிய உறவினரோடு சிறந்ததாகிய செம்பொருளை இடைவிடாது நினைத்தல் வேண்டும் என்பார் தொல்காப்பியர்.

வாழ்வின் நிறைவில் துறவு மேற்கொண்டு வீட்டின்பம் பெறமுயலவேண்டும் என்பதே இல்லறத்தின் பயன் என்று அகப்பொருள் நூல்கள் கூறுகின்றன. இதனால் பிறப்பு, பிணி, மூப்பு, இறப்புக்களால் துன்பமடைந்து அத்துன்பங்களிலிருந்து விடுதலை பெறும் வழிதெரியாமல் வருந்தும் மக்கள், அவர்கள் இயல்பாக விரும்பும் இன்பத்துறையில் சிறந்ததோர் இன்பம் இதுவெனக் காட்டி அதனை அடைந்து வையத்துள் வாழ்வாங்கு வாழச்செய்து அதுவும் நிலையில்லாததேயென அவர்கள் உணர்ந்தபின், என்றும் நிலையானதொரு பேரின்பம் உள்ளது; அதனைப்பெற முயலுங்கள் எனத்தூண்டுவதே அகப்பொருளின் உட்கோள் என்று **கலைக்களஞ்சியம்** விளக்கம் தருகின்றது. இதைத்தான்,

> In this age this message of these verses is couched in such a way as to appeal to the learned probably because of the disturbed conditions it is an age which desires to safeguard the chastity of women by not permitting their free movement on the street

(Meenakshi sundaram T.P., **A History of Tamil Literature,** p.69) என்று தெ.பொ.மீனாட்சிசுந்தரம் சுட்டுகின்றார். எனவே அகப்பொருளை உயர்த்திப் பேசிய தமிழ்மரபு அகப்பொருள் மரபே என்பது விளங்கும்.

## அகப்பொருளும் பக்தியும்

இவ்வுலகிலுள்ள அனைத்து உயிர்களும் அனுபவித்து இன்புறுவது அகமாகிய காதல் இன்பமே. சங்க இலக்கியப் பாடல்களில் அகத்திணை பற்றிய பாடல்களே அதிகமாக இடம்பெற்றுள்ளன. அன்பின் ஐந்திணைகளில் மானுடக் காதல் மிளிர்வதும், வளர்வதும், களவு நெறியில் நின்று ஒழுகுவதும் சங்ககால மரபுகளாக இருந்தன. பக்தி இலக்கியக் காலத்தில் இறைவனைக் காதலனாக எண்ணிக் கொண்டு, அவனை வாழ்வின் ஆதாரமாக உருவகித்துக் கொண்டு, அகத்திணைக் கோட்பாடுகளின் அடிப்படையில் பாசுரங்கள் பாடப்பட்டன. மானுடக் காதல்வேறு; இறைவனோடு கொள்ளும் தெய்வீகக் காதல் வேறு; இதை ஒன்றாக வைத்து எண்ணுதல் இயலாது.

பக்திப் பனுவல்களில் ஆடவர், பெண்டிர் என்ற நிலைமாறி இறைவன் ஒருவனே தலைவன். அவனைப் பாடும் அடியார்கள் ஆணாக இருப்பினும், பெண்ணாக இருப்பினும், பால்வேறுபாடு கருதாது அனைவரும் தலைவியராக மாறும் நிலையினைப் பக்திப் பனுவல்களில்

காணமுடிகின்றது. இதனை நாயக - நாயகி பாவம் என்று கூறுவர். இவ்வாறு இறையடியார்களுள் நாவுக்கரசப் பெருமான் இறைவன்மேல் கொண்ட பக்தியானது அகத்திணை மரபின் வழிப்பட்டதாக எண்ணுவதற்குச் சான்றுகள் அதிகமாக உள்ளன.

பக்தி என்பது வரம்பில்லாத அன்பினால் உண்டாவது. கடவுளிடம் மனிதனுக்கு ஏற்படும் அன்பே பக்தி ஆகும். கடவுளும் மனிதனும் ஒருவருக்கொருவர் தம் உள்ளத்து அன்பால் ஐக்கியமாவதே பக்தி என்று கூறப்படுகின்றது. பக்தனின் அன்பைக் கண்டு, அவன்பால் பெருங்கருணைகொண்டு அவனோடு இறைவன் ஐக்கியமாகி விடுகிறான். கடவுளிடத்தில் மனிதன் கொள்ளும் அன்பு அவன் ஆன்மா உய்வுபெற ஒரு பற்றுக்கோடாக அமைகிறது. பக்தர்களுக்கும் கடவுள் அன்புச் செல்வம் ஆவார். அவர் தம்நெருங்கிய அன்புக்குரியவர் ஆவார் எனக் குறிப்பிட்டுள்ளார் (மரியசூசை தவமணி, **சைவ சித்தாந்தத்தில் கடவுளின் அன்பு**, ப:43). இக்கருத்து நெருங்கிய காதலுடைய இறைவனைத் தன்னகத்தே கொண்ட பக்தனின் அகமனவுணர்வுகளை மெய்ப்பிக்கின்றது.

## மெய்யுணர்வு

அன்பினால் இறைவனை அடையத் துடிக்கும் ஆன்மாவானது, தன்னைப் பெண்ணாகப் பாவித்து, இறைவனைத் தலைவனாகக் கொண்டு அன்பு செலுத்துகின்றது. ஆண் - பெண் என்ற உணர்வு உயிர் பற்றியதே. அருளாளர்கள் பாடிய அருட்பாசுரங்களில் இறைவனைக் கூடுவதிலுள்ள உயிர்த் துடிப்பினையே காணமுடிகின்றது.

> கடவுட் காதலைப் பாடியருளிய நாயன்மார்களும், ஆழ்வார்களும், மக்கட் காதலுக்கென வகுத்த அகத்திணைச் சுவடுகளைப் பின்பற்றியதாலும், தெய்வ அன்பு அக இலக்கியத் தடத்துப் பாய்ந்ததாலும், தமிழகத்தில் இறைப்பாசுரங்கள் புதுமையும் தனித் தன்மையும் பெற்ற ஓர் இலக்கிய உலகமாக விளங்குகின்றன

என்று ரா.பி.சேதுப்பிள்ளை (**திருவள்ளுவர் நூல்நயம்**, ப. 86) குறிப்பிட்டுள்ளார்.

தியானம், கலந்து நிற்றல் அல்லது பிற உள்அனுபவங்களால் உள்ளொடுங்கி நிற்றல் அல்லது, பேரின்ப நிலையில் இறைவனோடு கூடி நிற்றலையே மெய்யுணர்வு என்று கூறுவர். மக்களுயிர் இறைவனோடு கொள்ளும் ஐக்கிய உறவையே இது உணர்த்தும்.

இறைவனிடத்துப் பற்றுக் கொண்டு அதன் மூலமாக உலகப் பற்றினை நீக்க வேண்டும் என வள்ளுவப் பெருந்தகை,

**பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்**
**பற்றுக பற்று விடற்கு** (குறள் : 35 : 10)

என்று கூறுகின்றார்.

## அடியார்களின் பாடல்களில் அகப்பொருள்

அப்பர் பெருமான் அருளிய பாடல்களுள், நூற்றைம்பதுக்கும் மேற்பட்ட பாடல்களில் அகப்பொருள் செய்திகள் பதிவாகியுள்ளன. இறைவனைத் தலைவனாகவும், தம்மைத் தலைவியாகவும் கொண்டு தாம்அனுபவித்த அனுபவங்களைப் படர்க்கைக் கூற்று முறையில் அமைத்துள்ளார்.

**தனக்குவமை இல்லாதான் தாழ்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது** (குறள் எண்: 7)

என்று வள்ளுவப் பெருந்தகையும், இறைவனின் திருவடியைத் தொழ மறந்தவர்தம் மனக்கவலையை மாற்றுவது கடினமாகும். அவ்வாறு மறவாது போற்றினால் துன்பம் நீங்கி இன்பமாக வாழலாம் என்றும் குறிப்பிடுகின்றார்.

திருநாவுக்கரசர் தம் பதிகங்களுள் தலைவி கூற்றாக 90 பாக்களும், செவிலி கூற்றாக 50 பாக்களும், தோழி கூற்றாக 3 பாக்களும், செவிலி (அ) தோழி கூற்றாக 7 பாக்களும் இடம்பெற்றுள்ளன. இவை காதல் உணர்வைக் கடவுள் உணர்வாக மாற்றித்தரும் மாண்புடையதாகும். பக்தி இலக்கியத்தின் ஒரு கூறாக விளங்கும் இக்காதல் உணர்வு இறவாத இன்ப உணர்வாகும். அடியார் அனுபவித்த சிவபோகத்தை விளக்க வேண்டுமெனில் உலகியல் இன்பத்தைக் கொண்டே விளக்கமுடியும். பேரின்பப் பொருளை விளக்குவதற்குச் சிற்றின்பத்தைக் கொண்டே விளக்குவதுண்டு.

உயிர்கள் அனைத்தும் இறைவனின் அடிமை. இறைவனை நோக்க உயிர்கள் அனைத்தும் பெண்தன்மை உடையன. உயிர்கள்மாட்டுக் கொண்ட கருணையினால் இறைவன் தண்டித்தல் பொருட்டும் (நிக்கிரகம்), அருள்செய்தற் பொருட்டும் (அநுக்கிரகம்) பல்வேறு உருவத்தில் வருவான். இந்த வடிவில்தான் அவன் வருவான் எனக் கூறமுடியாது. அவ்வாறு அவன் எடுக்கும் உருவங்களுக்கும், அவ்வுருவங்களுக்குரிய இயல்புகளுக்கும் ஓர் அளவேயில்லை. இதனை,

**அருட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும்**
**கேட்பான் புகில் அளவில்லை கிளக்க வேண்டா** (3:54:4)

என்று ஞானசம்பந்தரும்,

**வேறுவே றுருவும் வேறுவே றியற்கையும்**
**நூறுநூ றாயிரம் இயல்பின தாகி**
**ஏறுடை ஈசனிப் புவனியை உய்யக்**
**கூறுடை மங்கையுந் தானும் வந்தருளி**
(மாணிக்கவாசகர், திருவாசகம். வரிகள்: 23-26)

என்று மாணிக்கவாசகரும்,

**அரிதரு கண்ணியாளை யொருபாக மாக**
**அருள் காரணத்தில் வருவார்** (4:8:2)

என்று அப்பர் பெருமானும் கூறியுள்ளனர். இறைவனது பிச்சாடனக் கோலமே-அதாவது பிச்சை பெறும் ஆண்டிக் கோலத்தில் வந்த செயலே அகப்பொருட்பாடல் தோன்றியமைக்கு மூலகாரணமாக அமைந்ததாகச் சான்றோர்கள் கருதுகின்றனர்.

திருஞானசம்பந்தர் திருத்தோணிபுரப் பதிகத்தில் பிரிவாற்றாத் தலைவி வண்டு முதலியவற்றைத் தூதாக அனுப்புவதாக அகப்பொருள் துறையில் அமைத்துள்ளார். அப்பதிகத்தில் கிளியை அழைத்து இறைவன் திருநாமத்தைப் பேசுக என்கின்றார்.

**சிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனொடுபால்**
**முறையாலே யுணத்தருவன் மொய்பவளத் தொடுதரளந்**
**துறையாருங் கடற்றோணி புரத்தீசன் றுளங்குமிளம்**
**பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயே** (1.60.10)

கிளிக்குத் தேனும் பாலும் உண்ணத் தந்து இறைவன் திருநாமத்தை ஒருமுறை கேட்கின்ற தலைவியைத் திருஞானசம்பந்தர் பதிகம் காட்டுகின்றது.

அதேபோல் திருச்செங்காட்டங்குடி தலபதிகத்திலும் அகத்துறை அமைப்பில், **பிறப்பிலிபேர் பிதற்றிநின் றிழக்கோவெம் பெருநலமே** (3-63-9) என்று இறைவன் திருநாமத்தைப் பிதற்றுகின்ற தலைவியைக் காணமுடிகின்றது.

மற்ற உறவுகளை மறந்து, மனம் ஒருநிலைப்பட்டு இறைவனை மட்டும் நினைந்துருகிப் போற்றுதல், இதுவும் ஒருவகையான வழிபாட்டு முறையாகும். இந்நிலையைத் திருநாவுக்கரசர் தமது பதிகத்தில்

முழுமையாக இறைவனைச் சார்ந்து, அனைத்தும் அவனாகவே மாறிப்போய்விட்ட தன்மையினைப் பாடிப் பரவுகின்றார்.

**சங்கரா செய போற்றி-யென்றும்** (6 : 31 : 3)

**எண்ணரிய திருநாமமு டையாயென்றும்** (6 : 31 : 4)

**கார்மதிசேர் சென்னியனே காலகாலா**
**கற்பகமே யென்றென்றே கதறாநில்லே** (6 : 31 : 8)

**வாயே வாழ்த்து கண்டாய்** (4 : 9 : 5)

என்று இறைவனைப் பலவாறு அவன் நாமங்களைக் கூறி வாழ்த்தி மகிழ்கின்றார்.

சிவபெருமானின் ஐந்து திருமுகங்களினின்று தோன்றிய மூர்த்தங்கள் இருபத்தைந்து ஆகும். தற்புருட முகத்தில் தோன்றிய ஐந்து மூர்த்தங்களுள் ஒன்று பிச்சாடன மூர்த்தம். இதனை இறைவன் ஏற்று எழுந்தருளியமைக்குக் காரணம், துட்டர்களைத் தண்டிப்பதும், சிட்டர்களுக்கு அருள் செய்வதுமே ஆகும்.

## பிச்சாடனக் கோலமும் அகப்பொருளும்

இரணியாக்கனுடைய மகனாகிய அந்தகாசுரன் கொடுங்கோலாட்சி புரிந்து வந்தான். அச்சமயம் 12 ஆண்டுகள் மழைவளம் குன்றியது. அப்போது அங்கிருந்த பண்டிதர்களாகிய தாருகாவனத்து முனிவர்கள் பசி நோயால் வருந்தினர். அவர்கள் அங்கிருந்து புறப்பட்டுக் கௌதம முனிவரின் ஆசிரமத்திற்குச் சென்று உணவருந்திப் பசி நீங்கினர். அங்கேயே சிலகாலம் தங்கியிருந்தனர்.

அவ்வேளையில் முகில் வளம் பெருகி, மழை பொழிந்தது. 12 ஆண்டுகள் வருத்திய பசிநோய் தீர்ந்து பயிர்செழித்துச் செல்வம் மிகுந்தது. தாருகாவனத்து முனிவர்கள் தம் இருப்பிடம் செல்ல விரும்பினர். ஆனால் விருந்தினராய் வந்த அவர்களை விட்டுப் பிரிய மனமின்றி வருந்தினார் கௌதம முனிவர். இதனையறிந்த தாருகாவனத்து முனிவர்கள் தந்திரம் செய்து, ஒரு மாயப் பசுவை உண்டாக்கி முனிவர் முன்னிலையில் அனுப்பினர். மெலிந்த அப்பசுவினைக் கண்ட கௌதமர், அதற்காக இரங்கி, பசுவுக்கு வந்த துன்பங்களை நீக்கிக் காத்தல் மேலான தருமம் முத்தியிற் கூட்டும், காவாது விடுத்தல் கொடிய நரகத்தில் இரையாக்கும் என்று சிவாகமம் கூறியதை நினைத்து அப்பசுவைக் காக்க எண்ணினார். பசுவைத் தொட்டவுடன் அது பூமியில் வீழ்ந்து இறந்தது. இச்செயலைக்கண்ட தாருகாவனத்து முனிவர்கள், பசுக் கொலை புரிந்த பாவியின்

ஆசிரமத்தில் இருந்து, விரும்பியுண்டால் இப்பாவம் எமக்கும் சேரும் என்று கூறிவிட்டுத் தம்மிடங்களுக்குச் சென்றனர்.

கௌதமர் தமது ஞானசக்தியால் நடந்தவை அனைத்தும் அறிந்தார்.

> வேத ஒழுக்கத்திலிருந்து நீங்கி, சிவபெருமானிடத்து அன்பின்றி கொடிய துன்பக் கடலில் விழுந்து அழுந்துவீர்களாக

என்று அவர்களுக்குச் சாபமிட்டார். அவ்விதமே, அவர்கள் அஞ்ஞானிகளாய், வேதங்களை ஓதல் முதலிய நற்கிரியைகளை விடுத்துத் தவ ஒழுக்கத்தினின்றும் நீங்கிக் கன்ம மலத்தினால் கட்டப்பட்டுத் துன்பக் கடலில் மூழ்கினர்.

சிவபெருமான், பரதந்திரர்களான மற்றைய ஆன்மாக்கள் இவர்களைப் பின்பற்றிக் கெட்டுப் போவார்கள் என்பதையும், இறைவனின் திருவருளாலன்றிப் புண்ணியம் செய்தல் முடியாது என்பதையும், **பரனடிக் கன்பிலாதார் புண்ணியம் பாவமாகும்** என்பதையும், எல்லா ஆன்மாக்களுக்கும் உணர்த்துதல் காரணமாகவும், முன்னர்க் காமமும், கோபமும் அவர்களுக்கு உண்டாக்குவதாகிய திருவுருவத்தைப் பொருந்திச் சென்று, அவர்களது ஆணவ மல சக்தியையும், கர்மத்தையும் அழித்து, ஞானத்தைப் பயப்பதாகிய திருமேனியைக் காட்டி, மெய்ஞ்ஞானத்தைக் கொடுத்து, சுத்த வைதிகச் சைவர்களாகும்படி திருவுள்ளம் கொண்டார்.

திருமாலை மோகினி வடிவம் கொள்ளும்படி செய்து, அம்முனிவர்களை மயக்க விடுத்தார் இறைவன், மேலும் அம் முனி பத்தினியர்களை மயக்கி அருளும் பொருட்டு வேதவடிவாகிய கௌபீனமும், சிவஞானமாகிய பூணூலையும், முச்சக்தி வடிவினதும், மும்மலங்களை நீக்குவதுமாகிய சூலத்தினையும், பராசக்தி வடிவினதும், அன்பான பிச்சையேற்பதுமாகிய பிட்சைப் ப்ாத்திரத்தையும், நாதவடிவமானதும், ஞானத்தைக் கொடுப்பதும், கெடுதல் இல்லாத இலயம் கூட்டுவதுமாகிய உடுக்கையையும், மலபரிபாகம் செய்வதும், திரோதான சக்தி வடிவினதுமாகிய திருநீற்றுப் பையும் கொண்டு, அவர்களது வீதிகளில் சென்று, அவர்களைச் சுத்தர்களாக்கும் பொருட்டுத் தமது திருவுருவைக் காட்ட அவர்கள் பிச்சையிடும்படி வந்து திருவுருவைக் கண்டு, காதல் வயப்பட்டனர். பேராசை வைத்துப் பார்த்த மாத்திரத்திலேயே அவர்கள் கர்ப்பமடைந்தனர். இதனை அறிந்த முனிவர்கள் தம் காமம் ஒடுங்கக் கோபம் கொண்டனர். இதனைச் செய்தவர் சிவனும், திருமாலுமே என அறிந்து அவர்கள்மேல்

பெருங்கோபங் கொண்டனர். இறைவனைக் கொல்ல அபிசார வேள்வி செய்தனர். அவ்வேள்வியினின்று எழுந்த புலி முதலியவற்றை முனிவர்கள் அனுப்பச் சிவபெருமான் புலியை உரித்துத் தோலாக உடுத்தும், மழுவையும், மானையும் கரத்தில் கொண்டும், அரவினை அணிகலனாகவும், முனிவர்களின் ஆணவத்தில் தோன்றிய முயலகனைக் காலால் மிதித்தும் நின்றார். பின் அக்கினியையும் ஏந்தினார். மந்திரங்களை உடுக்கையாகத் தரித்தார். இதன் பின் அவர்கள் தம் மலநோய் நீங்கப்பெற்றுப் பக்குவர்களாயினர்.

முனிவர்களின் பக்குவநிலை கண்ட பெருமான் முயலகன் மீது பஞ்ச கிருத்திய நிருத்தத்தையும் செய்தார். அதைக் கண்ட முனிவர்கள் பயந்து, பூமியில் வீழ்ந்து, இறையருளால் எழுந்து, சிவஞானம் பெற்று வணங்கினர். இறைவன் முனிவர்களைப் பார்த்து நீங்கள்

> இதுநாள் வரையில் துன்மார்க்க வழியில் நின்று காமுகர்களானீர்; இப்போது அது நீங்கப் பெற்றீர். இனி நீங்கள் சைவ மார்க்கம் அடையுங்கள்

என்று கூறி அருளினார். மோகினியைப் பார்த்து, உனக்கு யாது வரம் வேண்டும் என வினவி அருள, அடியேன் தேவரீருக்கும் சக்தியாகும் வரத்தை நல்கவேண்டும் என வேண்ட, இறைவனும் அவ்வாறே அருளினார். பிச்சாடன மூர்த்தியாயினமையால் நிலவுலகத்தாரும், விண்ணுலகத்தாரும் சிவபெருமானே ஞானநாயகர் என நினைந்து வழிபட்டு உய்வடைகின்றனர் (குமாரசாமி குருக்கள், **சிவபூசை விளக்கம்**, பக் : 118 – 122) என்னும் விளக்கம் இங்குக் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இறைவன் தண்டித்தலைச் செய்வது உயிர்களைப் பக்குவப்படுத்தி இறுதியில் அவர்களுக்கு அருள் செய்வதற்கேயாகும். எனவேதான் காரைக்காலம்மையாரும் **அருளே உலகெலா மாள்விப்பது** (பா : 9) எனத் தம் அற்புதத் திருவந்தாதியில் குறிப்பிட்டுப் போற்றுகின்றார்.

> இறைவனது பல்வேறு வடிவங்களுள் இப்பிச்சாடன வடிவம் ஒன்றே காதல் கொள்வதற்கு உகந்ததாகக் கருதப்படுகின்றது. அதனாலேயே நாவரசர் தம் அகப்பாடல்களுக்கு இக்கோலத்தினை எடுத்தாண்டுள்ளார். மதுரை மீனாட்சியம்மைத் திருக்கோயிலில் பிச்சாடனரின் கற்படிமமும், செப்புப்படிமமும் உள்ளன. குழந்தைப்பேறு விரும்புவோர் இம்மூர்த்தத்திற்குச் சிறப்பு வழிபாடும் செய்வதுண்டு

(ம.சா.அறிவுடைநம்பி, **திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள்**, ப:96) என்னும் திறனாய்வாளரின் கூற்று மேற்கண்ட கருத்துக்கு அரண் சேர்க்கின்றது.

## நிலமும் பொழுதுமாகிய முதற்பொருள்

திருநாவுக்கரசப் பெருமான் முதற்பொருளாகிய நிலம், பொழுது பற்றித் தமது பாடலில் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள் நிலம் பற்றிக் கூறும்போது விண்ணும் மண்ணுமாகிய இருநிலம் என்று குறிப்பிடுகின்றார்.

**சின்னத்தினால் மலி தில்லையுள்**
**சிற்றம்பலத்து நட்டம்**
**என்அத்தன் ஆடல்கண்டு இன்புற்ற**
**தால்இவ் விருநிலமே** (4 : 81 : 9)

எனச் சிவசின்னங்களாகிய திருநீறும், உருத்திராக்கமும் அணியப்பெற்ற இறைவன் சிவவேடத்தில் அழகு பெறும் தில்லையில் திருநடனம் புரிபவர். எம்பெருமானின் ஆடலைக்கண்டு இருநிலமும் இன்புற்றது என்ற இடத்தில் நிலம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அகத்திணை கூறும், பெரும்பொழுதுகள் ஆறும், சிறுபொழுதுகள் ஆறும் ஆங்காங்கே அப்பர் பாடல்களுள் இடம்பெற்றுள்ளன.

திருவதிகை வீரட்டானப் பதிகத்தில் பெரும் பொழுதின் மூன்று கூறுகளும் இடம்பெற்றுள்ளன. இறைவனை மலர்கள் தூவி வழிபடுவதற்கு உரிய நேரம் வைகறை, விடியற் பொழுது இவை இரண்டும் ஒரே அமைப்பில் அமைந்துள்ளன.

**வானவர் தானவர் வைகறை மலர்**
**கொணர்ந்து இட்டிறைஞ்சித் . . .** (4 : 93 : 1)

**காலை எழுந்து கடிமலர் தூயனதாம் கொணர்ந்து** (4 : 85 : 1)

என இங்குக் கடவுளை வணங்கும் நேரம் காலை என்றவிடத்து, சிறுபொழுதுகளில் வைகறையும், விடியலும் போற்றப்பட்டுள்ளன. நெய்தல் நிலத்துப் பெண்களாகிய நுளைச்சியரைப் பற்றிக் கூறும்போது, கடலில் தோன்றுகின்ற முத்துக்களைக் கொணர்ந்து இறைவன் திருவடிகளில் சேர்த்து மகிழ்வதை **நுரைவாய் நுளைச்சியர் ஓடிக் கழுமலத்துள் எழுந்து** (4:82:3) எனப்பாடியுள்ளார். இந்நெய்தல் நிலத்திற்குரிய சிறுபொழுது எற்பாடாகும்.

ஐயாறப்பரின் திருவடித் தலமானது, மிகக் கொடுமையான கதிரவனின் வெப்பக்கதிர்களால் திருத்தொண்டர் வாடாமல், நலியாமல்,

சோர்வுறாமல் இருக்கச் செய்வன. இதில் **நண்பகலைப் போதடித் தொண்டர் துன்னும்** (4:92:9) என்ற பாடல் வரிகளாலும், முல்லை நிலத்திற்குரிய சிறுபொழுதான மாலையை,

> **அங்கட் கருக்கைக்கு முல்லைப்**
> **புறவ முறுவல் செய்யும்** (4 : 86 : 10)

என்ற வரிகளில் இறைவனது திருமுடி ஒன்றே கொன்றைக்கு, முல்லைக்குக் கொல்லையாயும், பல்லாடு தலைக்குச் சுடுகாடாயும், கங்கையாற்றுக்குக் கடலாகவும், பாம்புக்குப் புற்றாகவும், பிறைக்கு விண்ணாகவும் நின்று வெவ்வேறு இடமாயிற்று எனக் குறிப்பிடுகின்றார். இரவின் நடுக்கூறாகிய யாமத்தில் கனவிடத்துத் தன் தலைவனைக் கண்ட தலைவி,

> **துஞ்சிடை கண்டு கனவின் தலைத்தொழு தேற்கவன்தான்**
> **நெஞ்சிடை நின்று அகலான் பலகாலமும் நின்றனனே** (4 : 97 : 4)

எனத் தன்னைக் கனவிலே ஆட்கொண்ட இறைவன் என்றும் நீங்காது நெஞ்சிலே நின்றான் என்று கூறுகின்றாள்.

## கருப்பொருள்கள்

இடத்திலும், காலத்திலும் தோன்றும் பொருள் கருப்பொருள் ஆகும். இவை வெவ்வேறு இடங்களில், வெவ்வேறு காலங்களில், வெவ்வேறு வகையாக இருக்கும். அப்பர் தேவாரத்தில், அகப் பொருளில் குறிப்பிட்டுள்ள கருப்பொருள்கள் காணப்படுகின்றன. தெய்வம், உயர்ந்தோர், தாழ்ந்தோர், நீர், பறவை, விலங்கு, ஊர், பூ, மரம், பறை, பண், யாழ், செய்தி முதலான பதினான்கு கருப்பொருட்களுள் சிலவற்றைத் தம் பதிகங்களுள் குறிப்பிட்டுள்ளார்.

குறிஞ்சி நிலக் கடவுளாகப் போற்றப்படும் முருகப்பெருமான், சிவபெருமானின்பின் தோன்றியவர் என்பது அப்பர் பெருமானின் கருத்து. இதனை,

> **முன்னை யார்மயில் ஊர்தி முருகவேள்**
> **தன்னை யாரெனில் வானோர் தலைமகன்**
> **என்னை யாளும்இ றையவ னெம்பிரான்**
> **பின்னை யாரவர் பேரெயி லாளரே** (5 : 16 : 7)

என்கிறார் திருப்பேரெயிலில் தோன்றிய பிரான் முதலில் தோன்றியவராவார். மயிலை ஊர்தியாக உடைய முருகப் பெருமானின் தந்தையே எம் தலைவர், எமையாளும் இறைவன் என்றும் கூறுகின்றார்.

நெய்தல் நிலத்திலுள்ள குருகானது தாழைக் குருத்தினைக் கண்டு, தன் பிள்ளை எனப் பாவித்து அதனருகில் சென்று புல்கும் தன்மையுடையது என்பதனை,

**நெய்தற் குருகுதன் பிள்ளையென்று**
**எண்ணி நெருங்கிச் சென்று**
**கைதைமடற் புல்கு தென் கழிப்**
**பாலை யதனுறை வாய்** (4 : 106 : 1)

என அதன் அன்பினைக் குறிப்பிடுகின்றார்.

அப்பர் பெருமான் யானை, மான், மயில், கோழி போன்ற விலங்குகளைப் பற்றியும், அவை அன்பு கொண்டொழுகும் தன்மையினையும் திருவையாற்றுப் பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும், யானை பற்றிக் கூறும்போது, இறைவன் திருமுடி மேலுள்ள பிறையின் வெண்ணிறமானது யானையின் வெண்கொம்புக்கு உவமேயமாக்கிக் கூறுகின்றார். அவ்விடத்தை,

**செற்றுக் களிற்றுரி கொள்கின்ற**
**ஞான்று செருவெண் கொம்பொன்று**
**இற்றுக் கிடந்தது போலும்**
**இளம்பிறை பாம்பதனை** (4 : 86 : 1)

என்றும், மான்கன்றினைப் பற்றிக் குறிப்பிடும்போது, அதனைத் தம் கையிலே கொண்டவர் இறைவன் என்பதனை, **கான மறியொன்று கையுடையான் கண்டியூர் இருந்த** எனத் திருக்கண்டியூர்ப் பதிகத்தின் 2 வது பாடலின் மூன்றாம் வரியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைவன் வாழ்கின்ற ஊர், அதன் வளம், சிறப்பு ஆகியன பற்றித் திருநாவுக்கரசர் தம் திருக்கழுமலப் பதிகத்தில்,

**படையார் மழுவொன்று பற்றிய**
**கையன் மதிவினவில்**
**கடையார் கொடி நெடுமாடங்கள்**
**ஓங்கும் கழுமலம்** . . . . . (4 : 83 : 1)

எனத் தலைவன் உறையும் ஊரானது, கொடி படர்ந்த நெடிய மாடங்களை உடையதாகவும், அங்குள்ள குருகினங்களுக்கு எப்போதும் இரைகிடைப்பதனால் வாய் திறவாதிருக்கும் என்றும், வண்டினங்கள் பாளையின் வாய் திறவும் போதெல்லாம் தேனைப் பெறுவதனால் அதுவும் பெயராது இருக்கும் என்றும், இத்தகு சிறப்புடைய ஊர் எம் தலைவன் வாழும் ஊராகும் என்றும் குறிப்பிடுகின்றார்.

இறைவனை வழிபடுவதற்கு அவ்வவ்வற்றுக்குரிய மலர்களை இறைவனுக்குச் சூட்டி வழிபடுவது சிறப்பாகும், அவ்வகையில் குறிஞ்சி-வன்னி, முல்லை-கொன்றை, மருதம் -தாமரை, நெய்தல்-நெய்தற்பூ, பாலை - குரா இவையல்லாது சிவந்த கழுநீர்ப் பூக்கள், செண்பகம் முதலிய பூக்கள் இறைவழிபாட்டிற்குரியனவாகக் கருதப்படுகின்றன. அப்பர்பெருமான் இவ்வனைத்தையும் ஒரே பாடலில் குறிப்பிட்டுள்ளமை சிறப்பிற்குரியதாகும். அப்பாடல்,

**திருவமர் தாமரை சீர்வளர் செங்கழு நீர்கொள் நெய்தல்**
**குருவமர் கோங்கம் குராமகிழ் சண்பகம் கொன்றை வன்னி**
**மருவமர் நீள் கொடிமாடமலிமறை யோர்கள் நல்லூர்**
**உருவமர் பாகத்து உமையவள் பாகனை உள்குதுமே** (4 : 97 : 10)

என்பதாகும். இதில் அனைத்து மலர்களும் விளங்கத் திருநல்லூர் இறைவன் இறைவியோடு வீற்றிருக்கின்றார் எனக் குறிப்பிடுகின்றார்.

## பறையும் பண்ணும்

கூத்துக்குத் தக்கவாறு இசைக்கும் கருவியினைப் பறை என்று கூறுவர். தலைவனின் கையில் விளங்கும் உடுக்கையே பறை என ஆசிரியர் குறிப்பிடுகின்றார். கொட்டும் பறையுடைக் கூத்தன் எனச் சிவபெருமானைக் குறிப்பிட்டுள்ளார் அப்பர் பெருமான்.

யாழின் பகுதி எனப் **'பண்'** வகைகளைக் குறிப்பார் தொல்காப்பியர். யாழில் பலவகை உண்டு. செங்கோட்டு யாழினை அடியொற்றி அமைந்தது வீணை எனும் இசைக் கருவி ஆகும். யாழும் வீணையும் இருவேறுபட்ட இசைக் கருவிகள் ஆகும். **ஏழிசை யாழ்வீணை முரலக் கண்டேன்** (6 : 77 : 1) என்ற வரியால் இதனை அறியமுடிகின்றது. இது கொடுகட்டி, கொக்கரை, தக்கை, குழல், தாளம், உரிணை, மொந்தை ஆகிய இசைக்கருவிகளைப் பற்றிய குறிப்புகளும் அப்பர் பெருமானின் பாடல்களில் காணப்படுகின்றன. இறைவன் வீணை வாசித்தமையை, **வருங்கடன் மீளநின்று எம்இறை நல்வீணை வாசிக்குமே** (4 : 112 : 7) எனக் குறிப்பிடுகின்றார்.

குறிஞ்சிநிலத் தொழில் தேனெடுத்தல், பழனத்தில் களையெடுத்தல், நெய்தலில் மீன், உப்புவிற்றல், பாலையில் ஆறலைத்தல் (வழிப்பறி), முல்லையில் ஆவினம் மேய்த்தல் ஆகிய செய்திகள் உயிர் இறைவனை அடையக் கூடிய தொழில் செய்தியாக இடம்பெற்றுள்ளது. இவற்றுள் பாலையின் ஒழுகலாற்றை, பாலையில் சூறை கொள்ளல் என்ற வரிகளால் அடியாரது ஊனத்தை நீக்குதல் எனப் பொருள் கொண்டு, ஊனத்தை நீக்கி உலகறிய என்னை ஆட்கொண்டவன் (4 : 80 : 6) எனப்

பாடியருளியுள்ளார். மூவெயில் எரித்ததும், அரக்கர்தம் ஆணவத்தை அழித்ததும் இதன்பாற்படும்.

## அடியார்கள் பாடிய அகப்பொருள் துறைகள்

### கனவிழந்துரைத்தல்

தலைவி தலைவனை நினைந்து உறங்கும் போது அவன் கனவிடை வந்து தலைவியைக் கூடுதலைத் தலைவி தன்தோழியிடம் கூறுவது கனவிழந்துரைத்தலாகும்.

தலைவி, தலைவனைப் பற்றிக் கூறுவதும், அவனது புகழை எடுத்துக் கூறுவதும், அதோடு தன் கனவில் வந்த தலைவன், தனது கைவளையல்களைக் கவர்ந்து சென்றதையும் கூறுகின்றாள். இச்செய்தி இடம்பெற்ற திருநல்லூர்ப் பதிகத்தினைக் கனவிழந்துரைத்தல் பதிகம் என்றே குறிப்பிட்டுள்ளார். தலைவி, தலைவனை நினைத்து உறங்குவது போலப் பாசாங்கு செய்ய, தலைவன் அவள் அருகே வந்து அவளது கைவளையல்களை எண்ணி, பேரின்ப மயக்கம் கொண்டு, அவனன்றி வேறுதுணை இல்லை எனக்கூறி மகிழ்ந்திருக்கும் நிலையினை,

**ஒற்றொருவர் போல உறங்கு வேன்கை**
**ஒளிவளையை ஒன்றொன்றா எண்ணுகின்றார்**
**மற்றொருவரில்லை துணையெனக்கு**
**மால் கொண்டாற் போல மயங்கு வேற்கு** (6 : 13 : 2)

எனக் குறிப்பிட்டுள்ளார். இது நாயனார் இறைவனின் திருவடி தீக்கை பெற்றுப் பாடிய திருப்பதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

இறைவன் தாருகாவனத்திலுள்ள பத்தினிமார்கள் இல்லந்தோறும் சென்று உணவிடுக எனக்கூறி அவர்தம் கைவளையல்களைக் கவர்ந்தார். மேலும் அப்பெண்கள் உறங்கும் போது, ஒவ்வொரு விதமாக இறைவனைக் கண்டு மயங்குவதாக அப்பர் பெருமான் பாடியுள்ளார்.

**அட்டுமின் இல்பலி என்றுஎன்று அகங்கடை தோறும் வந்து**
**மட்டவி ழுங்குழ லார்வளை கொள்ளும் வகையென் கொலோ**
**கொட்டிய பாணி எடுத்திட்ட பாதமுங் கோளரவும்**
**நட்டநின் றாடிய நாதர்நல் லூரிடங் கொண்டவரே** (4 : 97 : 1)

எனவும், தலைவன், தலைவியின் கனவில் தோன்றி, அவள் நெஞ்சில் நிறைந்து, அகலாது பலகாலம் நின்றதாக முன்னர்க் குறிப்பிட்டு, அப்பெருமானின் சேவடியானது கண்ணிலும், நெஞ்சிலும், நீங்காது நிறைந்துள்ளது என்பதனை மற்றொரு பாடலில் குறிப்பிடும்போது,

**வெண்மதி சூடி விளங்கநின் றானைவிண் ணோர்கள்தொழ**
**நண்ணில யத்தொடு பாடல்அ றாதநல் லூரகத்தே**
**திண்ணில யம் கொண்டு நின்றான் திரிபுர மூன்றெரித்தான்**
**கண்ணுளும் நெஞ்சத்து அகத்தும் உளகழற் சேவடியே** (4 : 97)

எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், நல்லூரின்கண் வாழும் கன்னியர்கள் தலைவனைக் கனவிடத்துக் காணுவர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**மன்னிய மாமறை யோர்மகிழ்ந்து ஏத்த மருவியெங்கும்**
**துன்னிய தொண்டர்கள் இன்னிசை பாடித் தொழுது நல்லூர்க்**
**கன்னியர் தாமும் கனவிடை உன்னிய காதலரை**
**அன்னியர் அற்றவர் அங்கண னேஅருள் நல்கு என்பரே**
(4 : 97 : 9)

பிறபற்றுக்கள் அற்ற அழகிய கண்களையுடையவன் கனவின்கண் காட்சி தருவான் எனக் குறிப்பிடுகின்றார். இரவு உறங்கும்போது ஒரு பெண்ணின் மனத்துள் புகுந்து, கோயில் கொண்டதாக அமைந்த பாடலில்,

**எல்லியும் பகலும் எல்லாம்**
**துஞ்சு வேற்கு ஒருவர் வந்து**
**புல்லிய மனத்துக் கோயில்**
**புக்கனர் காமன் என்னும் . . . .** (4 : 25 : 8)

எனவும்,

**வெள்ளநீர்ச் சடையார் தாம் வினவுவார்போல வந்தென்**
**உள்ளமே புகுந்து நின்றார்க் குறங்கு நான் புடைகள்**
**போந்து . . .** (4 : 75 : 9)

எனவும், இறைவன் வந்து என் நலன்களை விசாரிப்பது போல, என் உள்ளத்தில் புகுந்தும், உறங்கும்போது கள்வனைப் போன்றும் வந்து நின்றார் என்கிறார். ஒரு பாடலில் தலைவனும் தலைவியும் உரையாடல் நிகழ்த்துவதைப் போலவும் அமைத்துள்ளார் அப்பர் பெருமான். அதில், கள்ளரோ புகுந்தீர் என வினவ, கள்ளர் அல்ல வெள்ளர் எனக் கூறியதாக விளக்குகிறார். மேலும் திருவொற்றியூர்ப் பதிகத்தில், ஒளியுடன் திகழும் பெருமான் அவரைக் கனவில் கண்டவுடன் தன் மனப் புழுக்கமும், வெம்மையும் நீங்கியதாகப் பாடியருளியுள்ளார்.

**கண்டேன் நான் கனவகத்திற் கண்டேற் கென்றன்**
**கடும்பிணியுஞ் சுடுந்தொழிலுங் கைவிட்டவே** (6 : 45 : 1)

எனவும், உறங்கும் போது முப்புரி நூல் அணிந்த இறைவன் வந்து எனது கைவளையல்களை எண்ணுகின்றான் எனத் தலைவி கூறுகின்றாள்.

மற்றொரு இடத்தில் தலைவி தோழியிடம், கனவில் நிகழ்ந்ததை நானுனக்குச் சொல்ல மாட்டேன் என்றும், தலைவனைக் கனவில் கண்டதால், அவனை முன்பு நோக்கிய நோக்கால் ஏற்பட்ட காதல் நோய் நீங்கியதாகவும் கூறுகின்றாள்.

## கனவு புலப்படல்

இவ்விடத்தில் ஆண்டாளின் பாசுரங்கள் ஒப்புநோக்குதற்குரியன. கனவு நிலையிலிருக்கும் கோதைக்கு நாம் அடியோடு முகம் காட்டாவிடில் இவள் தரித்திருக்க மாட்டாளென்று கருதிய கண்ணபிரான், கனவிலாவது இவளுக்கு நாம் காட்சி தந்து ஒருவாறு தரிக்கும்படி செய்தல் நன்று என்று துணிந்து, திருமண வைபவங்களைக் கனவில் அனுபவிக்கச் செய்கின்றார். அப்படியே ஆண்டாள் அனுபவித்துத் தன் உயிர்த்தோழிக்குச் சொல்லுவது போன்று அமைந்துள்ளது வாரணமாயிரம் என்ற ஆறாம் திருமொழி.

**இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்**
**நம்மை உடையவன் நாராயணன் நம்பி**
**செம்மை உடைய திருக்கையால் தாள்பற்றி**
**அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ ! நான்**

(ஆண்டாள், நாச்சியார் திருமொழி, பா.6 : 8)

இத்திருமொழியிலுள்ள கூற்றுக்கள் பல சங்கப் பாடல்களில் காணக்கிடக்கின்றன. கனவிலும் தலைவிக்கு இருந்த நம்பிக்கையை அகப்பாடல்கள் சுட்டுகின்றன.

பிரிந்து சென்ற தலைவன் வரக் காலம் பெரிதும் கழிந்தது. தலைவியின் துயரை எண்ணித் தோழி வருந்தினாள். தலைவி தன் தோழியைத் தேற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. தலைவன் பிரிந்து சென்ற பின்னர், ஒவ்வோர் இரவும் தான் இனிய கனவு காண்பதாகவும், அதற்கேற்ற முறையில் நன்னிமித்தங்கள் நனவில் தோன்றுவதாகத் தலைவி தோழிக்கு எடுத்துரைத்தாள். இச்செய்தி,

**அம்ம வாழி தோழி கைம்மிகக்**
**கனவும் கங்குறோ றினிய நனவும்**
**புனைவினை நல்லில் புள்ளும் பாங்கின**
**நெஞ்சம் நனிபுகன் றுறையும்** (அகநானூறு, பா. 141)

என **அகநானூற்றில்** பதிவாக்கப்பட்டுள்ளது. தலைவியைப் பிரிந்து சென்ற தலைவனும் அவளைக் கனவில் கண்ட செய்திகளும்,

நுண்பூண் மடந்தையைத் தந்தோய்போல
இன்துயில் எடுப்புதி கனவே
எள்ளார் அம்ம துணைப்பிரிந் தோரே (குறுந்தொகை, பா. 147)

என்ற குறுந்தொகைப் பாடலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. நெய்தற்கலியில் (128) நல்லந்துவனார் பாடிய பாடலில் விடையாற்றாளாய்ச் செல்கின்ற தலைவியது கவின் கண்டு வினாய தோழிக்கு அவள் தான் கண்ட கனவு நிலையை உரைப்பதாக அமைந்துள்ளது.

............ புதுவது கவினினை யென்றி யாயின்
நனவின் வாரா நயனி லாளனைக்
கனவிற் கண்டியான் செய்தது கேளினி ! .....
கோதை கோலா இறைஞ்சி நின்ற
ஊதையஞ் சேர்ப்பனை அலைப்பேன் போலவும்
யாதென் பிழைப்பென நடுங்கி யாங்கே
பேதையைப் பெரிதெனத் தெளிப்பான் போலவும்
ஆங்கு-
கனவினாற் கண்டேன் தோழி.......

(கலித்தொகை, நெய்தற்கலி, பா. 128)

நற்றிணை நானூறில் நெய்தல் திணைப் பாடலாக வரும் நக்கண்ணையார் பாடலில், சோழர் குடியிற் பிறந்த ஆர்க்காட்டுறைவானாகிய அழிசி என்பவனது பெரிய காட்டின் கண்ணுள்ள நெல்லிப் பழத்தின் இனிய புளிச்சுவையைத் தான் பெற்றதாகக் கனவுகண்டாற்போல யானும் அவரோடு முயங்கினதாகக் கனவு காண அவ்வின்பமெல்லாம் விழித்தவுடன் ஒழிந்து போயிற்று என்ற பொருளில்,

. . . . . . . . . .
நெல்லியம் புளிச்சுவைக் கனவி யாஅங்கு
அது கழிந் தன்றே தோழி அவர்நாட்டுப்
பனியரும்பு உடைந்த பெருந்தாள் புன்னை
துறைமேய் இப்பிஈர்ம் புறத்து உறைக்குஞ்-----
சிறுகுடிப் பரதவர் மகிழ்ச்சியும்
பெருந்தண் கானலும் நினைந்தவப் பகலே

(நக்கண்ணையார், நற்றிணை, பா: 87)

எனக் கூறப்பட்டுள்ளது. தலைவன் பிரிதலானே ஆற்றாது கனவு கண்டெழுந்த தலைவி தோழியை நோக்கி, வௌவால் தான் துயிலும்

பொழுது அங்குக் கிட்டப்பெறாத நெல்லியம் புளிச்சுவைக்குக் கனவு கண்டாற் போல அவர்நாட்டுப் பரதவர் மகிழ்ச்சியும் கானலும் நினைந்த அப்பொழுதிலேயே யானும் கனவு காண அஃது அழிதலாயிற்று என வருந்திக் கூறப்பட்டுள்ளது.

இறைவனின் நினைவால் ஆண்டாள் துன்புறுகிறாள். நள்ளிரவாகியும் உறக்கம் வராமல் தவிக்கும் நிலையும், அவள் அடைகின்ற தனிமைப்புலம்பலும் கோவிந்தனின் புகழைப் பாடவே உயிருடன் இருக்கின்றேன் என விரக்தியின் விளிம்புக்கே செல்லவைக்கும் தனது நிலையை,

**ஒளிவண்ணம் வளைசிந்தை உறக்கத்தோடு இவையெல்லாம்**
**எளிமையால் இட்டென்னை ஈடழியப் போயினவாய்**
**குளிர்அருவி வேங்கடத்து என் கோவிந்தன் குணம்பாடி**
**அளியத்த மேகங்காள் ! ஆவிகாத்து இருப்பேனே**

(ஆண்டாள், நாச்சியார் திருமொழி, பா. 8 : 3)

என்று மேகத்தினை நோக்கி ஆண்டாள் பாடுகின்றாள். ஆவி தன்னுடலில் தங்கியிருக்க வேண்டுமெனில் நாராயணன் தன்னை வந்தடைய வேண்டும் என்று வேண்டுகின்ற ஆண்டாளின் மொழிகள் சங்க இலக்கியத் தலைவியோடு ஒப்பிட்டுக் காணத்தக்கவை.

## நம்மாழ்வார் பாசுரங்களில் அகப்பொருள்

சங்க காலத்தில் சிறப்புற்றிருந்த இயற்கை நெறியின் ஓர் அம்சமான உலகியற் காதல், பக்திப் போர்வையிலே மீண்டும் தலைகாட்டுகிறது. புலவர்கள் தங்கள் இதயங்களைத் திறந்து இயல்பாக எழும் காதலுணர்ச்சிகளைக் கடவுள் பேரில் வெளியிடுகின்றனர்.

மனதின் உணர்ச்சிப் பிழிவாக அமைந்திருக்கும் அகத்துறைப் பாடல்களை நம்மாழ்வாரின் பாசுரங்களில் காணமுடிகின்றது. காணும் பொருளெல்லாம் அவையே போறல், நெஞ்சழிதல், ஆற்றுப்படுத்துதல் ஆகிய கூறுகள் நம்மாழ்வாரின் பெரிய திருவந்தாதியில் இடம்பெற்றுள்ளன. கோகுலத்தில், பிருந்தாவனத்தில் கண்ணன் கோபிகைகளுடன் செய்த லீலைகள் ஆழ்வார்கள் பக்திக் காதலைப் பாடும்போது அடிப்படையாக அமைந்து அப்பாடல்களுக்கு இயற்கைத் தன்மையை அளிக்கின்றன.

ஓர் ஆண் அல்லது பெண்ணினுடைய மன உணர்வுகளைப் பற்றியும், காதல் உணர்வுகளைப் பற்றியும், அவர்கள் காதல் செய்து பின்னர்த் திருமணம் புரிந்து வீடும் நாடும் போற்ற வாழும் நிலை பற்றியும்

விளக்கிக் கூறும் பாடல்களை அகப்பாடல்கள் என்று உரைக்கலாம் (எடுத்தாண்ட மேற்கோள் : து. லலிதா, **பெரிய திருமொழி ஒரு பார்வை**, ப. 102) என்று அகப்பாடல்களுக்கு விளக்கம் தரப்படுகின்றது. அகப்பொருள் கூறுகள் அனைத்தும் பொதிந்து கிடக்கும் பகுதியாக நம்மாழ்வாரின் திருவிருத்தப் பாசுரங்கள் அமைந்துள்ளன.

நம்மாழ்வார், பாசுரங்களில் தலைவியாகவும், தோழியாகவும், தாயாகவும் பேசுவதால் **பராங்குச நாயகி** என்று அழைக்கப்படுகிறார். நம்மாழ்வார் தலைவி நிலையேற்கும் போது பராங்குச நாயகி எனப் பெயர் பெறுவது போலத் திருமங்கை ஆழ்வார் பரகாலநாயகி என்னும் பெயர் பெறுகின்றார்.

## கூடலிழைத்தல்

தலைவனைப் பிரிந்த தலைவி, அவனது வருகையினை எதிர்நோக்கும் நிமித்தக்குறி என்னும் பொருளில் கூடலிழைத்தல், கூடல், ஆழி என்னும் சொற்கள் **கலித்தொகை, முத்தொள்ளாயிரம், ஐந்திணை ஐம்பது** ஆகியவற்றில் இடம்பெற்றுள்ளன.

**கோடுவாய் கூடாப் பிறையைப் பிறிதொன்று**
**நாடுவேன் கண்டனென் சிற்றிலுட் கண்டாங்கே** (பா : 142)

என்று **கலித்தொகையிலும்**,

**கூடப் பெறுவனேற் கூடென்று கூடலிழைப்பாள்** (பா : 82)

என **முத்தொள்ளாயிரப் பாடலிலும்**,

**ஆழியாற் காணாமே யாம் . . . . .** (பா : 43)

என ஐந்திணை ஐம்பதிலும் இடம்பெற்றுள்ளன.

நாளும் இன்னிசையால் தமிழ்ப்பரப்பிய நாயன்மார்களும், ஆண்டவனின் அருள் பெற்ற பாவையாகிய ஆண்டாளும், திருத்தக்க தேவரும் கூடலிழைத்தல் பற்றிப் பாடியுள்ளனர். இதுவே பின்னர், **திருக்கோவையார், தஞ்சைவாணன் கோவை** போன்ற கோவை நூல்களுள், அகப்பொருள் துறைகளுள் ஒன்றாகக் கொள்வதற்குக் காரணமாகவும் மூலமாகவும் அமைந்தது.

> கூடலிழைத்தல் என்பது தலைமகள் மணற் குன்றின் மீது நீத்து அகன்ற வள்ளலை உள்ளத்தை நெகிழ்த்து இவ்விடத்தே தரவல்லையே எனக் கூடற்தெய்வத்தை வாழ்த்திக் கூடல் இழைத்து வருந்தாநிற்றல் என்பதாகும்

(ம.சா.அறிவுடைநம்பி, திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக்கொள்கைகள், ப : 100).

**ஆழிதிருத்தும் புலியூர் உடையான் அருளின் அளித்து**
**ஆழிதிருத்தும் மணற்குன்றின் நீத்தகன்றார் வருகவென்று**
**ஆழிதிருத்திச் சுழிக்கணக்கு ஓதினமையால் ஐய**
**ஆழித்திருத்தித் தரக்கிற்றி யோஉள்ளம் வள்ளலையே**

(மாணிக்கவாசகர், திருக்கோவையார், பா:186)

என்ற **திருக்கோவையார்** பாடலில், ஆழி என்ற சொல்லைக் கூடலிழைத்தல் என்ற பொருளில் கையாண்டுள்ளனர்.

பெரியதொரு வட்டமாகக் கோடு கீறி, அதனுள் சிறு சுழிகளை அளவிடாது சுழித்து, அவற்றை இரட்டைப்பட எண்ணி, ஒற்றைப்படாதுளதோ? என்று பார்த்தலும் ஒற்றைப்பட்டால் தலைவன் வரமாட்டான் என்றும் மிஞ்சவில்லை எனில் தலைவன் விரைவில் வந்தணைவான் என்றும் தலைவியின் நிலை கூறப்படுகின்றது.

> கூடலாவது வட்டமாகக் கோட்டைக் கீறி, அதற்குள்ளே சுழிசுழியாகச் சுற்றுஞ் சுழித்து, இரண்டு சுழியாகக் கூட்டினால் இரட்டைப்பட்டால் கூடுகை என்றும் ஒற்றைப்பட்டால் கூடாமை என்றும் சந்தேகமாகக் கூறுவர்

என்று பெரியவாச்சான் பிள்ளையவர்கள் கூறுவார் (ம.சா.அறிவுடைநம்பி, திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள், ப: 100 ).

> தலைவனைப் பிரிந்த மகளிர் அவன் வரும் நிமித்தம் அறியத் தரையில் சுழிக்கும் சுழிக்குறி

எனத் தமிழ்ப் பேரகராதி பொருள் கூறுகின்றது ( , தொகுதி : 2 பகுதி - 1, ப : 1068).

இதுவுமன்றிக் கண்ணை மூடிக்கொண்டு கீறிய கோட்டின் எழுவாயும் இறுவாயும் கூடியிருப்பின் தலைவன் வந்து கூடுவான் என்றும், விலகின் வாரான் என்றும் கூறுவதுண்டு. அப்பர் தேவாரத்தில் தலைவி, தலைவனிடம் பல பொருட்களைத் தூது அனுப்பி, இறுதியில் வருந்தி, கூடற்சுழி போட்டுப் பார்க்கிறாள். அதில் வழுநேரவே, வாரான் என அறிந்து, **வாரானே ஆயிடினும் கோடுஇயை சேவடியாய்** என்று கூடல் தெய்வத்தை வேண்டுவதாக அமைந்த பாடலில்,

**வஞ்சித்தென் வளைகவர்ந்தான் வாரானே யாயிடினும்**
**பஞ்சிற்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்** (4 : 12 : 10)

என்றும், மற்றொரு பாடலில் கோழம்பக் கூத்தனுக்கு இவள் அன்றே அன்புபட்டாள்; அவ்வன்பானது,

**பாடலாக்கிடும் பண்ணொடு பெண்ணிவள்**
**கூட லாக்கிடுங் குன்றின் மணற்கொடு . . . .** (5 : 64 : 4)

என்றும், மற்றொரு பாடலில் தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியின் கண்கள் நீரைச் சொரிகின்றன. மருகலில் உள்ள என் தலைவன் வருவானேயானால் நீ கூடுவாயாக! எனக் கூடலிழைத்து வருந்துகிறாள். இதனை,

**நீடு நெஞ்சுள் நினைந்து கண்ணீர் மல்கும்**
**ஓடு மாலினோ டொண்கொடி மாதராள்**
**மாடம் நீள்மரு கற்பெரு மான்வரில்**
**கூடு நீயென்று கூடல் இழைக்குமே** ( 5 : 88 : 8)

என்று பாடியருளியுள்ளார் திருநாவுக்கரசர். இவ்வாறு தலைவனைப் பிரிந்த தலைவியின் வருத்தத்தினைச் சித்திரிக்கின்றார்.

## தேறுதலொழிந்த காமத்து மிகுதிறம்

தலைவனைக் கண்ட தலைவி அவன் நோக்கினைத் தெளிந்து, தனது நோக்கினால் உடன்பட்டு அவனுக்கு உரியவளாதல், பின் அவன் தன்னை வரையாது நீங்குதல் கண்டு தெளிவொழிந்து, பலரொடும் முறையிட்டு, அவனைத் தன்னோடு கூட்டுவிக்குமாறு வேண்டுகின்றாள். இந்நிலையினை,

**வண்ணங்கள் தாம்பாடி வந்து நின்று**
**வலிசெய்து வளைகவர்ந்தார் வகையால் நம்மைக்**
**கண்ணம்பால் நின்றெய்து கலைப்பேசிக்**
**கடியதோர் விடையேறிக் காபாலியர்**
**கண்ணங்கள் தாங்கொண்டு துதையப் பேசித்**
**தோலுடுத்து நூல்பூண்டு தோன்றத் தோன்ற**
**அண்ணலார் போகின்றார் வந்து காணீர்**
**அழகியரே ஆமாத்தூர் ஐயனாரே** (6 : 9 : 1)

என அழகாகச் சித்திரிக்கின்றார் திருநாவுக்கரசர். தலைவன் இசைபாடி வந்து, தலைவியைக் கவர்ந்து, அவள் உள்ளத்தையும் கொள்ளை கொண்டு, அவளது கைவளைகளையும் கவர்ந்தார் என்றும் போற்றுகின்றார். இறைவன் தன்திருவிழிப் பார்வையால் என் உள்ளம் தாக்கும் உரனுடைப் பார்வையைப் பெருக்கி, தலைவியின் மனதில் அளவிடற்கரிய பேரன்பினைச் செலுத்திச் சென்றதாகக் கூறுகின்றாள்.

தலைவனின் நிறை கொண்ட செயலும், தலைவியின் இரக்க உணர்வும், தலைவனது பொதுவியல்புகளும், ஆற்றாமை மிகுதியால்

அயலாரொடு இரங்கிக் கூறுகின்றாள். தலைவனை எதிர்ப்பெய்து கொண்டு கூறியதாகப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. தலைவன் காமத்தீ எழப் பேசி, விரைவாகச் செல்லும் விடையேறி, திருநீறுபூசி, கபாலம்பூண்டு, சின்னங்களணிந்து, தோலுடுத்து, நூல்பூண்டு போகின்றார். அழகியரே வந்து காணீர்; ஆமாத்தூர் ஐயனார் போகின்றார் எனத் தலைவனின் ஊரைக் கூறி அழைக்கின்றாள். இவ்விடத்தில் நாவுக்கரசர் தாமே தலைவியாகி இறைவனிடத்துக் கொண்ட காதலை வெளிப்படுத்துகின்றார்.

பேதைமை காரணமாகப் பொருளல்லனவற்றைப் பொருளாக நினைக்கும் மருள்நிலை தவத்தின் காரணமாக நீங்கப் பெற்று, அருள்நிலை எய்தியபோது, இறைவனருள் வழங்கப் பெற்று, அவ்வருளே கண்ணாக, அவனையறிந்து அன்பு செய்து, உடல், பொருள், ஆவி அனைத்தும் அவனுடையனவாக்கித் தம்மை இகழ்ந்து நின்ற அடியார் பண்டைப் பயிற்சி வயத்தால் அவ்வாறு நிற்கப் பெறாது, முன்னை மருள்நிலை தோன்றியவழி அதனைப் பெறாது வருந்தி, அது நீங்குமாறு இறைவனை அருள்விக்க வேண்டுவதே இதன் உண்மைப் பொருளாகும்.

## சிற்றிலக்கியக் கூறுகளும் அகப்பொருளும்

அறிவு, செல்வம், ஆண்மை, அன்பு, ஈகை எழில் போன்ற பண்புகளில் உயர்ந்த ஓராடவனைத் தலைவனாகக் கொண்டு, அவனுடைய குலம், குடிப்பிறப்பு, பரம்பரை முதலியன விளங்கக்கூறி, அவன் முடிபுனைந்தோ, மணம் புரிந்தோ, வெற்றி பெற்றோ, வீதியில் தேர்மீதோ, பிற ஊர்தி மீதோ, ஒருநாளோ அன்றி ஏழு நாள்களோ உலா வருங்கால், பேதை முதலான ஏழ்வகைப் பருவ மகளிரும் காதல் கொண்டதாகக் கலிவெண்பாட்டில் பாடப்படும் நூல் உலாவாகும்.

> **ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப**
> **வழக்கொடு சிவணிய வகைமையான**
>
> (தொல். பொருள். புறத். நூற்.83 )

என மொழிகின்றார் தொல்காப்பியர். இது பாடாண் திணையில் உலா வருதலைப் பற்றிய குறிப்பாகும். இக்குறிப்பு, **பெருங்கதை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம்** முதலிய பெருங்காவியங்களில் தலைமகன் உலாவருதலைச் சிறப்பித்துப் பாடப்படும் இடத்திலிருந்து கிளைத்து, பிற்காலத்தே உலாவெனத் தனித்தொரு சிற்றிலக்கியமாகத் தழைத்தது.

சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய **திருக்கைலாய ஞான உலாவே** முதன்முதல் தோன்றிய உலா இலக்கியமாகும். இவ்வுலாவை ஆதியுலா என்றும், தெய்வீக உலா என்றும் வழங்குவர். இவ்வுலா சிறந்த ஓசை நயமுடையதாகும். இதேபோன்று திருஞான சம்பந்தர்மீது பாடப்பெற்றது **ஆளுடைய பிள்ளையார் திருஉலாமாலை** எனும் உலா நூலாகும். இது நம்பியாண்டார் நம்பிகள் அருளியதாகும். அதன்பின் ஒட்டக்கூத்தரால் இயற்றப் பெற்றது மூவருலா. இவர் உலா நூல்கள் பாடுவதில் வல்லவர் என்பதனை, கோவை யுலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன் என்ற சிறப்புப் பெயரும் பெற்றவர்.

இவ்வாறு இறைவனோ, தன்னேரில்லாத் தலைவனோ வீதியுலா வரும்போது ஏழுவகைப் பருவப் பெண்களும் அத்தலைவன் பால் அன்பு கொண்டு, அவனழகில் மயங்கிப் பிதற்றுதல் உலா இலக்கியத்தின் மையக்கருத்தாகும். இந்நிலையினை நாவுக்கரசப் பெருமான் தமது தேவாரத்தில், உலா வந்த வீதி விடங்கப் பெருமானைக் கண்ட தலைவி யாரும் இல்லாத நேரத்தில் வந்து, யான் ஆரூர் அரன் என்று மொழிவான் எனக் கூறுகின்றாள்.

**இவன் நமைப்பல பேசத் தொடங்கினாள்**
**அவண மன்றெனில் ஆரூர் அரனெனும்**
**பவனி வீதி விடங்கனைக் கண்டிவள்**
**தவனி யாயின வாநென்றன் தையலே** (5 : 7 : 8)

என்ற பாடலில் இறைவன் உலா வந்ததைக் கண்ட தலைவி, தன்நிலை மறந்து, அவ்விடத்திலுள்ளவர்களையும் மறந்து, தலைவன்மீது மயக்கம் கொள்வதாக அமைத்துப் பாடுகின்றார் அடியார்.

தூது என்ற சொல் ஓதல், பகையே, தூது இவை பிரிவே (தொல்.நூ.971) என்ற **தொல்காப்பிய** நூற்பாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவர் தம் கருத்தைத் தெரிவிக்கத் தூதனுப்பும் மரபின் அடிப்படையிலேயே தூது இலக்கியம் தோன்றியுள்ளது. பழைய இலக்கியங்களில் தூது பற்றிய செய்திகளும், தூதனுப்பியது குறித்த பாடல்களும் உள்ளன. காப்பியத்தில் தூது ஓர் அங்கமாக இருக்க வேண்டுமெனத் **தண்டியலங்காரம்** கூறுகின்றது.

பொதுவாக அன்னம், மயில், கிளி, மேகம், பூவை, தோழி, குயில், நெஞ்சம், தென்றல், வண்டு ஆகியவற்றில் ஒன்றைத் தலைவனிடத்தில் தலைவி தூது அனுப்புவாள். **திருக்குறளில்** அகத்தூது புறத்தூது இரண்டும் காணப்படுகின்றன. தூதுக்குரிய யாப்பு கலிவெண்பா ஆகும். இதனை மூன்று நிலைகளில் பகுப்பர். அவை தூது செல்லும் பொருளின் சிறப்பு உரைத்தல், தூது அனுப்பப்படும் தலைவனின் சிறப்புக் கூறுதல்,

தூது விடுக்கும் தலைவியின் செய்தி, அவளது காதல், அவள் விரும்புவது ஆகியவற்றைக் கூறுதல் ஆகியனவாகும். தூது அனுப்பப்படும் பொருளின் பெயரிலேயே தூது நூல் பெயர் பெற்றது.

மாலை வாங்கி வருமாறு அஃறிணைப் பொருள்களைத் தூது அனுப்புவர். தலைவி மட்டுமே தலைவனிடம் காதல் கொள்ளுவதாகப் பாடுவது உண்டு. ஆனால், தலைவனுக்குத் தலைவியிடத்தில் உள்ள காதல் குறித்துப் பாடப்படுவது இல்லை (அ.கா.பெருமாள், எஸ். ஸ்ரீ குமார், **தமிழ் இலக்கிய வரலாறு**, பக் : 134-135). சங்கப் பாடல்கள் அகம் சார்ந்த பாடல்களில், தலைவி தலைவனிடம் தூதனுப்பும் முறை காணப்படுகின்றது. அகத்துறைப் பாடல்களில் அன்னம், மயில், புறா, கிளி, குயில், வண்டு, மேகம், நெஞ்சு, தென்றல் முதலியவைகளைத் தலைவி தூது அனுப்புவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அப்பர் தேவாரத்தில் தலைவியின் தூதும் முறையீடும்

அப்பர் தேவாரத்தில் தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவி, குயில், குருகு, வண்டு, நாரை, கிளி, பூவை, நெய்தல், தென்றல் ஆகியவற்றைத் தூதனுப்புகின்றாள். இத்தூது திருப்பழனப் பதிகம் முழுவதிலும், திருமருகல் பதிகத்தின் ஒருபாடலிலும் இடம்பெற்றுள்ளது.

திருப்பழனப் பதிகத்தின் முதல் பாடலில்,

**சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே**
**பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்**
**முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னி**
**பொன்மாலை மார்பன்என் புதுநலம் உண்டு இகழ்வானோ**

(4 : 12 : 1)

என்று தலைவி குயிலைத் தூதனுப்புகின்றாள். மிக்க பேரன்பு கொண்ட என் தலைவன் உன்னை இகழமாட்டார் எனக்கூறி, தலைவனின் அடையாளம் கூறிக் குயிலினைத் தூதனுப்புகின்றாள். மாணிக்கவாசகரும் திருவாசகத்தில் **வா இங்கே குயிற்பிள்ளாய் என்றும், கீதம் இனிய குயிலே** என்றும் அழைத்துக் குயிலினைத் தூதனுப்பியுள்ளார்.

பண்டரங்கக் கூத்திற்குத் தக்க கோலம் கொண்ட இறைவன் அளவிலாப் பாட்டுக்களைக் கொண்டு பழனத்தில் விளங்குகின்றான். நான் பொய்கையில் நீராடும் போது என் தளிர்வண்ணம் கண்டு எனை ஆட்கொண்டார். அவரிடம் தூதனும்பும் தலைவி, கேளாதனவற்றைத் கேட்பன போலக் கருதிக் கூறும் அமைப்பில்,

**கண்டகங்காள் முண்டகங்காள் கைதைகாண் நெய்தல்காள்**
**பண்டரங்க வேடத்தான் பாட்டோவாப் பழனத்தான்**
**வண்டுலாம் தடமூழ்கி மற்றவனென் தளிர்வண்ணம்**
**கொண்டநாள் தானறிவான் குறிக்கொள்ளாது ஒழிவானோ**
(4 : 12 : 2).

என்று இப்பாடலை அமைத்துள்ளார். தலைவனைக் காணாததால் தன் மேனி பசலை படர்ந்து நிறம் மாறுவதை எடுத்துக் கூறுமாறும் உரைக்கின்றாள்.

**தொல்காப்பியத்தில்** அகத்திணையியல், கற்பியல், பொருளியல், களவியல், மெய்ப்பாட்டியல் முதலிய பகுதிகளில் இத்தூது இலக்கியத்தின் கூறுகள் இடம்பெற்றுள்ளன. பேசாத பறவைகளையும், விலங்குகளையும் உயிரில்லாத மேகம், தென்றல் முதலியவற்றையும் தூது அனுப்புவதாகக் கற்பனை செய்து பாடுவது காதல் பாசுரங்களில் இடம் பெற்றுள்ளது. நம்பியகப்பொருளின் புறனடை நூற்பாவான,

**நெஞ்சு நாணு நிறைசேர் அறிவும்**
**செஞ்சுடர்ப் பரிதியும் திங்களும் மாலையும்**
**புள்ளும் மாவும் புணரியும் கானலும்**
**உள்ளுறுத் தியன்றவும் ஒழிந்தவை பிறவும்**
**தன்சொற் கேட்குந போலவும் தனக்கவை**
**இன்சொற் சொல்லுந போலவும் ஏவல்**
**செய்குந போலவும் தேற்றுந போலவும்**
**மொய்குழற் கிழத்தி மொழிந்தாங்கு அமையும்**
(நம்பியகப்பொருள், நூ. 223)

என்னும் நூற்பா தூது விடுப்பது பற்றிக் கூறுகின்றது.

**பயிறருங் கலிவெண் பாவி னாலே**
**யுயர்திணைப் பொருளையு மஃறிணைப் பொருளையும்**
**சந்தியின் விடுத்தல் முந்துறு தூதெனப்**
**பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே**
(இலக்கண விளக்கப் பாட்டியல், நூ. 874)

என்று தூதின் இலக்கணத்தைப் பற்றிக் கூறுகின்றது. அரசர்கள் பகையரசர்கள் பாலும், புலவர்கள் வள்ளல்கள் பாலும், தலைவி தலைவன் பாலும், தலைவன் மணத்தின் பொருட்டுத் தலைவியைச் சார்ந்தோர் பாலும், ஊடலைத் தீர்க்கும் பொருட்டுத் தலைவியின் பாலும் தூதர்களை அனுப்புதல் மரபு. தொல்காப்பியர் காலம் முதல் தூதுவிடும் மரபுகளை இலக்கியங்களில் காண முடிகிறது.

**இராமாயணத்தில்** அங்கதன் தூது, **பாரதத்தில்** சஞ்சயன் தூது, கிருட்டிணன் தூது, சங்க இலக்கியங்களில் பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழன்பால் அன்னச் சேவலை விடுத்தல், **சீவக சிந்தாமணியில்** குணமாலை சீவகனுக்குக் கிளியைத் தூது விடுத்தல், சுந்தரமூர்த்தி நாயனார் சிவபிரானைத் தூது அனுப்பியது போன்ற தூதுச் செய்திகள் இடம்பெற்றிருக்கின்றன. தூதாக அனுப்பத் தக்க பொருள்கள் வெவ்வேறாகப் பெருகிவிட்டன. நெல், துகில், தமிழ், கிளி, அன்னம், புகையிலை, மான், காக்கை, நெஞ்சு, மேகம் ஆகிய பொருள்களைத் தூது அனுப்பியதாக நூல்கள் வெளிவந்திருக்கின்றன.

உலகப் பொதுமறையாம் **திருக்குறளில்** தூது என்று ஓர் அதிகாரமே இடம் பெற்றுள்ளது. வள்ளுவர்,

**தொகச் சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி**
**நன்றி பயப்பதாந் தூது** (குறள் எண்:685)

என்ற வரிகளில் தூதின் காரணமாக நன்மையே விளையும் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்கின்றார்.

தமிழிலுள்ள தூதுப் பிரபந்தங்களுள் தலைவி தலைவன்பால் தூது விட்டனவே மிகுதியாக உள்ளன. தலைவனைப் பிரிந்த காம மயக்கத்தால் தலைவி அஃறிணைப் பொருள்களையும், உயர்திணைப் பொருள்களையும் தூதுவிடுப்பதாகச் செய்தல் கவிமரபு. அஃறிணைப் பொருள்களை அங்ஙனம் விளித்துக் கூறுதல், காமம் மிக்க கழிபடர் கிளவி என்று சொல்லப்படும்.

**சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச்**
**செய்யா மரபிற் றொழில் படுத் தடக்கியும்**
(தொல். பொருள். பொருளியல், நூ.194)

என்ற நூற்பா மேற்கண்ட செய்திக்கு அரண் சேர்க்கின்றது. பறவை முதலானவைகளைத் தூதுவிடல் பண்டைய மரபு என்பதைக் குறிக்கத் **திருவாய்மொழி** ஈட்டுரையில் **இராமாயணத்தில்** இடம் பெறும் இரு தூதுச் செய்திகளைச் சுட்டுகின்றார் (**திருவாய்மொழி**, ஈட்டுரை, முதற்பத்து, ப.180). அவற்றில் ஒன்று,

**கோதா வரியே! குளிர்வாய், குழைவாய்**
**மாதா அனையாய்! மனனே தெளிவாய்**
**ஓதாது உணர்வாருழை, ஓடினை போய்**
**நீதான் வினையேன் நிலைசொல் லலையோ ?**
(கம்ப. ஆரண்ய காண்டம், பா. 3396)

என்ற பாடலில் அன்னங்களும் நீர்க்காக்கைகளும் நிறைந்திருக்கின்ற கோதாவிரி நதியே உன்னை வணங்குகிறேன், சீதையை இராவணன் தேரில் ஏற்றிக் கொண்டு செல்கிறான் என்று இராமனிடம் சென்று விரைவிற் கூறு என்று பிராட்டி தூது விடுக்கின்றாள்.

மற்றொரு இடத்தில், இராமன் சோகத்தினை நீக்குதலையே இயல்பாகவுடைய அசோக மரமே, கலங்கி இருக்கும் எனக்குப் பிராட்டி இருக்கும் இடத்தினைத் தெரிவித்து, என்னையும் விரைவில் உன் பெயரைப் போலவே செய் என்று கூறுதலால் (**கம்ப. ஆரண்ய காண்டம்**, பா. 17). தூதுவிடல் பண்டைய மரபேயாகும் என மெய்ப்பிக்கப் படுகின்றது.

சங்க இலக்கியமான புறநானூற்றில் பிசிராந்தையார், கோப்பெருஞ்சோழனிடம் அன்னத்தை,

**அன்னச் சேவல்! அன்னச் சேவல்!**
**ஆடுகொள் வென்றி அடுபோர் அண்ணல்**
**நாடுதலை அளிக்கும் ஒள்முகம் போல**
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
**குமரிஅம் பெருந்துறை அயிரை மாந்தி**
**வடமலைப் பெயர்குவை ஆயின் இடையது**
**சோழநல் நாட்டுப் படினே, கோழி**
**உயர்நிலை மாடத்து, குறும்பறை அசைஇ**
**வாயில் விடாது கோயில் புக்கு, எம்**
**பெருங் கோக் கிள்ளி கேட்க, இரும் பிசிர்**
**ஆந்தை அடியுறை, எனினே, மாண்ட நின்**
**இன்புறு பேடை அணிய, தன்**
**அன்புறு நன் கலம் நல்குவன் நினக்கே** (புறம். பா. 67)

என விளித்துத் தூதுவிடுப்பதைக் காண முடிகின்றது. **நற்றிணைப்** பாடல் 70-இல் மருதத்திணைப் பாடலை வெள்ளி வீதியார் பாடும் போது, அத்தலைவி,

**சிறு வெள்ளாங்குருகே சிறு வெள்ளாங்குருகே!**
**துறை போகு அறுவைத் தூ மடி அன்ன**
**நிறம் கிளர் தூவிச் சிறு வெள்ளாங்குருகே!**
**எம் ஊர் வந்து, எம் ஒண்துறைத் துழைஇ**
**சினைக் கெளிற்று ஆர்கையை அவர் ஊர்ப் பெயர்தி ---**
**கழனி நல் ஊர் மகிழ்நர்க்கு என்**
**இழை நெகிழ் பருவரல் செப்பாதோயே ?**

என்று அறிவுறுத்துகிறார். சிறு வெள்ளாங்குருகே, அணிகலன்கள் எல்லாம் எம்மைவிட்டு நெகிழ்கின்ற துன்பத்தைத் தலைவனிடம் கூற வேண்டுமென்று தூதுவிடுகின்றாள். பிரிவை அறியாத தலைவியை விட்டுத் தலைவன் ஏதோவொரு காரணத்தை முன்னிட்டுப் பிரிந்து செல்கின்றான். பிரிவின் போது துன்பத்திற்கு ஆளாகும் அத்தலைவி, தன் துன்பத்தை நீக்கிக் கொள்ள மேகம், கிளி போன்றவற்றிடம் தன் துன்பங்களை எடுத்துச் சொல்லித் தன் தலைவனிடம் தூது அனுப்புவாள். இது அன்புடையார் செயல்களுள் ஒன்றாகவே கருதத்தக்கது. அகத்தூதின் இலக்கணத்துக்கேற்ப இறைவனிடம் தூது அனுப்பும் முறையில் ஆழ்வார்களும், நாயன்மார்களும் பாடல்கள் பாடியுள்ளனர். அவர்களுடைய தூதுப்பாடல்கள் பக்திச்சுவை நிறைந்து உள்ளத்தை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளன.

> நாயகி நாயகர் காதலைப் பக்திப் பாடல்களுக்கு உரிய வடிவில் பாடிய ஆழ்வார்களும் நாயன்மார்களும் தூது என்னும் வகையை நன்கு பயன்படுத்தி நெஞ்சை உருக்கும் பாடல்கள் பலவற்றை அளித்திருக்கிறார்கள்

(மு.வ., **தமிழ் இலக்கிய வரலாறு**, ப.147) என்னும் கூற்று பக்திப் பாடல்களில் தூது என்னும் இலக்கிய வகையை அருளாளர்கள் கையாண்டமையைக் காட்டுகின்றது.

## பராங்குச நாயகியின் தூது

எம்பெருமான் மீது பக்திக் காதல் கொண்ட பராங்குச நாயகி, பெருமானின் அருள் கிடைக்காத காரணத்தால் பிரிவுத் துன்பம் கொண்ட தலைவியாகத் தன்னை ஆக்கிக் கொண்டு, அன்னம், நெஞ்சு, குருகு, வண்டு முதலானவற்றைத் தூதாக அனுப்பித் தன் நிலையை அறிவிக்குமாறு கூறுகின்றாள்.

திருவிருத்தத்தின் தலைவி, தன் பிரிவுத் துன்பத்தை இறைவனுக்கு அறிவிக்கத் தன் நெஞ்சைத் தூதாக அனுப்புகின்றாள். சென்ற நெஞ்சம் திருமாலின் திருக்கலியாணக் குணங்களில் ஈடுபட்டுத் திரும்பி வராமல் அங்கேயே தங்கிவிடுகின்றது. மீண்டு வராத நெஞ்சிற்கு, அன்னங்களிடமும் குருகுகளிடமும் தூது கூறி விடுக்கின்றாள். திருவிருத்தத்தின் 30ஆம் பாசுரம் இச்செய்தியை வெளிப்படுத்துகின்றது.

திருவிருத்தத்தில் மடநெஞ்சம் எனத் தொடங்கும் 46ஆம் பாசுரத்தில், **இராவணனின்** மார்பைப் பிளந்த பெருமானிடம் தன்நிலையை வெளிப்படுத்த அனுப்பிய நெஞ்சை நோக்கிப் பராங்குச

நாயகி, வராமல் தங்கிவிட்ட இச்செயல் தகுதியானதுதானா? என வினவுவதாக அமைந்துள்ளது.

**மடநெஞ்சம் என்றும், தமது என்றும் ஓர்**
**கருமம் கருதி**
**விட நெஞ்சை உற்றார் விடவோ அமையும்;**
**அப்பொன் பெயரோன்**
**தட நெஞ்சம் கீண்ட பிரானார் - தமது அடிக்கீழ்**
**விட, போய்**
**திட நெஞ்சம் ஆய், எம்மை நீத்து**
**இன்று தாறும் திரிகின்றதே** (திருவிருத்தம், பா.46 (2523)

என்பது அப்பாசுரம். நெஞ்சிடமும் தூது விடுத்துப் பயனில்லை என்பதைக் கண்ணுற்ற தலைவி அன்னங்களையும், குருகுகளையும் அனுப்பியும் பயனைக் காணவில்லை. எனவே வண்டுகளைத் தூதாக அனுப்புகின்றாள். தூது செல்வதற்கு முன் அவ்வண்டுகளிடம் தான் சொன்ன கருத்துகளை மீண்டும் ஒருமுறை தன்னிடம் பேசிக் காட்டுமாறு வேண்டுகின்றாள்.

**வீசும் சிறகால் பறத்திர்; விண்நாடு**
**நுங்கட்கு எளிது;**
**பேசும்படி அன்ன பேசியும் போவது - நெய்**
**தொடு உண்டு**
**ஏசும்படி அன்ன செய்யும் எம்ஈசர்**
**விண்ணோர் பிரானார்**
**மாசுஇல் மலர் அடிக்கீழ் எம்மைச்**
**சேர்விக்கும் வண்டுகளே** (திருவிருத்தம், பா. 54 (2531)

என்று பாசுரம் கூறுகின்றது. இந்நிலையினைக் காணும் போது மானுட இயல்பில் ஒருவரிடம் ஒரு செய்தியை மீட்டுக் கொணரும் போக்கு தெளிவாகப் புலப்படுகின்றது.

ஆசாரியர்களும் ஒருசாலை மாணாக்கர்களும் புத்திரர்களும் இறைவனை அடையும் பேற்றுக்குத் துணையாக இருப்பார்கள் என்பது அழகிய மணவாளப் பெருமாளின் கருத்தாகும். சங்க அகப்பாடல்களில் தலைவி தலைவனிடம் பறவைகள் முதலியவற்றைத் தூதாக அனுப்புவதுபோல் எம்பெருமானிடம் ஆழ்வார்களும் தலைவி நிலையில் நின்று பறவை, மேகம் போன்றவற்றைத் தூதாக அனுப்புகின்றனர். இறுதியில் நாயகன் மனமுருகி நாயகியிடம் அன்பு செலுத்திட இருவரும் ஒன்றுபடுகின்றனர். இக்கருத்துக்களின்

அடிப்படையில் திருமாலுடன் இரண்டறக் கலக்க விரும்பிய ஆண்டாளும் தூதினைக் கையாள்கின்றார்.

கண்ணனை அடைய முடியாமல் தவிக்கும் தன் மனத்துயரைக் குயிலிடம் கூறித் தனக்கு உதவுமாறு கூறுகின்றாள்.

**என்புரு கிஇன வேல்நெடுங் கண்கள்**
**இமைபொருந் தாபல நாளும்**
**துன்பக் கடல்புக்கு வைகுந்தன் என்பதோர்**
**தோணி பெறாது உழல் கின்றேன்**
**அன்புடை யாரைப் பிரிவுறு நோயது**
**நீயும் அறிதி குயிலே !**
**பொன்புரை மேனிக் கருளக் கொடியுடைப்**
**புண்ணியனை வரக் கூவாய்**

(ஆண்டாள், நாச்சியார் திருமொழி, பா.5:4)

என்ற வரிகளில் கண்கள் உறங்கவில்லை, இமைகள் மூடமுடியவில்லை. துன்பக்கடலில் மூழ்கிக் கிடக்கும் எனக்குத் தோணியாக இருப்பவனே வைகுந்தன். அந்தப் புண்ணிய மூர்த்தியை இங்கே எழுந்தருளச் செய்ய குயிலே குரல் கொடுப்பாயாக! இணைப் புறாக்களில் ஒன்று மடிந்தால் இன்னொன்று கூழாங்கல்லை வாயில் போட்டுக்கொண்டு மேலேயிருந்து கீழே விழுந்து உயிரைவிடுமாம். அதேபோன்று தன்நிலை இருப்பதாகக் கூறுகின்றாள். வள்ளுவரும்,

**காமக்கடல் மன்னும் உண்டே அதுநீந்தும்**
**ஏமப்புணை மன்னும் இல்**

என்ற குறளில் காமநோயாகிய கடல் இருக்கின்றது. ஆனால் அதை நீந்திக் கடந்து செல்வதற்கு வேண்டிய காவலான தோணியோ இல்லை என்று கூறுகின்றார்.

**எத்திசையும் அமரர் பணிந்து ஏத்தும்**
**இருடீகே சன்வலி செய்ய**
**முத்தன்ன வெண்முறு வல்செய்ய வாயும்**
**முலையும் அழகழிந் தேன்நான்**
**கொத்தலர் காவில் மணித்தடம் கண்படை**
**கொள்ளும் இளங்குயிலே ! என்**
**தத்துவனை வரக்கூகிற்றி யாகில்**
**தலையல்லால் கைம்மாறி லேனே**

(ஆண்டாள், நாச்சியார் திருமொழி, பா.5 : 6)

என்ற பாசுரத்தில் ஆண்டாள் பூஞ்சோலையில் சுகமாகக் கண்ணுறங்கும் பூங்குயிலை எழுப்பித் தன் மனக்குறையைக் கூறி என் கண்ணனை, தத்துவமுத்தை என் கண்ணெதிரே நீ தோன்றச் செய்தாயானால் உன்னை என் உச்சி மீது வைத்துப் புகழ்ந்து பாடுவேன் என்று தன் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துகின்றாள்.

**பொங்கிய பாற்கடல் பள்ளிகொள்வானைப்**
**புணர்வதோர் ஆசையி னால்என்**
**கொங்கை கிளர்ந்து குமைந்து குதுகலித்து**
**ஆவியை ஆகுலம் செய்யும்**
**ஆங்குயிலே ! உனக்கு என்ன மறைந்துறைவு?**
**ஆழியும் சங்கும் ஒன்தண்டும்**
**தங்கிய கை யவனைவரக் கூவில் நீ**
**சாலத் தருமம் பெறுதி**

(ஆண்டாள், நாச்சியார் திருமொழி, பா.5 : 7)

என்ற பாடலில் ஆண்டாளின், திருமாலைப் புணரத் துடிக்கும் நிலை கூறப்படுகிறது. தான் கண்ணனை விரும்புவதாகவும் அவனுடன் உறவு கொள்ளத் துடிப்பதாகவும் கூறும் ஆண்டாள் தனிமையின் கொடுமையால் வாடுகின்றாள். உயிரை உருக்கித் துன்பத்தைக் கொடுக்கும் விரகதாபத்தை நீக்க வரும்படி கூவு குயிலே என வேண்டுகின்றாள்.

**அன்றுல கம்அளந் தானை உகந்து**
**அடி மைக்கண் அவன்வலி செய்ய**
**தென்றலும் திங்களும் ஊடறுத்து**
**என்னை நலியும் முறைமை யறியேன்**
**என்றும் இக்காவில் இருந்திருந்து என்னைத்**
**தகர்த்தாதே நீயும் குயிலே !**
**இன்றுநாராயண னைவரக் கூவாயேல்**
**இங்குத்தை நின்றும் துரப்பன்**

(ஆண்டாள், நாச்சியார் திருமொழி, பா.5 : 10)

என்ற பாடலில் குயில் தனக்காகக் கோவிந்தனிடம் தூது சென்று தனக்குதவி புரியவில்லையெனில் இச் சோலையிலிருந்து உன்னை விரட்டிவிடுவேன் என வெகுளியின் உச்சிக்கே செல்லுகின்றாள். இக்கூற்றில் ஆண்டாள் தெய்வீகப் பிறவியாக இருந்தாலும் மானிடப் பேதைப் பெண்ணின் நிலையில் நின்று தன் உள்ளக் குமுறலை எடுத்துரைக்கின்றாள்.

இவ்வாறாகக் குயிலிடம் தன் நிலையைக் கூறிய ஆண்டாள் அடுத்து மேகத்திடம் தன் நிலையை எடுத்துக்கூறித் தூதுபோகுமாறு பாடும் நிலையில்,

**மின்ஆகத்து எழுகின்ற மேகங்காள் ! வேங்கடத்துத்**
**தன்னாகத் திருமங்கை தங்கியசீர் மார்வர்க்கு**
**என்ஆகத்து இளங்கொங்கை விரும்பித்தாம் நாள்தோறும்**
**பொன்னாகம் புல்குதற்கு என் புரிவுடைமை செப்புமினே**
(ஆண்டாள், நாச்சியார் திருமொழி, பா.7 : 8)

என்ற பாடலடிகளில் கோதை தன் விரகதாபத்தை வெட்கத்தோடு மேகங்களிடம் வெளிப்படுத்துகிறாள். மின்னலைத் தன்னகத்தே வைத்துள்ள மேகங்களே என்றழைத்து, கண்ணன் நாள்தோறும் என்னை மார்புறத் தழுவி அரவணைத்து விடவேண்டும் என்ற தணியாத என் ஆசையைத் திருவேங்கடத்துப் பெருமானுக்கு எடுத்துச் சொல்லுங்கள் எனக்கூறுகின்றாள்.

## தலைவனின் மாலை வேண்டித் தூதனுப்புதல்

தலைவனிடம் கொண்ட அன்பின் மிகையால் தலைவியினுடைய உடலும், உள்ளமும் சோர்ந்துவிட்டன. அவன் மார்பில் அணிந்திருக்கும் கொன்றை மாலையாவது வாங்கி வரமாட்டாயா? என நாரையிடம் தூதனுப்புகின்றாள்.

**துணையார முயங்கிப்போய்த் துறைசேரும் மடநாராய்**
**பணையார வாரத்தான் பாட்டோவாப் பழனத்தான்**
**கணையார இருவிசும்பிற் கடியரணம் பொடிசெய்த**
**இணையார மார்பன்என் எழில்நலம் உண்டு இகழ்வானோ**
(4 : 12 : 7)

என்று பாடியருளுகின்றார். தான் என்ன செய்வதென்று அறியாது இருப்பதாகவும் கூறுகின்ற தலைவி,

> என் தலைவன், உள்குவார் உள்கிற்றெல்லாம் உடனிருந்து அறிந்து அவர்களுடைய குறைகளைத் தீர்த்து வைக்கின்றான் என உலகோர் அனைவரும் கூறுகின்றனர். ஆயின் எனக்கு ஏற்பட்ட துயரத்தைக் களைவதற்கு மாறாக என்னை வஞ்சித்து என் வளை கவர்ந்தான்

என வருந்துகிறாள்.

தூதுச் செய்திகளைக் கூறுவதற்காகவே தலைவி கிளியை வளர்ப்பதாக அமைந்துள்ளது ஒருபாடல். மற்ற பாக்களில் தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவியின் ஏக்க உணர்வு புலப்படுகின்றது.

திருப்புறம்பயத் திருத்தாண்டகத்தில், தலைவனுக்குத் தூதுவிடக் கருதிய தலைவி தன் தோழிக்குக் கூறியதாக அமைந்த பாடலொன்றில், இறைவன் மண்டை ஓட்டைக் கையிலேந்திப் பலியேற்க வருகின்றான். அவனது அழகைக் கண்டும், அவன் பேசிய பேச்சைக் கேட்டும், அவற்றில் தன்நிலை மறந்து, நிறையழிந்து விடுகின்றாள் தலைவி. நாள்தோறும் அவன் வருவான், அவனைக் கண்டு உரையாடுவாள்; அப்போது அவன் தன் ஊரை வெவ்வேறாகக் கூறுவான். அதைக் கேட்ட அவள், தன் தலைவன் உலகமுழுதுமுடையவன் என்பதை உணர்கிறாள். இறுதியில் அவன் தன் ஊர் புறம்பயம் எனக் கூறிச் செல்வான் என்கிறாள். இவ்வாறு கூறிச் சென்ற தலைவன் வராமல் போகவே, அதனை ஆற்றாத தலைவி அவன் பால் தூதுவிடக் கருதி, தனது எண்ணத்தினைக் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. இறைவனை அடையப் பெறாது வருந்துவோர்க்கு அவனது ஆற்றாமையை அறிந்து, திருப்புறம்பயத்தின் வெளிநின்று அருள்கின்றான் என்பது இப்பதிகத்தின் உட்பொருளாகக் கருதப்படுகின்றது (தருமபுர ஆதினப்பதிப்பு, **ஆறாம் திருமுறை**. ப : 98).

## அப்பர் பாடல்களில் கூற்று முறை

தலைவியைக் கண்டு, அதன் பின் பிரிந்து சென்ற தலைவன் வராமையால் ஆற்றாமை கொண்ட தலைவி, தலைவனைத் தான் மீண்டும் கண்டால் அவனைத் தழுவுவேன் என்று கூறியமையை அப்பர் பெருமான்,

**நிலைப்பாடே நான் கண்ட தேடீகேளாய்**
**நெருநலை நற் பகலிங்கோ ரடிகள்வந்து**
**கலைப்பாடுங் கண் மலருங் கலக்க நோக்கிக்**
**கலந்து பலியிடுவே னெங்குங் காணேன்**
**சலப்பாடே யினியொருநாட் காண்பே னாகில்**
**தன்னாகத் தென்னாகம் ஒருங்கும் வண்ண**
**முலைப்பாடே படத்தழுவிப் போக வொட்டேன்**
**ஒற்றியூ ருறைந்திங்கே திரிவானையே** (6 : 45 : 8)

எனத் திருவொற்றியூரில் உறைந்து தன்னைக் காண வராது இருக்கும் இறைவனை நினைந்து ஏங்குவதாக இப்பாடலைப் பாடுகின்றார்.

பலியிட வந்த தலைவி, தலைவனின் நிலையைக் காணுமாறு கூறுமிடத்து, நெற்றியில் திருநீற்றினைப் பூசிக்கொண்டு, புலித்தோலுடுத்தி, நூல் பூண்டு, சினமிக்க பாம்பினைக் கையில் கொண்டு, பிச்சைக்குத் தலைவன் வருவதாகவும், அவனைக் காணுமாறும் அழைக்கின்றாள்.

**வண்ணங்கள் தாம்பாடி வந்து நின்று**
**வலிசெய்து வளைகவர்ந்தார் வகையால் நம்மைக்**
**கண்ணம்பால் நின்றெய்து கலைப் பேசிக்**
**கடியதோர் விடையேறிக் காபாலியார்** . . . (6 : 9 : 1)

என அப்பர்பெருமான் தம் தலைவனைக் (சிவபெருமானை) காண அழைக்கின்றார். பலிக்கு வந்த தலைவன் ஓரிடத்தும் தங்கமாட்டான்; ஓரிடத்தினையும் சொல்லமாட்டான்.

**தங்கா ரொருவிடத்துந் தம் மேலார் வந்து**
**தவிர்த்தருளார் தத்துவத்தே நின்றேனென்பார்** (6 : 58 : 9)

என்றும், நம்மூர் திருவொற்றியூர் என்று கூறுமிடத்து 'நம்' எனத் தன்னையும் அவரோடு சேர்த்துக் கூறிய செய்தியினையும், அவர் என் உள்ளம் கவர்ந்தவர், அவ்வாறு அவர் செல்லும் போது அதைக் காணாதது போல நான் இருப்பேன், என்கண் அவர் மறைந்து நிற்பார் என்ற செய்தியினையும் கூறுகின்றாள். இதனை,

**கள்ள விழிவிழிப்பர் காணாக் கண்ணாற்**
**கண்ணுள்ளார் போலக் கரந்து நிற்பார்** (6 : 35 : 5)

என்கிறார் அப்பர் பெருமான். மேலும், தலைவனது செயல்கள் ஒன்றோடொன்று ஒவ்வாது முரண்பட்டு நிற்கின்றன என்றும், இதற்குக் காரணம் என்னவெனில், உண்பதும் நஞ்சு, இல்லையேல் ஏதும் உண்ணாதிருத்தல்.

**எங்கே யிவர் செய்கை யொன்றான் றொவ்வா**
**என் கண்ணின் நின்றகலா வேடங் காட்டி** (6 : 58 : 9)

இவ்வாறு இவர் செய்யும் செயல்களே இவர்மீது என்னைக் காதல் வளரச் செய்தவை. மால் கொண்டது போல மயங்குகின்றேன். மற்றாரும் எனக்குத் துணை இல்லை, என் கண்ணை விட்டு அகலாது இருக்கின்றார் எனத் தலைவியின் கூற்று அமைகின்றது.

## தோழி கூற்றுகள்

**தோழி தானே செவிலி மகளே** (தொல்.பொருள்.நூ. 123)

எனத் தோழிக்குரிய சிறப்பினைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். களவுக் காலம் முதல் வரைவு கடாவுதல் வரை, களவில் தோழியின் பங்கு மிக இன்றியமையாததாகச் சங்கப்பாடல்கள் குறிப்பிடுகின்றன. செவிலித்தாயின் மகளே தோழியாக உடனிருப்பாள்.

> அகப்பொருளில் தலைவன் தலைவியரை அடுத்து, சிறப்பிடம் பெறுபவள் தோழியாவாள். அவள் தலைவிக்கு உயிர்த்தோழி. தலைவன் தலைவியரிடையே அரும்பும் காதல் மலர்ந்து, காய்ந்து, கனிவதற்கு உறுதுணையாகி நிற்பவள் தோழி

என்று தா.ஏ.ஞானமூர்த்தி குறிப்பிட்டுள்ளார் (ம.சா.அறிவுடைநம்பி, **திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள்**, ப : 107).

அப்பர் பெருமானின் பாடல்களில் 3 பாடல்கள் மட்டுமே தோழி கூற்றாக அமைந்துள்ளன. அப்பர் பெருமானின் அகப் பாடல்களில் தோழியின் பங்கு குறைவாகவே காணப்படுகின்றது.

**மங்கை காணக் கொடார்மண மாலையை**
**கங்கை காணக் கொடார்முடிக் கண்ணியை**
**நங்கை யீர்இடை மருதர்இந் நங்கைக்கே**
**எங்கு வாங்கிக் கொடுத்தார் இதழியே** (5 : 15 : 6)

எனும் இப்பாடலில் தோழியர் தலைவியை எள்ளி நகையாடுதலைப் போல அமைத்துள்ளார். தலைவி, இடைமருதீசரின் மேல்கொண்ட காதலால் உடல்பசந்தாள். பொன்னிறப் பசலை அவளது உடலெல்லாம் படர்ந்தது. அதைக் கண்ட தோழியர், அப்பொன்னிறப் பசலையைத் தலைவன் அளித்த கொன்றை மாலையாகக் கற்பித்து, பார்வதிக்கும், கங்கைக்கும், தெரியாமல் இம்மாலையை எங்கிருந்து வாங்கிக் கொடுத்தான் உன் தலைவன் என ஏளனம் செய்கின்றனர்.

மற்றொரு பாடலில், தலைவி கண்ணீர் சிந்துகின்றாள்; கைகூப்பித் தொழுகின்றாள்,

முக்கண்ணுடைய நண்பனுக்கு என்னை நான் கொடுப்பேன்

என்று சொல்கின்றாள். வளவிய பொன்னித் தென்கரையிலுள்ள வலஞ்சுழி மேவிய பண்பாளனாகிய பெருமான் இந்தப் பொன்போன்ற தலைவியின்பால் அருள் தன்மையுடன் செய்த பரிசு இதுவாகும் என்று தோழி கூறுவதை,

**கண்பனிக்குங்கை கூப்புங்கண் மூன்றுடை**
**நண்பனுக்கு எனை நான்கொடுப் பேன்எனும்**
**வண்பொன்னி தென் வலஞ்சுழி மேவிய**
**பண்பன்இப் பொனைச் செய்த பரிசிதே** (5 : 66 : 9)

எனத் தலைவியின் இன்ப, துன்பங்களில் பங்கெடுக்கும் தன்மை கொண்டவளாகப் படைத்துள்ளார். தலைவி, தலைவனை நினைந்து, அவருக்குப் பணி செய்யும் நிலையில் தன்னையே மறந்து நிற்கும் நிலையினை மிக அழகாகச் சித்திரித்துள்ளார். இப்பாடல்,

**முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்**
**மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்**
**பின்னை யவனுடைய யாரூர் கேட்டாள்**
**பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்**
**அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்**
**அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்**
**தன்னை மறந்தாள்தன் னாமங்கெட்டாள்**
**தலைப் பட்டாள் நங்கை தலைவன் தாளே** (6 : 25 : 7)

என்று தலைவி தலைவனது திருப்பெயரைக் கேட்ட நாள் முதலாய்த் தலைவன்பால் காதல் கொண்டு, படிப்படியாக அவளது காதல் முற்றி அவனுக்கே பிச்சியாகின்றாள். தாய் தந்தையரை நீங்கி, உலகோர் கூறுவதைப் பொருட்படுத்தாது, தலைவன் இருக்கும் இடத்தை நாடிச் செல்கின்றாள். 'தன்னையும் மறந்து, அவர் பணி செய்து கிடப்பாளாயினாள்' என்று தோழி கூறுகின்றாள்.

ஒரு பெண்ணின் காதல் வளர்ச்சியினை இப்பாடலில் காணமுடிகின்றது. தன்னையே பெண்ணாகப் பாவித்துத் தலைவன் மீது ஆறாக்காதல் (பக்தி) கொண்டு, சிறந்த அகக் கருத்துக்களுடன் இதனை வடிவமைத்துள்ளார் அப்பர் பெருமான்.

குருவினால் திருவைந்தெழுத்து உபதேசிக்கப்பட்ட பரிபக்குவ ஆன்மா, படிப்படியாக இறைவனை அறிந்து, ஆன்ம போதம் தேய்ந்து, இறைவன் கோயில் வாயிலில் பிச்சனாகி இருந்து, மாயையையும், வினையையும் கடந்து தற்போதம் முழுவதும்போய்ச் சீவன் என்னும் பெயரையும் இழந்து இவ்வுடலோடு சிவானுபவம் நுகரும் செல்வனாகிச் சிவனடி நீலிழலே இருக்கப் பெறும் அனுபவங்களைக் குறிப்புப் பொருளாகக் கொண்டு அமைந்தது இப்பாடல்

என **வரலாற்றாராய்ச்சியும் தேவராத்திறனாய்வும்** என்ற நூலில் கு.நடேச கவுண்டர் குறிப்பிட்டுள்ளார் (எ.மே. : ம.சா.அறிவுடைநம்பி, **திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள்**, ப:108).

தலைவனுடைய பெரும்புகழ் கேட்டுத் தலைவி மகிழும் நிலையில் நிகழும் மேம்பாட்டை 'உறுபெயர் கேட்டல்' என்பர் தொல்காப்பியர். இவ்வகத்துறைப் பாடலில் இம்மெய்ப்பாட்டை அமைத்தருளியுள்ளார்.

## செவிலித்தாய் கூற்று

**ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்**
**தாயெனப் படுபவள் செவிலி யாகும்**

(தொல். பொருள். களவு. நூற் : 122)

நற்பெருஞ் சிறப்புக்களையுடைய, அறிவதற்கு அரிய மறை பொருட்கள் யாவற்றையும் கூறும் கடப்பாடு உடையவள் ஆதலால், தாய் என்றும் வழங்கப்படுபவள் செவிலித்தாய். "தலைவியை ஈன்றெடுத்தவள் நற்றாய்; அவளைப் பல்லாற்றானும் வளர்த்து ஆளாக்குபவள் செவிலித்தாய்" என்று செவிலித்தாயின் சிறப்பு போற்றப்படுகின்றது.

தலைவன் தலைவியருக்கிடையே நிகழும் களவொழுக்கத்தின்கண் செவிலிக்குப் பெரும்பங்கு உண்டு என்பதனைச் சங்க அகப்பாடல்கள் விளக்கும். தலைவியைப் பெற்றெடுத்த தாயைக் காட்டிலும் சிறந்த தாயாக விளங்கும் செவிலித்தாயினது கூற்றுக்களை 49 பாடல்களில் பாடுகின்றார்.

திருக்கழிப்பாலையில் வாழும் தலைவியின் நிலையைச் செவிலித்தாய் கூறுவதாக அமைந்த பாக்கள் சிறந்த கற்பனை வளத்துடன் சித்திரிக்கப்பட்டுள்ளன.

**வனபவள வாய்திறந்து வானவர்க்குந்**
**தானவனே யென்கின் றாளாற்**
**சினபவளத் திண்டோள் மேற் சேர்ந்திலங்கு**
**வெண்ணீற்ற னென்கின் றாளால் ...** (4 : 6 : 1)

எனத் தலைவி தன் பவளம் போன்ற வாயினைத் திறந்து, சில நேரங்களில் அனைத்தும் கடந்த பரம்பொருளாய் விளங்கும் முதல்வனை நினைந்து புலம்புகின்றாள். அத்தலைவனைக் கண்டதால் ஏற்பட்ட நோயோ இது என்றும் செவிலித்தாய் வருந்துவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தலைவியை நன்குணர்ந்தவளாகவும், அவள் குணம் அறிந்தவளாகவும் செவிலித்தாய் காட்டப்பெறுகிறாள்.

**இட்டமாயின செய்வாள் என் பொன் கொடி**
**கட்டம்பேசி காராக் கன்றனைத் . . . . .** (5 : 45 : 10)

மயிலாடுதுறையுறையும் பெருமானே தலைவியின் பசலை நோய்க்குக் காரணம் என்றும், அவர்தம் கொன்றை மாலையை என் பைங்கொடிக்குக் கொடுப்பதே அவள் தெளியும் வழி என்றும் கூறுகின்றாள்.

தலைவனைக் கண்டு மயங்கிய தன் மகளின் நிலையைக் கூறுவதாக அமைந்த பாடலில் தலைவன் அணிந்திருக்கும் மாலையைத் தாராது ஒழிந்தால், கோடிக்காவில் உள்ளவனே இப்பசலைக்குக் காரணம் எனக் கூறுவேன் என்பதை,

**வீறு தான்பெறு வார்சில ராகிலும்**
**நாறு பூங்கொன்றை தான்மிக நல்கானேல்**
**கூறு வேன்கோடிக் காவுளாய் என்றுமால்**
**ஏறு வேன்றும்மால் ஏசப் படுவனோ** (5 : 78 : 5)

என்று புலம்புவதாக அமைத்துள்ளார். இதுவும் செவிலித்தாயின் கூற்றாக அமைந்துள்ளது. என் மகளுக்குத் தலைவன் தன் மாலையைத் தருவானேயானால், அவள் மனம் தெளிவாள் என்றும், அவள் கையிலணிந்திருக்கும் வளையல்கள் மகிழ்ச்சிப் பூரிப்பால், கையிலிருந்து கழலாது செறிந்து பொருந்தும், பசலை நீங்கிப் பழைய நிலையும் பெறுவாள் எனக் கூறுகின்றாள். இதனை அப்பர்பிரான்,

**சித்தந் தேறுஞ் செறிவளை சிக்கெனும்**
**பச்சை தீருமென் பைங்கொடி பால்மதி**
**வைத்த மாமயி லாடு துறையரன்**
**கொத்தி னிற்பொலி கொன்றை கொடுக்கிலே** (5 : 39 : 2)

எனப் பாடியருளியுள்ளார். தலைவனுக்கு விருப்பமான மாலை கொன்றை மாலையாகும். இம்மாலையைத் தலைவி வேண்டுவதாக நான்கு பாடல்கள் அமைந்துள்ளன. தலைவனின் மாலையைத் தலைவி வேண்டும் (பழக்கம்) முறை அப்பர் காலத்திற்குப் பிறகே தோன்றியிருக்க வேண்டும். சங்க இலக்கியங்களிலும், அகப்பொருள் மற்றும் அவற்றின் தோன்றிய இலக்கியங்களில் இக்குறிப்புகள் காணப் பெறவில்லை. ஆனால் உலா இலக்கியங்களில் இக்கூறுகள் காணப்பெறுகின்றன.

செவிலித்தாயானவள் தலைவியின் இயல்புகளைப் பல இடங்களில் கூறுவதாகப் பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. தலைவி தனக்கு விருப்பமானவற்றையே செய்வாள், தலைவனுக்கு நல்லவள் எனக் கூறுமிடத்து,

**பாலை யாழ்மொழி யாள்அவள் தாழ்சடை**
**மேலள் ஆவதுகண் டனள் விண்ணுறச்**
**சோலை ஆர்தரு தோணி புரவர்க்குச்**
**சால நல்லள் ஆகின்றாள் தையலே** (5 : 45 : 4)

எனப் போற்றிப் புகழ்கின்றார். அவள் தலைவனுக்கு நல்லவளாக இருக்கின்றாள் என்பதனை,

**முல்லை வெண்நகை மொடங்குழலாய் உனக்கு**
**அல்லன் ஆவது அறிந்திலை நீகனித்**
**தொல்லை ஆர்பொழில் தோணி புரவர்க்கே**
**நல்லை யாயிருக் கின்றனை நங்கையே** (5 : 45 : 6)

எனத் தலைவன் உனக்கு நல்லவனாக இல்லையெனினும் நீ அவனுக்கு நல்லவளாகவே விளங்குகின்றாய் என்று கூறித் தன் மகளின் நிலைகண்டு பெருமை கொள்கிறாள் செவிலித்தாய். அதோடு அவனுக்குப் பணி செய்பவளாக விளங்கும் அவள், திருத்தோணி புரத்தீசருக்குத் தாதியாக நின்று பணிவிடை செய்யும் ஆளானேன். எனக்கு அறிவுரை கூற நீ என்ன உறவுடையவள்? எனத் தன் தாயையே மறந்து, தாயைக் காட்டிலும், தன் தலைவனே தனக்கு உயர்ந்தவன் என எண்ணி, அவனுக்கே பணி செய்வேன் எனக் குறிப்பிடுகின்றாள். இத்தலைவியின் நிலையினைத் தலைவனே அறிவான் என்பதனை,

**"வண்ணமும் வடிவும் சென்று கண்டிலள்**
**எண்ணி நாமங்கள் ஏத்தி நிறைந்திலள்**
**கண்ணுலாம் பொழில் சூழ்கழிப் பாலைஎம்**
**அண்ணலே அறிவான் இவள் தன்மையே"** (5 : 40 : 1)

எனத் தலைவனை நேரில் காணாமலும், அவன் நாமங்களை அறியாமலும், மனதில் தெளிவு இல்லாமலும், தலைவன் மீது காதல் கொண்ட இவளைத் திருக்கழிப்பாலையுள் உள்ள இறைவனே அறிவான் என்றும், அவள் தலைவனைக் கண்டு காமுறுவாள் என்றும், அவனது நாமங்களை நினைந்து போற்றுவாள் என்றும், அவன் வருவான் என்று இருமாப்புக் கொண்டு அவனோடு பேரன்பு கொண்டவளாய் விளங்குவதாகச் செவிலித்தாய் எடுத்துரைக்கின்றாள்.

தோழிகளுடன் விளையாடும்போதும், தலைவி தன் தலைவனையே நினைத்து கொண்டிருப்பாள் என்றும், அவள் தன் மனதில் தலைவனைக் காணவேண்டும் என்ற எண்ணம் ஊசலாடுவதையும்,

**கருத்த னைக்கழிப் பாலையுள் மேவிய**
**ஒருத்த னைஉமை யாளொரு பங்கனை**
**அருத்தி யாற்சென்று கண்டிட வேண்டுமென்று**
**ஒருத்தி யாருளம் ஊசலது ஆடுமே** (5 : 40 : 5)

என்று தலைவன் மீது கொண்ட காதலால் தலைவி யாரையும் மதிக்காது இருக்கின்றாள் என்பதனை,

**செய்யமேனி வெண்ணீறணிவான் தனை**
**மையலாகி மதிக்கிலள் ஆரையும்** (5 : 40 : 4)

எனக் குறிப்பிடுகின்றார். தலைவி மழலை மொழி பேசும் அழகினையும், பெருமான் மீதுகொண்ட பக்திப் பெருக்கினால் மிக இளையவளாகிய இத்தலைவி மழலையைக் குழலிசை போன்று பேசுவதையும் பாடல்கள் காட்டுகின்றன.

**மழலை தான்வரச் சொல்தெரி கின்றலள்**
**குழலின் நேர்மொழி கூறிய கேண்மினோ**
**அழக னேகழிப் பாலையெம் அண்ணலே**
**இகழ்வ தோஎனை யேன்றுகொள் என்னுமே** (5 : 40 : 3)

எனப் பெருமானிடம் தன்னை இழந்து, செவ்விய மொழிகள் கூற இயலாதவளாய், என்னை இகழாது ஏற்றுக் கொள்ளுங்கள் என்று தலைவி வருந்துவதாகச் செவிலித்தாய் குறிப்பிடுகின்றாள்.

எப்போதும் தலைவனின் நினைவாக அவன் புகழைப் பாடிக் கொண்டே இருக்கிறாள். தலைவன் உலா வருவதைக் காண்பதற்குத் தன் கைவளை நெகிழவும், உடை சரியவும், வீதியினருகே சென்று நிற்கின்றாள். தன் மணம் வீசும் நீண்ட கூந்தலையும் முடியாது நிற்கின்றாள். தலைவியின் இச்செயலுக்கு என்ன செய்வேன் யான்? எனச் செய்வதறியாது நிற்கின்றாள் செவிலி எனச் செவிலித்தாயின் சிறப்பினை எடுத்துக் காட்டுகின்றார் அப்பர்பெருமான்.

காதல் கைம்மிகுந்த தலைவியின் நிலையினைச் செவிலி நற்றாய்க்குக் கூறுவதாக ஒரு பாடல் அமைந்துள்ளது. அதில்,

**தண்ட வாளியைத் தக்கன்றன் வேள்வியைச்**
**செண்டது ஆடிய தேவர் அகண்டனைக்**
**கண்டு கண்டிவள் காதலித்து அன்பதாய்க்**
**கொண்டி யாயின வாறுஎன்றன் கோதையே** (5 : 7 : 7)

என்று செவிலி உரைக்கின்றாள். வீதி விடங்கப் பெருமான் வீதியில் உலா வருவதைக் கண்டு வணங்கியவள், தன்னை மறந்து, தன்னைச் சுற்றியுள்ளவரையும் ஒரு பொருட்டாகக் கருதாது பெருமான் புகழினையே பேசத்தொடங்கினாள். அவளது தெய்வப் பற்றானது தீயைப்போலக் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது என நற்றாய்க்குத் தலைவியின் நிலையினை,

**இவள்நமை பலபேசத் தொடங்கினாள்**
**அவண மன்றெனில் ஆரூர் அரன் எனும்**

**பவனி வீதி விடங்கனைக் கண்டிவள்**
**தவனி யாயின வாறு என்றன் தையலே** (5 : 7 : 8)

எனத் தலைவியின் காதலொழுக்கத்தைச் செவிலி எடுத்துரைக்கின்றாள்.

## செவிலி - தலைவி உரையாடல்

தலைவன்மேல் காதல் கொண்ட பெண்ணே! நீ வெளியே எங்கும் செல்லாதே; மனைக்கண் இரு எனக் கூற, தலைவி அதுகேட்டு,

**மாதி யன்று மனைக்கிரு என்றக்கால்**
**நீதி தான்சொல நீயெனக்கு ஆர்எனும்**
**சோதி யார்தரு தோணி புரவர்க்குத்**
**தாதி யாவன் நான் என்னு மென்தையலே** (5 : 45 : 1)

செவிலியை நோக்கி எனக்கு நீதி சொல்ல நீ என்ன உறவுடையை?

ஒளி நிறைந்த தோணிபுரத்துத் தலைவனுக்குத் தாதியாக
இருந்து பணிசெய்வேன்

என மறுப்புக் கூறுகின்றாள். இந்நிலையில் தலைவியின் மனநிலையைப் புரிந்து கொள்பவளாகச் செவிலி சித்திரிக்கப்பட்டுள்ளாள்.

பலியேற்க வந்த தலைவனிடம் அவனது ஊரைக் கேட்க, அவன் தலைவியின் இல்லம் புகுந்து, தாமரை மலரில் வண்டானது யாழ்போன்று இசைக்கும், அத்தன்மை கொண்ட ஆமாத்தூரே எமதூர் எனக் கூறிச் செல்வதாக அமைந்த பாடலில்,

**வெந்தார் வெண்பொடி பூசி வெள்ளைமாலை**
**விரிசடைமேற் றாஞ்சூடி வீணையேந்திக்**
**கந்தாரந்தாம் முரலாய் போக நிற்கக்**
**கரைசேர் மணிமிடற்றீசரூரே தென்றேன்**
**நொந்தார்போல் வந்தென தில்லே புக்கு**
**நுடங்கே ரிடைமடவாய் நம்மூர் கேட்கில்**
**அந்தாமரை மலர்மேல் அளிவண்டி யாழ்செய்**
**ஆமாத்தூர் என்றடிகள் போயினாரே** (6 : 9 : 2)

என்றிவ்வாறு கூறுகிறாள் தலைவி. இருவரும் உரையாடுவதைப் போல இப்பாடல் அமைந்துள்ளது. இதே போன்று திருவலம்புரப் பதிகத்திலும், தலைவி தலைவனை ஊர் எது என்று வினவ, தலைவன் தான் வேரூருக்குச் செல்வதாகக் கூறிவிட்டு, திருவலம்புரத்திலேயே தங்கியதாகக் கூறிப்படுகின்றது.

அப்பர் தேவாரப் பாடல்களில் தலைவனின் கூற்றாக எந்தப் பாடலும் அமையவில்லை. தலைவனின் இயல்பு, பெருமை பற்றித் தோழி, செவிலி, தலைவி ஆகியோரின் கூற்றுக்களால் அறியமுடிகின்றது. பலிக்கு வந்த தலைவன், தலைவியின் எழில்நலம், நெஞ்சம், நிறை, நீர்மை, வளை ஆகியனவற்றைக் கவர்ந்து சென்றதாகப் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**பட்டுடுத்துப் பவளம்போல் மேனி யெல்லாம்**
**பசுஞ்சாந்தங் கொண்டணிந்து பாதம் நோவ**
**இட்டெடுத்து நடமாடி யிங்கே வந்தார்க்**
**கெவ்வூரீர் எம்பெருமா னென்றே னாவி**
**விட்டிடுமா றதுசெய்து விரைந்து நோக்கி**
**வேறோர் பதிபுகப் போவார் போல**
**வட்டணைகள் படநடந்து மாயம் பேசி**
**வலம்புரமே புக்கங்கே மன்னி னாரே** (6 : 58 : 7)

எனத் தலைவி கூறும் முறையில் தலைவனின் கூற்று நிகழ்த்தப்பட்டிருத்தலை உணரமுடிகின்றது. தலைவனைப் பற்றிக் கூறும்போது அவன் இன்ன ஊர் எனச் சொல்லாமல் போவதும், பல ஊர்களைக் கூறி இறுதியில் வேறோர் இடத்திற்குச் செல்வதும் சுட்டப்படுகின்றது.

சங்க இலக்கிய அகப்பாக்களில் தலைவியின் நெஞ்சம் முழுமையும் பெற்ற தலைவனின் இடத்தினை, அப்பர் தேவாரப் பனுவல்களில் இறைவன் பெறுகின்றார். தலைவனின் அருளையே நோக்கி நிற்கும் தலைவியின் இடத்தினை அப்பர் பெருமான் தானும் பெற்று, உள்ளுறை வகையால் ஆன்மாக்களும் பெற வேண்டும் என்று உணர்த்துகின்றார்.

சங்கப்பாடல்களில் தலைமக்களின் இயற்பெயர் கூறப் பெறுவதில்லை.

**மக்கள் நுதலிய அகனைந் திணையும்**
**சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்** (தொல். அகத். நூ:57)

எனினும் அப்பர் பெருமானின் பாடல்களில் தலைவனின் பெயர் சிவபெருமான் என்று கூறப்பட்டுள்ளது. இப்பாடல்கள் வடிவத்தால் அகமாகவும், பொருளால் புறமாகவும் அமைந்து விளங்குகின்றன. பக்தி இலக்கிய அகப்பாடல்களில் தலைனின் பெயர் சுட்டப்படுகின்றது. சங்க காலத்திலிருந்து, பக்தி இலக்கியக் காலத்தில் இந்நிலையை ஒரு மரபு வளர்ச்சியாகக் கொள்ளலாம். பக்தி அகப்பாடல்களில் உள்ளுறைப் பொருளாகத் தத்துவக் கருத்துக்கள் கூறப்படுகின்றன.

சங்கப் பாடல்களில் தலைவன், தலைவி, தோழி, பாங்கன் போன்றோரின் கூற்றுக்கள் அமைவதைப் போல, பக்தி இலக்கியமாகிய அப்பர் பெருமான் தேவாரத்தில் தலைவி, செவிலி, தோழி ஆகியோரின் கூற்றுக்கள் அமைகின்றன. தலைவியே பாடுவதாகக் கொள்வதால், காதல் உணர்வு, பக்தி அடிப்படையில் அமைகிறது. எனவே, இதில் தலைவி கூற்றுக்களே மிகுதியாகக் காணப்படுகின்றன.

## மாணிக்கவாசகரின் அகப்பொருள் நோக்கு

வாசகம் என்பது ‘சொல்’ என்னும் பொருள் கொண்டு 'மண்டிலமே பணியா தமியேற் கொரு வாசகம்' என்னும் **திருச்சிற்றம்பலக் கோவையார்** உரைப்பதை அறியலாம். பண்டிதமணி கதிரேச செட்டியார், **திருவாசகம்** என்பது

> இனிமை, எளிமை ஆழமுடைமையென்னுங் குணங்கள் அமையப்பெற்றவை. மெய்யன்புடன் ஓதுவோர், கேட்போர், உணர்வோர் எல்லோரையும் பேரின்பத்தில் ஆழ்த்தும் இயல்பின. அனுபவ உண்மை தெளிவாகும்படி விளக்குவன

எனத் தமது **திருவாசகக் கதிர்மணி விளக்கம்** என்னும் பேருரையில் கூறியிருக்கின்றார் (பண்டிதமணி கதிரேச செட்டியார், **திருவாசகக் கதிர்மணி விளக்கம்**, ப.38).

> திரு என்பது ஞானச் செல்வத்தையும், வாசகம் என்பது குருமணியின் உபதேச வார்த்தையையும் குறிக்கும். ஆகவே திருவாசகம் என்பதற்கு சற்குருவினால் உணர்த்தப்படும் உபதேச மொழியாகிய ஒரு வார்த்தையினால் ஞானச் செல்வத்தைப் பெற்று, பிறவித்துன்பத்தை அகற்றி, வீடுபேற்றை அடையச் செயும் வாசகம் என்பது பொருளாகும்.

(எல்.பி.ராணி, திருவாசக ஆராய்ச்சியின் வளர்ச்சி, ப.546).

> திரு-திருவருள் வாசகம்-வாக்கு, திருவருள் முன்னின்றுணர்த்தப் பசுகரணம் பதிகரணமாகி, அதாவது தன்செயல் அற்றுத் தானற்றபின் நாதன் தன் செயலான நிலையில் விளைந்த வாக்கு திருவாசகம் என்பதாம்

என்று தண்டபாணி தேசிகர் தமது உரையில் கூறியுள்ளதாக இரா.சுந்தரமூர்த்தி சுட்டிச்செல்கின்றார் (**திருவாசகம் பெயர்க்காரணம்**, ப. 141).

மறைமலையடிகள்,

> திருவாசகம் என்பதில் அடைமொழியாநின்ற திருவென்னுஞ்சொல் காண்பாரால் விரும்பப்படும் தன்மை நோக்கமாகிய அழகினை உணர்த்தலே பேரின்பப் பேற்றைக் காதலிப்பாரெல்லோராலும் விரும்பப்படும் அழகினை உடைத்து இவ்வாசகம் என்பது பெற்றாம்

(இரா. சுந்தரமூர்த்தி, **திருவாசகம் பெயர்க்காரணம்**, ப. 140) என்கிறார்.

> அன்பு என்பது ஆன்மாவின் தன்மை, அருள் என்பது ஆண்டவனின் தன்மை. இந்த இரண்டின் இயல்பைத் திருவாசகம் விளக்குகின்றது

என்று தவத்திரு அழகரடிகள் கூறுவதாக ஐ.தங்கவேலன் தமது நூலில் குறிப்பிட்டுக் காட்டுகின்றார் (**திருவாசகமும் திருவருட்பாவும்**, ப.9).

> திருவாசகப் பாடல்கள் யாவும் அரிய தாமரை மலர்கள். ஆனால் அவை தண்ணீர்ப்பொய்கையில் மலர்ந்தவை அல்ல. கண்ணீர்ப் பொய்கையில் மலர்ந்த கமலங்கள்

(ஐ.தங்கவேலன், **திருவாசகமும் திருவருட்பாவும்**, ப. 9) என்பார் சா.கணேசன்.

தமிழில் உள்ள பக்தி இலக்கியங்களிலே தலைசிறந்தது **திருவாசகம்.** அதனால்தான் திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது வழக்காயிற்று. இராமலிங்க அடிகளார் **திருவாசகத்தின்** சிறப்பை,

> **வான் கலந்த மாணிக்க வாசக நின் வாசத்தை**
> **நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே**
> **தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து**
> **ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே**

என்று **திருவாசகத்தைப்** பாடும்போது அனுபவிக்கும் உணர்வினைப் புலப்படுத்துகிறார். மேலும், **திருவாசகத்தைக்** கேட்போர் அனைவரும் மெஞ்ஞானம் பெறுவர் என்ற கருத்தை,

> **வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்**
> **கேட்ட பொழு தங்கிருந்த கீழ்ப்பறவை சாதிகளும்**
> **வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெஞ்ஞான**
> **நாட்டமுறும் என்னிலங்கு நானடைதல் வியப்பன்றே**

(இராமலிங்க அடிகளார், **ஆளுடைய அடிகள் அருள்மாலை**, ப.119, பா.10)

என்று கூறுவதின் மூலம் அறியமுடிகின்றது. சிவப்பிரகாச சுவாமிகள்,

**வாதவூர் அன்பர் மலர்வாய்ப் பிறந்த திருவா சகம் இங்கு ஒருகால் ஓதின்**
**கருங்கல் மனமும் கரைந்துக்க கண்கள் தொடு மணல் கேணியிற் சுரந்துநீர் பாய**
**மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பு எய்தி அன்பர் ஆகுநர் அன்றி**
**மன்பதை உலகின் மற்றையோர் இலரே**

(பி. ஸ்ரீ., மாணிக்கவாசகரும் நம்மாழ்வாரும், ப. 17)

என்பதிலிருந்து கேட்போரை உருகவைக்கும் தன்மை கொண்டது என்பதைத் தெரிந்துகொள்ள முடிகின்றது.

**திருவாசகம்** எந்த ஆண்டு இயற்றப்பட்டது என்பது பற்றிய குறிப்புகள் கிடைக்கவில்லை. இருப்பினும் மாணிக்கவாசகர் வாழ்ந்தது அரிமர்த்தன பாண்டியன் காலம் என்பதால் கி.பி.9-ஆம் நூற்றாண்டு என்று அறிஞர்கள் பலர் கூறுகின்றனர்.

சமணமும், பௌத்தமும் தழைத்திருந்த காரணத்தால் சைவ சமயப் பெரியோர்கள் பலர் பல நூல்களை இயற்றினர். அவை சிவத்தை நோக்கியே எழுதப்பட்டன. திருவாசகம் இறைவனை நாயகனாகவும், மாணிக்கவாசகரை நாயகியாகவும் வைத்து ஆன்மா இறைவனை அடையும் வழிகாட்டுவதாக இயற்றப் பட்டுள்ளது. ஆசிரியரின் நோக்கம் நிறைவேறியது என்பதற்குத் திருவாசகத்திற்குக் கிடைத்துள்ள புகழே சான்றாகும்.

**காமப் பகுதி கடவுளும் வரையார்**
**ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்** (தொல்.செய்.நூ.192)

என்ற நூற்பாவிற்குப் "புணர்ச்சி வேட்கை கட்புலனாகிய கடவுளிடத்தும் நீக்கார். மக்களிடத்தும் நீக்கார்" என்று நச்சினார்க்கினியர் உரை கூறுகின்றார். அடியவர்கள் இறைவனைத் தலைவனாக நினைத்து அகத்துறைப் பாடலைப் பாடுகின்றனர்.

திருவெம்மானை, திருச்சாழல், திருஉந்தியார், திருப்பொன்னூசல், திருத்தெள்ளேனம், திருப்பூவல்லி ஆகிய **திருவாசகப்** பதிகங்கள் மகளிர் விளையாட்டுக்களின் பெயரால் அமைந்த பதிகங்கள் ஆகும். திருக்கோத்தும்பி, அன்னைப்பத்து, குயில்பத்து, திருப்புலம்பல் போன்றவை அகத்துறையில் அமைந்த பதிகங்கள் எனலாம்.

இவ்வாறு இறைவனைத் தலைவனாகக் கொண்டு தன்னைத் தலைவியாகப் பாவித்துப்பாடும் பாடல் புனைவில், தன்னைப் பெண்ணாக

எண்ணிக்கொண்டு ஆணாக இருக்கின்ற இறைவன் மீது பக்தி மேலிடவும், தன் காதல் அன்பு வெளிப்படவும் இறையருள் கிடைக்கப்பெற, அடியவன் மீண்டும் மீண்டும் தன்னுடைய எண்ண வெளிப்பாட்டைப் பாமாலையாக இறைவனுக்குச் சூட்டி அகம் மகிழ்கிறான். இவ்வாறு அகத்துறை அமைத்துப் பாடுவதை மரபாக இலக்கியவாதிகள் கையாண்டுள்ளனர்.

## தூது

பெருங்காப்பியம் பாடும் மரபு அருகிய காலத்தில் சிற்றிலக்கியங்களான அந்தாதி, உலா, பள்ளு, கலம்பகம், பரணி, கோவை, பிள்ளைத்தமிழ் போன்றவற்றைப் படைக்கத் தொடங்கினர். அவ்வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்று தூது. பழங்காலத்தில் அரசியல் காரணமாகவும், நட்பைப் பலப் படுத்தவும் தூதுப் பாடல்கள் பயன்பட்டன. சிலம்பில் கோவலனுக்கும், மாதவிக்கும் கோசிகமணி தூது செல்கிறான். **இராமாயணத்தில்** அனுமனும், அங்கதனும் தூது செல்கின்றனர். **மகாபாரதத்தில்** கிருஷ்ணன் கௌரவர்களிடம் பாண்டவர்களின் உரிமை கேட்டுத் தூது செல்கிறான்.

தூது இலக்கியம் தலைவனைக் காண விரும்பித் தலைவி தன் விரகதாபத்தால் வேதனையுற்ற போது தன் துன்பத்தைப் புலப்படுத்துமாறு உயர்திணைப் பொருள்களையேனும், அஃறிணைப் பொருள்களையேனும் தூது விடுப்பதாகப் பாடுவதாகும். சத்திமுத்தப் புலவரின்,

> **நாராய் நாராய் செங்கால் நாராய்**
> **பனம்படு கிழங்கின் வாய்பிளந் தன்ன**

என்ற தனிப்பாடலே அனைவரின் மனத்திலும் நினைக்கத் தோன்றும். இது சங்க இலக்கியத்தில் "காமம் மிக்க கழிபடர்கிளவி" என்ற துறையில் வருகின்றது. பக்தி இலக்கியத்தில் அடியவன் இறைவனிடம் தன் அன்பை வெளிப்படுத்தித் தூது அனுப்புவதாக அமைகின்றது. தூது சொல்லி விடுதற்குரிய பொருட்களின் பட்டியலை இரத்தினைச் சுருக்கம் என்ற நூல்,

> **இயம்புகின்ற காலத்து எகினம் மயில் கிள்ளை**
> **பயன்பெறும் மேகம் பூவை பாங்கி மூ நயந்தி குயில்**
> **பேதை நெஞ்சம் தென்றல் பிரமீரம் ஈரைந்தும்**
> **தூது ரைத்து வாங்கும் கொடை** (அழகர்கிள்ளை விடுதூது . ப. 3)

எனத் தூதுரைக்கும் பத்து அஃறிணைப் பொருட்களைப் பட்டியலிட்டுக்

காட்டுகின்றது. அவை எகினம் (அன்னம்), மயில், கிள்ளை, மேகம், பூவை (மைனா), பாங்கி, குயில், நெஞ்சம், தென்றல், பிரமீரம் (வண்டு) ஆகிய பத்தும் தூது விடுவதற்குரியவை. இந்த அஃறிணை உயிர்களிடம் காதல் வயப்பட்ட தலைவி தன்னுடைய உள்ளக்கருத்தைத் தெரிவிப்பதை,

**சொல்லுந போலவும் கேட்குந போலவும்**
**சொல்லியாங் கமையும் என்மனார் புலவர்** (தொல்.செய்.நூ.192.)

எனத் தொல்காப்பியர் கூறுகின்றார். அகவயப்பட்ட தலைவி, அஃறிணை உயிர்கள் தான் கூறுவதைக் கேட்பதாக நினைத்துக் கொண்டு தன் உள்ளக் குமுறலை வெளிப்படுத்துகின்றாள்.

அஃறிணை உயிர்கள் இயற்பட மொழியும் என்றும், தோழியாயின் மறைவாக மொழியவும் கூடும் என்றும் கருதி அஃறிணை உயிர்களைத் தூது அனுப்பிகிறாள் தலைவி.

தாயுமானவர் பைங்கிளிக் கண்ணியில் இறைவனிடம் தூது அனுப்பும்போது,

**கள்ளத் தலைவர்அவர் கைகாட்டிப் பேசாமல்**
**உள்ளத்தில் வந்து உபாயமென்னே மூபைங்கிளியே** (பா.எ.58)

என்றவாறு, என் உள்ளத்தில் மறைந்திருப்பவர் எனக்கு அருள் செய்ய நினைக்காமல் இருக்கிறார். ஆகவே கிளியே நீ தூது செல்வாயாக எனத்தலைவி நிலையிலிருந்து பாடுகிறார்.

பக்தி இலக்கியங்களில் இறைவனிடம் தூது அனுப்பி அவனுடைய திருநாமத்தைச் சொல்லி இன்புறுவதே இன்பமாக அடியவர்கள் எண்ணுகின்றனர். இதற்கு மாணிக்கவாசகர் விதிவிலக்கு அல்லர். இறைவன் தம்மை ஆட்கொள்கின்ற முறையில், தம்மைத் தலைவி நிலையில் மாணிக்கவாசகர், தலைவனான இறைவனிடம் தும்பியைத் தூதனுப்புகிறார். இதனை

**பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாடோறும்**
**மெய்யாக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட**
**ஐயாவென் ஆருயிரே அம்பலவா என்றவன்றன்**
**செய்யார் மலரடிக்கே சென்றுஊதாய் கோத்தும்பி**

(திருக்கோத்தும்பி 8, ப.17)

என்ற பாடலில் பொய்யாகிய செல்வத்தைப் பெரிது எனக்கருதி இரந்து விட்டேன். உலகியலை மெய்யாகக் கருதிக் கிடந்தேன். என்னை ஆட்கொள்ளும் அம்பலவாணன் திருவடிக்கே சேவை ஊதுவாய்

கோத்தும்பி எனத் தன் உள்ளக்கருத்தைத் தும்பியிடம் மாணிக்கவாகசர் கூறுகிறார்.

இறைவன் கருணையினால் என்னை ஆட்கொண்டான், அத்தலைவன் என்னைக் கூடுமாறு சென்று குளிர்ச்சி பொருந்திய இசையை இசைப்பாயாக எனக் கூறுவதை,

**ஆன கருணையும் அங்குற்ற தானவனே**
**கோனென்னைத் கூடக் குளிர்ந்தூதாய் சேர்த்தும்**
(திருக்கோத்தும்பி 8 - பா.13)

என்ற பாடலடிகளால் உணரமுடிகின்றது.

**வெள்ளப் பிராஎனம் பிரானென்னை வேறேயாட்**
**பொள்ளப் பிரானுக்கே சென்றுஊதாய் கோத்தும்பி**
(திருக்கோத்தும்பி பா.16)

எனத் தும்பியிடம் தலைவன் வந்து என்னை ஆட்கொள்ள வேண்டும் எனக் கூறுமாறு தூது அனுப்புகிறாள் தலைவி. அங்ஙனம் வந்து உடனடியாகத் தன்னை ஆட்கொள்ளாவிட்டால் ஏற்படும் பின் விளைவுகளையும் தலைவி தெரிவிக்கின்றாள்.

**நானும் என் சிந்தனையும் நாயகனுக் கெவ்விடத்ததோம்**
**தானுந்தன் தையலும் தாழ்சடையோன் ஆண்புரினேல்**
(திருக்கோத்தும்பி பா.14)

இங்குத் தலைவன் வந்து உரியநேரத்தில் தன்னை ஆட்கொள்ள வில்லை என்பதற்காக ஊடல் கொண்ட தலைவி தூது அனுப்புகிறாள். என் சிந்தையும் உணர்வும் தலைவன் பால் இல்லாமல் வெகு தூரத்தில் இருக்கின்றன. ஆதலால் வெகுசீக்கிரம் வந்து ஆட்கொள்ள வேண்டும் என்கிறார்.

இறைவனாகிய தலைவன் வந்து ஆட்கொள்ள வேண்டும் என்பதனை அகத்துறையில் தூது உத்தியாக அமைத்து மாணிக்கவாசகர் பாடுகின்றார். இல்லையென்றால் என் சிந்தனையும் நானும் பயன் அற்றதாகிப் போவோம் என உள்ளுறையாகக் கூறுவதன் அடிப்படையில் நோக்குமிடத்து இறைவன் பால்கொண்ட பக்தியை உணர்த்தத் தூது என்ற உத்தி கையாளப்பட்டுள்ளமை புலனாகின்றது.

## நாயக-நாயகி பாவம்

இறைவனாகிய பரமாத்மாவுக்கும், உயிராகிய சீவாத்மாவுக்கும் இடையே அமைகின்ற ஒன்பது வகையான உறவுநிலைகளில், தலைவன்-தலைவி உறவை, வைணவ சித்தாந்தம் நாயக-நாயகி பாவம்

என வழங்குகின்றது. இந்நிலையானது மதுரபக்தி எனப் போற்றப்பெறுகின்றது.

இறைவனுக்கும் உயிருக்கும் இடையேயான பல்வகை உறவு நிலைகளிலும் தலைவன்-தலைவி உறவே உயர்வுடையது எனலாம். காரணம், ஏனைய உறவு நிலைகளில் இறைவனின் பெருங்குணங்கள் எழுச்சி பெற்றிருக்கும். உயிரானது அப் பெருங்குணத்திற்குக் கட்டுப்பட்ட நிலையிலேயே பேரின்ப அனுபவத்தை நுகரஇயலும்.

தந்தை-மகன் உறவு, ஆண்டான்-அடிமை உறவு போன்ற உறவு நிலைகளில் தந்தையாகவும், ஆள்பவனாகவும் உயர்நிலையில் அமைபவன் இறைவன். உயிரானது, மகனாகவும், அடிமையாகவும் அவனைப் பணிந்து நிற்கும். அந்நிலையில் உயர்ந்தோனாகிய இறைவனின் மனஉணர்வு ஒன்றாகவும், அவனைப் பணிகின்ற உயிரின் மனஉணர்வு வேறாகவும் அமையும். இதனால் அவ் உறவு நிலைகள் முழுமைபெற்று நிற்பதில்லை.

மாறாக, தலைவனும் தலைவியும் ஒத்த மன உணர்வுகளால் ஒன்றுபடுவார்கள். அவர்கள் உணர்வு ஒன்றி, ஒருவரையொருவர் எப்போதும் பிரியாதிருப்பவர்களாவர். இவ் உறவுநிலையில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பாகுபாடு நீங்கி, இருவரின் மனஉணர்வுகளும் ஒத்தமைகின்ற நிலை உண்டு. அவ் ஒற்றுமைத் தன்மையோடு அமைகின்ற உறவுநிலையில் முழுமையான அன்புறவு அமையக் காணலாம். இதனால் ஏனைய உறவுகளைக்காட்டிலும், தலைவன்-தலைவி உறவாகிய நாயக-நாயகி பாவமே சிறந்தது எனலாம். இவ் உயர்வினைக் கருதியே அருளாளர்கள் தமது இறைக்காதலைப் பாடுவதற்குத் தலைவன்-தலைவி உறவுநிலையைக் கைகொண்டனர்.

ஆழ்வார்கள், ஞானநிலையில் தரமான தன்மையிலும், இறைவன்பால் அன்பு மீகூர்ந்த நிலையில், தலைவி நிலையேற்றும் பாடுவதை,

**ஞானத்தில் தம்பேச்சு**
**பிரேமத்தில் பெண்பேச்சு**

என ஆச்சார்ய ஹ்ருதயம் (சூத்திரம் 118) போற்றியுரைக்கிறது. இறையியல் இலக்கியங்களில் அமைகின்ற இத்தகைய அகப்பொருள் நோக்கமைவு ஆங்கிலத்தில் 'Bridal Mysticism' என வழங்கப் பெறுகிறது. இவ் இலக்கியப் பொருண்மையிலான தத்துவப் பாடல்கள், இஸ்லாமியச் சூஃபி இலக்கியங்களிலும், கிறித்துவ இறைப்பாடல்களிலும் அமைந்துள்ளன.

இறையடியார்கள் இறைவன்பால் கொண்ட அன்பின் உச்சநிலையில் தம் மாறாக் காதலைப் புலப்படுத்தத் தம்மை நாயகியாகவும், அன்பிற்குரிய இறைவனை நாயகனாகவும் பாவித்து அகத்திணைக் குறிப்புகள் தோன்றப் பாடுகின்றனர். இறைவன் முன் ஆண், பெண் என்ற பேதம் இல்லை. ஆண்டவன் முன் ஆணும், பெண்ணும் சமம். இறைவன் மட்டுமே ஆணாகவும் மற்ற எல்லா உயிரினங்களும் பெண்ணாகவும் பாவிக்கப்படுவது வைணவக் கோட்பாடாகும். தன் ஆழ்மனத்தின் நிறைவு பெறாத ஆசையை நாயக, நாயகிபாவம் அமையப்பாடி மாணிக்கவாசகர் வெளிப்படுத்துகின்றார்.

மதுர பாவத்தில் இறைவனின் முன்னிலையில் ஆண், பெண் என்கிற பேதமற்ற நிலை காணப்படும். உலக உயிர்கள் எல்லாம் பெண்ணாகவும் இறைவன் மட்டுமே ஆணாகவும் இதில் கருதப்படுகிறது. இறைவனைப் புருஷோத்தமனாகவும் மற்றைய உயிர்களைப் பெண்ணாகவும் நாயக-நாயகி பாவத்தால் உணர்வது பக்தியில் அகத்திணை மரபாக அமைகிறது என்பர்.

இறைவன் மேலுள்ள தீரா அன்பின் காரணமாய்ப் பக்தன் நாயகியாகத் தன்னை மாற்றிக் கொள்ளும் நிலை பக்தி இலக்கியங்களில் காணப்படுகிறது.

**சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன் திரள் தோள்**
**கூடுவேன் கூடிமுயங்கி மயங்கி நின்று**
**ஊடுவேன் செவ்வாய்க் குருகுவேன் உள்ளுருகித்**
**தேடுவேன் தேடிச் சிவன் கழலே சிந்திப்பேன்**

(திருவம்மானை பா.17)

எனச் சிவனின் கொன்றை மாலையைச் சூடியும், திண்தோள்களைக் கூடியும் இன்புறுவேன்; இறை இன்பத்தில் இரண்டறக் கலந்த பின் அவனிடம் ஊடல் கொள்வேன்; உலகியல் இன்பத்தைப் பெற்ற உயிர் அருளியல் இன்பம் பெறவேண்டி உள்ளம் உருகநின்று அவனை என் சிந்தையிலே தேடித் தெளிவேன் என மாணிக்கவாசகர் பாடுகிறார்.

**எனன்ணியர் முலை ஆகம் அளந்துடன்**
**இன்புறு மாகாதே . . . . . .** (திருப்படையாட்சி பா.4)

எனத் தலைவி ஈசன் அருள் கிடைக்கப்பெறின் என்னுடைய மார்பகம், அவன் மார்பில் தோயப் பெறுதலும் இன்பம் எனக்கூறுகிறார். இவனைப் பலகாறும் காணாது ஆற்றாமை உணர்த்துகிறார்.

மணிவாசகநாயகி, தன் இல்லத்தின் முன்பு பிச்சையேற்க வந்து நின்ற சிவத்தலைவனைக் கண்ணுற்றாள். அருள் பொழிகின்ற அவர்தம்

திருக்கோலப் பொலிவில் தன்னை மறந்தாள். தன்நிலை மறந்து, அவர்க்கே ஆட்பட்ட நிலையினைத் தன் தாயிடம் அவள் எடுத்துரைக்கின்றாள். பிச்சை உகக்கும் பெருமானாகி வந்த தலைவன், தன்பால் வந்து பிச்சையேற்றதோடு தன் உள்ளத்தையும் உடன்கொண்டு சென்றான் எனத் தனது அருளனுபவத்தைப் பாடுகின்றாள்.

**தையலோர் பங்கினர் தாபத வேடத்தர்**
**ஐயம் புகுவரால் அன்னே என்னும்**
**ஐயம் புகுந்தவர் போதலும் என்னுள்ளம்**
**நையுமிது வென்னே அன்னே என்னும்**

(திரு அன்னைப்பத்து, பா.9)

எனத் தலைவனைக் கண்டு, தன்னுள்ளம் நைந்துருகும் நிலையினைத் தாயிடம் எடுத்துரைக்கின்றாள்.

மாணிக்கவாசகர் இறைவனிடம் கூடுவதும் பின்னர் ஊடுவதும் அவன் இன்பத்தில் மகிழ்வதும் கருதத்தக்கது. எனக்கு மெய்யான பொருளை உணர்த்துவது உறுதி. என்னை அவனிடம் கொடுத்து விட்டேன். கொடுக்கப்பட்ட பொருளை உறுதியாக அவன் காப்பான் என்று இறைவனை முழுவதுமாகச் சார்ந்து நிற்கின்ற நிலையினைக் காணமுடிகின்றது.

நாயகன்மேல் கொண்ட மாறாக்காதலால், அவன் மாலையைச் சூடிமகிழ்வதும், பின்னர் அவனைக்கூடி இன்புற்று மயங்கியும், மயக்கத்தால் ஊடல் கொள்வதும் தலைவியின் இயல்பாகும். இவ்வுடல் நீங்கி இணக்கமுற்று உள்ளம் மகிழ்ந்து கூடுவதை அறியமுடிகின்றது. உயிர் சிற்றின்ப வேட்கையினால் இறைவனிடம் பேரின்ப வேட்கை கொண்டு சிந்தையிலே நினைந்து நினைந்து தேடுவதை மாணிக்கவாசகர் மெய்யுருகிப் பாடுகின்றார்.

சிவத்தலைவர் தன்னைக் கண்டபோது, தான்பெற்ற அருளனுபவத்தை மணிவாசகநாயகி எடுத்துரைக்கின்றாள். சிவத்தலைவர், கருணைக் கடலாக விளங்கி, உள்ளத்துள் புகுந்து, ஊனினை உருக்கி, உலப்பிலாத ஆனந்தம் தந்தருளினார். அதனை நினையும் போதிலெல்லாம் அருளனுபவநிலை தன்னைவிட்டு நீங்காது நிலைகொள்கின்ற தன்மையினை,

**கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர்**
**உள்நின் றுருக்குவர் அன்னே என்னும்**
**உள்நின் றுருக்கி உலப்பிலா ஆனந்தக்**
**கண்ணீர் தருவரால் அன்னே என்னும்**

(திருஅன்னைப் பத்து, பா.2)

எனப் பாடுகின்றார். தமது சிந்தையைவிட்டு நீங்காத சிவத்தலைவனை எண்ணி அழுது அரற்றிய தலைவி, அவரின் திருப்புகழைக் கேட்டுப் பிரிவுத்துயரை ஆற்றியிருக்க எண்ணுகின்றாள்.

தான் கட்டளையிட்டவாறு, தலைவனின் திருப்பெயருள் சிறப்புடையதைக் கூறி இன்பம் சேர்த்த கிளிப்பிள்ளையை 'ஏதமிலா இன்சொல் மரகதமே' எனப் போற்றுகின்றாள். மேலும் உனது இனிமைமிக்க சொற்கோவையால் தலைவனின் சீர்மைமிக்க நாட்டினையும், அவர் வாழ்கின்ற ஊரையும் போற்றியுரைக்க வேண்டும் எனக் கூறுகின்றாள். தான் கூறியபடி செய்து தனக்கு இன்பம் சேர்க்கின்ற கிளிப்பிள்ளையைத் தனக்குரிய சுற்றமாகவே கொண்டு விடுகின்றாள் மணிவாசகநாயகி. 'தலைவர், தன்னை மட்டும் ஆண்டுகொள்ளவில்லை' உன்னையும் அவர் ஆட்கொள்ள வல்லவர் என அன்புரிமையோடு கிளிப்பிள்ளையையும் தன்னுடன் இணைத்துக் கொள்கின்றாள். தன்னுடன் ஒப்பவைத்துப் பேசுகின்ற அன்பின் திறத்தால், கிளிப்பிள்ளையானது தான் வேண்டியவாறு செய்யும் என்றெண்ணி அவ்வாறு பாடுகின்றாள்.

**ஏதமிலா இன்சொல் மரகதமே ஏழ்பொழிற்கும்**
**நாதன்தமை ஆளுடையான் நாடுரையா**

எனத் தலைவி வேண்டியபடி கிளிப்பிள்ளையும் தலைவனின் நகர், ஊர் முதலானவற்றை எடுத்தியம்பி அவளுக்கு இன்பம்சேர்த்தது. ஆறு, மலை, படை, அருட்திறம் முதலானவை தலைவனின் திருப்பெயரோடு, அவனின் நகர், ஊர் முதலானவற்றையும் கூறக்கேட்டு இன்புற்ற மணிவாசகநாயகி, அவனின் ஊரிலுள்ள ஆற்றின் சீர்மையையும், அருள்மலையின் பொலிவினையும் கேட்டு இன்புற எண்ணுகின்றாள்.

தலைவனின் நகரில் அருள்வெள்ளப் பேராறு பாய்கிறது,
அந் நகரின்கண் அமைந்திலங்குகின்ற மலையோ,
முத்திப்பேறாகிய அருள்வளம் நிரம்பிய சிறப்புடையது

என்பதனை மென்மொழியால் கூறிக் கிளிப்பிள்ளை, தன்னை மகிழ்விக்க வேண்டுகிறாள்.

உலகனைத்தையும் காக்கின்ற தலைவர், வான்வெளியைத் தனக்குப் புரவியாகவும், நாத தத்துவத்தைத் தனக்குப் பறையாகவும் கொண்டு, மும்மலமாகிய இருளானது நீங்கும்படியாகப் படைசெலுத்தி வருகின்ற அருந்திறத்தையும் கூறுவாயாக என்றும், தலைவனின் வெற்றித்திறத்தைப் பறைசாற்றும் விடைக் கொடியினையும், உயர்திறத்தவராகிய அவர், தமது அடியவர்க்கு எளியவராக

விளங்குகின்ற கருணைத்திறத்தையும் போற்றியு-மரைக்கும் படியாகவும் கிளிப்பிள்ளையைப் பணிக்கின்றாள்.

மாணிக்கவாசகர் இறைவன்பால் கொண்ட அன்பினை வெளிப்படுத்த நாயக நாயகி பாவம் சிறந்ததொரு உத்தியாகப் பயன்படுகிறது. ஒவ்வொரு உயிரிடத்தும் இயல்பாக ஆண் தன்மையும், பெண் தன்மையும் சேர்ந்து இருக்கும். அடியவன் ஆணாக இருந்தபோதிலும் இறைவனிடம் அன்பு பாராட்டுகிறான். இவ் அன்பு பாராட்டலைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் பரவசநிலையில் இறைவனைக் கூடிக்களித்து இன்புற இவ்வுயிர் ஏங்குதல் போன்ற நிலையில் கவிதையாகப் படைக்கிறார் மாணிக்கவாசகர்.

## தன்னிலை இரக்கம்

மகிழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு புலன்வழி தோன்றும் அசைவு அல்லது வெளிப்பாடு நகையாகும். தாங்கமுடியாத துன்பத்தை அடிப்படையாகக் கொண்டு கண், வாய் முதலிய புலன்வழி தோன்றும் அசைவு அல்லது வெளிப்பாடு அழுகையாகும். எல்லை இல்லாத் துன்பத்தின் உச்ச வெளிப்பாடு அழுகை எனலாம்.

மாணிக்கவாசகர், திருவாசகத்தில் தம்மைத் தாழ்த்திக் கொண்டு இறைவனை வியந்து பாராட்டுகின்றார். அதே நிலையில் தம்மை மிகவும் கீழ்நிலைக்குக் கொண்டு செல்கின்றார். இறை இன்பத்தைப் பெற நாயினும் கடையெனாகத் தம்மைத் தாழ்த்திக் கொள்கிறார். இறைவனின் அன்பைப் பெறத் தமக்கும்மை தகுதியில்லை என்பதாகத் "தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னை" உன்னுடைய பேரருளுக்கு உகந்தவன் இல்லை எனத் தாழ்த்தியே பாடுகின்றார். இவ்வாறு தம்மைத்தாமே தாழ்த்திப் பாடுதலைத் தன்நிலை இரக்கம் அல்லது கழிவிரக்கம் எனக் குறிப்பிடலாம்.

கிளிமொழி வாயிலாகத் தலைவனின் திருப்புகழைக் கேட்டு இன்புற்று போதும், அவரைப் பிரிந்திருக்க இயலாதவகையில் அன்புத்திறத்துக்கு ஆட்பட்டு விட்டாள் மணிவாசகநாயகி. ஆதலால், தலைவரான இறைவன், தன்பால் வரவேண்டிக் கூவுமாறு குயிலை வேண்டுகின்றாள்.

இனிய இசைபாடும் குயிலே! எமது தலைவனின் திருவடிகள் பாதாளமாகிய கீழுலகங்கள் ஏழையும் கடந்து நிற்பன. ஒளிவிடுகின்ற மணிமுடியானது, மேலுலகங்கள் ஏழினையும் கடந்து விளங்குகிறது. அவரின் திருவடிகள் எண்ணவும், சொல்லவும் அரிய நெடுந் தொலைவில் விளங்குவன. மேலும், அவர் தோற்றமும் முடிவும் அற்று,

குணமும் குறியுமற்று விளங்கவல்லவர். அப் பெரியோர் தன்னை நாடி வரும்வகையில் கூவுக என்கின்றாள்.

**கீதமினிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்**
**பாத மிரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக்கு அப்பால்**
**சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்றதொன்மை**
**ஆதிகுண மொன்று மில்லான் அந்தம் இலான் வரக்கூவாய்**

(குயில்பத்து, பா.1)

எனத் தலைவர் வரும்வகையில் கூவுமாறு குயிலை வேண்டிய மணிவாசகநாயகி, தமது தலைவர் வருகைபுரிந்தால், அவர்பால் தாம்பெற விழைகின்ற அருளனுபவங்களையும் எடுத்துரைக்கின்றாள்.

எல்லா வகையான இன்ப உணர்வுகளையும் வெறுத்தொதுக்கும் மாணிக்கவாசகர் தம்மைத் தாழ்த்திப் பாடுவதை மரபாகக் கொண்டுள்ளதைப் பின்வரும் திருவாசகப் பாடல்கள் உணர்த்துகின்றன. இவ்வுயிர் அழுகையைச் செயலாகக் கொண்டு இறையை நினைத்து நினைத்து அழுகின்றபோது இறைவனைப் பெற முடியும் என்பதை,

**ஆனால் வினையேன் அழுதால்**
**உன்னைப் பெறலாமே** (திருச்சதகம் பா.90)

உன்னைப் பெற அழுதால்போதும் என்று மாணிக்கவாசகர் பாடுகிறார். பித்தனாக ஆக்கிவிட்டாய்; இது உன் சூக்குமம் நான் ஒன்றும் செய்யவில்லை; எனக்கு இந்நிலை ஏன் என்று இரக்கம் தோன்றப் பாடுகின்றதை அறியமுடிகின்றது.

**கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயனே**
**உருக்க மில்லாத மனத்துக்கு உரியவன்** (திருவம்மானை பா.5)

என்று தம்மை அடியவர் கூட்டத்தில் கடைப்பட்ட அடியவனாகக் காட்டிக் கொள்கின்றார்.

**வருந்துவன் நின் மலர்ப்பாதம்**
**அவை காண்பான் நாயடியேன்** (திருச்சதகம் பா.14)

என்றும்,

**நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த**

(அச்சோபதிகம் பா.8)

என்றும்,

**புறமே கிடந்து புலை நாயேன்**
**புலம்புகின்றேன் உடையானே** (பிரார்த்தனைப்பத்து பா.6)

என்றும் மாணிக்கவாசகர் தம்த் தாழ்த்துகின்ற நிலையில் தம்மைக் கல்லா மனத்தவன் என்று கூறியவர் பின்னர், "வருந்துவன் நின் மலர்ப் பாதத்தை"ப் பெற எனத் தமக்குத் தாமே முரண் நிலையில் தாழ்த்திக் கொள்கிறார்.

புறமே கிடந்த புலை நாயேன் உன் அருளைப் பெறப் புலம்புகின்றேன். உனக்குத் தொண்டு செய்த கண்ணப்பனையும் சிறுத் தொண்டரையும் நோக்குமிடத்து எனக்கு எவ்வாறு உனது அருள் வாய்க்கப்பெறும் எனப் புலம்புகின்றேன் என அச்சம் தோன்றப் பாடுகின்றார்.

மாணிக்கவாசகர் இயல்பாகவே இறைவன் மீது கொண்ட அன்பை, இறைவன் ஏற்றுக் கொண்டானோ, இல்லையோ என ஐயம் தோன்றுகின்றது. "உன்னை நினைத்து மட்டுமே என்செயல்". அதற்கு உன் அடியவன் என்ற உன்னத நிலையைத் தமக்குத் தாமே எனத் தாழ்த்தி முரண்பட்டுக் கொள்கிறார் என்பதை அறிய முடிகின்றது.

இதுபோன்று இறைவனை உயர்த்தியும் தம்மைத் தாழ்த்தியும் முரண்பட்டுமாக நின்று பாடும் மாணிக்கவாசகர் இறையருளைப் பெறுவதற்குத் "தன்னிலை இரக்கம்" என்ற உத்தியைத் **திருவாசகத்தில்** கையாண்டுள்ளார் என்பதை உணர முடிகின்றது.

## பாவை பாடிய வாயால் கோவை பாடியது

பாவை பாடிப் போற்றிய திருவாயால் **கோவையும்** பாடிப் போற்றுமாறு இறைவன் மணிவாசகருக்குத் திருவருளாணையினைத் தந்தருளினான். அவ்வண்ணமே மணிவாசகரும் திருக்கோவையாரைப் பாடி முடித்தநிலையில், இறைவன் அதனைப் படியெடுத்துக்கொண்டு மறைந்தான். இதனைத் திருவாதவூரடிகள் புராணம்.

> **மன்னிய தவத்தின் மிக்கா ரதற்குள மகிழ்ந்து கூற**
> **முன்னுற விருந்து கோவை யெழுதினர் முடித்த பின்னர்ப்**
> **பொன்னவிர் வேணி யார்தாம் புத்தகஞ் சேமித் தங்கண்**
> **மின்னென மறைந்தார்** (திருவாதவூரடிகள் புராணம், பா.530)

எனப் போற்றியுரைக்கிறது. **திருக்கோவையாரில்** மணிவாசகர், பக்குவமுற்ற உயிரைத் தலைவனாகவும், சிவத்தைத் தலைவியாகவும், திருவருளைத் தோழியாகவும், திரோதான சக்தியைச் செவிலித் தாயாகவும், பராசக்தியை நற்றாயாகவும், கொண்டு சிற்றின்பத் துறைகளினூடே பேரின்பம் உணர்த்துகின்றார். அகமாந்தர்கள் உலகியல்

நிலையில் நின்று, மொழிகின்ற கூற்றுக்கள் அனைத்தும், பேரின்பப் பொருண்மையுடையதாக அமைகின்றன.

இந் நூலினுள், தில்லைக் கூத்த பெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, அவன் புகழைப் பாடுவதும், அவனின் அருந்திறங்களைப் போற்றுவதும், மணிவாசகரின் இலக்கிய நோக்கமாகின்றது.

**அணியு மமிழ்துமென் னாவிய மாயவன்**
**றில்லைச்சிந்தாமணி**
**. . . . . யென்னை முன்னாள் ஊபடை யான்புலி யூர்**
**பாசத் தளையறுத் தாண்டுகொண் டோன்தில்லை**

(திருக்கோவையார், பா.எண்.5, 7, 15)

எனப் பல இடங்களில், மணிவாசகப்பெருமான், தில்லைத் திருத்தலத்துடனான தமது அருட்தொடர்பையும் பாடியமைகின்றார்.

தலைமகளைக் கண்டு அவளிடத்தில் தம் மனத்தைச் செலுத்துகின்றான் தலைவன். தம்மிடம் உருவான அன்பு நோக்கம் தலைவியிடமும் அமையக்கண்டு, அளவோடு அன்பொழுக்கம் பூணுகின்றான். அவ் இயற்கைப் புணர்ச்சியின் இன்ப அனுபவத்தைத் தலைவன் கூறி மகிழ்வது, கலவியுரைத்தல் எனப்பெறும். தெய்வமானது, தம்மைத் தலைவியுடனான களவொழுக்கத்தில் கூட்டுவித்தது என்றும், இருவர் உள்ளமும் ஒன்றானது என்றும் தலைவன் மகிழ்கின்றான். தலைவி அமுதமாகவும், தாம் அவ்வமுதின் சுவையாகவும் இருந்து இன்புற்றதாகப் பாடுகின்றார்.

**சொற்பா லமுதிவள் யான்சுவை யென்னத் துணிந்திங்ஙனே**
**நற்பால் வினைத்தெவந் தந்தின்று நானிவ ளாம்பகுதிப்**
**பொற்பா ரறிவார் புலியூர்ப் புனிதன் பொதியில் வெற்பிற்**
**கற்பா வியவரை வாககடி தோட்ட களவகத்தே**

(திருக்கோவையார், பா.9)

என உயிர்த்தலைவன், சிவத்தலைவி உடனான களவொழுக்கத்தின் இன்ப அனுபவத்தைப் பாடுகின்றான். இந்நிலையில் உயிர் தனது ஞானாசிரியனிடத்தில் உபதேசம் பெற்று, அவ் அருளனுபவத்தை வியந்து நினைக்கின்ற பேரின்பநிலைக்கு ஒப்பாகும்.

இறைவனாக வந்த ஞானாசிரியனிடத்தில் உபதேசம் பெற்றஅளவில், தாமுற்ற சிவானந்த அனுவத்தை மணிவாசகர்,

நிறைமதி நாளில், பாற்கடலில் பொங்கியெழுகின்ற அலைகள் போலத் தமது சிந்தையில் இறைவனது

> திருவருளாகிய சிவானந்தப் பேரலைகள் பொங்கி யெழுந்தன. உள்ளத்துள் நிரம்பித் ததும்பிய, பேரின்ப வெள்ளப் பெருக்கானது சொற்களால் கூறவும் அரிதானது. அப் பேரின்ப வெள்ளம், உடலின் மயிர்க்கால்கள் தொறும் நிறைந்து நின்றது. அதன் அமுததாரைகள், என்புத் துளைகளுள் புகுந்து, ஊனினை உருக்கி, உலப்பிலாத ஆனந்த அனுபவம் தந்தன.

எனக் குறிப்பிடுகின்றார்.

## மணிவாசகர் உருகி உருகிக் கரைதல்

உருக்கம் என்பது உருகுதல் எனப்பொருள்படும். ஒன்று இன்னொன்றை உருக்கும் தன்மையை இயல்பாகப் பெற்று இருக்கிறது. இந்நிலையில் அனலின் வெம்மையில் இரும்பு உருகும் ; ஈயம் உருகி ஓடும் ; இசையில் மனித மனம் மயங்கும். மகுடி ஓசையில் நாகம் உருகும். அதைப்போல் உயிர் அன்பில் அழுந்தி நிற்கின்றபோது தானே மெய் உருகும். மெய் உருக்கத்தில் ஐம்புல இன்பத்தினால் நெகிழ்ந்து நெகிழ்ந்து மனம் உருகும். இவ் உருக்கத்தினை “இரண்டறக் கலத்தல்” எனக் கொள்ளலாம்.

நெருப்பு வேறு, இரும்புவேறு என்று இல்லாநிலை, இசைவேறு நாதம் வேறாக இல்லாமல் மயங்கி இரண்டறக் கலந்தநிலை, அதைப்போல மனமானது இறை அருள் வாய்க்கப்பெறுகின்ற நிலையில், இறை உணர்வுடன் ஒன்றி இருக்கின்ற நிலையை உருக்கம் எனச் சுட்டுவர்.

இங்கே மாணிக்கவாசகர் **திருவாசகத்தில்** இறை உணர்வுடன் உருகி நிற்கிறார். இறை உணர்வுவேறு அவர் வேறு எனப் பிரிக்க முடியாத நிலையில் உருகி நிற்றலைக் காணமுடிகின்றது. **திருவாசகத்தைப்** படிக்கின்ற உயிரை உருக்குகின்ற தன்மையை இப்பாடல்கள் பெற்று இருக்கின்றன. ஆகவே கிறிஸ்துவச் சமயத்தைச் சேர்ந்த ஜி.யு.போப் இந்நூலுக்கு “எலும்பு உருக்கும் காப்பியம்”எனப் பெயரிட்டார்.

> **இடையறா அன்பு உனக்கு என் ஊடகத்தே**
> **நின்றுருகத் தந்தருள்** (திருச்சதகம் பா.11)

> உன்மீது மாறா அன்பை எனக்குத் தந்து அருளவேண்டும், ஐம்பொறியைத் தாங்கிய உடல் உனது அருளுக்காக ஏங்கி நிற்கின்ற நிலையைத் தந்தருள வேண்டும்

என்று இறைவனிடம் மன்றாடுகிறார்.

அன்பென்னும் பிடியில் அகப்படும் மலை நீ. ஆனால் கல்மனத்து அடியவனாகிய என் மனத்தையும் நெகிழ்வித்து என்னை உனது உடைமையாக்கிக் கொண்ட உன் பெருமையை எவ்வாறு கூற முடியும்?

**அன்பால் நீ அகநெகவே புகுந்தருளி ஆட்கொண்டது**
**இரும்புதரு மனத்தோளை யீர்த்தீர்தென் என் புருக்கிக்**
**கரும்புதரு சுவையெனக்குக் காட்டினையுன் கழலிணைகள்**
(திருவேசறவு பா.7.1 )

என்ற பாடலில் இரும்புநேர் மனத்தவனை அன்பால் ஈர்த்து, பேரருளாகிய கரும்பு தரும் சுவையை நுகரச் செய்த இறைவன் தன் கழலினைக் காட்டித் தம்மை உருக்கியதாக மாணிக்கவாசகர் கூறுகிறார்.

இறைவன் உடம்பாகி ஊனை உருக்கி அருள் இன்பத்தில் திளைக்கச் செய்து எளிமையாக ஆட்கொண்டான். அவனுடைய பேரருள் ஆனந்தம் தெவிட்டாத இன்பப் பொருளாகும்.

**என்பெலாம் உருக்கி எளிமையாய் ஆண்ட ஈசனே**
(பிடித்தபத்து பா.10)

எனவும்,

**ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி**
**உலப்பிலா ஆனந்த மாய** (பிடித்தபத்து பா.9)

எனவும், இறைவன் தம்மை ஆட்கொண்டதை நினைத்து உள்ளம் உருகிப் பாடுகின்றார். இறைவன்மீது கொண்ட அன்பை வெளிப்படுத்த முனைந்தார். ஆனால் வாய்ச்சொல் பயனில்லாமல் போன போது ஆனந்தக் கண்ணீர் சொரிந்து பாடுகின்றார். தம்முடைய காவியத்தில் உருக்கத்தை உத்தியாகப் பயன்படுத்தியுள்ளார். இவரைப் பரஞ்சோதி முனிவர் "அழுது அழுது அடியடைந்த அன்பர்" எனப் புகழ்ந்து பாடுகின்றார்.

## இறைவன் பிரிவுக்கு ஏங்குதல்

தலைவன் இயல்பாகவே சில காலம் பிரியவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதனைத் தொல்காப்பியர் நான்கு வகைப் பிரிவாக முதன்மைப் படுத்துகிறார்.

**ஓதல் பகையே தூதிவை பிரிவே**
**ஓதலும் தூதும் உயர்ந்தோர்மேன** (அகத்திணை நூ.27-28)

**வேண்டிய கல்வியாண்டு மூன்றிலாவது** (கற்பியல் நூ.186)

எனக் கூறுகிறார். கல்வியின் பொருட்டு ஒருவன் பிரியும் காலம் மூன்று

ஆண்டுகளுக்கு மிகாமல் இருக்கவேண்டும். வினை காரணமாகச் சென்ற தலைவன், தான் குறித்த காலத்தில் வருவதாகக் கூறிச் சென்ற காலம் வந்தும், தலைவன் வராமையால் தலைவி வருந்துகின்றாள். அவன் பிரிவை ஆற்றாமல் ஏங்குகின்றாள்.

> தலைவனது பிரிவினை ஆற்றாளாகிய தலைவி, தலைவனது பெயர், ஊர் முதலியவற்றைப் பிறர் சொல்லிக் கேட்பினும் அவனைக் கூடி மகிழ்ந்தாற் போன்ற இன்பமுண்டாகும் என்ற நினைவினளாய் அது கிடைக்கப் பெறாமையின் கிளியை நோக்கித் தலைவனின் திருநாமத்தைப் பாடுமாறு வேண்டுகிறாள்

எனப்பிரிவுக்கு ஏங்குவதைக் காணமுடிகின்றது. தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவி தனக்குப் பிடித்த வளர்ப்புப் பறவையிடம் தன் தலைவன் திருநாமத்தைப் பகரச் சொல்லி அதனைக்கேட்டு மகிழ்ச்சி அடைகின்றாள்.

தலைவி தும்பியைத் தூதாக அனுப்புகிறாள். தூது அனுப்பி நாள்பல கடந்தும் இறைவன் தன்னை ஆட்கொள்ளவில்லை என்ற வருத்தம் அதிகரிக்க அதிகரிக்கக் கிளியை நோக்கி என்னுடைய தலைவன் பெயரைக் கூறுவாயாக என்ற குறிப்பு தோன்றப் பாடுவதை அறியலாம்.

> **செம்பெருமான் பெண்மலரான் பாற்கடலான் செப்புவபோல்**
> **எம்பெருமான் தேவர் பிரான்** (திருத்தசாங்கம் பா.1)

என்று கிளி தலைவனைத் தேவர்பிரான் எனக் கூறுவதைக் கேட்ட தலைவி மகிழ்ச்சியடைகின்றாள்.

தலைவி, எனது சிந்தனையின் கண் நீங்காது இடம்பெறும் தலைவனின் ஆறு எது என்று வினவ, அதற்குக் கிளி,

> **வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியும்**
> **ஆனந்தங் காணுடையான் ஆறு** (திருத்தசாங்கம் பா.4)

உயிர்களிடத்து ஆணவம், கன்மம், மாயைகளைக் கழுவும் சிவானந்தமே தலைவனின் ஆறாகும் என மறுமொழி கூறுகின்றது. என்னுடைய தலைவன் எழுந்தருளி இருக்கும் மலை எது? என வினவக் கிளி அதற்கு,

> **இருளகல வாள்வீசி இன்பமரும் முந்தி**
> **அருளுமலை யென்பது காண் ஆய்ந்து** (திருத்தசாங்கம் பா.5)

என்பதிலிருந்து வீடுபேற்றை அருளும் மலைதான் எம் இறைவன் எழுந்தருளி இருக்கும் மலை என்று கூறுவதை அறியமுடிகின்றது.

இறைவன் ஆட்சிபுரியும் இடமும் படைக்கலனும் எவையெனக் கிளியே கூறுவாயாக எனக்கேட்ட தலைவிக்கு,

**அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயுங்**
**கழுக்கடை காண் கைக்கொள் படை** (திருத்தசாங்கம் பா.7)

என்ற வரிகளில் இறைவன் பால் அன்பு கொண்டு உள்ளம் உருகும்போது தாமே மும்மலங்களும் அகலக்கூடிய சூலப் படையைக் கொண்டு இருக்கக் கூடியவன் என்று கிளி மறுமொழி தருகிறது. பிரிவு ஆற்றாளாகிய தலைவி தலைவனுக்குரிய திருநாமங்களைச் சொல்லக் கேட்டு மகிழ்ச்சியடைகின்றாள். இறைவனுக்குரிய முரசு என்ன? எனக்கிளியை வினவ, கிளி "அடியார்களின் பிறவி வேர் அழிக்கின்ற பறையே" என மறுமொழி கூறியது. அதனை,

**பிறவிப் பகை கலங்கப் பேரின்பத் தோங்கும்**
**பருமிக்க நாதப் பறை** (திருத்தசாங்கம் பா.8)

என்ற திருவாசக வரிகளால் அறியமுடிகின்றது.

அன்புடைய இருவர் தமக்குரிய தலைவன் அல்லது தலைவியின் பெயர், அவர்களுக்குக் குறிக்கக்கூடிய செயல் இருப்பின் கேட்க ஆசையாக இருக்கும். கேட்டபின் இன்பமாக இருக்கும். அதிலும் தலைவனைப் பிரிந்து இருக்கும் தலைவிக்குப் பிரிவுத் துன்பத்தைப் போக்கக்கூடிய அருமருந்தாக இருக்கும். இறைவனின் திருநாமம் சூடிக்கொண்ட மாலை, அவன் உறையும் ஊர்தி, எழுந்தருளி இருக்கின்ற மலை, தலைவனுக்குப் பிடித்த இசை ஆகியவற்றைப் பகர்தல், தலைவிக்கு இன்பமூட்டும். தலைவனைப் பிரிந்து ஏங்கும் தலைவியாக மாணிக்கவாசகர் தவிப்பதால் இப்பிரிவுத் துன்பத்தை உத்தியாகக் கையாண்டு இலக்கியத்திற்குச் சுவையூட்டுகிறார்.

தலைவியின் வரவினை எதிர்நோக்கித் தலைவன், பொழிலிடத்தே காத்திருக்கின்றான். அனுப்பொழுதும் தலைவியின் நினைவகலாத தன்மையினால் காணும் அனைத்தும் அவனுக்குச் சிவத்தலைவியின் உருவாகவே தென்படுகின்றன. சோலையில் செழித்து வளர்ந்த மூங்கில்கள் தலைவியின் தோளினையும், அழகிய மயில்கள் தலைவியின் மென்மைச் சாயலையும், மான்களின் மருட்சிமிக்க பார்வை தலைவியின் பார்வையினையும், வல்லிக்கொடியானது அவளது அழகையும் தலைவனுக்கு நினைவுறுத்துகின்றன.

**காம்பிணை யாற்களி மாமய லாற்கதிர் மாமணியால்**
**வாம்பிணை யால்வல்லி யொல்குத வான்மன்னு மம்பலவன்**

**பாம்பிணை யாக்குழை கொண்டோன் கயிலைப் பயில்புனமுந்**
**தேம்பிணை வார்குழ லாளெனத் தோன்றுமென் சிந்தனைக்கே**

(திருக்கோவையார், பா.38)

என உயிர்த்தலைவன், தான் நோக்குமிடமெங்கும் சிவத்தலைவியின் உருவமே எதிர்ப்படுவதைத் தனது உள்ளமாகிய பாங்கனிடம் எடுத்துரைக்கின்றான். இச் சிற்றின்ப நிலையானது, மிகுந்த பேரின்ப வேட்கை கொண்ட உயிரானது, காணும் பொருளனைத்தையும் சிவமாகவே கண்டு பணிகின்ற அருள்நிலைக்கு ஒப்பாகும்.

## அகத்திணை மாந்தர்-தோழி

தலைவியின் இன்ப, துன்பங்களைப் பகிர்ந்து கொண்டு தலைவியின் நலனைப் பெரிதாகக் கொண்டு வாழ்பவள் தோழி. இவள் செவிலித்தாய் மகளாவாள்.

**தோழி செவிலி மகளாய்ச் சூழ்தலோடு**
**உசாத்துணை யாகி அசாத்தணி வித்திற்கு**

(நம்பியகப்பொருள், .நூ.110)

என **நம்பியகப்பொருள்** தோழியின் சிறப்பைக் கூறுகின்றது. இறைவன் மீது காதல் கொண்ட தலைவி, தலைவன் நினைவால் உடல்மெலிந்து எதிலும் பற்றில்லாமல் காணப்படுவது இயல்பாகும். தலைவியின் மெய் வேறுபாட்டில் மாற்றம் கண்ட செவிலித்தாய் தோழியிடம் தலைவியின் மாற்றத்திற்கான காரணத்தை வினவ முற்படுகிறாள். அதற்குத் தோழி,

**கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர்**
**உண்ணின் றுருக்குவர் அன்னே யென்னும்**
**உண்ணின் றுருக்கி உலப்பிலா ஆனந்தக்**
**கண்ணீர் தருவரால் அன்னே யென்னும்** (அன்னைப்பத்து-2)

என்று மறுமொழி பகர்கின்றாள்.

> அன்னையே தலைவன் ஞான சொரூபமாக நின்று உள்ளத்தை உருகச் செய்பவன். அவனது திருநாமத்தையும் திருமந்திரத்தையும் கேட்கக் கேட்க மனத்திலே இன்பத்தேன் சொரியும், தன் நிலைமையையும் ஆனந்தப் பரவசநிலை அடையும்

என்று தலைவி கூறியதைத் தோழி செவிலிக்கு எடுத்துரைக்கின்றாள்.

தலைவன் பாம்பை அணியாகவும், புலித்தோலை உடையாகவும் உடுத்தியிருப்பதைக் கண்ட தலைவி நகைச்சுவையாக நினைத்தாள். தலைவன் அணிந்த பொருளின் சூக்குமத்தை உணர்ந்தும் அவன்

திருமேனியை அலங்கரித்த விதத்தைக் கண்டும் காதல் கொள்கிறாள். தலைவி தலைவனுக்காக உள்ளம் வருந்துவதை,

**ஆடரவப் பூணுடைத் தோல் பொடிப் பூசிற்றோர்**
**வேடமி ருந்தாவா றன்னே யென்னும்**
**வேடமி ருந்தவாறு கண்டு கண் டென்னுள்ளம்**
**வாடுமிது வென்னே அன்னே யென்னும்** (அன்னைப்பத்து பா.4)

எனத் தலைவியின் துன்பத்தைத் தோழி செவிலிக்கு உணர்த்துகிறாள்.

**பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரி மேல் கொண்டென்**
**உள்ளங் கவர்வரால் அன்னே யென்னும்** (அன்னைப்பத்து பா.7)

என்ற வரிகளில் பள்ளிப் பருவத்தே பாய்ந்துவரும் குதிரை மேல் வந்து என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதாகத் தலைவி தன் நிலையைச் செவிலியிடம் கூறுகிறாள்.

**கொன்றை மதியமும் கூவிள மந்தமும்**
**துன்றிய சென்னியர் அன்னே யென்னும்**
**துன்றிய சென்றியின் மத்தம் உள மத்தமே**
**இன்றெனக் காணவா றன்னே யென்னும்** (அன்னைப்பத்து பா.10)

என்ற பாடலில் கொன்றை மலரும், பிறைமதியும், வில்வத்தளிரும், ஊமத்தம் பூவும் சூடியுள்ள எம் தலைவர் தலைவியின் உள்ளத்தைக் கவர்ந்து கொண்டார் என்பதைத் தோழி உணர்த்தும் வகை சுவைக்கத்தக்கது.

## நிறைவாக

ஆன்மாவானது இறைவனை அடைய முயலும் முயற்சியைப் பாடுவதற்குத் தலைவனை அடைந்து இன்புறக் கருதும் தலைவியின் மனநிலையை ஒப்பீடாகக் கொண்டு அடியார்கள் பாடியுள்ள தன்மை புலப்படுகின்றது. ஒத்த அன்பினால் கூடும் உள்ளங்கள் அனுபவிக்கும் பேரின்பம் அவர்களின் உள்ளத்துள் நுகர்ந்து இன்புறுவதே நோக்கமாகக் கொண்டதாகும். இப்பேரின்ப உணர்வினைப் பெறவிழையும் அகமாந்தர்களின் மனநிலையினை அடியார்களின் அகத்துறைப் பாடல்கள் வெளிப்படுத்திக் காட்டுகின்றன. சங்க இலக்கியம் சுட்டிக்காட்டும் அகப்பொருள் துறைகள் அடியார்கள் பாடியுள்ள நாயக-நாயகி பாவ நிலையில் பாடுகின்ற பாடல்களுக்குப் பெருமளவில் பொருத்தமாகத் திகழ்கின்றன. தலைவனின் நினைவில் துயில்கொள்ளும் தலைவி, தன் கனவில் தலைவனோடு கூடிக்களித்து மகிழும் மகிழ்வை

வெளிப்படுத்தும் கனவிழந்துரைத்தல் துறைக்குறிப்புகளைப் பக்தி இலக்கியப் பாடல்களில் காணமுடிகின்றது.

தலைவன் தன்னை விரைவில் வந்தடைய வேண்டும் என்னும் வேட்கையில் தலைவி கூடல் இழைத்து வருந்தாநிற்றலைத் திருநாவுக்கரசர் சுவைபடப் பாடுகின்றார். தலைவனைக் கண்டபோது அவன் நோக்கினுக்கு உடன்பட்டுத் தெளிந்தும், பின்பு அவன் தன்னை வரையாது நீங்கும்போது முன்பிருந்த தெளிவொழிந்து முறையிட்டு அவனைக் கூட்டுவிக்க வேண்டுதலுமாகிய தேறுதலொழிந்த காமத்து மிகுதிறம் துறைசார்ந்த அகப்பொருள் பாடல்கள் பல்வேறு நிலைகளில் காணக் கிடக்கின்றன. சிற்றிலக்கியக் கூறுகளில் ஒன்றாகிய உலாவின் கூற்றின் அடிப்படையில், தலைவன் உலாவருதல் கண்டு மயங்கும் பெண்களின் நிலையிலிருந்து திருநாவுக்கரசர் பாடி மகிழ்வதைக் காணமுடிகின்றது. தலைவனின்மேல் கொண்ட அன்பின் மிகுதியால் தலைவி குயில், நாரை ஆகியவற்றைத் தூதாக அனுப்பித் தன் நிலையை உரைக்குமாறும், மாலை வாங்கி வருமாறும் வேண்டும் பாங்கினைத் தேவாரப் பாடல்களில் சுவைக்க முடிகின்றது. தலைவன், தலைவி, தோழி, செவிலி, நற்றாய் ஆகியோர் கூற்றிற்குரியோராகச் சங்க இலக்கியம் குறிப்பிடுவதைப் போன்றே இம்மாந்தர்களின் கூற்றுக்களில் அமையும் பாடல்களை நாயன்மார்களும் ஆழ்வார்களும் பாடியுள்ள நயம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

# 2. தொண்டு நெறி

மண்ணுலகில் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் மனஅமைதியையும், வாழ்க்கையில் நம்பிக்கையையும் தோற்றுவித்து, உணர்வுப்பூர்வமாக உணர்ந்து இன்பமடைவதற்குச் சமயங்கள் வழிகாட்டுகின்றன. எல்லாச் சமயங்களும் இறைவனைத் தேடுகின்ற புனிதமான பாதையை மனித சமுதாயத்திற்குத் தெளிவாகக் காட்டுகின்றன. அந்தப்பாதையில் முழு நம்பிக்கையோடு நடைபோடும்போது, தீயநெறிகள் நம்மை அணுகாது நன்னெறியின்கண் இட்டுச் சென்று, பயனாய நல்லறங்களைச் செய்து, நானிலத்தார் போற்றும் வண்ணம் வாழ முடியும்.

**துன்பக் கடலில் துளைந்ததெலாந் தீர்ந்ததே!**
**இன்பக் கடலில் இரும்என்ன - அன்பிற்**
**கரைந்து கரைந்துருகிக் கண்ணருவி காட்ட**
**விரைந்து வரும் ஆனந்தமே!**

(தாயுமானவர், உடல் பொய்யுறவு, பா. 38)

என்ற தாயுமான சுவாமிகளின் பாடல் வரிகள் சுட்டுவதைப் போல, துன்பம் நீங்கி இன்பம் பெருக மனக்கோயிலில் இறைவனை எழுந்தருளச் செய்து, இறைவனைத் தம்முள் கண்டு கரைந்து உருகி, தன்னிலை மறக்கும்போது இறைவனை அடைதற்குரிய வழியை இந்த ஆன்மா கண்டறிகிறது.

உயிர்களின் தனிப்பட்ட செயல்களே, அவ்வுயிர்களின் இன்ப வாழ்வுக்கு வழிகாட்டும் என்பதைச் சைவ இலக்கியங்கள் வழிகாட்டுகின்றன. கருவிலே திருவுடையாராக உதித்து, இறைவனைத் தவிர்த்து வேறொன்றும் நினையாது, செம்மைநெறி வாழ்க்கை வாழ்ந்த சைவ அடியார்களின் உள்ளத்தில் தோன்றிய உணர்வுகளின் வெளிப்பாடுதான் பன்னிரு திருமுறைகள். நாயகனாகிய இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற அடியவர்கள் என்னும் பொருளில் இவர்கள் நாயன்மார்கள் என அழைக்கப் பெற்றனர்.

**சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் நம் சுந்தரனும்**
**சிற்கோல வாதவூர்த் தேசிகனும்-முற்கோலி**

**வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே**
**எந்தைபிரான் ஐந்தெழுத்தெங்கே?**

(ஜி.சுப்பிரமணியபிள்ளை, திருநாவுக்கரசரும் மாணிக்கவாசகரும், ப. 9)

என்னும் பாடல் சமயக்குரவர் நால்வரையும் போற்றுகின்றது.

சிவபூசை, அடியார்பூசை, குருபூசை ஆகிய வழிபாடுகளுக்கு எத்துணைப் பயனுண்டோ, அத்துணைப் பயன் இத்திருமுறை வழிபாட்டிற்கும், பாராயணத்திற்கும் உண்டென்பர் பெரியோர். சரியை, கிரியை, யோகம், ஞானம் எனப் பல படிகளாக வகுத்துச் செய்யப்படும் சிவவழிபாட்டினைத் தவிர, உயிர்கள் உய்தி பெறுவதற்கு வேறு சாதனம் இல்லை என்பது சைவ நூல் துணிபு. இறைவனது திருவருளாகிய சிவஞானம் ஒன்றினால்தான் அப்பெருமானை உள்ளவாறு உணர்ந்து வழிபடுதல் கூடும். இறைவன் அருளிய திருவருள் ஞானத்தால் அம்முதல்வனை வழிபடும் பதிகப் பெருவழியினை அமைத்துத் தந்த திருவருட் செல்வர்கள் ஞானசம்பந்தர், அப்பர் பெருமான், சுந்தரமூர்த்தி நாயனார், மணிவாசகப் பெருமான், காரைக்கால் அம்மையார் முதலிய திருமுறை ஆசிரியர்களாவர். சிவஞானிகளாகிய அப்பெருமக்கள் அனைவரும் பொறிவாயில் ஐந்தவித்தானாகிய இறைவன் அறிவுறுத்த, பொய்தீர் ஒழுக்க நெறிநின்ற செம்புலச் செல்வர்கள். ஆகவே அவர்கள் திருவாய்மலர்ந்தருளிய திருமுறைகள் யாவும் உயர்ந்த ஞானநூல்களாகத் திகழ்கின்றன. இத்தகைய சைவத்திருமுறைகள் பன்னிரண்டையும் **"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி"** ஓதலும், ஓதும்படி செய்தலும், பிறர் சொல்லத் தாம் கேட்டலும், பிறரைக் கேட்கும்படி தூண்டலும், ஞானநூல்களாகிய இவற்றின் பொருள் நலன்களை இடைவிடாது சிந்தித்தலும் என ஐந்து வகையாலும் பயின்று வழிபடுதல் வேண்டும் என்று உணர்த்தியுள்ளனர் பெரியோர்.

**ஞானத்தால் தொழுவார்கள் தொழக் கண்டு**
**ஞானத்தால் உனைநானும் தொழு வேனே** (5 : 91 : 3)

என்றவாறு சிவஞானம் பெற்ற பெரியோர்கள் அருளிய இத்திருமுறைகளைச் சாதனமாகக் கொண்டு எல்லாம் வல்ல இறைவனை வழிபட்டுப் போற்றும் முறை ஞான பூசையெனப் பாராட்டப் பெறுகின்றது. இந்த உண்மை,

**'ஞானநூல்'தனையோதல்; ஓதுவித்தல்**
**நற்பொருளைக் கேட்பித்தல்; தான் கேட்டல், நன்கு**
**ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்**
**இறைவனடி அடைவிக்கும் எழில் ஞான பூசை**

(சிவஞான சித்தியார், பா : 8 : 23)

என்ற அருள்நந்தி சிவாச்சாரியாரின் பொருள் பொதிந்த பொன்னுரையால் தெளிய முடிகின்றது.

நிறைமொழி மாந்தர்களாகத் திகழ்ந்து தமிழ் மந்திரங்களாகிய திருமுறைப் பாடல்களைப் பாடியருளிய அடியார்கள், அனைவரும் போற்றிப் பாடித் துதித்துப் பயன்பெறவேண்டும் என்பதையே விரும்பினர். மந்திரம் என்பது அதனைப் பயில்வாரைப் போற்றிப் பாதுகாப்பதாகும். திருமுறை மந்திரங்களை அன்பினால் ஓதி உணரும் இயல்புடைய சைவ அடியார்கள் இவ்வுலக வாழ்வில் நேரும் அனைத்துத் தீங்குகளும் நீங்கி, எல்லா நலன்களையும் பெற்று இன்புறுவர் என்பது இறையடியார்களின் அனுபவ உண்மையாகும். இதனை,

**இம்மை யேதரும் சோறும் கூறையும்**
**ஏத்தலாம் இடம் கெடலுமாம்**
**அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்கு**
**யாதும் ஐயுறவு இல்லையே!** (7 : 31 : 1 )

என்ற தேவாரப் பாடல் உணர்த்திக் காட்டி, திருமுறைகளை ஓதி வழிபடுபவர்கள் இம்மை, மறுமைப் பயன்களையும் ஒருங்கே பெற்று மகிழ்வர் என்பதை உறுதிப்படுத்துகின்றது. இத்தகு அடியார்களின் தன்னலம் கருதாத தொண்டுகளால் மண்ணுலக மக்கள் அடைந்த நற்பயன்கள் எண்ணிறந்தன. அவர்களின் திருவுள்ளம் மக்களுக்குத் தொண்டு செய்வதன் மூலமாக இறைவனைக் காணமுடியும் என்னும் கருத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட காரணத்தால் சமுதாயத் தொண்டு செழித்தோங்கியது.

தனி மனிதர்கள் சேர்ந்திருப்பது குடும்பமாகவும், பல குடும்பங்கள் சேர்ந்து வாழ்வது சமுதாயமாகவும் உருவாகின்றது. பொதுவாக நோக்கும் இடத்துத் தனிமனிதர்கள் சமுதாயத்தின் அடிப்படையாக அமைகின்றனர். குடும்பம் ஒரு சமுதாயத்தின் அடிப்படைக்கூறு. குடும்பமின்றி ஒரு சமுதாய அமைப்பு வேரூன்ற இயலாது. மேலும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் குடும்பம் காரணமாகின்றது.

ஏதோ ஒருவகைக் குடும்ப அமைப்பின்றிப் பண்பாடோ அல்லது சமுதாயமோ என்றும் இருந்ததில்லை என்று பி.கிஸ்பர்ட் கூறுகின்றார் **(P. Gislort, Fundamentals of Soliology : 1959 : P.64).**

திருஞானசம்பந்தர் இந்த உலகம், இவ்வுலகிலுள்ள உயிர்களிடத்து இரங்கிப் பரிவும் கருணையும் கொள்கின்றார். அதனால் மக்களுக்குத் தொண்டு செய்து, அத்தொண்டின் வழியாக இறைவனை அடையும் நெறியைக் கைக்கொள்கின்றார். இவர் ஒவ்வொரு ஊரிலும் இருக்கின்ற

தலங்களுக்குச் சென்று அப்பகுதிகளில் வாழும் மக்களைச் சந்தித்தார். மக்களோடு ஒன்றிப் பழகித் தம் எண்ணங்களைச் சொல்வதற்காக மக்கள் பேசும் மொழியிலேயே அவர் பேசினார், பாடினார். அவர் பிறப்பில் ஒரு வேதியர் என்பதனைச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகின்றார்.

பால் ஒழுகத் திருஞானசம்பந்தர் தமிழ்வேதப் பாடல்களைத் தொடங்கிப் பாடியருளி முதல் பதிகத்தை முடித்து, இறுதியில் திருக்கடைக்காப்புப் பாடலைப் பாடிய நிலையைச் சேக்கிழார் பெருமான்,

**திருப்பதிகம் நிறைவித்துத் திருக்கடைக்காப்புச் சாத்தி**
**இருக்குமொழிப் பிள்ளையார் எதிர்த்தொழுது நின்றருள**
**அருட்கருணைத் திருவாளனார் அருண் கண்டு அமரர்எலாம்**
**பெருக்க விசும்பினில் ஆர்த்துப் பிரசமலர் மழைபொழிந்தார்**
(12 : பா : 1978)

என்று சுட்டுகின்றார். மேலும் வேத, வேள்வி நெறிகளிலே ஊன்றியவர் அவர் தம்மை, **மறைஞான சம்பந்தன்** (1:12:11), **நான்மறை கற்றவன்** (3:22:11), **மாமறை நான்கினொடு அங்கம் ஆறும் வல்லவன்** (3:100:11) என்றும் கூறிக்கொள்கின்றார். மேலும் வேதம், வேதாந்தம், அங்கம், சுருதி, சுருதிசிரம், மறை, வேள்வி என்னும் சொற்கள் அவர் வேதங்களைக் குறித்துச் சொல்வதாக உள்ளன.

**தழங்கு எரிமூன்று ஓம்பும் தொழில் தமிழ்ஞான சம்பந்தன்**
(1 : 131 : 11)

என்று தாம் வேள்வித் தொழில் செய்ததைக் குறிப்பிடுகின்றார். சேக்கிழார் பெருமானுடைய **பெரியபுராணத்தின்** வழியாகப் பார்க்கும் போது, திருஞானசம்பந்தர் அந்தக் காலத்தில் சில சமுதாயப் புதுமைகளையும் செய்திருக்கின்றார். எல்லாம் இறையருள் ; எவ்வுயிரும் அவ்வருளின் நிழலில்தான் தழைக்கின்றது என்பதுதான் அடிப்படையில் திருஞானசம்பந்தரின் நோக்கு, உலக உயிர்கள் அனைத்தையும் தழுவிய சமுதாயப் பார்வையாகவும் தொண்டு நெறியாகவும் அமைந்துள்ளது.

## காலமும் சமுதாயம்

சமுதாயத்தின் அடிப்படைச் சமூக நிறுவனம் குடும்பம் ஆகும். அது சமுதாயத்தின் ஒருங்கிணைந்த பகுதியே ஆகும். மனிதக் குடும்பம் என்பது உலகளாவியதோர் சமுதாய அமைப்பு ஆகும். பல நூற்றாண்டுகளாகப் பாரத நாட்டின் சமுதாயத்திலும், அரசியலிலும், பொருளாதாரத்திலும், பெரிய பெரிய மாற்றங்கள் நடந்து வந்திருந்தாலும் பாரத நாட்டுக் குடும்ப அமைப்பு நிலைத்து நிற்கின்றது. சமுதாயம்

முழுவதுமே குடும்பத்தில் இருந்துதான் ஆரம்பிக்கின்றது. ஏனென்றால் சமுதாயம் என்பது உயிர் உள்ள ஓர் அமைப்பு ஆகும். அது தொடர்ந்து மக்களைச் சேர்த்துக் கொண்டேயிருக்க வேண்டும். அதில் புதியவர்கள் வந்து சேர்ந்து கொள்ளும் குறிக்கோளானது ஒவ்வொரு சமுதாயத்திலும் குடும்பம் என்ற அமைப்பில்தான் நிறைவேற்றப்படுகின்றது.

> சமுதாயத்திலுள்ள தனிமனிதர்களின் நோக்கங்கள் அச்சமுதாயக் குழு மூலமாகவே நிறைவு பெறுகின்றன. எனவே சமுதாயம் என்பது நிறைவுடைய ஒரு குழுவாகும். மனிதனை விலங்கிலிருந்து பிரிப்பதே இச்சமுதாயம் என்ற சொல்தான். இந்த அடிப்படையில் ஆராய்ந்தால் ஒருவன் மற்றவனை உணர்தலே சமுதாயம் என்ற உண்மை விளங்கும். இவ்வுணர்ச்சி என்றைக்குத் தோன்றிற்றோ அன்றைக்கே சமுதாயம் தோன்றிவிட்டது

என அ.மு. பரமசிவானந்தம் கூறுகிறார் (சமுதாயமும் பண்பாடும், ப.26).

சமுதாயம் என்ற சொல்லிற்கு மக்கள்திரள், கூட்டம், சங்கம் என்னும் பொருள்களைத் தமிழ்ப் பேரகராதியும், சொற்களஞ்சியமும் தெரிவிக்கின்றன. நெடுங்காலம் ஒன்றாகக் கூடி வாழ்ந்தும், தொழில் புரிந்தும் வாழும் மக்கள் கூட்டத்தைச் சமுதாயம் என மானுடவியலார் கூறுவர். மேலும் சமயம், பண்பாடு, அறிவியல், அரசியல், நாட்டுப்பற்று முதலியவற்றின் அடிப்படையில் சேர்ந்து வாழும் மக்கள் கூட்டத்தினையே சமுதாயம் என அறிஞர்கள் பொதுவாகக் கூறுவர்.

சமூக நிறுவனத்தின் பல்வேறு குடும்பங்கள், கல்வி நிலையங்கள், அரசியல் அமைப்புகள் யாவும் இணைந்தும், இழைந்தும் இயங்குகின்ற பொழுது சில அடிப்படைப் பண்புகள் அவற்றிடையே வெளிப் படுகின்றன. இவற்றை நிலைக்களன்களாகக் கொண்டு விளங்குகிற மக்கள் கூட்டத்தைச் சமுதாயம் எனச் சமூகவியலார் கருதுகின்றனர்.

> எவருடைய இதயம் உலகம் முழுவதையும் தழுவிக் கொள்ளவும், நேசிக்கவும் திறனுடையதாக இருக்கின்றதோ எவர் மிகுந்த சுதந்திரத்துடன் இருக்கின்றார்களோ அவர்களே மிகச் சிறந்த மனிதர்களாக மதிக்கப்படுவார்கள்

என்று மாக்சிம் கார்க்கி கூறுகின்றார். மனித இனக்குழுக்களின் வாழ்க்கை முறையானது அவர்கள் வாழும் சூழலின் இயற்கையை ஒட்டி அமைகின்றது. உணவு, உறையுள், உடை ஆகிய அடிப்படைத் தேவைகள் இயற்கைச் சூழலுக்கேற்ப மாறுபடுகின்றன. மனிதனின் அறிவு வளர்ச்சி உலக உருண்டையை அவனது ஆளுமையின் கீழ்க்

கொணர்ந்தது. பிரபஞ்சத்தையும் தன் பிடிக்குள் கொண்டுவர முயலுகின்ற போக்கினை மனிதகுலம் மேற்கொண்டு வருகின்றது. ஆகத் தனிமனிதன் தனது இருத்தலை நிலைநிறுத்திக் கொள்ளப் பிறரை அணுகுதல் என்ற அடிப்படையில் சமுதாயம் தோற்றம் கொள்கின்றது. ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்வும் இடர்ப்பாடில்லாமல் செம்மையாக அமையச் சமுதாயம் பயன்பட வேண்டும். தனியுடைமை என்ற நிலையைக் கடந்து பொதுவுடைமை என்ற நிலைக்கு மனிதனை இட்டுச் செல்வதே சமுதாயம் என்னும் அமைப்பாகும்.

ஏனைய உயிரினும் கூடுதலாக உள்ள ஆறாவது அறிவை, நல்லதன் நலனும், தீயதன் தீமையும் அறியும் பகுத்தறிவைப் பெற்றவர் மனிதர் என்பதும், அவ்வறிவும் அவரது மனத்தோடு தொடர்பு கொண்டது என்பதும் தொல்காப்பியரால் விளக்கப்பட்டுள்ளன. மனிதனை முழுமையானவனாக மாற்றும் ஆற்றல் அவன் பெற்றுள்ள மனிதப் பண்பிற்கு மட்டுமே உண்டு என்பது திண்ணம். இத்தகைய பண்புடையாளர்களின் செயல்களால்தான் இவ்வுலகு வளர்ந்து செழித்து நிலைபேற்றுத் தன்மையைப் பெறுகின்றது.

> கிராமம், நகரம், மாவட்டம், மாநிலம், நாடு அல்லது அதற்கு மேற்பட்ட நிலப்பரப்புடைய பகுதியில் உறைந்து, பொதுவான வாழ்க்கையில் மக்கள் கூட்டமாக ஈடுபட்டிருக்கின்றனர். அக்கூட்டம் சமுதாயம் என்ற பெயரைப் பயன்படுத்தி அறிந்து கொள்ளக்கூடியதாய் இருக்க வேண்டும். அப்பரப்பின் எல்லை ஒரு மதிப்பையும், அர்த்தத்தையும் பெறுகின்ற அளவிற்கு அப்பொது வாழ்க்கை ஒரு சில பண்புகளைப் பெற்றுத் திகழ வேண்டும்

என்று 'மெக்லுவர்' குறிப்பிடுகின்றார்.

> சமுதாயம் என்பது வாழ்வியல் நோக்கங்கள் முழுமையும் உள்ளடக்கிய சமூகக் குழுவாகும். சமுதாயத்திலுள்ள உறுப்பினர்களின் வாழ்க்கை முழுமையுமே அதில் அடங்கிவிடும். சுருங்கக்கூறின், ஒரேவிதமான எண்ணங்களை உடைய மனிதர்கள் தங்களுடைய ஒத்த தன்மையை உணர்ந்து அதன் காரணமாகப் பொது நோக்கங்களை அடைவதற்காகச் சேர்ந்து முயல்கின்ற பொழுது சமுதாயம் உருவாகிறது

எனக் கிட்டிங்ஸ் என்னும் அறிஞர் கூறுகின்றார்.

உலகம் முழுமைக்குமான உயர்வுகளை, தேவைகளை, நிறைவுகளைச் சமுதாய நோக்கில் படம்பிடித்துக் காட்டியுள்ள திருமுறைப் பாடல்களின் திறத்தினை வெளிப்படுத்திக் காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

வாழ்வியலை இயக்குகின்ற ஆற்றல் சமுதாயத்திடம்தான் உள்ளது. தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிக்கப்படும் பக்தி இலக்கியக் காலம் என்பது பக்தி இயக்கத்தை வளர்க்கத் தோன்றிய இலக்கியக் காலக்கட்டத்தைக் குறிக்கும். சமணமும், பௌத்தமும் செல்வாக்குப் பெற்றிருந்த இக்காலத்தில் அம்மதங்களின் ஆதிக்கத்தைத் தடை செய்ய முன்னின்ற சமயங்களே சைவம், வைணவம் ஆகியவை.

> ஒரு பெரும் கவிஞன் தான் வாழும் காலத்தையும், அதற்கு முற்பட்ட காலத்தையும் பிரதிபலிக்கும் கண்ணாடியாக உள்ளான் என்பது திறனாய்வாளர் கண்ட முடிவாகும்

(அ.ச.ஞானசம்பந்தன்:1999:567) அந்த முறையில் இரண்டாம் நூற்றாண்டை ஒட்டிய காலக்கட்டத்தை அறியச் **சிலப்பதிகாரம்** உதவுகின்றது. இதேபோன்று இடைக்கால நிலைமையைப் பக்தி இலக்கியங்கள் காட்டுகின்றன.

சேக்கிழார் பெருமானைப் பொறுத்த மட்டில் ஏனைய புலவர்களைப் போல் இருந்த இடத்தில் இருந்தபடி பாடியவர் அல்லர். தமிழகம் முழுவதும் சுற்றித் திரிந்து, கல்வெட்டுக்கள், அரசர்கள், குடிமக்கள் பற்றிய ஆவணங்கள் என்பனவற்றைப் பழுதறத் தெரிந்து கூறினார். அவர் மேற்கொண்டிருந்த அமைச்சர் பதவியும், அவருடைய வரலாற்றுணர்வும் அவரைச் சமுதாய வரலாறு படைக்கும் வரலாற்று ஆசியராகச் செய்துவிட்டன எனலாம்.

வரலாற்று நோக்குடன் சமுதாயப் பழக்கவழக்கங்களைக் கூறினால் காப்பியம் சிறக்காமல் போய்விடும் என்ற அச்சமில்லாமல் எழுதியவர் சேக்கிழார் பெருமான். மகேந்திர பல்லவன் காலத்தில் நாவுக்கரசரை அழைத்து வருக என்று ஆணையிடும் மன்னவன்,

> **அருள்கொண்ட உணர்வின்றி நெறிகோடி அறிவென்று**
> **மருள்கொண்ட மன்னவனும் மந்திரிகள்தமை நோக்கித்**
> **தெருள்கொண்டோர் இவர்சொன்ன தீயோனைச் செறுவதற்குப்**
> **பொருள் கொண்டு விடாதென் பால் கொடு வாரும் எனப்**
> **புகன்றான்**
>
> (பெரியபுராணம் : பா : 1355)

என்று கூறியதாகச் சேக்கிழார் பாடுகின்றார். இதிலிருந்து பல்லவர்

ஆட்சியில் கையூட்டுப் பெறுபவர் இருந்தனர் என்பதை அறியமுடிகிறது. **பெரியபுராணம்** அறுபத்து மூவர் வரலாறு கூறும் நூல் எனினும் அவர்தம் சரிதம், தமிழகச் சமுதாய வரலாறு, தமிழ்நாட்டு வரலாறு என மூன்றும் கலந்து ஆக்கப்பெற்றதாகும்.

## உலகளாவிய பார்வை

சேக்கிழார் பெருமான் **பெரியபுராணத்தைப்** பாடுவதற்குச் சிதம்பரம் சென்று இறையருளை வேண்டுகின்றார். இறைவன் சேக்கிழார்தம் பக்குவம் உணர்ந்து, உலகெலாம் என அடியெடுத்துக் கொடுக்கின்றார்.

> **உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்**
> **நிலவு உலாவிய நீர்மலி வேணியன்**
> **அலகுஇல் சோதியன் அம்பலத்து ஆடுவான்**
> **மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்** (பெரியபுராணம் : பா : 1)

என முதற்பாடலைப் பாடுகின்றார். இப்பன்னிரண்டாம் திருமுறையின் இறுதிப்பாடலாகப் பின்வருமாறு முடிக்கின்றார்.

> **என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்**
> **ஒன்று காதலித்து உள்ளமும் மூங்கிட**
> **மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்**
> **நின்றது எங்கும் நிலவி உலகெலாம்** (பெரியபுராணம் : பா : 4286)

**'உலகெலாம்'** என்றெழுந்து **'உலகெலாம்'** என்று நிறைவுறும் **பெரியபுராணம்** எல்லா உலகுக்கும் உரியது என்பதைக் காட்டும் குறிப்பாகும். **பெரியபுராணத்தின்** உள்ளுறை, உள்ளங்கை நெல்லிக்கனி போலப் புலப்படுத்துகிறது.

அறுபத்து மூன்று நாயன்மார்கள் ஞானம், யோகம், சரியை, கிரியைகளை அனுட்டித்தவர்கள் என்பது தோன்றவும்,

| | | |
|---|---|---|
| உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு | - | ஞானதரிசனத்தையும் |
| அலகில் சோதியன் | - | யோக தரிசனத்தையும் |
| அம்பலத்தாடுவான் | - | கிரியா பூசனையும் |
| மலர் சிலம்படி வாழ்த்தி | - | சரியைத் தொண்டையும் |

வணங்குவாம் என விளக்க முற்பட்டனர். அமிழ்தினும் இனிய தமிழ்க்கல்வி நிரம்பப் பெற்ற புலவர்கள் இயற்றிய காப்பியங்களின் காப்புச் செய்யுள்களின் முதற்கண் மங்கல மொழியாகத் தொடங்குவர்.

அவ்வகையில், முதற்கண் உலகு என்னும் மங்கலமொழியில் தொடங்கி உலகு என்னும் மங்கல மொழியில் நிறைவு பெறுவது இங்கு நோக்கத்தக்கது. இத்திருமுறைப் பாடல்கள் வாழ்க்கைக் குறிக்கோளாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் பெறுதற்குப் பெருந்துணையாய் இருக்கின்றன.

## கருணை உள்ளம்

பாரதம் கண்ட இயக்கங்களில் முதன்மை பெறும் சிறப்புடையது பக்தி இயக்கமாகும். இது தென்பாரதத்தில் தமிழ் மொழியில் மலர்ந்தது என்பது நம் அனைவருக்கும் பெருமை சேர்ப்பதாகும். ஒவ்வொரு உயிரிலும் கலந்து நின்ற ஆன்மாவைக் காதலித்து அதைப் போற்றி மதித்த இயக்கமாகவே அது அமைந்தது. ஆன்மாவை மதித்ததால் ஆன்மா தங்கிய உடம்பையும் மதித்துப் போற்றினர். ஆன்மாவின் உடலில் இறைவன் தங்குகிறான் என்ற நம்பிக்கையை ஊட்டி, உடலை இகழாது அதைக் கொண்டு செய்யும் பக்தியை வரவேற்றது. **'வாய்த்தது நற்றமக்கோர் பிறவி மதித்திடுமின்'** என்ற அடிப்படையிலும் **'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்'** என்ற நிலையிலும்

> உடம்பை முன்னம் இழுக்கென்றிருந்தேன் ;
> உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன் ;
> உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன் ; உடம்பை
> யானறிந்து ஓம்புகின்றேன்

என்ற கருத்திலும் இவ்வுடம்பைக் காதலிக்க வைத்தது இவ்வியக்கம். அத்துடன் ஆணும், பெண்ணும் இணைந்து வாழும் இயற்கை வாழ்க்கை முறையைக் காதலித்துப் போற்றியது. இது ஈனப்பிறவி ; இவ்வுடம்பே பாவச்சுமை ; வினையை அனுபவித்தே தீர வேண்டும் என்றெல்லாம் வாழ்க்கை வெறுப்பை ஊட்டிய பிற சமயங்களுக்கிடையில் **'வாழ்க்கை வாழ்வதற்கே'** எனப் பச்சைக் கொடியுடன் புதிய காவிய இயக்கமாகப் பக்தி இயக்கம் நடை பயின்றது. பக்தி செய்வதற்கு ஆரவாரங்கள் தேவையில்லை. சடங்கு, சம்பிரதாயம் தேவையில்லை. இனமொழி, குலம், கோத்திர உயர்வு தேவையில்லை. எல்லா மொழியினரும், எல்லா நாட்டினரும், எல்லாத் தொழிலினரும் எல்லா இனத்தவரும் வேறுபாடின்றிப் பக்தி செய்யலாம் என்பதைத் திருஞானசம்பந்தர் தெளிவுபடக் காட்டியுள்ள பாங்கு குறிப்பிடத்தக்கது.

திருஞானசம்பந்தர் மொழிவழி, தொண்டுவழி இறைவனை உணரமுடியும்; அடையமுடியும் என்பதை நிலைநாட்டியவர். தலயாத்திரைவழி மனித நேயத்தை வளர்க்க முடியும் ; அதன்வழி

ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்க முடியும் என உறுதியாக நம்பினார். பாரதப் பண்பாடு என்பது பக்தி, தொண்டு, யாத்திரை, மனிதநேயம், வாழ்க்கைப் பிடிப்பு இயற்கையான வாழ்க்கைமுறை எனப் பன்முகப் பாங்குடன் ஒளிர்வதாகும்.

பண்டைத் தமிழகத்தில் சாதி வேற்றுமை இல்லை. நடுவில் வந்து புகுந்த சாதிக் கொடுமையால் பல தீமைகள் தலைவிரித்தாடின. மக்களிடையே சமுதாய ஒற்றுமை பெருமளவு குறைந்தது. இத்தகைய சீர்கேடுகளை ஏற்படுத்தும் சாதி வேற்றுமை கூடாதென்பதைச் சொல்லளவில் அன்றிச் செயலளவில் நடைமுறைப்படுத்திச் சாதி பேதமற்ற சமரசச் சிந்தனைகளுக்கு மக்களிடையே வித்திட்டவர் திருஞானசம்பந்தராவார்.

திருஞானசம்பந்தர் கவுணியர் குலத்தில் ஆதி சைவ மரபில் தோன்றியவர். ஆயினும் உயர்ந்தது தாழ்ந்தது என்பது பிறவியில் கிடையாது என்று அனைவரும் உணரும்படி வாழ்ந்தவர். எருக்கத்தம்புலியூரில் தாழ்ந்த குலத்தில் தோன்றிய திருநீலகண்டத்துப் பெரும்பாணர் பதினான்கு தந்திகள் உள்ள பாலையாழில் இணையற்ற பயிற்சி பெற்றவராய் விளங்கியவராயும், **'இசையினாற் பெறும்பயன் இறைவர் சீர் வழுத்துவதாம்'** என உணர்ந்தவராயும் வாழ்ந்து வந்தார். இவர் மனைவி மதங்கசூளாமணியாரும் இசைப்பாட்டில் வல்லவர். இவர்கள் திருஞானசம்பந்தரைப் பற்றிக் கேள்வியுற்று அவர் பாடல்களை யாழில் இட்டுச் சேவித்துப் பிரியாது இருக்க வேண்டும் என்று நினைத்து வேண்டியதற்கிணங்கத் திருஞானசம்பந்தர் எதிர்கொண்டழைத்து அருளினார். அற்றை நாள் முதல் தொடர்ந்து எஞ்சிய பதின்மூன்று ஆண்டுகளும் சம்பந்தர் செல்லுமிடமெல்லாம் இவர்கள் சென்று வாசித்தனர்.

தீண்டாமை என்பது மக்களைக் குறைத்துச் சிறுமை செய்யும் ஒரு வழக்கம்தான். பாணர் ஒருநாள் திருஞானசம்பந்தரைப் பணிந்து தில்லைப்பெருமானைத் திருக்கோயிலினுள் சென்று அணுக்கமாக நின்று வழிபட விரும்புவதைத் தெரிவிக்கின்றார். அவருடைய சிவபக்தியை அறிந்த திருஞானசம்பந்தர் தில்லைக்குச் சென்று திருக்கோயிலுள் பாணரையும் அழைத்துச் சென்று ஆராக்காதலுடன் போற்றிப்பாடி மகிழ்ந்தார். அக்காலத்தில் திருக்கோயிலினுள் புகுந்து இறைவனை வழிபட உரிமை இல்லாத தாழ்த்தப்பட்ட வகுப்பினராகிய பாணரை அந்தணர் குலத்தில் தோன்றிய திருஞானசம்பந்தர் அழைத்துச் சென்ற அருமைச்செயல் மிகப் பெரிய சமுதாயப் புரட்சியாகும். திருக்கோயிலுள் புகுந்து வழிபடுவதற்குப் போலிச் சாதி வேற்றுமை கூடாது.

தகுதியுடையவர் அதாவது அன்புடையார்; நம்பிக்கை உடையார் அனைவரும் கோயிலுள் சென்று இறைவனை வழிபட உரிமை உடையவர்கள் என்பதை இந்நிகழ்வு மூலம் திருஞானசம்பந்தர் உணர்த்துகின்றார்.

## சமுதாயப்புரட்சி

சாதி வெறி கொண்ட காலக் கட்டத்தில் தாழ்த்தப்பட்ட குலத்தில் பிறந்த பாணரைக் கவுணியர் குலத்தில் பிறந்த திருஞானசம்பந்தர்; 'ஐயரே' என்று அழைத்தல் குறிப்பிடத்தக்கது. அவ்வாறு அழைத்துச் சென்று வழிபடச் செய்ததும், தம் இல்லத்தில் அவர்கள் தம்பதியராதலால் தனி உறையுள் ஏற்படுத்தித் தங்கச் செய்ததும், அவர் ஒரு முதற் புரட்சிக்காரர்; சமுதாயச் சீர்திருத்தவாதி என்றவாறு உய்த்துணரலாம்.

திருஞானசம்பந்தரைத் திருநீலநக்கர் அழைத்தேக உடன் அடியவர்களோடு அவர் மாளிகையில் தங்கினார். திருநீலநக்கர் திருஞானசம்பந்தர் வேண்டிக் கொண்டபடி பாணர் மரபிரான திருநீலகண்டத்து யாழ்ப்பாணருக்கும் அவர் துணைவியார் மதங்கசூளாமணியாருக்கும் தம் இல்லத்தில் இருந்த யாகசாலையிலேயே தங்குவதற்கு இடம் அமைத்துக் கொடுத்திருக்கின்றார். அந்தணர் இல்லங்களில் மிகவும் புனிதமாகப் போற்றப்படுவது யாகசாலை; பாணர் தம்பதியருக்கு அங்கே இடம் அமைத்துக் கொடுத்த நீலநக்கரும் அவரை வழிநடத்திய திருஞானசம்பந்தரும் நிகழ்த்திய புரட்சிகரமான இவ்வருஞ் செயலுக்குப் பின்புலமாக இருப்பது சிவன்பால் அன்பு மற்றும் அவனடியார்கள்பால் கொண்ட நேயமுமாகும். அவர் அன்பால் அமைத்த விருந்தினை அன்பர்களுடனிருந்து உண்டு மகிழ்ந்தார். இவ்வன்பு விருந்தில் அடியவர்கள் அனைவருடனுமிருந்து உண்டார் என்று சேக்கிழார் பாடுதலால் சாதி வெறிதான் சமய ஒழுக்கம் என்றிருந்த அக்காலத்தில் திருஞானசம்பந்தர் செய்த சமபந்தி போசனம் அவர் சமுதாயப் புரட்சியாளர் என்பதைப் புலப்படுத்துகின்றது. இறைவன்பால் உண்மையான அன்பு கொண்ட அடியார், சாதி, பதவி, பணம் முதலியவற்றிற்கு முக்கியத்துவம் கொடார். நீலநக்கர் (அந்தணர்) மாளிகையில் திருஞானசம்பந்தருடன் அன்றிரவு பாணரும் தங்கிக் கொண்ட செய்திகளைச் சேக்கிழார் பெருமான்,

> **நீடுதிரு நீலநக்கர் நெடுமனையில்**
> **விருந்து அமுது செய்து நீர்மைப்**
> **பாடும் யாழ்ப் பெரும்பாண ரும் தங்க**
> **அங்கு இரவு பள்ளி மேவி** (பெரியபுராணம் : பா. 2366)

என்று சுட்டுகின்றார். இந்நிகழ்ச்சியால் சாதிக் கொடுமை பாராட்டுவதில் தலைநிற்கும் அந்தணர் குலத்திலே இச்சீர்திருத்தப் புரட்சியைச் செய்துகாட்டிய திருஞானசம்பந்தரின் திருவுள்ள மேன்மையை உணர முடிகின்றது. சிவனடியார்கள் யாவரிடமும் அன்பு கொண்டு சாதிசமயம் பார்க்காது அன்புடன் செயல்படவேண்டும் என்பதனை இந்நிகழ்ச்சியின் மூலம் உய்த்துணரலாம்.

திருஞானசம்பந்தரின் காலமான பக்தி இயக்கக் காலத்தில் அவரைப் போன்ற சமயத் தலைவர்கள், சமயங்கள் உணர்த்திய நன்னெறிகளைச் சமுதாய மக்களிடம் கொண்டு சேர்த்தனர். உலகிலுள்ள சராசரங்கள் எல்லாம் ஆண்டவனின் படைப்பாகும். பொதுவாகக் கடவுள் அன்பு என்பது அவன் படைத்த உயிர்களிடத்தில் கொள்ளும் அன்புதான். திருஞானசம்பந்தருடைய பாடல்கள் உணர்த்தும் நெறி இவ்வன்பு நெறிதான்.

வருந்தி வைபவர்கள் (என்னால்) ஆசிர்வதிக்கப்பட்டவர்கள். ஏனென்றால் அவர்களுக்கு ஆறுதல் அளிக்க வேண்டும் என்று ஏசுபெருமான் கூறுகின்றர். இறைவன் வாழும் இடம் எது? என்று கேட்டால் அவன், நோவுளார் வாய் உளன் (1:61:6) என்று திருஞானசம்பந்தர் உறுதியாகச் சொல்கிறார். பிறர் நோவதைக் கண்டு திருஞானசம்பந்தர் வருந்துகின்றார். **வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன் என்றும், ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்பு செய்தல் வேண்டும்** போன்ற வள்ளல் பெருந்தகையாரின் வரிகள் இவண் நோக்கத்தக்கன.

## அப்பர் பெருமானின் சமய நெறி

சமயங்கள் பலவாயினும் ஒருவனே தேவன் என்ற சமரச சன்மார்க்க நெறிநின்று வாழ்ந்த பெருமைக்குரியவர் அப்பர் பெருமான். அவர்,

> **விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்து**
> **எரிவினால் சொன்னரேனும் எம்பிராற் கேற்றதாமே** (4 : 60: 9)
>
> **யாதோர் தேவர் எனப்படுவார்க் கெல்லாம்**
> **மாதேவ னல்லால் தேவர் மற்றிலையே**
>
> **வெவ்வேறாய் இருமூன்று சமயமாகிப் புக்கானை**
> **எப்பொருட்கும் பொதுவானை .......**
>
> **ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே**
> **அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்** (6 : 18 : 11)

எனவும், பாடியருள்கின்றார். அன்பு, கடமை ஒழுக்கம் இவற்றை அடிப்படையாகக் கொண்டே உலகச் சமயங்கள் அனைத்தும் தோன்றின. **"சமயம் தீமையை நீக்கி, நன்மைக்கு வழி காட்டுவதாகும்"**. இதனை ஔவையாரும், தீதொழிய நன்மை செயல் என்று கூறுகிறார். இவ்வடிப்படை உண்மையே மனித வாழ்வின் பண்பாட்டைச் சமயம் எவ்வாறு மேற்கொண்டுள்ளது என்பதைக் காட்டுகின்றது. தொல்காப்பியரும் வழிபாட்டுமுறை பற்றி, தமது செய்யுளியலில்,

**வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்**
**பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து**
**பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே** (தொல். செய். நூ: 104)

எனத் தெய்வத்தை வழிபடுபவர்கள் பழிக்கு அஞ்சுவர், கொடுஞ்செயலாற்ற மாட்டார்கள். அவர் பெற்ற செல்வம் பழி தீர்த்த செல்வமாகும். அவர் தம் குடும்பம் வாழையடி வாழையாய்ச் சிறக்கும் என்னும் இவ்வுண்மையையே தொல்காப்பியர் புறநிலை வாழ்த்து என்ற துறையுள் விளக்கியுள்ளார்.

மாணிக்கவாசகரும் சமயம் ஒன்று என்பதனையும், இறைவன் ஒருவனே என்பதையும்,

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

(மாணிக்கவாசகர், திருவாசகம், வரிகள்: 164-165)

என்ற வரிகளால் எல்லா நாட்டவர்க்கும் இறைவன் ஒருவனே எனக் குறிப்பிட்டுள்ளார். அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை என்று வள்ளலாரும்,

**அருட்பெருகு தனிக்கடலும் உலகுக் கெல்லாம்**
**அன்பு செறிகடலும் ....** (பெ.பு.பா.185)

என்று சேக்கிழார் பெருமானும், அருளும் அன்பும் கலந்ததே சமயம்; 'இவற்றை மனிதன் பெறுவதே, வாழ்வில் நலம் நிறைந்த பண்பாடு' என்ற உண்மையை உலக அறநெறியாளர்கள் அனைவரும் காட்டுகின்றனர். அன்பின் வழியது உயிர்நிலை என வள்ளுவப் பெருந்தகையும் காட்டிய மக்கட் பண்பாடே சமய நெறியிலும் சிவவழிபாட்டிலும் உள்ளது. இதையே,

**அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்**

**அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந் திருந்தாரே** (திருமந்திரம், பா : 270)

என்று திருமூலர் தம் திருமந்திரப் பாடலில் இறைவன் ஒருவன், அவர் அன்பு நிறைந்தவர் என்ற கருத்தை நிலைநிறுத்தி, இவ்வுலகம் அன்பெனும் பிடியுள் அகப்பட்டது என்பதனையும் உணர்த்துகின்றார்.

## சமய உணர்வு

அன்பையும், அருளையும் எல்லா உயிர்களிடத்தும் செலுத்துவதே சமயம் ஆகும். அவ்வாறு அன்பு செலுத்துவதற்கு இறைவன் உதவுகின்றான். சமயம் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் பண்பையும், ஒப்புரவினையும், ஒற்றுமையையும், சமத்துவத்தையும் ஏற்படுத்தும் தன்மை உடையது. எல்லாவற்றிற்கும் மேலான இறை இன்பத்தினை இவ்வுலக வாழ்விலேயே பெறமுடியும் என்பதை விளக்குவதே சமயம். இதுவே உலகில் பல பெயர்களில் தோன்றி வளர்ந்து வந்துள்ளது. தமிழர் அன்பு நெறியே சமய நெறி எனக்கொள்ளலாயினர். கிறித்தவரும் **'உன்னைப் போலப் பிறரை நேசி'** என்கின்றனர்.

சாதி, இனம், மொழி, நிறம், மதம், பழக்க வழக்கங்கள், பூசனைகள், வழிபாடுகள் வேறுபடலாம். சமயங்களும் வேறு வேறாகலாம். ஆனால் சமயத்தின் கொள்கை மட்டும் மாறுவதே இல்லை. இதனைச் சங்கப்புலவன் கணியன் பூங்குன்றனாரின், யாதும் ஊரே யாவரும் கேளிர் (புறம்) என்ற பாடல் வரிகளால் அறியமுடிகின்றது. இதைவிட ஒருபடி மேலாகக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்,

**எல்லாரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம்**
**எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர் விலை**
**எல்லாரும் இந்நாட்டு மன்னர்**

(பாரதியார், பாரதியார் கவிதைகள், ப.190)

எனச் சுட்டுகின்றார்.

> சமைக்கப்பட்டது சமயம், மாக்கள் தன்மையிலிருந்து விடுதலை பெற்று மக்கள் தன்மை பெறும் வழியாகச் செய்யப்பட்டது; அல்லது மனிதனைப் பண்பாடுடையவனாக ஆக்குவது சமயம். அது வெறும், குறிகளும் அடையாளங்களும் அன்று. பிறருக்குப் பயன்படுவனவாய் வாழ முற்படுவதே சமய வாழ்க்கையாகும். பல்வேறு சமயங்கள் தோன்ற வேண்டிய இன்றியமைமை,

> அக்காலத்துக்கு ஏற்பவும், இடத்துக்கு ஏற்பவும் தோன்றலாயின

என அ.ச.ஞானசம்பந்தன் 'தமிழும் சமயமும்' என்ற தம் நூலுள் குறிப்பிட்டுள்ளார்.

இன்றைய வழக்கில் சமயம் பார்த்துச் செய், நல்ல சமயமா என்ற தொடர்கள், நல்ல நேரத்தில் நல்ல தொண்டைச் செய்யவேண்டும் என வலியுறுத்துகின்றன. மறைமலையடிகளும் சமயம் என்னும் சொல்லால் பொழுது அல்லது காலம் என்னும் பொருள் பெறப்படுகின்றது என்று விளக்கம் தருகின்றார். இதனால் ஒரே சிந்தனையில் மனதைக் கட்டுப் படுத்தி நல்ல தொண்டுகளைச் செய்ய முயல்வதைச் சமயம் என உணர முடிகின்றது.

பாரதப் பண்பாடு என்பது பக்தி, தொண்டு, யாத்திரை, மனிதநேயம், வாழ்க்கைப் பிடிப்பு, இயற்கையான வாழ்க்கை முறை எனப் பன்முகப் பாங்குடன் ஒளிர்வதாகும். பண்டைத் தமிழகத்தில் சாதி வேற்றுமை இல்லை. சாதி என்ற சொல் கூட இல்லை. அது இடையிலே புகுந்தது. அச்சாதிக் கொடுமையால் பல தீமைகள் தோன்றின. மக்களிடையே சமுதாய ஒற்றுமை பெருமளவு குறைந்தது. இத்தகைய குலைவுகளை ஏற்படுத்தும் சாதியை, சாதி வேற்றுமைகள் கூடாதென்பதைச் சொல்லளவில் மட்டுமின்றிச் செயலளவில் நடைமுறைப் படுத்திச் சாதி பேதமற்ற சமரசச் சிந்தனைகளை மக்களிடையே வித்திட்டவர் திருநாவுக்கரசர்.

## திருஞானசம்பந்தர் முயலகன் நோய் தீர்த்தல்

திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் நகரில் கொல்லிமழவன் என்னும் குறுநில மன்னனின் செல்வி 'முயலகன்' என்னும் கொடுநோயால் பற்றப்பட்டாள். மருத்துவம் பல செய்தும் அந்நோய் தீராமையால் பெரிதும் வருந்திய மன்னன் திருப்பாச்சில் திருக்கோயில் சிவபிரான் முன் தன் மகளைக் கிடத்தி நின்று இறைவனை வேண்டியவாறு இருந்தான். அப்போது திருஞானசம்பந்தர் அங்கு வந்தார். அவரை அழைத்துக் கொண்டு அரசன் கோயிலையடைந்தான்.

திருக்கோயிலை வலம் வந்து கோயிலுக்குள் நுழைந்து அங்கே உணர்வின்றிக் கிடக்கும் அந்த இளமகளைக் காண்கின்றார். அருள் நிறைந்த நெஞ்சினராகச் சம்பந்தர் திருப்பாச்சிப் பெருமான் அடிகளைப் பணிந்து,

> **துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்**
> **சுடர்ச்சடை சுற்றி முடித்துப்**

**பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ**
**வாரிடமும் பலிதேவர்**
**அணிவளர் கோலமெலாஞ் செய்து பாச்சில்**
**ஆச்சிராமத் துறைகின்ற**
**மணிவளர் கண்டரோ மங்கையைவாட**
**மயல் செய்வதோ இவர் மாண்பே** (1 : 44 : 1)

என்று பாடுகின்றார். திருஞானசம்பந்தர் இந்நோய் நீங்குக என்று ஆணையிடலாம். ஆனால் சம்பந்தர் அங்கிருந்த அடியவர்களை நோக்கி, இம்மங்கையை இடர் செய்வதோ இவர் மாண்பு என்று கேட்கின்றார். இப்படி கேட்பதன் கருத்து மாண்புடைய நம்பிரான் இப்படி வாடவிடார் என்பதாம். இவ்வாறு வேண்டியதும் அப்பெண்ணின் நோய் நீங்கப்பெற்று எழுகின்றாள்.

## திருஞானசம்பந்தர் தீவினை தீர்த்தல்

திருஞானசம்பந்தர் திருச்செங்கோடு என்னும் கொடிமாடச் செங்குன்றூருக்கு வருகின்றார். அங்குக் கடும்பனியால் மக்கள் வருந்தினர். மக்களின் துயரைக் கண்ட திருஞானசம்பந்தர் ஆலகாலப் பெரு நஞ்சைக்கண்டத்தில் அடக்கித் தேவர்களைக் காத்தான் அத்தகைய திருநீலகண்டன் நம்மைத் தீயபனி பற்றாமல் பாதுகாப்பான் என்றவாறு,

**அவ்வினைக் கிவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர்**
**உய்வினை நாடாதிருப்பது உந்தமக்கு ஊனமன்றே**
**கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்**
**செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம்**
(1 : 116 : 1)

என்று பாடியருளி மக்களைப் பனிநோயிலிருந்து காப்பாற்றினார். இறைவனின் அருட்கருணையால் அடியார் கூட்டம் கொடிய கடுஞ் சுரத்திலிருந்து மீள்கின்றது.

## திருஞானசம்பந்தர் இடர்களைதல்

சான்றோர் தம் பொருட்டு யாதும் இறைவனிடம் வேண்டார். தன்னலம் கருதாத பொதுநல நோக்குடைய சான்றோர் எப்போதும் பிறர் நலன்கருதியே இருப்பர் என்பதற்குச் சம்பந்தர் தக்க சான்று. செய்யும் செயல் எதுவாக இருப்பினும் அதனுடைய பயனை உயிர்கள் அனுபவிக்க வேண்டும். அதுவும் நற்பயனாக நிறைவுறும்போது அடைகின்ற பேரின்பத்திற்கு அளவில்லை. அந்த இன்பமெனும்

இடத்தை அடைவதற்கு முன்னர் இடையில் சந்திக்கும் தடைகளும் துன்பங்களும் எண்ணிறந்தவை. அவற்றை எதிர்கொள்வதற்கு மனஉறுதியும், அவற்றைக் களைவதற்கு இறையருளும் தேவையாகின்றன. **'என் செயல் என்பது யாதொன்றுமில்லை தெய்வமே இனி நின்செயல் என்று உணரப்பெற்றேன்'** என்னும் திருவாக்கில் மிகுந்த பற்றுக் கொண்ட அடியார்கள் தமக்கு வரும் தடைகளையும் துன்பங்களையும் நினைத்துக் கலங்க மாட்டார்கள். அத்தகு துன்பங்களை இறைவனிடம் ஒப்படைத்து விட்டுக் கலக்கமின்றி வழிபட்டு நிற்பர். அவ்வகையில் அமைந்தது சம்பந்தரின் இடர் களையும் பதிகம். மெய்யடியார் படும் துன்பங்களை நீக்கி அருளுமாறு திருநெடுங்களத்துப் பெருமானைத் திருஞானசம்பந்தர் பாடுகின்றார்.

**மறையுடையாய்த் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்**
**பிறையுடையாய் பிஞ்ஞகனே என்றுனைப் பேசினல்லால்**
**குறையுடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த**
**நிறையுடையார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே**
(1 : 52 : 1)

எனத் தொடங்கி ஒவ்வொரு பாடல் ஈற்றடியிலும் நிறையுடையார், நினைத்து எழுவார், நின்னடியார், நீறுகொண்டார், இடர் களையாய் நெடுங்கள மேயவனே என்று பாடி வேண்டுகின்றார்.

## திருஞானசம்பந்தர் பசி தீர்த்தல்

திருஞானசம்பந்தரின் பேருள்ளம் அன்புநெறி கொண்டு அருள வல்லது; எனவே பிறர் நலம் கோரி இறைவனை இறைஞ்சிப் பாடுகின்றார். திருஞானசம்பந்தர் ஏழாம் நூற்றாண்டில் மடம் அமைத்து அன்னதானம் அளித்துச் சமுதாயத் தொண்டு செய்தவர். அவர் திருவீழிமிழலையில் தங்கி இறைவனை வழிபட்டார். அதுசமயம் கடுமையான பஞ்சம் ஏற்பட்டு அங்கு மக்கள் பசியின் கொடுமையால் வருந்தினார்கள். இது இயற்கையின் நியதி என்று சொல்லவில்லை. அந்நிலையில் அப்பரும் இங்கு வருகின்றார். இருவரும் மனம்நெகிழ இறைவரிடம் விண்ணப்பித்து இறையருளால் நித்தமும் ஒரு பொற்காசு பெற்றார்கள். இருவரும் கிழக்கிலும், மேற்கிலுமாக இருமடங்களை அமைத்தார்கள். இறைவன் அளித்த பொற்காசினைக் கொண்டு பஞ்சம் நீங்கும் வரை அத்தலத்திலேயே தங்கி மக்களுக்கு உணவளித்து வந்தார்கள்.

பசியோடு வரும் மக்களுக்கு உணவு கொடுத்தல் என்பது சிறப்பான தொண்டு விழுமியமாகும். பிறருக்குத் தொண்டு செய்தல் முதலிய

விழுமியங்களில் ஈடுபட்ட அடியார்கள் உணவிடுதல் தொண்டினையே பிரதானமாகச் செய்தனர். மணிமேகலையில் சாத்தனார்,

**குடிப்பிறப்பழிக்கும் விழுப்பம் கொல்லும் ......**
**பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்**
**பசிப்பிணி என்னும் பாவி**
**மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே**

என்று குறிப்பிடுகின்றார். உயிர்க்கு உணவளித்தல் என்பது உயர்வான தொண்டு. எனவேதான் சேக்கிழார் பெருமானும்.

**மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்**
**அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்**

(பெரியபுராணம்: பா.எ. 2085)

என்று காட்டுகின்றார். உணவிடும் தொண்டின் மகத்துவத்தை மணிமேகலையும், பெரியபுராணமும் உணர்த்துவது இவண் நோக்கத்தக்கதாகும்.

சிவனடியார்கட்கு மட்டும் உணவளிக்கவில்லை. மதம், மொழி, இனம், சாதி முதலிய வேறுபாடின்றி இரண்டு வேளையும் அனைத்து மக்களுக்கும் உணவளித்து வந்தனர் என்பது பெரியபுராணம் காட்டும் உண்மை.

**அல்லார் கண்டத்து அண்டர்பிரான் அருளால் பெற்ற**
**படிக்காசு பல்லாறியன்ற வளம் பெருகப் பரமன் அடியார்**
**ஆனார்கள் எல்லாம் எய்தி உண்க என இரண்டு பொழுதும்**
**பறைநிகழ்த்திச் சொல்லால் சாற்றிச் சோறிட்டார் துயர்கூர்**
**வறுமை தொலைத்திட்டார்**

(பெரியபுராணம் : பா : 1529)

திருஞானசம்பந்தர் தலயாத்திரை செய்வது மட்டும்தான் இறையருளைப் பெறும் வழி என்று எண்ணவில்லை. மக்கள் சேவை மகேசன் சேவை என எண்ணினார். நாள்தோறும் பறைசாற்றிப் பஞ்சம் நீங்கும் வரை திருவீழிமிழலையில் தங்கி இருவேளையும் மக்களுக்கு உணவளித்துச் சமுதாயத் தொண்டாற்றினார்.

## திருநாவுக்கரசர் பசிப்பிணி தீர்தல்

திருஞானசம்பந்தரோடு பல தலங்களுக்கும் சென்ற நாவுக்கரசர், திருவீழிமிழலையில் உயிர்களுக்குத் தண்ணளி செய்யும் மழைவளம் குன்றியதால், பஞ்சம் ஏற்பட்டது. இறையருளால் அதை நீக்கியருளினார். இவர்கள் அமுது செய்திருந்த செய்தியினை,

அல்லார் கண்டத்தண்டர் பிரான் அருளால் பெற்ற படிக்காசு
பல்லா ரியன்றவளம் பெருகப் பரமன் அடிய ரானார்கள்
எல்லாம் எய்தி உண்க என இரண்டு பொழுதும் பறை
நிகழ்த்திச் சொல்லால் சாற்றிச் சோறிட்டர்; துயர்கூர் வறுமை
தொலைத்திட்டார் (அரு.இலக்குவன், பக் : 35-36)

என்று அடியார்க்கு உணவளித்துப் பசிப்பிணி நீக்கினார். சங்ககாலத்திலிருந்தே பசிப்பணி தீர்த்தலாகிய அறம் அக்கால மக்களிடையே விருந்தோம்பலாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த தன்மை அறியலாகின்றது. இதனை,

வாழி ஆதன் வாழி அவினி
பசியில் லாகுக பிணிசேண் நீங்குக
எனவேட்டோளே யாயே (ஐங்குறுநூறு, பா : 5)

என ஐங்குறுநூற்றுப் பாடலும் குறிப்பிடுகின்றது. நாட்டிலுள்ள அனைத்து உயிர்களும் வயிறார உண்டு இன்புற வேண்டும் என்றும், உயிர்களைப் பிடித்துத் துன்புறுத்தும் நோய்கள் விலகிச் சேய்மையில் நீங்கவேண்டும் என்றும் தலைவி விரும்புவதாக இப்பாடல் உணர்த்துகின்றது.

## படிக்காசு பெறுதல்

ஞானசம்பந்தருடன் தலயாத்திரை மேற்கொண்ட நாவரசர், குங்கிலியக் கலிய நாயனாரால் உபசரிக்கப்பட்டு, அவருடைய திருமடத்திலே அமுது செய்தருளி, பின் திருவீழிமிழலையை அடைந்தனர். அங்குள்ள பெருமக்கள் அனைவரும் அடியார்களை எதிர்கொண்டு வரவேற்று உபசரித்தனர். அச்சமயத்தில் அங்கு மழையின்மையாலும், காவிரியில் நீர்ப்பெருக்கில்லாமையாலும் பஞ்சம் ஏற்பட்டு உயிர்கள் வருந்தின. ஞானச் செல்வர்கள் இருவரின் கனவிலும் சிவபெருமான் தோன்றி, "நீங்கள் காலவேறுபாட்டினால் மனத்தில் வாட்டமடைய மாட்டீர்கள், எனினும் உங்களைச் சார்ந்து வழிபடும் இயல்புடைய தொண்டர்களுக்கு உணவளிக்கும் பொருட்டு நாம் உங்களுக்குப் படிக்காசு தருகின்றோம்" என்று கூறி விண்ணிழி விமானத்தின் மேற்குப் பீடத்திலும், கிழக்குப் பீடத்திலும் அவ்விருவருக்கும் நாள்தோறும் படிக்காசு வைத்தருளினார். அப்பெருமக்கள் இருவரும் இறைவனளித்த படிக்காசினைக் கொண்டு பண்டங்களை வாங்கித் திருவமுது சமைப்பித்துச் சிவனடியார்க ளெல்லாம் எய்தியுண்க என இரண்டு பொழுதும் பறைசாற்றினர்.

அடியார்களுக்கு அமுதுசெய்வித்துப் பசித்துன்பத்தை மாற்றியருளினார்கள்.

திருநாவுக்கரசர் சிவபெருமானுக்குக் கைத்திருத் தொண்டு புரியும் அடியவராதலால் அவர் பெறும் காசு வாட்டமின்றி வணிகர்களால் ஏற்றுக் கொள்ளப் பெற்றது. அதனால் அவருடைய திருமடத்தில் நாள்தோறும் உரிய காலத்தில் அடியார்கள் திருவமுது செய்தார்கள். ஞானசம்பந்தர் இறைவனுக்குத் திருமகனாராதலால் அவர் பெறும் காசு வணிகர்கள்பால் வட்டங்கொடுத்து மாற்ற வேண்டியிருந்தது. அதுகொண்டு உணவுப் பொருட்களை வாங்கக் காலந்தாழ்ந்தமையால் அவரது மடத்தில் அடியார்கள் காலந்தாழ்த்தித் திருவமுது செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனையுணர்ந்த பிள்ளையார் பெருமானை இறைஞ்சி **'வாசிதீரவே காசு நல்குவீர்'** என வேண்டி வாசியில்லாக் காசு பெற்று அடியவர்களுக்கு உரிய காலத்தில் அமுது செய்வித்தருளினார். மனம், மொழி, மெய் மூன்று திறத்தாலும் இறைவனைப் போற்றி, கைத்திருத் தொண்டு செய்த பெருமையினால் வாசியில்லாக் காசு பெற்றார் நாவரசர். அதைக் கொண்டு அனைவரது பசியையும் உரிய காலத்தில் போக்கி அற்புதம் செய்வித்தருளினார்.

## திருஞானசம்பந்தர் விடம் நீக்குதல்

திருஞானசம்பந்தர் திருமருகல் வருகின்றார். அங்கு ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்கிறது. ஒரு செட்டிப் பெண்ணும், அவளின் முறை மாப்பிள்ளையும் திருமணம் செய்து கொள்ள எண்ணி வந்தனர். திருமருகல் அருகில் உள்ள மண்டபத்தில் தூங்கிய பொழுது அரவம் தீண்டி, அம்மணமகன் இறந்து விடுகின்றான். அவனைத் தொட்டுக் கூட அழமுடியாத நிலையில் அப்பெண் மருகல் பெருமானே! அபயம் என்று அரற்றுகின்றாள். அதனைக் கேட்ட திருஞானசம்பந்தர்,

**சடையாய் எனுமால் சரண்நீ எனுமால்**
**விடையாய் எனுமால் வெருவா விழுமால்**
**மடையார் குவளை மலரும் மருகல்**
**உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே** (2 : 18 : 1)

என்று தொடங்கிப் பெருமான் கழல் வாழ்க என், எழுவாள் ; நினைவாள் ; இரவும் பகலும் தொழுவாள் ; இவளைத் துயராக்கினையே என்று பாடியருளுகின்றார். உடனே விடம் நீங்கப்பெற்றுத் திருஞானசம்பந்தர் தாள்பணிகின்றனர். அவர்களுக்குத் திருமணமும் செய்து வைக்கின்றார்.

## திருநாவுக்கரசர் விடம் நீக்குதல்

திருநாவுக்கரசர் சென்றடைந்த திங்களூரில், அப்பூதியடிகள் என்னும் அந்தணர் தலைவர் திருநாவுக்கரசு என்ற நாமத்திலேயே

பேரன்பு மிக்கவராய், அதனைத் தமக்கு வீடு நல்கும் பெருமந்திரமாகக் கொண்டு, தமது நற்பொருள் யாவற்றிற்கும், தம் புதல்வர்க்கும் அப்பெருநாமத்தினையே அமைத்து, தாம் இயற்றிய அறச்சாலை, குளம், கிணறு, தண்ணீர்ப் பந்தல் முதலியவற்றிற்கும் அத்திருநாமத்தினை அமைத்த புண்ணியசீலர் அப்பூதி அடிகள். இவரைச் சேக்கிழார் பெருமான், அந்தணரில் மேம்பட்ட அப்பூதியடிகள் எனப் போற்றுகின்றார்.

திருநாவுக்கரசரின் வரலாற்றைக் கேட்ட மாத்திரத்திலேயே, அவரைக் காணும் முன்பே, அவர்பால் அளவற்ற காதல் கொண்டார். அந்தணருள் சைவநெறி நிற்கக் கருதுவார்க்கு அவரே பின்பற்றுதற்குரியவர். நாவரசர் அவர் அமைத்த தண்ணீர்ப் பந்தலிற் நின்று, பார்க்குமிடமெல்லாம் தம் திருப்பெயரே எழுதியிருப்பதைக் கண்டார். அவரது திருமனையும் அண்மையில் இருப்பதென்பதையும் கேட்டு, அவ்வந்தணர் தலைவரின் திருவாயிலில் வந்து நின்றார். அப்பூதியடிகள் அவரை வணங்கி, 'நீவிர் இம்மனையில் வருவதற்கு நான் என்ன தவம் செய்தேன்?' என்றார். அதற்கு விடையாக நாவரசர், "திருப்பழனத்துள் வீற்றிருக்கும் சிவபெருமானை வணங்கி வரும் வழியில் நீர் அமைத்த தண்ணீர்ப் பந்தல், மற்றும் பிற அறங்களைக் கேட்டும் இவண் வந்தெய்தினோம். அத்தண்ணீர்ப் பந்தலிலே நுமது பெயர் எழுதாமல் வேறொருவர் பெயர் எழுத வேண்டிய காரணம் யாது?" என நாவரசர் வினவியதும், அப்பூதியடிகள் உளந்தடுமாறி வெகுண்டு,

> நீர் நன்று கூறவில்லை, அமணரும் அன்னோர் மன்னனும் செய்த சூழ்ச்சிகள் அத்தனையும் தமது திருத் தொண்டினாலே உறைப்பாலே வென்ற பெரியாரது திருப்பெயரோ உமக்கு வேறோர் பெயர். சிவபெருமானின் திருத்தொண்டினாலே இம்மையிலேயே உய்யலாம் என என் போன்றவரும் உறுதியாக உணரும்படி அருட்செயல் புரிந்த நாவுக்கரசரது திருப்பெயரை எழுதலாமோ என்ற வெம்மை மொழியை யான் கேட்க நீர் எவ்வாறு கூறினீர்? அவரை அறியாதார் யாருளர்? சிவவேடத்தினின்று இவ்வாறு கூறினீரே? நீர் எங்குள்ளவர்?

எனக் கேட்டர். அதற்கு அப்பர் பெருமான், "சூலையினால் ஆட்கொள்ளப்பட்டு உய்ந்த தெளிவுணர்வு இல்லாத சிறுமையேன் யான்?" என்றார். அதைக் கேட்டவுடன் அப்பூதியடிகள் தம் இருகரங்களையும் சென்னிமேற் குவித்துக் கண்களில் நீர் பெருகவும்,

உரை தடுமாறவும், உடல் மயிர்க்கூச்சங்கொள்ளவும் நிலத்தின் மேல் வீழ்ந்து நாவரசரது திருவடிக் கமலங்களில் சரண் புகுந்தார்.

அப்பர் பெருமானைத் தம் இல்லத்திற்கு வந்து திருவமுது செய்தருளுமாறு அப்பூதியடிகள் வேண்ட அதற்கு அப்பரும் இசைந்தருளினார். அப்பூதியாரின் மனைவி, தன் மகன் மூத்த திருநாவுக்கரசை அழைத்துத் திருவமுது செய்ய வாழையிலைக் குருத்து அரிந்து வருமாறு தோட்டத்திற்கு அனுப்பினார். தோட்டத்தினுள் நுழைந்த அச்சிறுவனை நச்சரவம் ஒன்று தீண்டியது. அதனைச் சிறிதும் பொருட்படுத்தாத மூத்த திருநாவுக்கரசு விரைந்து வந்து அன்னையிடம் வாழைக் குருத்தினைக் கொடுத்தான். உடனே நஞ்சு தலைக்கேறி மயங்கி உயிர் துறந்தான். ஐயகோ! தூயவர் திருவமுது செய்ய இடையூறு நேர்ந்ததே எனப் பெரிதும் மனம் கலங்கி, அப்பூதியடிகளும் அவர்தம் மனைவியாரும், தம் உள்ளத்துயர் மறைத்து மகனின் உடலை ஒளித்து வைத்து அடியாரை அணுகி எம்பெருமான் திருவமுது செய்யவேண்டும் என்றிறைஞ்சினர். அச்சமயம் நாவரசர் மனதில் தடுமாற்றம் ஏற்பட அவர் இறைவனருளால் நிகழ்ந்ததுணர்ந்தார்.

உடனே மகனது உடலைக் கொன்றை நறுஞ்சடையார் கோயிலுக்குக் கொணர்க என்றார். பெற்றவர்களும் அவ்வண்ணமே செய்தனர். நாவரசர்

ஒன்றுகொலா மவர் சிந்தை யுவர்வரை
ஒன்று கொலா முயரும் மதி சூடுவர்
ஒன்று கொலா மிடு செண்டலை கையது
ஒன்று கொலா மவர் ஊர்வது தானே (4 : 18 : 1)

என்ற விடந்தீர்த்த திருப்பதிகத்தைப் பாடியருளினார். நஞ்சுண்டகண்டரின் திருவருளால் சிறுவன் நஞ்சு நீங்கி எழுந்தான். பின் அப்பூதியாரின் வேண்டுகோளுக்கு இணங்கி அவர்தம் இல்லத்தில் திருவமுது செய்தருளினார்.

பிரிவுறுமாவி பெற்ற பிள்ளையைக் காண்பார் தொண்டி
னெறியினைப் போற்றி வாழ்ந்தார். நின்றவப் பயந்தார் தாங்கள்
அறிவரும் பெருமை யன்ப ரமுது செய் தருளு தற்குச்
சிறிதிடை யூறு செய்தா னிவனென்று சிந்தை நொந்தார்
(பெ.பு. அப்பூதியடிகள் புராணம், பா.37)

என்ற பாடல் பாடி, சில நாள்கள் அங்குத் தங்கியிருந்து, பின் திருப்பழனப்பதி சென்று, பெருமான் கழல் போற்றி அப்பூதி அடிகளைச் சிறப்பித்து,

**அஞ்சிப் போய்க்கலிமெலிய வழலோம்பு மப்பூதி**
**குஞ்சிப் பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே** ( 4 : 12 : 10)

என்ற தீந்தமிழின் தொடைமாலைத் திருப்பதிகச் சொன்மாலை பாடியருளினார்.

திருநாவுக்கரசரின் திருவடியே பெருஞ்செல்வமெனக் கொண்டு, அவரது திருப்பெயரால் தண்ணீர்ப் பந்தல் முதலிய நல்லறங்களைச் செய்து, ஆண்டரசர் பாடிய திருப்பதிகத்திலே இறைவனுக்கு உறவினராம் நிலையில், அப்பூதி என்னும் பெயரிடப் பெற்ற சால்பு மிக்க அந்தணர் திங்களூரில் வாழ்ந்தார் என்பதனை,

**தனமாவது திருநாவுக்கரசின் சரண மென்னா**
**மனமார் புனற்பந்தர் வாழ்த்திவைத் தாங்கவன் வண்டமிழ்க்கே**
**இனமாத் தனது பெயரிடப் பெற்றவன் எங்கள்பிரான்**
**அனமார் வயற் திங்களூரினில் வேதியன் அப்பூதியே**

(க.வெள்ளைவாரணனார், பன்னிரு திருமுறை வரலாறு, ப : 217)

எனத் **திருத்தொண்டர் திருவந்தாதியில்** நம்பியாண்டார் நம்பியும் போற்றியுள்ளமையைக் காணமுடிகின்றது.

திருநாவுக்கரசர் வழிபாடே அப்பூதியாருக்கு வீடுபேறு தருவதாயிற்று.

**உற்றா னலன்றவந் தீயினின் றானல னுன்புனலா**
**அற்றான் அலனுகர் வுந்திரு நாவுக்கரசெனுமோர்**
**சொற்றா னெழுதியுங் கூறிய மேயென்றுந் துன்பில்பதம்**
**பெற்றா னொருநம்பி யப்பூதி யென்னும் பெருந்தகையே**

(நால்வர் நால்மணிமாலை, பா. 38)

என நால்வர் நான்மணிமாலையும் அவர் பெற்ற பெரும் பேற்றைப் போற்றுகின்றது.

**உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு** (குறள் 79 : 8)

என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப, அப்பூதியாரின் மகனுக்கு ஏற்பட்ட துன்பத்தைக் கேட்டவுடனே விரைவில் எழுந்து புதல்வரை உயிர்ப்பித்தார். இவ்வற்புத நிகழ்ச்சி இறைவனின் திருவருட் பேற்றினாலேயே நாவரசருக்கு வாய்க்கப் பெற்றது. யாதொரு மருந்தும்

மந்திரமும் பார்வையும் கைக்கொள்ளாது திருவருள் ஒன்றினையே வேண்டி அச்சிறுவனின் விடம் தீர்த்து அருளினார்.

## திருஞானசம்பந்தர் தீப்பிணி தீர்த்தல்

மதுரையில் கூன்பாண்டியனின் அனுமதியுடன் சமணர்கள், திருஞானசம்பந்தர் அடியார்களுடன் தங்கியிருந்த மடத்திற்குத் தீ வைத்தனர். நிரபராதிகளாகிய அடியார்கள் தண்டிக்கப்படுகின்றனர் எனில் அதற்குப் பொறுப்பு அரசன். எனவே இத்தீ அரசனைச் சென்றடையட்டும் என்று திருஞானசம்பந்தர் முடிவெடுக்கின்றார்.

**செய்யனே திருஆலவாய் மேவிய**
**ஐயனே அஞ்சல் என்று அருள்செய் எனைப்**
**பய்யராம் அமணர் கொளுவுஞ்சுடர்**
**பையவே சென்று பாண்டியர்க்காகவே** (3 : 51 : 1)

என்று பாடுகின்றார். இப்பாடலில் நோக்கத்தக்கது பையவே என்ற சொல். மங்கையர்க்கரசியார் சிவனடியார்; அவருடைய மங்கலநாண் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பையவே தீ சென்றடைக என்று திருஞானசம்பந்தர் கட்டளையிடுகின்றார். அத் தீ சென்று பாண்டியனை அடைந்ததால் வெப்புநோயால் பாதிக்கப்பட்டான். அப்பொழுது திருஞானசம்பந்தர்,

**மந்திரமாவது நீறு; வானவர் மேலது நீறு;**
**சுந்தரமாவது நீறு; துதிக்கப்படுவது நீறு;**
**தந்திரமாவது நீறு; சமயத்தில் உள்ளது நீறு;**
**செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே**
(2 : 66 : 1)

**ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்**
**போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்**
**தேற்றி தென்னன் உடல் உற்றதீப்பிணி தீரச்**
**சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர்தாமே** (2:66:11)

எனத் திருக்கடைக் காப்புப் பாடி மன்னன் உற்ற தீப்பிணியைத் தீர்த்து வைக்கின்றார்.

திருவோத்தூரில் வாழ்ந்து வந்த சிவனடியார் ஒருவர் திருஞானசம்பந்தரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி அழுது கொண்டு பின்வருமாறு கூறுகின்றார். சிவபெருமானின் திருப்பணிக்காக அடியேன் வளர்க்கும் பனைமரங்கள் எல்லாம் ஆண்பனைகளாகிக் காய்க்காமலிருக்கின்றன. இது கண்டு இங்குள்ள சமணர்கள் என்னைப்

பார்த்து நீர் ஆக்கும் பனைகள் காய்க்குமா? என்று என்னை இழித்துக் கூறிச் சிரிக்கின்றார்கள்; தேவரீர் அருள்புரிய வேண்டும் என்றார்.

சிவநெறியின் பெருமையைச் சமணர்கள் என்று கவலை கொண்டார். இஃதுணர்ந்த திருஞானசம்பந்தர் தன்னலமற்றுச் சிவபெருமான் புகழ் பரப்பும் அடியாரின் வேண்டுகோளை ஏற்றுப் பின்வருமாறு பதிகம் பாடுகின்றார்.

**குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்**
**அரும்பு கொன்றை அடிகளைப்**
**பெரும் புகலியுள் ஞானசம்பந்தன் சொல்**
**விரும்புவார் வினை வீடே** (1 : 54 : 11)

என்ற ஏழாம் பாட்டில் தம்மை வேண்டிய அத்திருத்தொண்டர் எண்ணம் கைகூடுமாறு அருள் புரிதல் வேண்டும் என்ற தொடரால் ஆண்பனைகள் பெண்பனைகளாகிக் குலை குலையாகக் காய்களை ஈன்றன. இவ்வாறு அடியார்க்காக அருள் வேண்டிப் பெற்றுச் சமுதாய நலம் பாராட்டினார்.

## திருஞானசம்பந்தர் எலும்பைப் பெண்ணாக்குதல்

மயிலாப்பூரில் வாழ்ந்த சிவநேசச்செட்டியார் மகள் பூம்பாவையை அரவம் தீண்டியதால் இறந்து விடுகின்றாள். தம் ஒரே மகளை இழந்த சிவநேசர் அவ்வுடலை எரியூட்டிச் சாம்பலையும், எலும்பையும் எடுத்து வந்து புதிய பானையிலிட்டு அதனைத் தம் மகளாகப் பாவித்துப் பாதுகாத்து வருகின்றார்.

இங்ஙனம் இருக்கும் நாளில் திருவொற்றியூரினின்றும் மயிலைக்குத் திருஞானசம்பந்தர் வருகிறார். அங்குச் சிவநேசரின் செய்கையைத் திருஞானசம்பந்தருக்கு அடியார்கள் தெரிவிக்கின்றனர். எலும்பும், சாம்பலும் அடங்கிய அக்குடத்தை இங்கே கொணர்வீர் எனக்கூற அவர்கள் அப்படியே கொண்டு வந்து ஞானச்செல்வர் முன்பு வைத்தனர்.

சிவபெருமான் திருவருளைக் கருத்திற்கொண்டு, திருஞானசம்பந்தர் அக்குடத்தைப் பார்த்து **மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை** என்ற திருப்பதிகம் அருளிச் செய்து பூம்பாவையை உயிர்பெற்று எழச் செய்தார்.

**மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்**
**கட்டிட்டங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்**
**ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்**
**கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்** (2 : 47 : 1)

என்ற இத்திருப்பதிகத்தின் முதற்பாடல் முதல் பத்தாம்பாட்டு வரையில் குடத்துள்ளிருந்த எலும்பும், சாம்பலும் பூம்பாவை உருவாகப் படிப்படியாக வளர்ந்து முழுமை அடைந்தன; குடம் உடைந்தது; செங்கைகளைக் குவித்துக் கொண்டு பூம்பாவை, இறந்த போதிலிருந்து வளர்ந்த பன்னிரண்டாண்டுப் பருவ அழகின் மிகு நங்கையாக எழுந்து நின்றாள். அர அர என்ற ஒலி விண்ணை முட்டியது. பதினாறு அகவைப் புண்ணிய வடிவினரான திருஞானசம்பந்தர் பூம்பாவையைச் சிவபிரானுடைய அருள் வெள்ளமாகக் கண்டார். சிவபிரானின் திருவருளே அச்செல்வியை உயிர்ப்பித்தது என்று கருதினார் என்றவாறு சிவநேச அடியாரின் துயர் தீர்த்தார். இதனைச் சேக்கிழார்,

**கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்**
**உண்மையாம் எனில் உலகர் முன்வருக** (12 : பா.எ. 2990)

என்று உரைக்கின்றார். இப்பதிகத்தில் பூம்பாவையே, இத்தலத்தில் நிகழும், பூரட்டாதி (புரட்டாசி) உருத்திரகணத்தார் விழா, ஐப்பசி ஓண (திருவோண) விழா, கார்த்திகை விளக்கீடு விழா, ஆதிரை நாள் திருவாதிரை விழா, தைப்பூச விழா, மாசி கடலாட்டு விழா, பங்குனி உத்திரநாள் விழா, சித்திரை அட்டமி நாள் விழா, வைகாசிப் பொன்னூசல் விழா, ஆனி, ஆடி, ஆவணியில் கொண்டாடும் பெருஞ்சாந்தி விழா போன்ற விழாக்கள் எல்லாம் காணாது போதியோ? என்று பாடினார். இப்படி பாடியதன் பொருள் நீ இறந்து விடுதல் கூடாது பிழைத்து வருக; வந்து இவ்விழாக்களில் கலந்து கொண்டு இன்பமாக வாழ்தல் வேண்டும் என்பதாகும்.

## திருமறைக்காட்டுக் திருக்கதவம் திறத்தல்

திருவீழிமிழலையில் பஞ்சம் தீர்த்து, அங்கிருந்து புறப்பட்ட பெருமக்கள் இருவரும் திருவாஞ்சியம் முதலிய தலங்களை இறைஞ்சிப் போற்றி, திருமறைக் காட்டை அடைந்து திருக்கோயிலை வலம் வந்து, பண்டை நாளில் வேதங்களால் அடைக்கப் பெற்ற திருக்கதவமைந்த திருவாயிலை அடைந்தனர்.

வேதங்களில் வல்ல அன்பரொருவரும் வாராமையால் நெடுநாள் அக்கதவு திறக்கப்படாமலிருந்தது. அதனால் அவ்வூரார் வேறு வாயிலமைத்து, வேதவனப் பெருமானை வழிபட்டு வந்தனர். இதனை உணர்ந்த சம்பந்தர், நாவுக்கரசரை நோக்கி,

> அப்பரே நாம் எப்படியும் நேர்முகமாகவுள்ள இத்திருவாயிலின் வழியே சென்று மறைக்காட்டிறைவனை வழிபடுதல் வேண்டும். ஆதலால் இத்திருக்கதவு திறக்கும் படி திருப்பதிகம் பாடியருளும்

என வேண்டினார். அன்புடைய பிள்ளையாரது விருப்பத்திற் கிசைந்த நாவரசர்,

**பண்ணி னேர்மொழி யாளுமை பங்கரோ**
**மண்ணி னார்வலஞ் செய்மறைக் காடரோ**
**கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்**
**திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே** (5 : 10 : 1)

என்ற திருப்பதிகத்தைப் பாடியருளினார். செந்தமிழ்ப் பாடல்களாகிய அவற்றின் சுவை நலன்களைத் துய்க்க விரும்பிய மறைக்காட்டீசர் திருக்கதவு திருக்காப்பு நீக்கக் காலம் தாழ்த்தார். தம் வேண்டுகோளுக்கிரங்கி இறைவன் திருக்கதவு திறந்தருளாமையைக் கண்டு வருத்தமுற்ற நாவரசர், இராவணனை விரலால் அடர்த்திட்ட நீவிர் ஒரு சிறிதும் இரக்கமுடையீர் அல்லீர் என இறைவனை நோக்கிப் பிணங்கிப் பேசும் முறையில்,

**அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர்**
**இரக்க மொன்றிலீர் எம்பெருமானீரே**
**சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ**
**சரக்க விக்கதவந் திறப்பிம்மினே** (5 : 10 : 11)

என்று அத்திருப்பதிகத்தின் இறுதித் திருப்பாடலைப் பாடத் தொடங்கினார். அந்நிலையில் பன்னெடு நாள்களாக அடைக்கப்பட்டிருந்த திருக்கதவு இறைவனது அருளால் திறக்கப் பெற்றது. ஆளுடைய பிள்ளையாரும், நாவரசரும் நிலமிசை வீழ்ந்து இறைஞ்சி, நேர்முக வாயில் வழியே கோயிலுட் புகுந்து மறைக்காட்டீசரை வணங்கி வண்டமிழ் மாலைகள் பாடிப் போற்றினர். அப்பொழுது நாவுக்கரசர் சம்பந்தரை நோக்கி, "இறைவன் திருவருளால் திருக்கதவு நாடொறும் திறக்கப் பெற்றும் அடைக்கப் பெற்றும் வரும் நிலையில் இத்திருக்கதவம் அடைத்திடும் படி பாடியருளும்" என வேண்டிக்கொண்டார்.

சம்பந்தப் பெருமான் '**சதுரம் மறை**' எனத் தொடங்கும் முதற் பாடலைப் பாட மறைக்காட்டீசர் அருளால் திருக்கதவும் விரைவில் அடைக்கப் பெற்றது. அது கண்ட இருவரும், நம் பெருமான் அருள்செய்யப் பெற்றோம் எனப் பெரிதும் மகிழ்ந்து இறைவனைப் போற்றினார்கள். சம்பந்தர், எடுத்த திருப்பதிகத்தின் ஏனைய பாடல்களையும் பாடித் திருக்கடைக்காப்புச் சாத்தியருளினார். பண்டை நான்மறைகளுக்கும், திருநாவுக்கரசரின் திருமுறைகளுக்கும் சிறிதும் வேற்றுமையில்லை என்பதனைத் தெளிவாக வலியுறுத்தியுள்ளார்.

திருநாவுக்கரசர் திருவாய் மலர்ந்தருளிய செந்தமிழ் மறைகளாகிய திருமுறைகளின் சிறப்பினை,

**மணியினை மாமறைக்காட்டு மருந்தினை வண்மொழியால்**
**திணியன நீள்கதவந் திறப்பித்தன தெண்கடலிற்**
**பிணியன கன்மிதப் பித்தன சைவப் பெருநெறிக்கே**
**அணியன நாவுக் கரையர் பிரான்றன் அருந்தமிழே**
(திருத்தொண்டர் திருவந்தாதி, 225)

என வரும் **திருத்தொண்டர் திருவந்தாதியில்** நம்பியாண்டார் நம்பி விரித்துரைத்துப் போற்றியுள்ளார்.

## சமுதாயத்தை நெறிப்படுத்தும் பாங்கு

செல்வத்துப் பயனே ஈதல் என்பது தமிழ்மறை. இறப்பார்க்குக் கொடுக்கவே இறைவன் செல்வத்தைக் கொடுத்தான்; கொடுத்து வாழ்பவர்க்கே, இன்பம் உண்டாகும்; கொடுத்து வாழாத செல்வந்தர்களுக்குக் கொடிய நரகமே பரிசு என்கிறார் அப்பர் பெருமான். அவர் சமுதாய நலன் வேண்டி,

**இரப்பவர்க்கு ஈயவைத்தார்**
**ஈபவர்க்கு அருளும் வைத்தார்**
**கரப்பவர் தங்கட் கெல்லாம்**
**கடுநரக ங்கள் வைத்தார்** (4 : 38 : 10)

என இறைவன் கொடிய அரக்கனாகிய இராவணனுக்கே அருள் புரிந்தவர் பெருமையுடைய அப்பெருமான் கொடை வழங்குவோர்க்கு நிச்சயம் அருள் கொடுப்பான். எனவே, ஈதலே இன்பம் பயக்கும் என்கிறார். ஔவைப் பிராட்டியும், தமது **ஆத்தி சூடியில் ஈவது விலக்கேல்** எனக் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்கள் தங்களின் பரிணாம வளர்ச்சியில் பல்வேறு உதவிகளைப் பெற்றிருக்கின்றன. அவ்வற்றிற்கு மாறாக அவற்றைப் பலருக்கும் திருப்பிக் கொடுத்தல் கடமையாகும். இக்கடமையை நன்குணர்ந்து, அன்புடனும் பணிவுடனும், செய்யப் பெறுவது பணியாகும். எனவேதான் அப்பர் பெருமான் இதனைப் பணி என்ற சொல்லால் குறிப்பிட்டுள்ளார்.

**நங்கடம் பனைப் பெற்றவள் பங்கினள்**
**தென்கடம் பைதிருக் கரக்கோயிலான்**
**தன்கடன் அடியேனை யுந்தாங்குதல்**
**என் கடன் பணி செய்து கிடப்பதே** (5 : 19 : 9)

என்று பணி செய்வதால் வரும் பலனில் பற்று சிறிதும் இன்றி, மரங்கள் காய்த்துக் குலுங்குவது போலவும், விலங்குகள் மனிதர்களுக்காக உழைப்பது போலவும் நாம் நம் கடமையைச் செய்ய வேண்டும் என்ற குறிப்பிலேயே இங்ஙனம் கூறியுள்ளார். நாவரசரைச் சுற்றியிருந்த அன்றைய சமுதாயம் சடங்கு, தீர்த்தம், என்பனவற்றையே சார்ந்து இருந்தது. அந்நிலையில் நாவரசர் இச்செயலைக் கண்டித்தார். சமுதாய மூடப் பழக்கங்கள், நம்பிக்கைகள் இவற்றைத் தகர்க்கும் முறையில் சைவசமயம் ஏற்றுக் கொள்ளாத துறவு மார்க்கமும், காடு சென்று, கனசடை வளர்த்து, மூச்சைக் கட்டுப்படுத்தித் தவம் செய்யும் வழக்கமும் அவர்காலத்தில் இருந்தமையைச் சாடியுள்ளார்.

**கங்கை யாடில்என் காவிரி யாடிலென்**
**கொங்கு தண்கும ரித்துறை யாடில்என்**
**ஓங்கு மாக்கடல் ஓதநீர் ஆடில்என்**
**எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே** (5 : 99: 2)

என்று பாடியுள்ளார். மேலும், கலைகளில் சிறந்து விளங்கியவராயினும், சாத்திர நூல்களைக் கற்றவராயினும், பல்வேறு கொடைத் தொழில் செய்தவராயினும், அறுசுவை உணவு கொடுத்தவராயினும், அடியார் தொண்டு செய்தவராயினும், மறைகளை ஓதுபவராயினும், வேள்விகள் செய்பவர் ஆயினும், நீதி நூல்களை நித்தமும் கற்றவர், கற்பிப்பவர் ஆயினும், ஆறங்கம் உணர்ந்தவராயினும், பெருந்தவமும் புரிந்திருந்தாராயினும் சிவபெருமானின் மேல் பக்தி இல்லையெனில் உயர்வில்லை என்று குறிப்பிடுகின்றார். அதனை,

**கான நாடு கலந்து திரியில்என்**
**ஈனம் இன்றி இரும்தவம் செய்யில்என்**
**ஊனை உண்டல் ஒழிந்துவான் நோக்கில்என்**
**ஞானன் என்பவர்க்கு அன்றி நன்கு இல்லையே** (5 : 99 . 6)

எனச் சாடியுள்ளார். மேலும், சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு செய்யப் பெறாத வழிபாடுகளாலும், மந்திரங்களாலும், வேள்விகளாலும் எந்தப் பயனுமில்லை எனச் சாடும் பாங்கினை,

**எரிபெருக்குவர் அவ்வெரி ஈசனது**
**உருவருக்கும தாவது உணர்கிலார்**
**அரிஅ யற்கரியானை அயர்ந்துபோய்**
**நரிவி ருத்தம தாகுவர் நாடரே** (5 : 100 : 7)

என்ற பாடலால் அறியமுடிகின்றது. திருநாவுக்கரசரின் தூய்மையான சமய ஒழுக்கம் அன்றைய சமுதாய மக்களின் ஒழுக்கத்திற்குச் சான்றாக

அமைகின்றது. சமயம் அறத்தையும், தொண்டையும் கூட்டிச் சமூகத்தைச் செம்மைப்படுத்துகின்றது.

## மக்கள் தொண்டே மகேசன் தொண்டு

திருநாவுக்கரசர் தாம் சென்று வழிபட்ட சிவத்தலங்களில் எல்லாம் பதிகம்பாடி, மக்களைக் தன்பக்கம் ஈர்த்தார். வைதீகர்கள் வேதத்தை வலியுறுத்தியபோது, திருவைந்தெழுத்தினை வலியுறுத்திய பெருமை இவரையே சாரும்.

**மருள்நீக் கியார்நி ரம்பித்**
**தேச நெறிநிலை யாமை**
**கண்டு அறங்களை செய்வாராய்க்**
**காசினி மேல்புகழ் விளங்க**
**நிதியறித் துக்கரு ணையினால்**
**ஆசில் அறச்சா லைகளும்**
**தண்ணீர் பந்தரும் அமைப்பார்** (பெ.பு., பா : 1305)

என்ற பாடலால் மருள்நீக்கியாரின் சமுதாயத் தொண்டு இளமையிலேயே தொடங்கிவிட்டிருப்பதை அறியமுடிகின்றது. சமுதாயத்திற்குத் தேவையான அறச்சாலைகளும், தண்ணீர்ப் பந்தலும் அமைத்ததோடு மட்டுமல்லாது தம் செல்வத்தை வேண்டுவோர்க்கு அளிப்பதிலும், விருந்தினரை உபசரிப்பதிலும் செலவிட்ட அவர் பொதுத் தொண்டையும் மறக்கவில்லை. **காவளர்த்தும் குளந்தொட்டும் கடப்பாடு வழுவாமல்** (பெ.பு., பா : 1306) என்ற பாடலால் அவர் செய்த பொதுத் தொண்டினைச் சேக்கிழார் அறிவிக்கின்றார்.

சோலைகளை அமைத்து, குளம் வெட்டி, நீர்நிலைகளை ஏற்படுத்தியவர் நாவுக்கரசர். புறநானூற்றுப் பாடலிலும் பஞ்சம் ஏற்பட்ட நிலையில் குளம் வெட்டுதல் மூலமாக அது நீக்கப்பட்டது என்ற குறிப்பு காணப்படுகிறது.

**நிலன்நெறி மருங்கின் நீர்நிலை, பெருகத்**
**தட்டோர் அம்ம இவண் தட்டோரே**
**தள்ளாதோரிவண் தள்ளாதோரே** (புறம். பா. 18)

என்ற பாடல் வரிகளால் சங்காலம் முதலே குளம் வெட்டுதல் சிறந்த தொண்டாகக் கருதப்பட்டுவந்தமை தெரிய வருகின்றது.

## திருஞானசம்பந்தர் ஆணையிடுதல்

திருஞானசம்பந்தர் உலக நல வாழ்வில், சமுதாயப் பொதுமை உணர்வில், தனி மனித வாழ்வு சிறக்கும் என்ற பொதுமைக் கோட்பாட்டினை,

**வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்**
**வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக**
**ஆழ்க தீயது எல்லாம் அரன் நாமமே**
**சூழ்க வையகம் துயர் தீர்கவே** (3 : 54 : 1)

என்று பாடியருளுகின்றார்.

திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகங்கள் தோறும் இறுதியில் வரும் பதினொராவது பாடல் திருக்கடைக்காப்பு எனப் பெயர் பெறும். காத்தற் பயன் கூறும் செய்யுள் காப்பு எனப் பெயர் பெற்றது. திருவுடைய செழும்பாடல்கள் ஆதலின் திருக்கடைக்காப்பு என வழங்கப்பட்டன.

திருக்கடைக்காப்பை ஒருவகையில் பதிகத்தொகுப்பாகவும், வழிபாட்டு நெறிகாட்டும் தெய்வத் தமிழ்ப் பாடல்களுக்கான மங்கல வாழ்த்தாகவும், சமுதாயத்தினை நோக்கித் திருஞான சம்பந்தர் எடுத்துரைக்கும் அறிவுரையாகவும் கொள்ளலாம்.

திருஞானசம்பந்தர் தாம் பாடியருளுகின்ற பதிகங்களைப் பாடுகின்றவர்களுக்கு உரிய பயனை ஒவ்வொரு பதிகத்திலும் அதனதன் ஈற்றில் அமைந்த திருக்கடைக்காப்பு செய்யுட்களில் குறிப்பிட்டிருக்கின்றார். ஒவ்வொரு பதிகத்துக்கும் திருஞானசம்பந்தர் பலன் கூறியுள்ளது கிடைக்குமா? என்று அவர் காலத்தில் ஐயுற்றுப் பேச வாய்ப்பிருந்திருக்கலாம் எனத் தெரிகிறது. இவ்ஐயத்தைத் தீர்க்கும்படியாகச் சில பாடல் வரிகளில் **உறுதியாகப் பலன் கிட்டும்** என்பதை உணர்த்துகின்றார்.

இறைவன் மீது கொள்ளும் எல்லையற்ற அன்பு தனிமனித வாழ்வுச் செயல்பாடுகளுக்குத் தடையாய் நின்று மூடநம்பிக்கை வழிப்பட்ட செயலறு நிலையினை உருவாக்குதல் கூடாது என்ற செயலாக்கத் திருத்தொண்டு ஆற்றுவதற்கான ஊக்கத்தினைத் திருஞானசம்பந்தர் மக்களுக்குத் தம் வாழ்வின் நிகழ்வுகளின்வழி வலியுறுத்துகின்றார்.

பாண்டிய நாட்டிலுள்ள ஆனைமலை முதலிய மலைகளைத் தங்களுக்குரிய இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்த சமணர்கள் தங்கள் சமயத்தைப் பரப்புவதுடன் பிற சமயத்தவர்களை இகழ்ந்தும் வந்தனர். அந்நாளிற் பாண்டிய நாட்டைக் கூன்பாண்டியன் என்னும் அரசன் ஆட்சி புரிந்து வந்தான். அவன் சமண சமயத்தவன். சூழ்ச்சியிற் பட்டுத் தனக்குரிய சைவசமயத்தை விட்டுச் சமணராயினன். மதுரை மாநகர் மாந்தரில் பாண்டிமாதேவியாராகிய மங்கையர்க்கரசியாரும் அமைச்சராகிய குலச்சிறையாரும் தமக்குரிய சிவநெறியை நெகிழவிடாது கடைப்பிடித்து ஒழுகினார்கள். அவ்விருவரும்

திருஞானசம்பந்தர் திருமறைக்காட்டில் எழுந்தருளியிருத்தலைக் கேள்வியுற்று அவரை வணங்கிப் பாண்டிய நாட்டுக்கு அழைத்து வரும்படி தம் பணியாளர்களை அனுப்பி வைத்தனர். அவர்களும் அவ்வாறு சென்று வேண்டியதற்கிணங்கத் திருஞானசம்பந்தர் சமணரை ஒடுக்கிச் சைவத்தை நிலைநாட்ட மதுரைக்குப் புறப்படுகையில் திருநாவுக்கரசர் தடுக்கின்றார்.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தரைப் பார்த்து நாளும், கோளும் சரியில்லை. மேலும், சமணர்கள் பொல்லாதவர்கள். நீங்கள் சிறு குழந்தையாய் இருக்கிறீர்கள்; சமணர்கள் செய்யும் வஞ்சனைக்கு ஓர் அளவில்லை என்பதை நான் அனுபவித்து இருக்கின்றேன். ஆகையால் நீங்கள் பாண்டிய நாட்டிற்கு எழுந்தருள உடன்படுவது ஆகாது என்று அன்பின் மிகுதியால் அஞ்சிக் கூறித்தடுத்தார்.

திருஞானசம்பந்தர் ஒரு நாட்டிலுள்ள மக்களின் சிக்கலைத் தவிர்க்கவும், அகச்சமயம் காக்கவுமான பொதுத் தொண்டினைச் செய்யப் புறப்படும் தொண்டர்கள் நாள், நட்சத்திரம், கோள் என இவற்றிற்குச் சிறப்புத் தந்து பணி முடக்கிப் பின்வாங்கல் நீதியன்று என நினைக்கின்றார். எனவே, திருநாவுக்கரசரிடம், திருஞானசம்பந்தர் நாம் போற்றுவது நம்பெருமான் திருவடிகளாதலால் நமக்கு எத்தகைய தீங்கும் வராது என வற்புறுத்து முகமாக,

**வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்**
**மிக நல்ல வீணை தடவி**
**மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து**
**என் உளமே புகுந்த அதனால்**
**ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி**
**சனி பாம்பிரண்டுடனே**
**ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல**
**அடியார் அவர்க்கு மிகவே** (2 : 85 : 1)

எனத் தொடங்கும் கோளறு பதிகத்தைப் பாடியருளினார் என்பது வரலாறு.

கோள்களாலும், நாள்களாலும் உலகியலில் நேரும் துன்பங்கள் சிவனடியார்களைச் சார்ந்து வருந்தாதபடி அத்துன்பங்களை அழித்தற்கு ஏதுவாகிய திருப்பதிகமாதலின் இது **'கோளறு பதிகம்'** எனப் பெயர்பெற்றது. இக்கோளறு பதிகம் பாடும் திருஞானசம்பந்தரது தன்னலம் சாரா இறைத் தொண்டினால்தான் இடைக்காலத் தமிழ்ச்சமயம் நாட்டில் வலுப்பெற்று அதன்வழி புதுமைச் சமுதாயம் மலர்ந்தது என்று கருதலாம்.

நாளும் கோளும் சிவபெருமானுக்குக் கட்டுப்பட்டவை. எனவே சிவனை வணங்குபவர்கட்கு அவை நல்லனவற்றைச் செய்யும்; தீயனவற்றைச் செய்யா என்னும் கூற்று இங்குக் குறிப்பிடற்குரியது (சிவ. ஆ. பக்தவச்சலம், **தமிழ்வேதம்** : 1-9-2000, பக்கம் : 26)

இக்கோளறு பதிகத்தை ஓதும் அடியார்கள் கோள்களினால் நன்மைகள் பெறுவது மட்டுமின்றித் தேவர் உலகத்தில் அரசாள்வர். இது நமது ஆணை என்று உறுதியிட்டுப் பின்வருமாறு அறிவுறுத்திப் பாடுகின்றார்.

**தேனமர் பொழில் கொள்ளாலை விளை செந்நெல்**
**துன்னி வளர் செம்பொன் எங்கும் திகழ**
**நான்முகன் ஆதியாய பிரமாபுரத்து மறை**
**ஞான ஞானமுனிவன்**
**தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து**
**நலியாத வண்ணம் உரைசெய்**
**ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்**
**அரசாள்வர் ஆணை நமதே** (2 : 85 : 11)

எனத் திருக்கடைக்காப்பிட்டு நிறைவுபெறும் அப்பதிகம் நம்பினார் கெடுவதில்லை என்ற உண்மையை அன்றிப் பக்தி உணர்வின் வலிமையால் இடர்களைந்து எண்ணிய எண்ணியாங்கு எய்தலாம் என்ற நம்பிக்கையையும் ஊட்டுகின்றது. மேலும் இங்குச் சமயம் கண்மூடிப் பழக்கங்களையும், அறியாமையால் பிறக்கும் நம்பிக்கைகளையும் வளர்ப்பதில்லை. வளர்க்கக் கூடாது என்று வலியுறுத்துவார் போலத் திருஞானசம்பந்தர் பாடியருளியிருப்பதையும் உணர முடிகிறது.

திருஞானசம்பந்தர் ஞானப்பாலுண்ட தெய்வக் குழந்தை. அவரை ஈன்றெடுத்த அன்னை பகவதியார் திருநனிபள்ளி என்ற ஊரினர். அவரின் அருமை பெருமைகளைக் கேள்வியுற்றுச் சீர்காழி போந்து அவரைத் தம்மூர்க்கு எழுந்தருள வேண்டினர். அவர் அதற்கிசைந்து செல்லும்போது தந்தையார் அவரை எடுத்துத் தம்தோள் மேல் வைத்துக்கொள்ள அடியார்கள் புடைசூழ நனிபள்ளி சென்றடைந்தார். இறைவனைக் வணங்கிப் பதிகம் பாடினார். இதனைச் சேக்கிழார் பெருமான்,

**நாரியோர் பாகர் வைகு நனிபள்ளி உள்குவார்தம்**
**பேரிடர் கெடுதற்கு ஆணைநமதெனும் பெருமை வைத்தார்**
(12 : பாடல் 2018)

என்று சிறப்பித்துள்ளார்.

**கடல் வரை ஓதம் மல்கு கழிகானல் பானல்**
**கமழ் காழி என்று கருதப்**
**படுபொருள் ஆறும் நாலும் உளதாக வைத்த**
**பதியான ஞான முனிவன்**
**இடுபறையொன்ற அத்தர் பியன் மேலிருந்து**
**இன்னிசையால் உரைத்த பனுவல்**
**நடுவிருளால் ஆடும் எந்தை நனிபள்ளி**
**உள்க வினை கெடுதல் ஆணை நமதே** (2 : 84 : 11)

என்ற இப்பதிகத்தால் வழியிலிருந்த பாலை நிலங்கள் நெய்தலாக மாறின. கடல் அலை சூழ்ந்து, ஆறும் (சிற்கை, கற்பசூத்திரம், வியாகரணம், நிருத்தம், சந்தோவிதி, சோதிடம் என்னும் அங்கம் ஆறு) நான்கு வேதங்களும் கற்றுச் சிறந்த பதியில் உள்ள ஞான முனிவராகிய திருஞானசம்பந்தர் தந்தையின் தோள் மீதிருந்து இன்னிசையால் உரைத்த இப்பதிகத்தை நனிபள்ளி இறைவனை நினைந்துருக வினை அனைத்தும் கெடுதல் உறுதி என உறுதியிட்டு இறைவன் அவருள் நின்றுணர்த்தப் பாடியருளியுள்ளது தனிச்சிறப்பு உடையதாகும்.

திருஞானசம்பந்தர் திருவேதிகுடியில் இறைவன் வீற்றிருக்கும் தளத்திற்குச் சென்று போற்றிப் பணிந்து எழுந்து சிறப்புடை ஆணை நமதே பதிகத்தினைப் பாடுகின்றார். இப்பதிக இறுதியில் திருக்கடைக்காப்பில் பின்வருமாறு பாடுகின்றார்.

**கந்தமணி தண்பொழில் நன்மாட மிடை**
**காழி வளர் ஞானமுணர்சம்**
**பந்தன் மலி செந்தமிழின் மாலை கொடு**
**வேதி குடி ஆதி கழலே**
**சிந்தை செய வல்லவர்கள் நல்லவர்கள்**
**என்ன நிகழ் வெய்தி இமையோர்**
**அந்த உலகெய்தி அரசாளும் அதுவே**
**சரதம் ஆணை நமதே** (3 : 78 : 11)

என்ற வரிகளில் வாசனை மிகுந்த, குளிர்ச்சி பொருந்திய சோலைகளும் நிறைந்த காழிப்பதி ஞானத்துடன் திருஞானசம்பந்தர் வேதிகுடி இறைவனைப் பொருட்செறிவையுடைய இச்செந்தமிழால் நினைந்து போற்றிச் சிந்தை செய்பவர்கள் இமையோர் உலகு எய்தி அரசாள்வது நிச்சயம். மேலும் இஃது இறைவனது கட்டளையே என்று உறுதியிட்டுத் திருக்கடைக்காப்பினை அருளியுள்ளார்.

திருஞானசம்பந்தர் தொண்டரொடும், அன்பும், நட்பும் பொங்கியதாகலின் இறைவனை வணங்கி ஆணை நமதே சிறப்புப் பதிகத்தினைப் பாடுகின்றார்.

**கானலங் கழனி ஓதம்வந்துலவும் கழுமல நகருறைவார்மேல்**
**ஞானசம்பந்தன் நற்றமிழ் மாலை நன்மையால் உரைசெய்து**
**நவில்வார்**
**ஊனசம்பந்தத்தறு பிணிநீங்கி உள்ளமும் ஒருவழி கொண்டு**
**வானிடை வாழ்வர் மண்மிசைப் பிறவார் மற்றிதற்கு**
**ஆணையும்நமதே** (3 : 118 : 11)

என்றவாறு, கடற்கரைச் சோலையில் அலைவந்து உலவும் கழுமல நகர் உறையும் திருஞானசம்பந்தர் பாடியருளிய இந்நற்றமிழ்ப் பதிகத்தினை ஓதுவார்கள் இவ்வுலகில் பிணி நீங்கி வானிடை வாழும் பேறு பெறுவார்கள்; இம்மண்ணில் இனிப்பிறவார். ஆணை நமதே என்று திருக்கடைக்காப்புப் பாடலில் உறுதியிட்டுக் கூறுகின்றார்.

திருவெண்காட்டு இறைவனைப் பாடிய அருந்தமிழ்ப் பாடல்களைப் பாட வல்லவர்களுக்கு அருவினையும், அல்லலும் நீங்கும் இது உறுதி என முழங்குகின்றார்

**நல்லவர் புகலியுள் ஞானசம்பந்தன்**
**செல்வன் எம்சிவனுறை திருவெண்காட்டின்மேல்**
**சொல்லிய அருந்தமிழ் பத்தும் வல்லவர்**
**அல்லலோடு அருவினை ஆறுதல் ஆணையே** (3 : 15 : 11)

என்று ஐந்து திருப்பதிகங்களுக்கு அரிதான பயன்களை அறுதியிட்டுக் கூறுகின்றார். திருமுறைகளிலேயே இவ்வாறு ஆணையிட்டுக் கூறுவது திருஞானசம்பந்தரின் தனிச்சிறப்பாகும்.

## தொண்டுநெறியில் உடன்பாடும் எதிர்மறையும்

தனிமனிதன் தனது இருத்தலை நிலை நிறுத்திக் கொள்ளப் பிறரை அணுகுதல் என்ற அடிப்படையில் சமுதாயம் தோன்றுகின்றது. ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்வும் இடர்ப்பாடு இல்லாமல் செம்மையாக அமையச் சமுதாயம் பயன்பட வேண்டும். தனி உடைமை என்ற நிலையைக் கடந்து பொதுவுடைமை என்ற நிலைக்கு மனிதனை இட்டுச் செல்வதே சமுதாயம் என்ற அமைப்பாகும்.

திருநாவுக்கரசர் பெருமான் தாம் காண நினைத்த சமுதாயத்தைக் குறித்துத் தாம் பாடியருளியுள்ள தேவாரத்தில் தெளிவாக விளக்கியுள்ளார். அவர் தாம் வாழ்ந்த சமுதாயம் திருந்த வேண்டிய நிலையில் உள்ளதை உணர்ந்து, சமுதாயத்தை நன்னெறிப் படுத்த விரும்பி, அறிவுரைகளை எடுத்துரைத்த நாவுக்கரசர், தாமும் அவ்வழி நடந்து வெற்றியும் கண்டார். சமுதாய வாழ்வியல் குறித்த கருத்துக்களை

உடன்பாட்டு நிலையிலும், எதிர்மறை நிலையிலும் நாவுக்கரசர் எடுத்துரைத்துள்ளதாக முனைவர் வேல் கார்த்திகேயன் சுட்டுகின்றார் (**திருநாவுக்கரசர் தேவாரம் காட்டும் வாழ்வியல் நெறிகள்**, ப.49).

உடன்பாட்டு வகையில் அமையும் கருத்துக்கள் :

- பயனுள்ள வாழ்க்கை வாழ்தல்
- பொதுநலப் பணிகளைக் கடமையாகக் கொள்ளல்
- ஒப்புரவு அறிதல்
- உலகநடை போற்றல்
- மூத்தோர் சொல் போற்றல்
- எல்லா வகையாலும் பிறருக்கு உதவுதல்
- வறுமையைப் போக்குதல்
- கொடைத் தன்மையை வளர்த்தல்
- சமய நல்லிணக்கம் உருவாக்குதல்
- சமுதாய நன்மைக்காக வேள்வி செய்தல்
- அறிவுத் தெளிவினை உண்டாக்குதல்
- வாழ்வை நெறிப்படுத்தும் நெறியாளர்கள் தேவைப்படுதல்
- நடுநிலையான ஆட்சியை நிலைப்படுத்துதல்

பலர் கூடி வாழும் சமுதாயத்தில் ஒவ்வொருவரும் பயனுள்ள வாழ்க்கை வாழ்தல் வேண்டும். வாழ்கின்றபோது இயற்கையினால் பாதிப்பும், செயற்கை நிலையில் துன்பங்களும், எதிர்பாராத மன வருத்தங்களும் ஏற்பட வாய்ப்புள்ளன. இவற்றைக் கண்டு அஞ்சி, மனந்தளர்தல் கூடாது. பயனற்ற செயலில் ஈடுபட்டு வாழ்வை வீணாக்காது, இறைநினைவுடன் மற்றவர்களுக்குப் பயன்படும்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

**நடலை வாழ்வுகொண் டென்செய்தீர் நாணிலீர்**
**சுடலை சேர்வது சொற்பிர மாணமே**
**கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்**
**உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே** (5 : 90 : 4)

எனப் பழிபாவங்களுக்கு அஞ்சாத மக்களை நோக்கிச் சாடுகின்றார். அவர்களை நல்வழிப் படுத்த வேண்டியது இன்றியமையாத ஒன்றாகிறது.

தன்னலமற்ற மனம் இருந்தால்தான் தொண்டு செய்யமுடியும். பயனை எதிர்நோக்காது இடையூறுகளைப் பற்றி மனந்தளராது செய்யவேண்டியது தொண்டு. அவ்வகையில் மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற நெறியை முதன்முதலாகச் சமய உலகின் வாயிலாகச் சமுதாயத்திற்கு உணர்த்தி நெறிப்படுத்தி வெற்றி கண்டவர் நாவுக்கரசர். திருக்கோயில் தொண்டு, சிவனடியார்க்குத் தொண்டு, உழவாரத் தொண்டு எனப் பல வகைகளில் சமுதாயத் தொண்டுகளைச் செய்தவர்.

ஒரு மனிதன் தான் வாழும் சமுதாயத்தில், காலம் காலமாக ஏற்றுக் கொள்ளப்படும் நெறிமுறைகளைக் கடைபிடித்தும், சமுதாயத்தில் விலக்கப்பட்ட நெறிகளைப் புறக்கணித்தும் வாழ்வதே மிகச் சிறந்த வாழ்வாகும். இதனை வள்ளுவரும்,

**எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு**
**அவ்வ துறைவது அறிவு** (குறள்: 43 : 6)

எனக் குறிப்பிட்டுள்ளார். நாவுக்கரசப் பெருமானும்,

**ஒப்பாய் இவ்வுலகத்தோ டொட்டி வாழ்வான்** (6 : 62 : 3)

எனக் குறிப்பிட்டுப் போற்றுகின்றார். நல்லன, தீயன இன்னவை எனச் சமுதாயம் கருதுவதை உணர்ந்து அதன்படி ஒழுகுவது சிறந்த வாழ்வாகும் என்பதனை இதன்மூலமாக உணர்த்தியுள்ளார்.

சமுதாயத்தில் வாழும்போது நாம் மற்றவர்க்கு ஏதாவது ஒருவகையில் உதவி செய்யவேண்டும். எண்ணம், சொல், செயல் மூன்றில் ஒரு நிலையிலாவது அறநெறி நின்று பிறரிடம் அன்புணர்வுடன் இரக்கம் காட்டி வாழ்தல் வேண்டும். அன்போடு அருளும் அறமும் சேர்ந்ததே பெருங்கருணையாகும். இந்நெறியினைத் **'தயா மூலத் தன்ம நெறி'** என்கிறார் நாவுக்கரசர், முதன் முதலில் இச் சொல்லாட்சியைப் பயன்படுத்தியவரும் இவரே.

**சலங்கெடுத்து தயாமூலத் தன்மம் என்னுந்**
**தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க் கெல்லாம்**
**நலங்கொடுக்கும் நம்பியை . . .** (6 : 20 : 6)

என்பது அப்பாடல். மனிதர்களாய்ப் பிறந்த நாம் இந்தச் சீரிய நெறியினை மேற்கொண்டு வாழ்ந்திட வேண்டும் எனக் கூறியதோடு மட்டுமல்லாது தாமும் அவ்வழி வாழ்ந்து காட்டியவர்.

சமுதாயத்திற்கு நன்மைகளை உண்டாக்குவதற்கும், தீமைகளை நீக்குவதற்கும், வேள்வி செய்யும் வழக்கம் உண்டு. பொது நலத்துடன் முத்தீவேள்விகளை நிகழ்த்தியுள்ளனர். இதனை,

> **விண்தங்கு வேள்வி வைத்தார்**
> **வெந்துயர் தீர வைத்தார்** (4 : 30 : 6)

எனப் பாடியுள்ளார். தன்னல நோக்கின்றி, பொது நல நோக்குடன் வேள்வி செய்தல் வேண்டும் என்பதையும் இதனால் விளக்குகின்றார்.

தனக்கும், பிறருக்கும் நன்மை தருவது எது என உணர்வதே அறிவாகும். அறிவுத் தெளிவு உண்டாக்கும் வழி, இறைவனின் திருவடி நினைந்து போற்றுதலாகும் என்கிறார் நாவரசர்.

> **துன்பம் இல்லைத் துயரில்லை யாமினி**
> **நம்ப னாகிய நம்மணி கண்டனார்**
> **என்பொ னார்உறை வேட்கள நன்னகர்**
> **இன்பன் சேவடி யேத்தி யிருப்பதே** (5 : 42 : 3)

இறைவனின் திருவடி இன்பம் வழங்குவதாகும். தன்னைச் சார்ந்தவர்களுக்கு இன்னமுதமாய், தேனாய், இன்பமயமாய் விளங்குபவர் என்றும், ஆராத இன்பத்தை அவனே அருள்வான் என்றும் கூறியுள்ளார்.

சான்றோர்கள் தன்னலத்தில் அக்கறை கொள்ளாமல் பொதுநலத்தில் ஆர்வம் கொண்டு செயல்படுபவர்கள். நாவுக்கரசர் தம் உடல் நலத்தையும், வயதையும் பொருட்படுத்தாமல் சமுதாய மக்கள் உய்வடைய, உண்ணா நோன்பினை மேற்கொண்டமை அவரது பொதுநலத் தொண்டு உணர்வினைப் புலப்படுத்துகின்றது. பழையாறை வடதளியில் மறைக்கப் பட்ட சிவன்கோயிலின் இலிங்கத்தை மன்னரின் உதவியோடு புதுப்பிக்கத் தாமே உண்ணா நோன்பினை மேற்கொண்டார். **"தலையெ லாம்பறிக் குஞ்சமண் கையருள்"** (5 : 58 : 1) என இப்பதிகம் முழுவதும் தம் எண்ணத்தை வலியுறுத்திப் பாடியுள்ளார். அவ்வகையில் எதிர்மறை வகையில் அமையும் கருத்துக்கள் :

- ❖ சாதி வேறுபாடுகள் கூடாது.
- ❖ வேசையர் உறவு கூடாது.
- ❖ நோயாளியை ஒதுக்கக் கூடாது.
- ❖ தீண்டாமை கூடாது.
- ❖ செல்வம், யாக்கை, இளமை, உலக வாழ்க்கை இவை நிலையற்றவை.

போன்றவற்றைச் சமுதாய மக்களுக்கு அறிவுறுத்துவதன் மூலமாகச் சமுதாயம் நன்னெறியின் கண் நின்றொழுக முடியும் என்பதை அடியார் உறுதிப்பட எடுத்துரைக்கின்றார்.

சமுதாயத்தில் சாதி, மதம், இனம் முதலானவற்றின் அடிப்படையில் மனித வாழ்க்கை இயங்கி வந்தது. நீதி இலக்கியங்கள் பெரிதும் வலியுறுத்தியும், சாதி வேறுபாடுகளை நீக்காமல் வாழ்ந்து வந்த மக்களைச் சமயநெறி நின்று திருத்த முற்பட்டவர் நாவுக்கரசர். அவ்வாறு கூறியும் மனம் திருந்தாத சமுதாயத்தினரைச் சழக்கர்காள் எனக் குறிப்பிடுகின்றார்.

**சாத்திரம் பலபேசுஞ் சழக்கர்காள்**
**கோத்தி ரமுங்குல முங்கொண்டென் செய்வீர்**
**பாத்தி ரஞ்சிவ மென்று பணிந்திரேல்** (5 : 60 : 3)

என்ற பாடல் வரிகளின் மூலம் அறியமுடிகின்றது. ஒருவனுக்கு ஒருத்தி என்று வாழும் இயல்பினர் இல்லற மகளிர். இல்லக் கிழத்தி இருந்தாலும் தலைவன் தனக்கெனக் காமக்கிழத்தியை நாடிச் செல்லுமிடம் பரத்தையர் இல்லம். இவ்வாறு செல்பவர்களைக் கண்டு,

**பஞ்சின்மெல் லடியினார்கள்**
**பாங்கரா யவர்கள் நின்று நெஞ்சில் நோய்**
**பலவுஞ் செய்து நினையினும் நினைய ஒட்டார்** (4 : 53 : 3)

**வாராண்ட கொங்கையர்சேர் மனையிற் சேரோம்** ( 6 : 98 : 3)

எனப் பெண்களின் பின்னால் சுற்றிச் சூழ்ந்து கேலியும் கிண்டலும் பேசி, அவர்களது அழகில் மயங்கிப் பின், நோயினையும், துன்பத்தினையும் அடைவர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

உலக மக்களிடையே குலம், தொழில் முதலான பல்வேறு காரணங்களால் உயர்வு, தாழ்வு கற்பிக்கப்படுகின்றது. திருநாவுக்கரசர் சாதியை ஒழிக்க அரும்பாடுபட்டுப் பின் இறுதியில், அவர்கள் சிவனை வணங்கும் அன்பராக இருந்தால் ஏற்றுக் கொள்ளலாம் என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தினார். இதனால் பிறப்பாலும், தொழிலாலும் வேறுபாடற்ற சமுதாயத்தைக் காணமுடியும் என்பதனை,

**ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்** (6 : 95 : 10)

எனத் தொடங்கும் பாடலை நமிநந்தியடிகளின் வாழ்க்கை மூலம் விளக்கியுள்ளார். திருவாரூரில் பிறந்தார் யாவரும் சிவகணங்களே என இறைவனே உணர்த்த, தீண்டாமை என்ற கொடிய நோயினை நீங்கி யாவரும் ஒரே குலம் என்று வாழவேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்துவதாக முனைவர் வேல் கார்த்திகேயன் குறிப்பிடுகின்றார் (**திருநாவுக்கரசர் தேவாரம் காட்டும் வாழ்வியல் நெறிகள்**, பக்.180-182).

## நிலையாமைத் தத்துவத்தை உணர்த்துதல்

செல்வமே வாழ்க்கைக்கு ஆதாரமானதாகும். அறநெறி நின்று பொருளீட்டிப் பிறர்க்கும் பகிர்ந்து தானும் பயன் கொள்வதே செல்வத்தால் பெற்ற பயன். நிலையில்லாத இச்செல்வம் தன்னிடத்துள்ளபோதே அதைக் கொண்டு நிலைத்த அறச் செயல்களைச் செய்தல் வேண்டும் என்பதனை,

**அற்கா இயல்பிற்று செல்வம் அதுபெற்றால்**
**அற்குப ஆங்கே செயல்** (குறள் : 34 : 3)

**மாடுதேடி மயக்கினில் வீழ்ந்து நீர்**
**ஓடி எய்த்தும் பயனிலை ஊமர்காள்** (5 : 77 : 4)

என வள்ளுவரும் நாவுக்கரசரும் செல்வம் நிலையாதது என்பதை உணர்த்தியுள்ளனர். உயிர் உடலோடு பொருந்தி வாழும் உலக வாழ்க்கையில் இளமையே வளமையானதாக அமைகின்றது. ஆற்றல் மிக்க இப்பருவத்தைத் தக்க வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதனை நாவுக்கரசர்,

**அழகியோம் இளையோம் எனும் ஆசையால்**
**ஒழுகி ஆவி உடல்விடு முன்னமே** (5 : 72 : 8)

என்றவாறு பெண் மயக்கம் கொண்டு, இளமையையும் காலத்தையும் வீணாக்கித் தவிப்பவர்களுக்கு அறிவுரை கூறுமுகமாக இப்பாடலை அமைத்துள்ளார். நீரில் குமிழி இளமை (**நீதிநெறி விளக்கம்**, பா :1) எனக் குமரகுருபரரும் **நீதிநெறிவிளக்கத்தில்** குறிப்பிட்டுள்ளார்.

உயிர் தங்கியிருக்கும் இல்லமாக இருப்பது உடல். இதற்கு அழிவு நேரும்போது, உயிருக்கு ஒரு தலைமறைவு, ஒதுக்கிடம், நிலையான வீடு ஒன்று வேண்டுமென்பதால், அத்தகைய பேரானந்தப் பெருவாழ்வளிப்பது இறைவனின் திருவடி நிழல் இவ்வாழ்க்கையைத் தமக்கு அளித்தருள வேண்டி நாவுக்கரசர்,

**முருகார் நறுமலர் இண்டை கழுவி வண்டே முரலும்**
**பெருகா நடைசடைக் கற்றையினாய் பிணிமேய்ந்திருந்த**
**இருகால் குரம்பை யிதுநா னுடைய திது பிரிந்தால்**
**தருவாய் எனக்குன் திருவடிக் கீழோர் தலைமறைவே**
(4 : 113 : 2)

எனப் பாடி வேண்டுகின்றார். உயிர்க்கு நிலையான இருப்பிடம் உடலல்ல; அது நிலையற்றது என்பதை உணர்ந்து இவ்வாறு வேண்டுகிறார் நாவுக்கரசர்.

**நில்லா வுலகம் புல்லிய நெறித்தே** (தொல். பொருள். நூ. 78)

என்ற **தொல்காப்பியக்** காஞ்சித் திணை நூற்பா உலகியல் மெய்யுணர்வினை உரைக்கின்றது. உலகில் தோன்றிய பெரியோர்கள் எல்லோரும் வாழ்வே துன்பமானது. அதனின்றும் கடைத்தேறுவதற்கு முயல்வதே பிறந்ததன் பயன் என அறிவுறுத்தினர். அவ்வகையில் துன்பத்தைக் கண்டு, வாழ்வை வெறுக்காது, அதை இன்பமாக்கிக் கொள்ள இறைவனின் திருவடிப் பேற்றினைப் பெறவேண்டும் என்பதனை நாவரசர்,

**அறுமையிவ் வுலகு ஆமெனக் கருதி நின்று**
**வெறுமையின் மனைகள் வாழ்ந்து**
**வினைகளால் நலிவுணாதே** (4 : 33 : 3)

என்றவாறு எடுத்துக் கூறியுள்ளதாக முனைவர் வேல் கார்த்திகேயன் தம்முடைய நூலில் முன்வைக்கும் கருத்துக்கள் ஏற்படையன (**திருநாவுக்கரசர் தேவாரம் காட்டும் வாழ்வியல் நெறிகள்**, பக். 186-209).

## நிறைவாக

- சைவசமயம் நிலைகுன்றிச் சமணமும், புத்தமும் உயர் நிலையடைந்த சமுதாயத்தில் அரசன் எவ்வழிச் செல்கின்றானோ அவ்வழியை மக்கள் மேற்கொண்டு இருந்த காலக்கட்டத்தில் திருஞானசம்பந்தர் மிகு சைவத்துறை விளங்குவதற்காக அவதரித்தவர். உலகிற்கு ஒவ்வாத கொள்கைகளைக் கொண்டு இருந்த சமண சமயத்திலிருந்து பாண்டிய அரசனைச் சைவத்திற்கு மாற்றி மக்கள் சமுதாயத்திற்கு அரும்பணியாற்றி உள்ளார் என்பதை உய்த்துணர முடிகின்றது.

- திருஞானசம்பந்தரின் தேவாரப் பதிகங்கள் பெரும்பாலும் பக்திநெறியை மக்களின் மனங்களில் தோற்றுவிப்பதாக இருந்தாலும், சமுதாய நலன் கருதிய மனிதநேயச் செயல்பாடுகளை மிகுதியாகக் காட்டுகின்றன.

- சைவநெறி தமிழ்மண்ணில் தழைத்தோங்கிய காலக்கட்டத்தில் சைவசமயக் குரவர்கள் நால்வரும் மக்களோடு மக்களாக வாழ்ந்து, நன்னெறி புகட்டி நல்வாழ்வு வாழ வழிகாட்டிய தனித்தன்மை அறியத்தக்கது.

- சமுதாய மக்களுக்காகக் கருணை உள்ளம் கொண்டு, துயர்நீக்கல், இடர்நீக்கல், தீப்பிணிதீர்த்தல், நோய்நீக்கல் போன்ற பல்வேறு அருளிச்செயல்களைத் திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் நிகழ்த்திக்காட்டியுள்ள தன்மை புலப்படுத்தப்பட்டுள்ளது.

- திருமுறைப் பாடல்களின் பயனை வலியுறுத்திச் சமூக மக்களிடையே உயர்வான எண்ணங்களைத் தோற்றுவித்த சமுதாயச் சிற்பிகளாக நாயமார்கள் திகழ்ந்தனர்.

- தனக்காக வாழும் சுயநல வாழ்வில் ஓர் உயிர் அனுபவிக்க முடியாத பேரின்பப் பேற்றினைப் பிறருக்காக வாழும் அர்ப்பணிப்பு வாழ்க்கையின் மூலம் அடைய முடியும் என்பதை அடியார்களின் சமுதாயப்பணிகள் மெய்ப்பித்துக் காட்டுகின்றன.

- இறை வழிபாடு செய்தலே மக்களை நல்வழிப்படுத்தும் என்பதை உணர்த்தியும், காவளர்ப்பதும், குளம்வெட்டி வைப்பதும், கோயில் திருப்பணி செய்வதும் இறைவனோடு சேர்க்கும் முக்திப் பேற்றினைக் கொடுக்கும் வழிமுறைகளாகும் என்பதை மக்களுக்கு உணர்த்தியதோடு மட்டுமல்லாது தாமும் அவ்வழி நின்று வாழ்ந்து காட்டியவர்கள் நாயன்மார்கள் என்பதை அறியமுடிகின்றது.

- உடன்பாட்டு நிலையில் நேரடியாகவும், எதிர்மறை நிலையில் மறைமுகமாகவும் சமயத்தைப் பற்றிய வாழ்வியல் கருத்துக்களை நாவுக்கரசர் எடுத்துக்காட்டியுள்ளார். இவ்வுலக வாழ்வில் யாக்கை, செல்வம், இளமை ஆகியவை நிலையற்றவையாதலால், அவற்றின்மேல் பற்றுக்கொள்ளாது நிலையாமைத் தத்துவத்தை உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதைத் திருநாவுக்கரசர் தேவாரப்பதிகங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

## 3. தொண்டுநெறியில் சுந்தரர்

அறிவன அறிந்து, தெரிவன தெரிந்து நல்நெறிச் சென்று வாழ்தற்குப் பிறப்புரிமை பெற்றவர்கள் மானுடர். அவர்கள் அனைவர்க்கும் அருளின் திறம் உரைக்கும் அருட்செல்வர்கள் நான்கு நெறியினைத் தோற்றுவித்தனர். மக்கள் தம் இயற்கையாய் அமைந்த அன்பின் வழிகளே அந்நான்கு நெறிகளும் ஆகும். ஒன்று ஆண்டான் - அடிமைக்கண் அமைந்த அன்பின் வழி, மற்றொன்று தந்தை மகன்மை அன்பின் வழி, பிறிது தோழமை அன்பு வழி, இன்னுமொன்று குரு சீடன் அன்பு வழி ஆகும். இந் நான்கு வழிகள் சமய நெறியில் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனத் தொண்டின்மேல் வைத்துரைக்கப் படுகின்றன. இவற்றின் வழியாகத் தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம் எனவும் உரைக்கப்படுகின்றன.

அன்பின் வழியினை அருள் ஒழுக்க வாழ்வாய், மொழியால் இவ்வுலகிற்குக் காட்டியவர்கள் நால்வர் பெருமக்கள். இவ்வருளாளர்கள் இறைவனுக்கு அடிமையாகிய பின்னர் நான்கு வழிகளைக் காட்டினர். ஞானப்பால் ஊட்டித் திருஞானசம்பந்தரையும், சூலையூட்டித் திருநாவுக்கரசரையும், ஆளோலை காட்டிச் சுந்தரரையும், ஞானக்கோலம் காட்டி வாதவூரரையும் அடிமை கொண்டார் இறைவன். அந்நால்வருள் ஆரூரராம் சுந்தரர் தோழமை நட்பில் இம்மை வாழ்வைச் செம்மையுற மனை வாழ்க்கையால் விளக்கியவர். இறைவனிடம் யாவும் குறைவறப் பெற்றவர்.

**திருத்தொண்டத்தொகையில்** தம் சமகால அடியவர்கள் சிறப்பையும், தம் காலத்திற்கு முன்னர் வாழ்ந்த அடியார்கள் பெருமையையும் சுந்தரர் குறிப்பிட்டுள்ளார். மட்டுமின்றித் தொகையடியார்கள் குறித்துக் கூறும்போது, எக்காலத்திலும் உள்ள அடியார்கள் பற்றிக் கூறி அவர்களுக்குத் தாம் அடியவர் என்று கூறியுள்ளார். பிறந்த மக்களையும், உடனிருக்கும் மக்களையும் வணங்குவது மானுட மாண்பு. இனிமேல் பிறக்கும் மக்களுக்கும் தான் அடியவன் என்று கூறிச் சுந்தரர் தம் தெய்வமாண்பை நிறுவியுள்ளார். மேலும் அடியார் வழிபாட்டில் சுந்தரரின் ஈடுபாடு இங்குக் குன்றின்மேல் இட்ட விளக்காய் விளங்குகின்றது.

பன்னிரு திருமுறைகளுள் ஏழாம்திருமுறையாக அமைந்துள்ள சுந்தரர் **தேவாரம்**, தன் முன்னுள்ள திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் தேவாரங்கள் சிறப்புக் குறித்துப் பாடுவதாகவும், பின்னர் அமையப் பெற்ற **திருத்தொண்டர் திருவந்தாதி**, **பெரியபுராணம்** முதலான நூல்கள் தோன்றக் காரணமாகவும் அமையும் சிறப்பினைப் பெற்றது. அடியார் வழிபாட்டை முதன்முதலாகத் தொடங்கவும், அடியார்கள் பெருமையினைக் கூறும் **திருத்தொண்டத்தொகையை** அருளவும் பூவுலகில் உதித்தவர் என்று சேக்கிழார் தமது **பெரிய புராணத்துள்** சுந்தரரைக் காட்டியுள்ளார்.

சேக்கிழார் தமது காப்பியத்துள் உள்ள பதின்மூன்று சருக்கங்களுக்கும் முதல், கடை நீங்கலாகத் **திருத்தொண்டத் தொகையின்** பாடலில் உள்ள சிறப்பான வரியை எடுத்துப் பெயர் சூட்டியுள்ளது இங்குக் குறிப்பிடத்தக்கது. சுந்தரரின் வாழ்க்கையின் தொடக்கம் மற்றும் இறுதி நிகழ்ச்சிகளைச் சேக்கிழார் இயற்றியமையால் முதல், இறுதிச் சருக்கங்களுக்குத் தாமே பெயரிட்டார். சுந்தரர் பாடிய பதிகத்திற்கு விளக்கமாய் அமைந்த **பெரியபுராணம்** அடியார்களின் தொண்டினை உலகிற்குப் பறைசாற்றுகிறது.

இறையடியவர்களின் வரலாற்றைப் பக்திச்சுவையோடு கூறும் காப்பியமாகிய சேக்கிழாரின் பெரியபுராணத்தில் வலம் வருகின்ற அடியார்கள் பெருமக்கள் தன்னலம் கருதாது சிவபெருமானுக்கும் சிவபெருமானை வழிபடும் அடியவர்களுக்கும் தம்மால் இயன்ற தொண்டுகள் புரிந்து வழிபட்டு வாழும் இயல்பினை உடையவர்கள். தொண்டர்களின் குரு, இலிங்கம், சங்கம் என்னும் மூவகை வழிபாடுகளில் குருவழிபாட்டு முறையில் சுந்தரரைக் குருவாகக் கொண்டு வழிபட்டோரின் தொண்டு நெறியை உணர்த்துவதாக இப்பகுதி அமைகின்றது. மேலும் தம்மைக் குருவாகக் கொண்ட சிவத்தொண்டர்கள் வாழ்வில் சுந்தரர் பெற்ற இடத்தினையும், சுந்தரரால் தொண்டர்கள் பெற்ற பேற்றினையும் இப்பகுதி உணர்த்துகின்றது.

பிற உயிர்களது நலனுக்காகவும், மகிழ்ச்சிக்காகவும் செய்யப் படுவது தொண்டு எனப்படும். தொண்டானது உலகில் மக்களால் செய்யப்படும் செயல்கள் எல்லாவற்றிலும் மேலானதாகும். தொண்டு செய்தலில் தன்னலம் கிடையாது. தொண்டு என்பதற்கு அடிமைத்தனம் என்றும், கடவுள் வழிபாடு என்றும் பொருள் கூறுவர் (**பிங்கலநிகண்டு சூத்திரம்** 874). இறைவனை வழிபட்டுத் தமக்கென்று முயலாமல், பிறர்பொருட்டு முயலுதலும் தொண்டு எனப்படும் நிலையில் இறைவனுக்கோ, அவனருள் பெற்ற அடியார்க்கோ அவர்பால் அன்புடையார் செய்யும் பணி எனக் கூறுதல் மிகப் பொருத்தமாகும்.

திரு சாமி. தியாகராசன் தம்முடைய **'பெரியபுராணச் சிந்தனை'** என்னும் நூலில் பின்வருமாறு விளக்கம் அளிக்கின்றார். ஒருவன் தன் வாழ்க்கைப் பாட்டிற்காகத் தனக்கோர் ஊதியம் கருதிச் செய்யும் செயல் தொழில் எனப்படும். ஒருவன் பிறருக்குத் தக்கவாறு நடந்து ஓர் எல்லைக்குள் நின்று ஊதியம் கருதியும், கருதாமலும் செய்யும் செயல் கடமை எனப்படும். ஒருவன் தனக்கென எந்த ஒரு எதிர்பார்ப்பும் இன்றி, யாரும் ஏவாமல் அன்பை அடித்தளமாகக் கொண்டு அர்ப்பணிப்பு மனப்பான்மையுடன் தானே முன்வந்து பிறருக்கு உதவி செய்வது தொண்டு (Service) எனப்படும். இவ்விளக்கத்தை நோக்கும்போது உற்றுழி உதவி உறுபொருள் கொடுத்து இன்னுயிர் ஈந்தேனும் உயிர்களுக்கு உதவுதல் தொண்டு எனக் கருதமுடியும்.

பிறர் நன்மையைக் கவனத்தில் கொண்டு அவர் கேட்டும், கேட்காமலும், அவருக்குத் தெரிந்தும், தெரியாமலும் உடலால் உழைத்து உதவினால் அது கைத்தொண்டு என்று போற்றப்படும். **பெரியபுராணத்துள்** உடல் தொண்டிற்கு நாயன்மார்களுள் பலரைச் சான்றாகக் காட்டினாலும், சிவபெருமான் தான் அடியவர்களுக்காகத் தானே இரங்கி உடல் தொண்டு செய்த நிகழ்ச்சிகள் குறிப்பிடத்தக்கன. இவற்றுள் மாணிக்கவாசகருக்காகப் பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படி வாங்கிய நிகழ்ச்சியும், சுந்தரருக்காகப் பரவையாரிடம் இரவில் தூது செல்ல இருமுறை திருவாரூர் வீதியில் நடந்து சென்ற நிகழ்ச்சியும் எண்ணத்தக்கன (ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம், பா. 385).

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் ஒருமுறை தம் உடன் கூட்டத்தாருடன் திருவீழிமிழலையில் தங்கியிருந்தபோது, மழையின்மை காரணத்தால் அங்குப் பஞ்சம் ஏற்பட்டது. அதன் காரணமாக அடியவர்கள் வருந்த, ஆண்டவன் திருஞானசம்பந்தருக்கும், திருநாவுக்கரசருக்கும் பொற்காசு வழங்கினார். திருஞானசம்பந்தருக்கு வழங்கிய காசு சிறிது மாற்றுக் குறையாகவும், திருநாவுக்கரசர் பெற்ற காசு மாற்றுக் குறையாததாகவும் இருந்தன. இதுகண்ட திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் கைத்தொண்டால் பெறும் காசு ஆதலால் அது வாசியில்லாமல் இருக்கிறது என்று கூறினார் (திருநாவுக்கரசர் புராணம், பா.260) எனச் சேக்கிழார் பெருமான் சுட்டிக்காட்டுவதை மனதிற்கொள்ளலாம். **"கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றும் நாமடியோம்"** என்று திருஞானசம்பந்தர் தமது திருச்செங்கொடிமாடச் செங்குன்றூர்ப் பதிகத்தில் பாடுவது இங்குச் சுட்டிக்காட்டத் தக்கது.

# தெய்வத் திருத்தொண்டும் தொண்டர்களும்

‘திரு’ என்பதற்குத் ‘தெய்வத்தன்மை’ என்றும் ‘தெய்வீகம்’ என்றும் கழகத் **தமிழகராதி** (ப.541) பொருள் தருகின்றது. தெய்வீக ஆற்றலின் வடிவமாகத் திகழ்கின்ற இறைவனுக்குச் செய்யும் பணிகளும், அவனருள் பெற்ற அடியார்களாகிய உண்மைப் பக்தர்களுக்குச் செய்யும் பணிகளும் திருத்தொண்டுகள் என்று குறிப்பிடப்படும். உயிர்களிடத்தில் அன்பு கொண்டு அந்த அன்பால் உந்தப்பட்டு உரிய உதவியை முடிந்தவரை செய்வது ; இந்த உதவியை இவ்வாறு செய்வேன் எனக் கொள்கையாக, குறிக்கோளாக ஏற்றுச் செய்வது; ஏற்றுக் கொண்ட செயலை செய்ய முடியாத நிலையில் வருந்துவது; உடலையும் உயிரையும் ஒரு பொருட்டாகக் கருதாது முடிந்த பொழுது உடல் உயிர் இரண்டினையும் தான் செய்யும் தொண்டிற்காக அர்ப்பணிப்பது என்பன திருத்தொண்டின் செயல்களாக முன்வைக்கலாம்.

> திருத்தொண்டின் அடிப்படையில் இறைவனுக்கும் இறைவனது அடியார்களுக்கும் தொண்டு செய்பவர்களைத் திருத்தொண்டர் என்ற சொல் குறிக்கும். தொண்டு நெறியில் நின்றதால் தொண்டர் என்னும் காரணப்பெயர் பெறுவாராயினர். அடிமைத்திறம் அல்லது தொண்டு இந்த இலக்கணப்படி வாழ்கின்றவர் யாவராயினும் அவர்கள் அடியார்கள் அல்லது தொண்டர்கள் என்று கூறப்பெறுவர்

என்று அ.ச. ஞானசம்பந்தன் குறிப்பிட்டுள்ளார் (**பெரியபுராணம் ஓர் ஆய்வு**, ப.216).

திருத்தொண்டர்கள், இறைவனுக்கும், இறையடியார்களுக்கும் செய்யும் மேலான தொண்டு நெறியையே இப்பிறவியில் தாம் பெற்ற பேறு என உணரும் இயல்பினர். உலகியலில் நாட்டம் கொள்ளாது சிவபெருமானுக்கும், அவரது அடியார்களுக்கும் செய்யும் தொண்டே சிறந்த வாழ்க்கைநெறி என்று வகுத்துக் கொண்டவர்கள். தாம் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை மூலம் சமயப் பெருநெறியில் தம்மை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்ட இயல்பினர்.

> **உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்**
> **இறைவரோ தொண்டர் உள்ளத் தொடுக்கம்**

என்பது தொண்டர்களைக் பற்றிய ஔவையாரின் கருத்து (தனிப்பாடல், பா.37). எனவே, இறைவன் தொண்டர்களது உள்ளத்தில் கோயில் கொண்டிருப்பவன் என்ற உண்மையை, உணர்ந்த திருத்தொண்டர்கள்

முதலும் முடிவும், பிறப்பும் இறப்பும் இன்றி விளங்கும் இறைவனை அடியவர்களது வடிவில் கண்டு மகிழ்ந்தனர். 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற முதுமொழிக்கேற்பச் சிவனடியார்களுக்குச் செய்யும் தொண்டினையே சிவபெருமானுக்குச் செய்யும் தொண்டாகக் கருதினார்கள்.

## திருத்தொண்டர்களும் அன்பும்

திருத்தொண்டர்கள் அன்பே சிவமாதலை அறிந்திருந்தனர். அச்சிவமாம் அன்பினை உயிராகக் கொண்டு வாழ்ந்தனர். வாழ்வியல் நெறியில் அன்பின் உயர்ச்சி கண்டனர். அயரா அன்புத்தொண்டு புரிந்தனர். இப்படிப்பட்ட ஆற்றல் மிக்க அன்புத் தொண்டிற்கு இடையூறு நேரும் காலத்தில்,

**யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்** (குறள் எண்:341)

என்னும் குறள்படி, தாம் விரும்பிய பொருள்களை எல்லாம் இழந்து தம் தொண்டினையே நிலை நிறுத்திப் போற்றினர். சிவநேயம் உடையார்க்கு அகக்கருவி, புறக்கருவிகளெல்லாம் சிவவுருவாய் விளங்குமாதலின் அவரைப் பிறப்பு நோக்காது. சிவமாகவே கொண்டு வழிபடல் வேண்டும் என்னும் உண்மையைத் திருநாவுக்கரசர்,

**அங்க மெலாங்குறைந் தழுகு தொழுநோயராயினும்**
**ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்**
**கங்கை வார் சடைக் கரத்தார்க் கன்ப ராகில்**
**அவர் கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே**

(ஆறாம் திருமுறை, 95-10)

என்று சுட்டிக்காட்டியுள்ளார். இங்ஙனம், **'யச் சண்டாள சிவ இதிவேசம்'** என்னும் முண்டகோபநிடத உரையானது எவன் ஒருவன் சிவ என்னும் மொழியைச் சொல்லுகிறானோ அவன் சண்டாளக் குடும்பத்தில் பிறந்தவனாயிருந்தாலும் அவனோடு பேசுக அவனோடு இருக்க அவனோடு உண்க என்று கூறுவதாக மறைமலை அடிகள் சுட்டிக்காட்டும் விளக்கம் இங்கு எண்ணத்தக்கது (**சாதிவேற்றுமையும் போலிச் சைவரும்**, பக்.15-16).

**மால் அற நேயம் மலிந்தவர் வேடமும்**
**ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே**

என்னும் வரிகளில் அடியார்கள், சிவனடியார்களை மட்டுமின்றிச் சிவாலயத்தையும் சிவபெருமான் என்றே வழிபட்ட தன்மை விளக்கப்

பட்டுள்ளது. அப்பூதியடிகள் என்னும் அந்தண அடியார் வேளாளர் குலத்தைச் சார்ந்த திருநாவுக்கரசர் மீது மெய்யன்பு கொண்டு இருந்தது அவர் எவ்விதப் புறவேறுபாடும் காணாது சிவனடியார் என்ற ஒத்த உணர்வுடனேதான் இருந்தார் என்பதை விளக்குகின்றது.

அன்பையே அடித்தளமாகக் கொண்டு தொண்டு செய்யும் தொண்டர்கள் மூவகை வழிபாட்டு நெறிகளைக் கொண்டிருந்ததை, தனக்கு நன்னெறி காட்டும் குருவை வழிபட்டு நிற்பது குருவழிபாடு என்றும், சிவபெருமானை இலிங்க வடிவில் கொண்டு வழிபாடு செய்வது இலிங்க வழிபாடு என்றும், சிவனடியார்களின் கூட்டத்தை வழிபடுவது சங்கம வழிபாடு என்றும் பெரிய புராணம் புலப்படுத்திக் காட்டுகின்றது.

## சுந்தரருக்கு அடியார்கள் செய்த தொண்டு

அடியார்க்கு அடியவரான சுந்தரரை, **பெரியபுராண** அடியார்களுள் குண்டையூர்க்கிழார், கோட்புலியார், சோமாசிமாறர், விறன்மிண்டர், பெருமிழலைக் குறும்பர், ஏயர்கோன் கலிக்காமர் மனைவி முதலியோர் தங்கள் குருவாகக் கொண்டு அவருக்குத் திருத்தொண்டு புரிந்துள்ளனர்.

**தெளிவு குருவின் திருமேனி காண்டல்**
**தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்**
**தெளிவு குருவின் திருநாமம் செப்பல்**
**தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே** (திருமந்திரம்)

என்று குருவையே தெய்வமாகப் போற்றுகின்றது **திருமந்திரம்**. குரு - ஐயந்திரிபற அறவழிகளை நமக்கு எடுத்து உரைக்கும் ஆற்றல் அவனிடம் இருக்க வேண்டும். வழிகாட்டுபவனை நம்பி வழிநடக்கும் வழிப்போக்கனைப் போல் குருவின் உபதேசத்தைத் தானும் ஐயமின்றி மேற்கொண்டு ஒழுகச் சீடன் தலைப்படல் வேண்டும் (ஆறுமுகநாவலர், **இந்துமத விளக்கம்**, ப. 106) என்னும் கூற்றிற்கேற்பச் சுந்தரரைத் தம் வழிகாட்டியாக மேற்குறிப்பிட்ட ஆறு அடியார்களும் ஏற்றுக் கொண்டனர்

## குண்டையூர்க் கிழார் செய்த திருத்தொண்டு

இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்ட சுந்தரரிடம் மிக்க அன்பு பூண்டு வேளாளர் குலத்தில் தலைசிறந்து விளங்கியவர் குண்டையூர்க்கிழார். ஆழ்ந்த, சிறந்த சிவபக்தர். உலகில் தன் அன்பினைப் பலரும் பலவகையில் வெளிப்படுத்திக் காட்டுவர். தாய், தன் குழந்தைக்கு நல்ல கறியமுது படைத்து, தன் அன்பை

வெளிப்படுத்திக் காட்டுவாள். தந்தை பொன்னும், பொருளும் சேர்த்து வைத்து வழங்கித் தமது அன்பை வெளிப்படுத்துவார். இவ்வாறு பல்வேறு உறவுகளும், உறவுகள் அல்லாத மனிதர்களும் தத்தம் அன்பின் திறத்தை ஏதேனும் ஒரு வகையில் வெளிப்படுத்திக் காட்டுவர். அன்பின் வெளிப்பாடே உயிர்களுக்குக் கிடைக்காத பேரின்பத்தைத் தரும் என்பது கண்கூடு.

அப்பூதியடிகள் திருநாவுக்கரசர்மேல் கொண்ட மாறாத அன்பினால் தாம் செய்து வந்த சமுதாயப் பணிகளான தண்ணீர்ப் பந்தர், தங்கும் சத்திரம் முதலானவற்றிற்குத் திருநாவுக்கரசரின் பெயரை இட்டார். மேலும் தமது மகனுக்கும் அவர் பெயரையே இட்டு மகிழ்ந்த காட்சியைச் சேக்கிழார் தம்முடைய திருநாவுக்கரசர் புராணத்தில் காட்சிப் படுத்துகின்றார். இவ்வகையிலும் அடியார்கள் தம் அன்பினை உலகிற்கு எடுத்துக் காட்டிப் பிறர் மகிழக் கண்டு தாம் உள்ளம் மகிழும் நிலையைக் காணமுடிகின்றது. இத்தகு நெறியில் குண்டையூர்க்கிழாரும் சுந்தரர் மீது கொண்ட பக்தி, அன்பின் காரணமாகத் தான் வேளாளர் குலத்தினராதலால் தன்னால் இயன்ற செயலான நெல், பருப்பு, அரிசி முதலானவற்றைச் சுந்தரர் பொருட்டாகப் பரவையார் மாளிகைக்கு நாள்தோறும் அனுப்பி வைக்கும் அரும்பணியை மேற்கொண்டிருந்தார். இச்செய்தியை,

> **செந்நெல்லும் பொன்னன்ன செழும் பருப்பு தீங்கரும்பின்**
> **இன்னல்ல வமுதுமுத லெண்ணில் பெரும் பல வளங்கள்**
> **மன்னிய சீர் வன் தொண்டருக்கு அமுதாக வழுவாமல்**
>
> (ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம், பா.11)

என்று அனுதினமும் தவறாது அவர் செய்து வந்த தொண்டினைச் சேக்கிழார் பாடுகின்றார். சுந்தரரும் அடியார்க்கு அடியார் ஆதலால் அடியார்கள் அன்பு கொண்டு தரும் எதனையும் ஏற்றுக் கொள்ளுதலே தக்க செயல் என்று எண்ணிக் குண்டையூர்க்கிழாார் கொடுத்த பொருட்களை மறுக்காது ஏற்றுக் கொண்டார் என்பதனை இங்கு உய்த்துணரலாம்.

இறைவனுக்குச் செய்யும் தொண்டாயினும் தாமே அதற்குக் காரணம் என்னும் சிறு அகந்தைகூட மனிதனுக்குத் தோன்றிவிடக் கூடாது என்பதற்காக வழிபாட்டிற்கும் தொண்டிற்கும் இடையூறு ஏற்படுத்துவது இறைவனின் திருவிளையாடல் ஆகும். குண்டையூர்க்கிழார் செய்துவந்த அடியார் வழிபாட்டை உலகிற்கு அறிவிக்கும் வகையில் இறைவன் திருவருளால் குண்டையூரில் மழை தப்பிப் பஞ்சம் ஏற்பட்டது. அதனால் குண்டையூர்க்கிழார் வழிபாட்டிற்கு

இடையூறு நேர்ந்தது. **'கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை நீட்டி அளப்பதோர் கோல்'** என்னும் குறள் (எண் 796) மொழிக்கேற்பத் துன்பத்தில்தான் உண்மையான அன்பின் ஆழத்தை அறிய முடியும். பிறருக்கு உணர்த்தவும் முடியும். வளமாக இருக்கும்போது அன்பு செலுத்துவதே அரிய செயல். அவ்வரிய அன்பின் உயர்வை, அன்பின் ஆழத்தைப் பிறர் அறிவதற்காகவே, இறைவன் அடியவர்கட்குத் துன்பத்தைச் செய்து ஒளிவிடச் செய்கிறான். இதனை,

> **சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடுந் துன்பம்**
> **சுடச்சுட நோற்கிற் பவர்க்கு** (குறள் எண்:267)

என்னும் குறளால் அறிய முடிகின்றது. இறைவனின் மேல் மிகுந்த நம்பிக்கையும் பற்றும் கொண்ட அடியார்கள் தமக்கு நேர்ந்த துன்பத்திற்காக வருந்தவில்லை என்பதும், இறைவனுக்கோ அல்லது இறையடியார்களுக்கோ செய்ய வேண்டிய தொண்டாகிய பணிக்குத் தடைவந்து விட்டதே என்று மட்டுமே வருந்திய நிலைகள் மூலம் தொண்டில் சிறந்த உள்ளங்களைக் காணமுடிகின்றது.

குண்டையூர்க்கிழார் தம் ஊரில் ஏற்பட்ட பஞ்சத்தால் தம் வழிபாட்டில் குறையுண்டானது நினைத்துத்தான் வருத்தம் கொண்டார். தம் குறை நீக்க இறைவனிடம் பலவாறு புலம்பி முறையிட்டார். உணவும் உண்ணாது உறங்கச் சென்றார். தம் செயலுக்கு ஏதேனும் இடையூறு வரும் பொழுது வேறு சிந்தனை எதுவுமின்றி அச்செயல் குறித்தே நினைத்தலும், தம் அன்றாடச் செயல்களைக் கூடச் சரிவரச் செய்யாது இருத்தலும் மனிதர்கள் இயல்பு. அடியவரான குண்டையூர்க் கிழாரும் சுந்தரருக்காகச் செய்து வந்த சிவப்பணிக்கு இடையூறு நேர்ந்த போது எதுவும் செய்யாது இடையூறு நீக்க இறைவனிடம் வேண்டி நின்றதை உணரலாம். உணவு உண்ணாது கிடத்தல் மனத்துயரம் காட்டுவதற்கு அறிகுறியாகும் என்பது உளவியலாளர் கருத்து ஆகும் (மு.இஸ்மாயில், **மனம் ஒரு பார்வை**, ப. 52). இதனை உலகியலாளரும் உணர்வர். சேக்கிழாரின் உளவியல் நோக்கும், தொண்டர்களின் மனப்பாங்கும் இவ்விடம் நன்கு புலப்பட்டுள்ளன. உயிர் இவ்வுடலில் நிலைபெற்றால் மட்டுமே தொடர்ந்து அறங்களைச் செய்ய முடியும் என்னும் நிலையில், உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் ஆதலால் உணவு யாக்கைக்கு இன்றியமையாத ஒன்றாகிறது. இறைப்பணிக்குத் தடை நேர்ந்த போது தம் யாக்கையைப் பற்றியோ உயிரைப் பற்றியோ சிறிதும்கூட நினைத்துப் பார்க்காத மெய்யன்பர்கள் உணவையும் வெறுத்த நிலையைச் சேக்கிழார் பதிவுசெய்துள்ளார்.

## இறைவன் அருள் புரிதல்

குண்டையூர்க்கிழார் கனவில் இறைவன் எழுந்தருளி ஆரூரனுக்காக உனக்கு நெல் தந்தோம் என்று கூறினார். இவ்விடத்தில், **தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்றல் அரிது** என்ற குறள்கருத்து (எண் 7) சிந்திக்கத்தக்கது. குண்டையூர்க்கிழார் தமக்காகவோ, தம்மைச் சார்ந்தவர்களுக்காகவோ, இறைவனிடம் சென்று பஞ்சம்குறித்தும், நெல்வளமின்மை குறித்தும் முறையிட்டுப் புலம்பவில்லை. அவர் சுந்தரருக்காக இறைவனிடம் முறையிட்டார். எனவே, இறைவன் சுந்தரருக்காக உனக்கு நெல் தந்தோம் என்று கூறி நெல் கொடுத்தார். இவ்விடத்தில் குண்டையூர்க் கிழாரின் சிவத் தொண்டின் வலிமை வெளிக்காட்டப்பட்டுள்ளதை உணரலாம். இறைவன் அன்றிரவே, குபேரனைக் கொண்டு அவ்வூர் முழுவதும் நெல்லினை நெல்மலையாகக் குவித்தார். இழையான்குடி மாற நாயனார் வரலாற்றிலும் (**பெரியபுராணம்**, பா.463), குங்கிலியக் கலய நாயனார் வரலாற்றிலும் (**பெரியபுராணம்**, பா.844) குபேரனைக் கொண்டு சிவபெருமான் அருளிய தன்மை இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. மேலும் இவ்விரு நாயன்மார்களின் சிவத்தொண்டிற்கு ஒப்பானதாகக் குண்டையூர்க்கிழார்தொண்டு போற்றப் பட்டுள்ளதையும் இங்கு உணரலாம்.

## தொண்டு உள்ளங்களின் சந்திப்பு

குண்டையூர்க்கிழார் வானமளாவும் நெல் மலையைக் கண்டு அதிசயித்து நின்றார். எவ்வுலகின் நெல்மலைதானிது என்று வியந்தார். மறுநொடி இதனை எடுத்துச் செல்ல யாவரால் முடியும் என்று ஐயம் கொண்டார். பின்னர் நேரே சுந்தரரிடம் சென்று இச்செய்தியினைக் கூறிவிட எண்ணித் திருவாரூர் விரைந்தார். திருவாரூரில் தங்கியிருந்த சுந்தரருக்குக் குண்டையூர்க்கிழார் வரும் செய்தியினையும், நெல் அளித்த செய்தியினையும் இறைவன் முன்னரே அறிவித்து இருந்ததனால் சுந்தரரும் குண்டையூர்க்கிழாரைக் காணக் குண்டையூர் நோக்கி விரைந்து சென்றார்.

அடியார்க்கும் அடியாரான சுந்தரர் தனக்குத் தொண்டு புரிந்து மகிழ்ந்த குண்டையூர்க்கிழாருக்கு இறைவன் அருள் செய்த செயலினைக் காணும் விருப்பம் மிக்க உள்ளம் பெற்றவராகத் திகழ்ந்ததையும், பிறர் இன்பம் கண்டு மகிழும் உள்ளம் பெற்றிருந்ததையும் அறிய முடிகிறது.

குண்டையூர்க்கிழார் இறைவன் தம்மிடம் நெல்மலையை அளித்துள்ளது கண்டு, தாமே அதனை வைத்துக் கொள்ளாது அதற்கு உரியவரான சுந்தராரிடம் சென்று கூற வேண்டும் என்று விரைந்து செயல்பட்டது அவரது நேர்மையான உள்ளத்தினையும், தாம் செய்து வந்த தொண்டிற்கு ஏற்பட்ட இடையூறு நீங்கப் பெற்றதால் மகிழ்வு கொண்ட நிலையையும் எடுத்துக் காட்டியுள்ளது.

குண்டையூர்க்கிழாருக்குச் செய்த அருளினை இறைவன் சுந்தரருக்கு உணர்த்திய செயலானது, திருவரத்துறையிறைவர் முத்துச்சிவிகை, முத்துச் சின்னங்கள் முதலியனவற்றைத் திருஞானசம்பந்தருக்கு அருளி அதனை அடியவர்களுக்கும், பிள்ளையாருக்கும் அறிவித்த நிகழ்ச்சியுடன் ஒப்பு நோக்கத் தக்கதாகும் (**திருஞானசம்பந்தர் புராணம்**, பா. 197,199). இறைவன் மெய்யடியார்களுக்குச் செய்யும் அருளில் ஏற்றத் தாழ்வு காட்டுவதில்லை என்பதை உணர்ந்து கொள்ளமுடிகிறது.

குண்டையூர்க்கிழாரும், சுந்தரரும் எதிரெதிர் கண்டுகொண்டனர். சுந்தரருடைய திருவடியில் குண்டையூர்க்கிழார் நிலமுற விழுந்து தொழுதார். சுந்தரரைத் தமது வழிகாட்டியாகக் கொண்டு சிவப்பணிபுரிந்து வந்த குண்டையூர்க்கிழார், நேர் எதிரே அவரைக் கண்டதும் மகிழ்ந்த தன்மையும், அவரைப் பணிந்து போற்றும் உள்ளமும் இச்செயலால் வெளிப்பட்டுள்ளன.

## சுந்தரரின் உள்ளமும் ஆள் கேட்டலும்

இறைவன் திருவருளைக் கிழார் சுந்தரருக்குத் தெரிவிக்க, சுந்தரரோ, சிவபெருமான் அருள்சுரந்து இந்நெல்லினை உமக்கு அளித்தார் என்று இனிய மொழிகள் கூறிக் குண்டையூருக்குக் கிழாருடன் சென்றார். சுந்தரரின் இச்செயல் இறைவன் தனக்காகத் தோழனாய் இருந்தும், அதற்காகக் கர்வமோ, அடியார்கள் மேல் அலட்சியமோ படாத குணத்தையும், இறைவன் தனக்காக நெல்லினைத் தன்னிடம் அளிக்காது குண்டையூர்க் கிழாருக்குக் கொடுத்தது, கிழாரைச் சிறப்பிக்கும் நோக்கமே என்ற இறைவன் எண்ணத்தினை உள்ளவாறே புரிந்துகொள்ளும் மனநிலையையும் பெற்றிருந்ததை உணர்த்துகிறது.

நெல்மலையைக் கண்டு வியந்த சுந்தரர் அதனை மனிதர்களால் எடுத்துச் செல்ல முடியாது என்பது உணர்ந்து, இறைவனையே அதற்கும் வேண்டி நின்றார். சுந்தரர் தம்முடைய திருக்கோளிலி தேவாரத் திருப்பதிகத்தில் குண்டையூரில் கிடைக்கப் பெற்ற நெல் மூட்டைகளை அட்டியலிட்டுத் தருமாறு இறைவனிடம் வேண்டுகின்றார்.

**நீள நினைந்தடி யேனுடை நித்தமும் கைதொழுவேன்**
**வாளன கண்மட வாளவள் வாடி வருந்தாமே**
**கோளிலி எம்பெரு மான்குண்டை யூர்ச்சில நெல்லுப்**
**பெற்றேன் ஆளிலை என்பெரு மானவை அட்டித்**
**தரப்பணியே**

**சொல்லுவ தென்னுனை நான்தொண்டை வாயுமை**
**நங்கையைநீ**
**புல்கி இடத்தில்வைத் தாய்க்கொரு பூசல்செய் தாருளரோ**
**கொல்லை வளம்புற விற்குண்டை யூர்ச்சில நெல்லுப்**
**பெற்றேன்**
**அல்லல் களைந்தடி யேற்கவை அட்டித் தரப்பணியே**

(சுந்தரர் தேவாரம், திருக்கோளிலிப் பதிகம், பா.1, 7)

என்றும் சுந்தரர் இறைவனிடம் விண்ணப்பம் செய்கின்றார். அப்போது பகற்பொழுது கழிந்தற்பின் குறட்பூதங்கள் வந்து நெல்மலையை இடம் மாற்றும் என்று வானில் அசரீரி கேட்டது. அங்ஙனமே அன்றைய இரவில் திருவாரூர் வீதி முழுவதும் ஆட்கள் இயங்கா வண்ணம் நெல் நிரம்பியது (**ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம்**, ப.21).

காலை எழுந்து நெல்மலையைக் கண்ட ஆரூர் மக்கள் அதிசயித்தனர். பரவையாரும் நெல் மலையைப் பார்த்து இறைவனருள் என்று உணர்ந்து மகிழ்ந்தார். பிறகு தங்கள் தங்கள் மனையளவில் உள்ள நெல்லினை எடுத்துக் கொள்ளுங்கள் என்று பரவையார் முரசறையச் செய்தார். குண்டையூர்க்கிழார் தம் ஊரான குண்டையூரிலிருந்து தினமும் நெல் முதலான பொருட்களை அனுப்பிச் சுந்தரருக்குத் தொண்டு செய்ததைத் திருவாரூர் மக்கள் முழுவதும் அறிந்தனர்.

பெரியோர் தாம் செய்யும் செயலை மற்றவர்களுக்கு விளம்பரப் படுத்த மாட்டார்கள். உதவியும் தொண்டும், செய்பவரால் விளம்பரப்படுத்தப்பட்டால் அவற்றின் சிறப்பு குறைந்துவிடும். எனவே, குண்டையூர்க்கிழாரின் இத்தொண்டு நெறியை மக்களுக்கு எடுத்தியம்புவதற்காகத் திருவாரூர் வீதியில் ஆள் இயங்காவண்ணம் நெல் மலை இறைவனால் குவிக்கப்பட்டது. அதன்மூலம் மக்கள் குண்டையூர்க்கிழாரின் தொண்டினை அறிந்தனர். இடையூறின்றித் தாம் செய்யும் தொண்டிற்குத் தடை வரின் அடியார் வருந்துவர். அடியார் வருத்தம் தீர இறைவன் அருள் புரிவான். பரவையார் கொடைத்திறன், சிறப்புப்பெற்ற அடியார்களைப் பெற்ற சுந்தரர் பெருமை, இறைவனருள் பெற்ற தொண்டரும் சுந்தரரைத் தம் குருவாக எண்ணி வழிபட்டிருக்கும் சிறப்பு முதலானவை சேக்கிழாரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## சோமாசி மாற நாயனாரின் திருத்தொண்டு

சோமாசி மாறர் சோழ நாட்டில் திரு அம்பர் என்னும் தலத்தில் வேதம் பயிலும் மறையாளர் குலத்தில் பிறந்தவர். இவர் சிவபெருமான் மீது மிகுந்த பக்தி கொண்டிருந்தார். சிவயாகங்களை வழுவாமல் செய்து வந்தார். சிவனடியார்களுக்கு அமுதூட்டும் பணியைத் தம் தொண்டாக மேற்கொண்டு ஒழுகினார்.

வேதாகமங்களில் விதித்தவாறு சிவயாகங்களை நியமநியதியாகச் செய்யும் மறையோர்கள் சோமாசி (சோமயாசி) என்ற பட்டப் பெயர் பெறுவர். மாறர் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் அவ்வாறே நியமநியதியுடன் சிவயாகங்களைச் செய்தமையால் சோமாசி மாறர் என்று பெயர் பெற்றார். சுந்தரரும் தமது **திருத்தொண்டத்தொகையில்** இவரைக் குறிப்பிடும் போது அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

சைவ சமயச் சாதனங்கள் திருநீறு, கண்டிகை, திருவைந்தெழுத்து என மூன்று ஆகும். நீற்றினை மெய்யில் பூசி, கழுத்தில் கண்டிகை அணிந்து, திருவைந்தெழுத்தாகிய பஞ்சாட்சரத்தை ஒருமை உள்ளத்துடன் தியானிப்பது சிவனடியார்கள் வழக்கம். சான்றாக, திருமூலர், உருத்திர பசுபதி நாயனார் போன்றோரைக் குறிப்பிடலாம்.

திருமூலர், திருவைந்தெழுத்தை நாளும் மனதுள் ஓதி, திருவாவடுதுறையில் மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்தில் இருந்தார். ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும் ஒவ்வொரு பாடலாக. மூவாயிரம் பாடல்களைப் பாடி, திருமந்திரம் என்னும் அருள் நூலைத் தந்துள்ளார் (திருமூலநாயனார் புராணம், பாக். 24,27).

உருத்திர பசுபதி நாயனார் என்னும் அந்தணர்குல அடியவர் நித்தம் ஒரு குளத்தில் கழுத்தளவு நீரில் நின்று ஸ்ரீருத்திரம் என்னும் மகா மந்திரத்தை ஒருமை உள்ளத்துடன் தியானித்து அரனடிக்கு அன்பரானார் (உருத்திரபசுபதி நாயனார் புராணம், பா.7). இவர்களைப் போன்றே சோமாசி மாறர் யாகங்கள் புரிவதோடு அல்லாமல் சித்தத்தில் சிவனின் திருவைந்தெழுத்தை நாளும் ஓதும் வழக்கம் கொண்டிருந்தார். அதன் பயனாகச் சுந்தரர் மீது அன்பு கொண்டார். சுந்தரர் பற்றிய பெருமைகளை மேலும், மேலும் கேட்டறிந்தார். அன்பும், ஆர்வமும் பெருகச் சோமாசிமாறர் சுந்தரர் இருக்கும் திருவாரூரை நாடிச் சென்று, சுந்தரரைக் கண்டு அவர் திருவடிகளைப் போற்றிச் சிவபதவி பெற்றார்.

திருவைந்தெழுத்தை ஓதியதின் பயனாகச் சுந்தரர் பற்றிய செய்திகளைக் கேட்டறிந்தார் சோமாசி மாறர் என்று சேக்கிழார்

குறிப்பிடுவதிலிருந்து சுந்தரரின் பெருமையையும், சோமாசிமாறர் பெற்ற பேற்றினையும் இங்கு உணரமுடிகிறது. அடியார்கள் மற்ற அடியார்களை நேரில் கண்டு, அவர்கள் திறம் வியந்து மட்டுமே மதிப்பும், மரியாதையும், பக்தியும், நட்பும் கொள்வர் என்பதல்லாமல் அடியார்கள் பெருமையைக் காதால் கேட்டவழியும் பேரன்பு கொண்டு வழிபடுவர் என்ற உண்மையும், திருவைந்தெழுத்து சிறந்த வழியைக் காட்டி வாழ்விக்கும் என்ற மெய்மையும், சுந்தரர் பெருமையும் சோமாசி மாறர் வழி அறிந்துகொள்ள முடிகின்றது.

## கோட்புலி நாயனாரின் திருத்தொண்டு

மக்கள்பேறு என்பது மனிதனுக்கு வாய்க்கப்பெற்ற பேறுகளுள் எல்லாம் சிறப்பானதொன்று.

படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப் பெருஞ் செல்வராயினும் இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லை தாம்வாழு நாளே

(புறநானூறு, பா.எண். 188)

என்ற **புறநானூற்றுப்** பாடல் மக்கள்பேற்றின் சிறப்புக் குறித்துக் கூறியுள்ளது. இப்பேற்றினைக் குறையறப் பெற்று வாழ்ந்தவர் சோழநாட்டில் திருநாட்டியத்தான் குடியிலே பிறந்த கோட்புலி என்பவர். இவர் சேனாதிபதித் தொழில் புரிந்து வந்தார். தமது தொழில் மூலம் பெற்ற செல்வத்தில் கோயிலுக்கு நெல் வாங்கித் திருவமுது செய்விப்பதைத் தொண்டாகக் கொண்டு ஒழுகியவர். இவரது மகள்கள் சிங்கடி, வனப்பகை என்பவர்கள். அழகும், அறிவும் கொண்ட இம்மக்கள் மேல் கோட்புலியார் பெருவிருப்பம் கொண்டவர். அம்மகளிரும் தம் தந்தையின் சிவவழிபாட்டிற்குக் குறைவின்றி நடக்கும் நன்மக்களாய் அமைந்தனர்.

## சுந்தரர் மீது கொண்ட அன்பு

கோட்புலியார் சிவன்பால் பற்றுக்கொண்டிருந்ததோடு, சிவனால் தடுத்தாளப் பெற்ற சுந்தரர் மீதும் பெரும்பற்று வைத்திருந்தார். திருவாரூரில் சுந்தரர் தங்கியிருந்த ஒரு சமயம், கோட்புலியார் திருவாரூர் சென்று சுந்தரரைக் கண்டு தொழுதார். பின்னர்த் தம் ஊரான

திருநாட்டியத்தான் குடிக்கு வருமாறு சுந்தரரை வேண்டினார். சுந்தரரும் அவர் வேண்டுகோளுக்கு இசைந்தார்.

நல்லதொரு தொண்டர் தம்மை வழிபடுத்துபவரை நாடிச் சென்று காண்பது இயல்பு. அதற்கேற்ப, கோட்புலியார் திருநாட்டியத்தான் குடியிலிருந்து திருவாரூர்வரை சென்று சுந்தரரைக் கண்டு வணங்கினார். சுந்தரர் கோட்புலியார் அழைக்க, சம்மதித்த பாங்கு கோட்புலியார்மீது அவர் கொண்ட மதிப்பினைக் காட்டுகிறது.

ஒருமுறை பல தலங்களுக்குச் சென்ற சுந்தரர் திருநாட்டியத்தான் குடியைச் சென்றடைந்தார், சுந்தரர் வருகை கண்டு கோட்புலியார் மிக்க மகிழ்ச்சி கொண்டார். அவரை மகிழ்வுடன் வரவேற்று அவர் சேவடிகளைப் பனிநீர் முதலானவற்றில் நன்கு கழுவினார். கழுவிய நீரைக் கோட்புலியார் தம் மீதும், தம் மாளிகை மீதும் தெளித்துத் தூய்மைப்படுத்திக் கொண்டார்.

இறைவன் உருவத்திற்குத் திருமஞ்சனமாட்டிய நீரைப் பக்தர்கள் தங்கள் மீது தெளித்துக் கொள்வதை இன்றும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். இங்கு இறைவன் அடியவரான சுந்தரர் மீது அன்பு கொண்டவரான கோட்புலியார் சுந்தரர் பாதத்தினைச் சுத்தம் செய்த நீரை அவர் மீது கொண்ட பேரன்பினால் தம் மீதும் தம் மாளிகைமீதும் தெளித்துக் கொண்ட பாங்கு கோட்புலியார் சுந்தரர் மீது கொண்ட பக்தியை விளக்குகிறது. மேலும் பல வித அர்ச்சனைகளைச் சுந்தரருக்குப் புரிந்து கோட்புலியார் மகிழ்ந்தார். தம் அடியவர் மகிழும் வண்ணம் கோட்புலியார் செய்த அனைத்து உபசரணைகளையும் சுந்தரர் ஏற்றுக் கொண்டார். இது சிவனடியார்களுக்குத் தொண்டு செய்வதோடன்றி, அடியார்க்கு அடியார்களை வழிபடுவதால் உண்டாகும் மகிழ்ச்சியினைச் சுந்தரர் உணர்ந்து கோட்புலியார்க்கு அதனை வழங்கியதைக் காட்டுகிறது.

## கொடையும் உள்ளமும்

கோட்புலியார் தம் இல்லத்தில் எழுந்தருளிய சுந்தரருக்கு நல்விருந்து அளித்து மகிழ்ந்தார். இத்தனையும் அன்புடன் செய்த அடியாருக்கு மனம் குளிரவில்லை. தம் உள்ளங்குளிர யாதானும் அரிய பொருளை அவருக்குத் காணிக்கையாக்கத் துடித்தார். ஒருவர்மேல் கொண்ட அன்பினால் அவருக்குப் பரிசு தர எண்ணுவோர் பொன்னோ, பொருளோ தர விரும்புவர். பரிசுப்பொருள் கொடுப்பவர், தம் உள்ளம் விரும்பிய பொருளையே தேர்ந்து எடுக்கும் இயல்பினைக் கொண்டிருப்பர்.

கோட்புலியார், தாம் விரும்பத்தக்க விலைமதிப்பற்ற பொருள் அவரின் மக்களைத் தவிர வேறெதுவும் சிறந்ததில்லை என்று உணர்ந்தார். ஆகவே, அவர்களை நன்றாக ஒப்பனை செய்து அழைத்து வந்தார். சிங்கடியாரும், வனப்பகையாரும் சுந்தரரை வணங்கி நிற்க, கோட்புலியார் சுந்தரரைப் பணிந்து அடியேன் பெற்ற மக்கள் இவர். இவர்களை அடிமைகளாக ஏற்றருளித் தங்கள் திருவடிகளை இவர்கள் தொழுதுய்ய அருள்புரிவீர்கள் என்று ஆர்வம் பெருகவேண்டினார் (ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம், பா.39).

கோட்புலியார் சேனாதிபதியாதலால், அமைச்சர், சேனாதிபதி முதலியோர் மகளிரை அரசர் மணக்கும் வழக்கினை அறிந்திருந்தார். எனவே தம் மக்களிருவரையும், பரவையாரின் கணவரான சுந்தரரிடம் அவர் மணந்து கொள்ளவேண்டும் என்ற கருத்தில் அடிமை கொள்ளும்படி சுந்தரரை வேண்டி நின்றார்.

கோட்புலியார், சுந்தரரை ஓர் அரசராகவே எண்ணினார். **'நங்கோமானை நாசலூர் நகரார் வேந்தை'** (ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம், ப.37) என்று சுந்தரரை அவர் குறிப்பிடுவதிலிருந்து இதனை அறியலாம். மேலும் இவ்விடம், **'பெருஞ்சாலரசர் காதற் பிள்ளையாய்'** (தடுத்தாட்கொண்ட புராணம், பா. 152) என்று சுந்தரர் அரசிளங்குமரனாய் வளர்ந்த தன்மையும் எண்ணத்தக்கது.

ஆடவர் பல மகளிரை மணக்கும் வழக்கம் கோட்புலியார் காலத்தில் நிலவியதால், பரவையாரைக் காதல் மணம் புரிந்து மனமகிழ்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும் சுந்தரருக்கு, அவர் மனம் விரும்புமாறு தம் மக்களை மணமுடிக்கக் கருதினார். பரிசுப் பொருள் கொடுப்பவருக்கு மட்டுமின்றிப் பெறுபவருக்கும் விருப்பமாய் இருக்கவேண்டும் என்ற எண்ணத்தைக் கோட்புலியார் கொண்டிருந்ததை இங்கு அறியலாம். திருஞானசம்பந்தரிடம் சிவநேசச்செட்டியார் தமது மகளான பூம்பாவையினை மணக்கக் கூறியவாறே கோட்புலியாரும் சுந்தரரிடம் தமது மகள்களை மணக்கவேண்டினார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

கோட்புலியாரின் கொடைத்திறம் கண்ட சுந்தரர் அவரின் அன்புகண்டு மனம் உருகினார். அப்பெண்களிருவரையும் தமது அருகில் அழைத்து இவர் எனக்குத் தூய மக்கள் என்று கூறி அப்போதே அவர்களைத் தம் புதல்வியராக ஏற்றுக் கொண்டார்.

ஒருவர் தந்த கொடைப்பொருளைப் பெறுபவர், அப்பொருளை ஏற்றுக் கொண்டாலன்றி, கொடை முற்றுப் பெறுவதலில்லை. எனவே,

கோட்புலியார் கூறியவாறே அடிமையாகக் கொண்டருளுதலும், மலர்த்தாள் தொழுது உய்யச் செய்தலும் என்ற இரண்டும் மகண்மை முறையினும் பொருந்துமாதலால் கோட்புலியார் தந்த கொடையைச் சுந்தரர் மறுக்காது ஏற்றுக் கொண்டார் என்று உணரலாம்.

சுந்தரர், கோட்புலியாரிடம் சிங்கடியையும், வனப்பகையையும் தன் மக்களாகக் கொள்கிறேன் என்பதை அவர் மனம் வாடாதிருக்க மட்டும் கூறாது, உள்ளன்புடன் அவர்களைத் தன் மக்களாகவே கொண்டு கூறினார். இதனை அம்மக்கள் இருவரையும் தன் தொடையின் மேல் இருத்தி உள்ளம் கசிந்து, கண்ணில் நீர் மல்கி, உச்சி மோந்த அவரது செயல் விளக்கியது. மேலும், தம் தேவாரப் பதிகங்களுள் சிங்கடியப்பன் (சுந்தரர் 7:37-10) வனப்பகையப்பன் (சுந்தரர் 7:52-12) என்று குறிப்பிட்டுக் கொள்வது சுந்தரர் உள்ளத்தை வெளிப்படுத்துகிறது.

சுந்தரர் கோட்புலியார் மீது கொண்ட மதிப்பினால் திருநாட்டியத்தான்குடி திருத்தலம் சென்று இறைவனைப் போற்றிப் பாடிய பதிகத்துள் கோட்புலியார் குறித்துப்பாடியுள்ளார். இது

**கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற**
**கொடிறன் கோட்புலி சென்னி**
**நாடார் தொல்புகழ் நாட்டியத்தான் குடி** (சுந்தரர், 7:15-10)

என்னும் தேவாரப்பாடல் வரிகளால் விளங்கும். பகையரசரை, அவர் எதிர்ப்பட்ட போழ்து தப்பிப்போக விடாது வென்ற கொடிறு போல்பவர் கோட்புலி நாயனார் என்று கோட்புலியாரின் திறனைச் சுந்தரர் விளக்கியுள்ளார்.

தொண்டர்கள் தம் குருவை அவர் இருக்கும் இடம் நாடிச் சென்று காண்பர். தம் இருப்பிடத்திற்கு வரும் குருமார்களை மகிழ்ச்சி பொங்க வரவேற்று உபசரிப்பர். தம் குருமார்களுக்கு அவர்கள் விரும்பும் பொருளைக் கொடைப் பொருளாகக் கொடுக்க வேண்டும் என்று ஆர்வம் கொண்டிருப்பர். அப்பொருள் பொன்னோ, பொருளோ மட்டுமல்ல, தம் உயிரினுஞ்சிறந்த புதல்வியராயினும் கொடுப்பதற்கு மனமுவந்து நிற்பர் என்னும் செய்திகள் கோட்புலியார் வழி அறியப்படுகின்றன. சுந்தரர் தமது அடியார்கள் தரும் கொடைப் பொருளை உரிய முறையில் பெற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் படைத்தவராக இருந்தார். அடியார்கள் மனம் வருத்தம் கொள்ளுமாறு அவர் நடந்து கொள்ள விரும்பவில்லை. அன்பும் அருளும் இயல்பாகவே கொண்ட உள்ளம் கொண்டிருந்தார் சுந்தரரின் இப்பண்புகள் கோட்புலியார் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## விறன்மிண்ட நாயனாரின் திருத்தொண்டு

விறன்மிண்டநாயனார் சேரர்களுக்குரிய மலைநாட்டில் திருச்செங்குன்றூரில் வேளாள மரபில் பிறந்தவர். இவர், சிவபிரான் திருவடிகளையே பற்றாகக் கொண்டு மற்ற பற்றுகளை விடுத்து மெய்யடியார்களிடத்து அன்புடையவராகத் திகழ்ந்தார். இவர் மெய்ப்பொருள் நாயனார்போல் அல்லாது சிவவேடத்தை மட்டும் சிந்தை செய்யாது, உண்மையன்பைச் சிவவேடத்துடன் உடன் சேர்த்தி எண்ணி அன்பு செலுத்தியவர். இதனை, மெய்ப்பக்தர்பாற் பரிவுடையார் எம்பிரானார் விறன்மிண்டர் என்று சேக்கிழார் கூற்று வழி அறியலாம் (விறன்மிண்ட நாயனார் புராணம், பா.4).

இறைவன் எழுந்தருளிய தலங்களுக்குச் சென்று இறைவனைப் பணியும் முன்னர் அங்குள்ள அடியார்களின் திருக்கூட்டத்தைப் பணியும் நியதி கொண்டவர். ஒருமுறை இவர் திருவாரூர் இறைவனை வணங்கி அங்குள்ள தேவாசிரிய மண்டபத்துள் இருந்தார். சுந்தரர் திருவாரூர் இறைவனை வணங்கத் திருவாரூர் கோவிலுக்கு ஒருமுறை சென்றார். இறைவனைக் கண்டு வழிபடும் எண்ணத்துடன் சென்ற சுந்தரர், இங்குத் தேவாசிரிய மண்டபத்துள் கூடி எழுந்தருளி இருக்கும் அடியார்களுக்கு என்னை அடியேனாகப் பண்ணுநாள் எந்நாளோ? என்று சிந்தித்துக் கொண்டே திருக்கோவிலுள் சென்றார்.

திருவரங்கத்தில் உள்ள திருமாலைக் காணும் நாள் எந்நாளோ? அவனுடைய அடியார்களோடு கூடி மகிழ்வு எய்தும் நாள் எந்நாளோ? என்று பாடிய குலசேகராழ்வார் இங்கு எண்ணத்தக்கவர் (பெருமாள் திருமொழி, இருளியச் சுடர்மணிகள், பாக்.1-11).

நீர்பூத்த வேணி நிலவுஎறிப்ப மன்று ஆடும்
கார்பூத்த கண்டனை யான் காணுநாள் எந்நாளோ

பொன்ஆரும் மன்றுள் மணிப் பூவிழி வண்டுசுற்றும்
என்ஆர் அமுதின்நலம் இச்சிப்பது எந்நாளோ

கருமுகம் காட்டாமல் என்றும் கர்ப்பூரம் வீசும்
திருமுகமே நோக்கித் திருக்குஅறுப்பது எந்நாளோ

ஆறுசமயத்தும் அதுஅதுவாய் நின்று இலங்கும்
வீறுபரை திருத்தாள் மேவுநாள் எந்நாளோ

(தாயுமானசுவாமி பாடல்கள், பக்.343)

என்னும் தாயுமானவரின் எந்நாட்கண்ணிப் பாடல் இங்கு ஒப்புநோக்குதற்குரியது. அடியார்கள் எத்திசையில், எவ்வகை

வழிபாட்டில் ஈடுபட்டவராய் இருப்பினும் ஒரே மனப்பான்மையைக் கொண்டிருந்ததை இங்கு உணரலாம்.

இறைவனை வணங்குதலும், அடியாரைப் போற்றுதலும் திண்மை என்ற விதிப்படி வாழ்ந்து கொண்டிருந்த விறன்மிண்டர், தாமும் இவ்விதியில் வழுவாமலும், பிறர் இதில் வழுவக் கண்டபோது வற்புறுத்தி விறலும், மிண்டும் கொண்டு அவர்களைத் திருந்தச் செய்யும் இயல்பும் கொண்டிருந்தார். எனவே அடியார்களைப் பணியாது கோவிலுள் புகுந்த சுந்தரர் மீது சினம் கொண்ட நிகழ்ச்சியில் விறன்மிண்டர், சுந்தரர் இருவரின் மன நிலைமையைக் காணும்போது, இரண்டு பேரும் அடியார்களைப் பணிவதைப் பற்றியே எண்ணினர் என்பது விளங்குகிறது.

## வீரத்திருவுரு விறன்மிண்டனார்

சுந்தரரின் உண்மையான மனநிலைமையை விறன்மிண்டர் புரிந்து கொள்ளவில்லை. சுந்தரர் இறைவனால் தடுத்தாளப் பெற்றவர் என்பதை அறிந்திருந்தவர். எனவே, இறைவனைத் தோழமையாகப் பெற்ற சுந்தரர் அடியார்களைப் பணியாது அவமதிக்கிறார் என்று எண்ணினார். அப்படிப்பட்ட குணம் கொண்டவரை ஆட்கொண்டு அருளிய இறைவனையும் உடனே எண்ணினார். எனவே, சிவனடியார்களைத் தொழாமல் சென்ற சுந்தரர் அடியார்களுக்குப் புறகு என்றும், அவருக்கு அருள்புரியும் ஈசனும் புறகு என்று கூறினார். இதனைச் சேக்கிழார்,

> **சிவனார் அடியார் திருக்கூட்டம்**
> **பேணாது ஏகும் ஊரனுக்கும்**
> **பிரான் ஆம் தன்மைப் பிறைசூடி**
> **பூன் ஆர் அரவம் புனைந்தார்க்கும் புறகு**
>
> (விறன்மிண்ட நாயனார் புராணம், பா.7)

என்று பெரியபுராண வரிகளில் காட்டியுள்ளார். விறன்மிண்டர் தம் கொள்கைக்கு மாறுபாடாய் நடப்பவர். ஈசனோடு தோழமை கொண்டவரேயாயினும், ஈசனேயாயினும் அவர்களைச் சினந்து, அடியார்களுக்குப் புறகு என்று கூறுமளவு கொள்கைப் பற்றும், வீரமும் கொண்டிருந்தவர் என்பது விளங்குகிறது.

## திருத்தொண்டத்தொகை பாடுதல்

விறன்மிண்டர் சினம் கொண்டு புறம்பு என்று கூற, சுந்தரர் வருத்தம் கொண்டார். பின்பு சிவபிரானருளால் அருளப்பெற்று அடியார்க்கு அடியராகும் தகுதி பெற்றுத் தேவாசிரிய மண்டபத்து முன்பு வந்து

அங்குள்ள அடியார்களைப் பணிந்தார். தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் என்று இறைவன் முதல் அடி எடுத்துக் கொடுக்கச் சுந்தரர் **திருத்தொண்டத்தொகை** என்ற பதிகம் பாடினார். இதன் மூலம் அடியார்களுக்குத் தாம் அடியராகும் தன்மையைக் கூற விறன்மிண்டர் சினம் தணிந்தார். சுந்தரரை அடியவருள் ஒருவராக ஏற்றுக் கொண்டு இறைவனை வணங்கினார்.

தம்மை விறன்மிண்டர் தவறாகக் கற்பனை செய்து கொண்டு ஒதுக்கியபோது, தம்பிரான் தோழர் என்னும் சிறப்புப் பெற்ற சுந்தரர் அவர்மீது சினம் கொள்ளவில்லை. மாறாக, தம்மை அடியார்களுக்குப் புறகு என்று கூறிவிட்டாரே என்று வருத்தம் கொண்டார். இந்நிலை, தம் மேல் குற்றம் இல்லை என்றாலும் தம்மைச் சினந்த அடியாரை மதித்து அச்சினம் தணிவிக்க எண்ணிய சுந்தரரின் உயர்ந்த உள்ளத்தை விளக்குகிறது. விறன்மிண்டரை,

> **விரிபொழில் சூழ் குன்றையார்**
> **விறன் மிண்டர்க்கும் அடியேன்** (சுந்தரர், 7:39-1)

என்று **திருத்தொண்டத்தொகையில்** தாம் அவருக்கு அடியவரான திறத்தினைக் குறிப்பிட்டுள்ளார். சுந்தரரின் திருஅவதாரத்திற்கு மூலகாரணமாக அமைந்தது, உலகிற்குத் திருத்தொண்டத்தொகை அருளுதல் என்று சேக்கிழார் திருமலைச் சிறப்பில் குறிப்பிட்டுள்ளார். **திருத்தொண்டத் தொகையினைச்** சுந்தரர் அருளுவதற்கு விறன்மிண்டர் மூலகாரணமாய் அமைந்தார். இதனை,

> **ஈசனடியார் பெருமையினை யெல்லாயுயிருந்**
> **தொழவெடுத்து தேசமுய்யத் திருத்தொண்டத்**
> **தொகை முன் பணிந்த திருவாளன்**
> (சண்டேசுவரநாயனார் புராணம், பா.60)

என்று சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார்.

அடியவர்கள் வழிபாடு ஆண்டவன் வழிபாட்டைவிட முதன்மையானது என்று கருதும் அடியவர்கள் இருந்திருந்தனர். தோழனாய் இறைவன் அமைந்தும் அடியார் கூட்டத்துள் தாம் இருக்கவேண்டும் என்பது சுந்தரரின் உள்ளப்பாங்கு. அடியவர்கள் ஆண்டவனையும் தம் கூட்டத்திலிருந்து தள்ளி வைப்புச் செய்யும் வீரம் கொண்டிருந்தனர். குறைகள் நிறையாயின போது உடனே அவற்றை ஏற்றுக் கொள்ளும் மனப்பாங்கினை விறன்மிண்டர் கொண்டிருந்தார். சுந்தரர் திருஅவதாரத்திற்குக் காரணமான **திருத்தொண்டத்தொகை** அருள விறன்மிண்டர் செயல் காரணமாக அமைந்தது. அடியவர்களுள்

தாமும் இருக்க வேண்டும் என்று எண்ணம் கொண்ட இறைவன் உள்ளம் முதலானவை விறன்மிண்டர் வழி உணர்ந்துகொள்ள முடிகின்றது.

## பெருமிழலைக் குறும்ப நாயனார்

மிழலை நாட்டில் பெருமிழலை என்னும் ஊரில் குறும்பர் மரபில் பிறந்தவர். அதனால் பெருமிழலைக் குறும்பர் என்று அழைக்கப்பட்டார். இவர் சிவனடியார்களுக்குக் குறிப்பறிந்து பணி செய்தும். அமுதூட்டியும் நிதி நிரம்பக் கொடுத்தும் தொண்டுபுரிந்து வாழ்ந்து வந்தார். சிவபெருமானை மறவாது மனதுள் போற்றி வந்தார். அடியவர்க்கும் அடியவரான சுந்தரர் மீது இவர் பேரன்பு கொண்டிருந்தார். சுந்தரரின் திருநாமத்தினை நாள்தோறும் தம் மனதுள் கூறி வரும் வழக்கம் கொண்டிருந்தார்.

மனதிற்குப் பிடித்தவர்களின் பெயரினைத் தெரிந்தோ அல்லது அனிச்சைச் செயலாகவோ நினைப்பது மனித இயல்பு. குறும்பரும் தம் மனம் விரும்பிய தம் குருவான சுந்தரரை நாளும் நினைத்துப் போற்றி வந்தார்.

## குறும்பர் பெற்ற பேறு

பெருமிழலைக் குறும்ப நாயனார் நித்தமும் சுந்தரர் பெயரையே மந்திரம்போல் இடையறாது எண்ணி, உச்சரித்து வந்ததால் அணிமா முதலான எண்வகைச் சித்திகளையும் கைவரப் பெற்றார். இதனைச் சேக்கிழார்,

> நாளு நம்பி யாரூரர் நாம் நவின்ற நலத்தாலே
> ஆளும் படியா லணிமாதி சித்தி யான வணைந்ததற்பின்
> மூளுங்காதலுடன் பெருகமுதல்வர் நாமத் தஞ்செழுத்துங்
> கேளுங்பொருளு முணர்வுமாம் பரிசு வாய்ப்பக் கெழுமினார்
>
> (பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணம், பா. 6)

என்று குறிப்பிட்டுள்ளார். எண்வகைச் சித்திகளாவன :

1. அணிமா - பெரிது அணுப்போல் சிறிது ஆதல்
2. மகிமா - சிறிது மிகப் பெரிதாதல்
3. இலகிமா - மிகக் கனத்தது மிக இலகுவாதல்
4. கரிமா - மிக இலகுவானது மிகக் கனத்ததாதல்
5. ப்ராப்தி - வேண்டுவன அடைதல்
6. ப்ரகாமியம் - விரும்பியவாறு நுகர்தல்

7. ஈசத்துவம் - ஆட்சியுணர்தல்

8. வசித்துவம் - எல்லாம் தன் வசமாக்க வல்லனாதல்.

இவற்றுள் முதல் மூன்றும் உடம்பாலும், ஏனைய மனம் முதலிய கருவிகளாலும் பெறுவன என்னும் விளக்கம் இங்கு நோக்குதற்குரியது (சி.கே. சுப்பிரமணிய முதலியார், **பெரியபுராணம் உரை**, பதிப்பு III, பகுதி III பாகம்.2, 866). மேலும் பரமாச்சாரியார்களுடைய திருநாமங்கள் சொல்பவரைக் காக்கும் மந்திரங்களாகும் என்பதைக் குறும்ப நாயனார் மூலம் சேக்கிழார் காட்டியுள்ளார்.

அப்பூதியடிகளார் திருநாவுக்கரசரின் திருப்பெயரைத் தம் மக்களுக்கும், தம் உடைமைப் பொருள்களுக்கும் வைத்து நலம் பெற்றதைக் கூறிய இடத்தும் சேக்கிழார் இதனை வெளிப்படுத்தியுள்ளார். சடங்கவி சிவாச்சாரியார் மகள் சுந்தரரை எண்ணிக் கொண்டே இருந்து சிவ பதவி அடைந்தார் என்பது இங்கு எண்ணத்தக்கது.

## சித்தி பெற்ற பின் சித்தர் உள்ளம்

எண்வகைச் சித்திகள் என்பன உயர்ந்த யோகம். பிறரெனில் இதனையே முடிவு எனக் கொண்டு மேலும் வினை எதுவும் செய்யாது விட்டுவிடுவர். ஆனால் குறும்பரோ இச் சித்திகளை ஒரு பொருட்டாகவே எண்ணாது மீண்டும் சுந்தரர் நாமத்தையே தவறாது எண்ணி வந்தார்.

பயன்கருதிச் செய்யப்படுவதல்ல தொண்டு என்ற தொண்டர் இலக்கணத்தைக் குறும்ப நாயனார் மூலம் சேக்கிழார் இங்குக் காட்டியுள்ளார். மேலும் பெருமிழலைக் குறும்பர் சுந்தரர் மீது கொண்ட அன்பும், தொண்டு உள்ளமும் இங்கு நன்கு விளங்குகின்றன. உண்மையடியார்கள் இச் சித்திகளை ஒரு பொருளாகவே எண்ணி, பெருமை கொள்ளமாட்டார் என்பதை, 'எம்மை யுணர்ந்த யோகிகளிவற்றை விரும்பினார்' (பரஞ்சோதிமுனிவர், **திருவிளையாடல் புராணம்**, அட்டமாசித்தி உபதேசித்த படலம், பா. 28) என்பதாலும், திண்டிறற் சித்தர்களே கடைக்கூழை சென்மின்கள் (மாணிக்கவாசகர், திருவாசகம், திருப்படை எழுச்சி, பா.2) என்ற திருவாசக அடியினாலும் உய்த்துணர முடிகின்றது.

## குறும்பரின் உள் உணர்வு

இவ்வாறு எண்வகைச் சித்திகளையும் சுந்தரரால் குறும்பர் பெற்று ஒழுகி வந்த காலத்தில் திருவஞ்சைக்களத்தில் இருந்த சுந்தரரை வடகயிலை மலைக்கு இறைவன் வரப் பணித்தார்.

திருவஞ்சைக்களத்தில் உள்ள சுந்தரருக்கு இறைவன் இவ்வாறு அருள் புரிந்ததை மிழலை நாட்டில் உள்ள குறும்பநாயனார் நெஞ்சில் உணர்ந்து கொண்டார்.

சித்திகள் கைவரப் பெற்றோர் தம் உயிர் அறிவு நிறைதலினால் ஏனைய உயிர்களின் உள்ளே புகுந்து சென்று அவர்களின் உள்ள நிகழ்ச்சிகளையும், தாம் இருந்த இடத்திலிருந்தே அறிந்து கொள்ள வல்லவர் ஆவர் என்ற கருத்து இங்குக் கருத்தில் கொள்ளத்தக்கது என்னும் உரையாசிரியரின் விளக்கத்திற்குப் பொருந்தும் வகையில் பெருமிழலைக் குறும்பரும் சுந்தரர் மனதுள் நிகழ்ந்த நிகழ்ச்சியை உணர்ந்தார் (சி.கே. சுப்பிரமணிய முதலியார், **பெரியபுராண உரை**, பகுதி III, பாகம் II, ப. 809) என்பதை அறியலாம்.

இவ்வாறின்றி நாளும் நம்பியாரூரர் நாமம் நவின்ற காரணத்தால் மனதினுள் பிரியாது வைத்து வழிபட்டு வந்த சுந்தரர் திறமே தம் திறமாக எண்ணி மிழலையில் இருந்தவருக்குப் புலப்பட்டது உலகியல்பு என்றும் கொள்ளலாம். உலகியல் நிலையில் அன்பின் ஒத்த இருவருக்கு நெடுந்தூரம் பிரிந்த நாளிலும், இவ்வாறே ஒத்த மனநிகழ்ச்சிகள் உண்டாதல் வழக்கம். எனவே உலகிறந்த நிலையில் நின்று சுந்தரரையே அழுத்தமாக எண்ணியிருந்த குறும்பருக்குச் சுந்தரர் கயிலைக்குச் செல்ல எண்ணிய நினைவு புலப்பட்டது பொருத்தம்.

சுந்தரர் தம் மனதில் அடியார்களின் எண்ணமே கொண்டு அவர்களை வணங்கிக்கொண்டு இருந்ததால், பெருமிழலைக் குறும்பரும் சுந்தரர் நினைவில் கொண்ட அடியார்களுள் ஒருவர் என்பது அறியலாகும். எனவே சுந்தரர் எண்ணியதைத் தொலைவில் இருந்த குறும்பர் உணர்ந்தது பொருந்தும். கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்து உயிர்நீக்கக் கருதிய எண்ணம் தொலைவில் இருந்த பிசிராந்தையார் உணர்ந்தது இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

மேலும், சீவன்முக்தி நிலைப்பெற்ற சித்தர்கள் உலகில் விலங்குகளது உயிரின் நிகழ்ச்சிகளைத் தம் நுண்ணுணர்வினால் உள் நிறைந்து அறியும் திறமுடையார் என்பது ‘இருந்திரைத் தாளப் பரவை வருங்காலத் தெண்ணிலங் கண்ணில் புன் மாக்கள், திருந்துயிர் பருவத் தறிவுறு கருவூர்’ என்ற கூற்றால் யோகசித்தியின் மகிமையை அறியலாம் (கருவூர்த்தேவர், **திருவிசைப்பா, கோயில் - புறநீர்மை**, பா. 11).

சுந்தரரின் தொண்டரான பெருமிழலைக்குறும்பர் சுந்தரர் மனதில் எண்ணிய கயிலை செல்லும் நிகழ்ச்சியை யோகத்தாலும், ஒத்த உணர்வினாலும் உணர்ந்தார் என்பது இங்குப் பெறப்படுகிறது.

## உயிரையும் தந்த உத்தமர்

தம்மை வழிநடத்திச் செல்லும் பெரியவர் வேறு எங்கோ செல்ல எண்ணியிருப்பதை அறிந்தால் உடன் செல்லும் சிறார்கள் ஒன்று மறுப்பர், அல்லது அவர் செல்லுமிடம் தெரிந்தால் தம்மால் போக இயலும் என உணர்ந்தால் அவருக்கு முன் அவ்விடம் சென்று நிற்பர். இது அன்பின் ஒருவகையான வெளிப்பாடு ஆகும். அன்பின் மிகுதி பெரியவர்களையும் குழந்தைக் குணம் கொள்ளச் செய்துவிடும். பெருமிழலைக் குறும்பர், சுந்தரர் நாளை கயிலை செல்லப் போவதை உணர்ந்தார். அவர் இல்லாத பூவுலகில் தான் வாழக் குறும்பர் விரும்பவில்லை. எனவே பிரிவாற்றாமையால் குறும்பர் வருந்தினார்.

குறும்பர் சுந்தரருடன் ஒன்றாக இருந்து பழகியவர் அல்லர். தன்னிருப்பிடத்திலேயே இருந்து சுந்தரர் நினைவுகளுடன் மட்டும் வாழ்ந்து வந்தவர். அங்ஙனமிருந்தும் சுந்தரர் பிரிவில் வருத்தம் கொள்ளும் அவர்மனம், சுந்தரர் மீது அவர்கொண்ட பேரன்பையே காட்டுகிறது.

வருத்தம் கொண்ட குறும்பர் தம்கவலை தீர, சுந்தரர் நாளை திருக்கயிலை செல்வதற்கு முன்பே நான் யோகத்தால் இன்றே சென்றடைவேன் என்று முடிவு எடுத்தார். இதனை,

> ..... ..... **வன்றொன்டன்**
> **நண்ணற் கரிய திருக்கயிலை நாளை யெய்த நான் பிரிந்து**
> **கண்ணிற்கரிய மணிகழிய வாழ்வார்போல, வாழே னென்**
> **றெண்ணிச் சிவன்தா ளின்றேசென் றடைவன் யோகத்தால்**
>
> (பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணம், பா.9)

என்று சேக்கிழார் குறிப்பிட்டுள்ளார். அறம், பொருள், இன்பம், வீடு என்பவற்றில் வீடுபேறாகிய சிவனடி அடைதல் என்பதையே சிவனடியார்கள் குறிக்கோளாகக் கொள்வர். ஆனால் இங்குக் குறும்பரோ, தம் குருவாம் சுந்தரர் உடனிருப்பதையே பெரும்பேறாக எண்ணினார். அப்பேற்றினை அடைய, ஒரு துணைக் கருவியாகவே சிவனடி அடைதலை இத்தொண்டர் பயன்படுத்தினார். இதனை, "பரவை கேள்வன் பாதமுறக் கயிலை பொருப்பரடியடைந்த" (பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணம், பா.11) என்ற வரியாலும், "நாளை எய்தும் இன்றே அடியடைவேன் (பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணம், பா.9) என்று கூறுமிடத்திலும் உணரலாம்.

எனவே குறும்ப நாயனார் தாம் முன் பயின்ற யோகப் பயிற்சியினால் பிரம நாடிவழி பிராண வாயுவை, மதிமண்டலத்துள் செலுத்தப்

பிரணவத்தால் திறக்கப்பட்ட கபால நடுவாயிலின் மூலம் சிவபதவியைச் சுந்தரருக்கு முன்பே சென்று அடைந்தார். கயிலையில் குறும்பர் தாம் நினைத்தவாறு நெடுங்காலம் கனநாயகம் பூண்டு சுந்தரருடன் அமர்ந்திருந்தார். தம் உயிரையும் துச்சமென மதித்துச் சுந்தரரைச் சார்வதையே பேறாகக் கொண்ட பெருமிழலைக் குறும்பரின் தொண்டின் திறம் இங்கு நன்கு விளங்குகிறது.

## சுந்தரர் தேவாரத்தில் நன்றிகூறுதல்

சுந்தரர் பெருமிழலைக் குறும்பரின் சிறப்புக் கருதி அவருக்கும் தான் அடியனாகும் தன்மையைத் **திருத்தொண்டத் தொகையில்**, பெருமிழலைக் குறும்பற்கும் அடியேன் என்று குறிப்பிட்டுள்ளார். தம்மைக் குருவாகக் கொண்டு வழிபட்ட அடியவரையும் பணிந்து தாமும், அவ்வடியவருக்கு அடியார் என்று கூறும் சுந்தரரின் தொண்டு உள்ளம் இங்குப் புலப்படுகிறது. சுந்தரரின் திருநாமத்தை நித்தமும் எண்ணுவது எண்வகைச் சித்திகளையும் தரும் பயன் உடையது. தொண்டர்கள் பயன் கருதித் தொண்டினை மேற்கொள்ளவில்லை. தொண்டர்கள் தம் தொண்டிற்காக உயிரை விடவும் தயங்க மாட்டார். சிவனடி அடைதல் அடியார் கூட்டமடையும் இன்பம் பெறுவதற்குக் கருவியுமாகும். இவை குறும்பநாயனார்வழி **பெரியபுராணத்துள்** சேக்கிழாரால் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## நிறைவாக

திருத்தொண்டர்களின் சிறப்பும் அன்பின் திறமும் மூவகை வழிபாட்டு நெறிகளும் போற்றத்தக்க நெறிகளாகத் திகழ்கின்றன. குருவழிபாட்டுமுறையில் சுந்தரரைக் குருவாகக் கொண்டு வழிபட்டோர் திறம், பேறு, சுந்தரர் சிறப்பு ஆகியவை அறியலாகின்றன. குருவழிபாட்டினை மேற்கொள்ளும் அடியார் இறைவனருளைக் கருவியாகக் கொள்ளும் குணம் உடையவர்களாகத் திகழும் தன்மை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. அடியவர்கள் தம் குருவிற்கு உடைமைப் பொருள், உரிமைப் பொருள், உயிர் முதலியனவற்றைத் தரத் தயங்காத நல்லுள்ளம் கொண்டவர்களாக விளங்குகின்றார்கள். தொண்டர்கள் பயன்கருதித் தொண்டு செய்யாமலும், தம்கொள்கைக்கு மாறாக நடந்துகொள்பவர் யாவராயினும் தண்டிக்கத் தயங்காதவர்களாகவும் திகழ்வதைத் **திருத்தொண்டர் புராணம்** தெளிவாக்குகின்றது. சிறந்த அடியவர்களைப் பெற்ற சுந்தரர் அவர்கட்கும் அடியவராய் உள்ளவன் என்று பணிந்து போற்றி, அவர்கள் அன்பினை ஏற்றுக் கொண்டு போற்றுமிடங்களில் அடியவர் தொண்டும், தொண்டினை ஏற்றுக் கொள்ளும் உயர்உள்ளத்தின் விரிவும் ஒருங்கே புலனாகின்றன.

# 4. திருவைந்தெழுத்தும் திருநீறும்

மனித குலத்தின் சிந்தனையிலே முழுநிறைவானதும், மூதறிவார்ந்ததுமாகப் பெரிதும் மதித்துப் போற்றப்படுவது சைவம்; சிவனுடன் சம்பந்தமாவது சைவம். அத்தன்மையில் சிவனுடன் கலந்த அறுபத்துமூவரின் அற்புதப்பேறுகளை உரைப்பது சேக்கிழாரின் **பெரியபுராணம். சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்கும் அரிதே** என்றும்; **பக்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ** என்றும் போற்றப்படும் சேக்கிழார் பெருமான் தம் **திருத்தொண்டர்புராணத்திலும்**, மூவர் முதலிகள் தங்களுடைய தேவாரப் பாடல்களிலும் எடுத்துரைத்துள்ள ஐந்தெழுத்து மந்திரத்தின் சிறப்புக்களையும், திருநீற்றின் மகிமையையும் விளக்குமுகத்தான் இப்பகுதி உள்ளது.

## சேக்கிழார் போற்றிய திருவைந்தெழுத்து

> சிவப் பரம்பொருளின் திருவுருவை நினைந்தும் கண்டும், தொழுதும், பாடிப்பரவியும், அன்பு செய்வது பக்திநெறி என்பது சான்றோர் வாக்கு. உலகப் பொருள் மீதுள்ள பற்றினை விட்டு இறைவன் மீது மட்டும் பற்றுவைத்து செய்யும் வழிபாடு பக்தி

என்று. சிவ. ஆ. பக்தவச்சலம் குறிப்பிட்டுள்ளார் (**பன்னிரு திருமுறை ஆய்வுக் கட்டுரைகள்**, ப:64).

பக்தி என்பது யாதெனில் மானுடப் பிறப்பெடுத்த ஒருவன் தன் நெஞ்சக அறையில் நிலைநிறுத்தி என்றென்றும் நீக்கம் என்பதை அறியாது, அவனுள் தன்னைக் கண்டு அவனையே தன்னுணர்வாக உணர்ந்து, அன்பினில் திளைத்தெழுந்து நீங்காத, குறைவில்லாத, ஆராத அன்பு கொண்டு ஒழுகுவதாகும் என்று சுட்டமுடியும். தாம் வழிபடும் இறைவனிடத்து ஒருவர் முழு நம்பிக்கையும், தூய்மையான அன்பும், இறைவனுக்காக எதையும் தியாகம் செய்யும் பண்பும் கொண்டு முக்தி நிலையை முடிவில் எய்துவதே பக்தியாகும்.

பக்தி என்பது சமயவாழ்வின் சாரமாகவும், அதன் தனிப்பட்ட பகுதியாகவும் இருந்து வருகிறது. வேறு எல்லாவித உறவுகளையும் மனமானது மறந்துவிட்டு, இறைவனுக்கும் ஆத்மாவுக்கும் இடையே உள்ள உறவு ஒன்றை மட்டுமே அவாவி நிற்பது பக்தியாகும். சேக்கிழார் பெருமான் பக்தியினை,

**ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள**
**அளப்பரும் கரணங்கள் நான்கும்**
**சிந்தையே யாகக் குணம் ஒரு மூன்றும்**
**திருந்துசாத்துவிகமே யாக**
**இந்துவாழ் சடையான் ஆடும்ஆனந்த**
**எல்லையில் தனிப்பெருங் கூத்தின்**
**வந்தபே ரின்ப வெள்ளத்துட் திளைத்து**
**மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்** (பெ.பு.பா.252)

எனப் பாடுகின்றார். சைவ சமயம் திருவைந்தெழுத்து, திருநீறு, கண்டிகை என்னும் மூன்றையும் முக்திச் சாதனங்களாகக் கொண்டுள்ளது. ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக்கூத்தில் ஐந்தொழில் புரிந்து, 'சிவாயநம' எனும் ஐந்தெழுத்தால் திருவுருக்கொண்டு பஞ்சாட்சரத்தினால் ஆன்மாவையும் சிவனையும் இயைபுபடுத்துபவன் இறைவன். **'கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத்தல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே'** என்பது பஞ்சாக்கரத் திருப்பதிகம். இறைவனின் தோற்றப்பொலிவில் துடியானது '¼' என்பதையும், வீசுகரமானது 'வா' எழுத்தையும், அபயகரமானது 'ய' எழுத்தையும், நெருப்பானது 'ந' எழுத்தையும், முயலகனானது 'ம' எழுத்தையும் குறித்து நடுவதாக அமைந்த 'ய' ஆன்மாவைக் குறிப்பதாகக் கூறுவர்.

**மருவுந் துடியுடன் மன்னியவீச்சு, மருவிய அப்பும் அனலுடன் கையுங்**
**கருவின் மிதத்த கமலப் பதமும்,உருவில் சிவாய நம என ஓத**

என்ற திருமூலரின் பாடல் நடராச திருவுருவத்துடன் ஐந்து எழுத்துக்களையும் தொடர்புபடுத்தித் தியானிக்கும் முறையைத் தெளிவாக்குகின்றது. இம்மந்திரம் ஓதுவார்க்கு நன்னெறியைக் கொடுப்பதும், வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவதும் நாதன் நாமம் நமசிவாயவே என்று ஞானசம்பந்தர் பாடுவார். இம்மந்திரம் தூல, சூக்கும, அதிசூக்கும (சிவாயநம-சிவாய-சிவ) என்று மூன்றாகப் பகுக்கப்படுவதாகக் கூறுவர். ஐந்தெழுத்து மந்திரம் படிப்படியாக மூன்று எழுத்துக்களாகவும், பின்பு இரண்டு எழுத்துக்களாகவும் குறைந்து வருவதைச் சைவசித்தாந்தம் உணர்த்துகின்றது. **ஏத்த வல்லார் தமக்கு இடுகண் இல்லையே, நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே, நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே** என்றெல்லாம் சுட்டப்பெறும் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதி வழிபட்டவர்களுக்கு எத்தகைய துயரங்களும் ஏற்படாமல் கவசமாக நின்று காக்கும் என்பதையே சைவ இலக்கியங்கள் காட்டுகின்றன.

திருவைந்தெழுத்தாம் நமசிவாய மந்திரம் ஓதிக் கல்லையே தெப்பமாக்கிக் கரையேறிய நாவுக்கரசரைச் சேக்கிழார்,

"திருத்தொண்டின் நெறிவாழ வருஞானத் தவமுனிவர் வாகீசர்" என்று அறிமுகப்படுத்தி, இறைவனின் திருவடியைச் சிந்தை செய்வார்க்குக் கொடிய நஞ்சும், கடும்பகையும் கெடுதலைச் செய்யாது என்பதை உலகிற்கு உணர்த்தும் வழியாகவும் கருவியாகவும் காட்டுகின்றார். இத்தகைய கொடுமைகளிலிருந்து இறைவனைச் சிந்தையில் நிறுத்தி வெற்றி கண்ட நாவுக்கரசர்,

எப்பரி சாயினும் ஆக ஏத்துவன் எந்தையை என்று
செப்பிய வண்டமிழ் தன்னால் சிவன் ஐந்தெழுத்தும்
துதிப்பார் (1395)

என்று இன்பங்களைக் களைந்து, துயரங்களைப் போக்கி நாவுக்கரசரைக் காத்தது இம்மந்திரமே என்பதைச் சேக்கிழார் அறிவிக்கின்றார். உடனே நாவுக்கரசர் 'சொற்றுணை வேதியன்' என்னும் தூமொழிப் பதிகம்பாடி 'நமசிவாய' என்னும் தமிழ்மாலை சூடி, உலகம் காக்கும் ஐந்தெழுத்தை அன்போடு பற்றியதாகவும், வாழ்த்துவதற்கு அரியதாக ஐந்தெழுத்தை அரசுபோற்றியதாகவும், கருநெடுங் கடலில் கல்மிதந்ததாகவும் சேக்கிழார் காட்டுகின்றார்.

அருள்நயந்து அஞ்செழுத்து ஏத்தப் பெற்றஅக்
கருணைநா வரசினைத் திரைக் கரங்களால்
தெருள்நெறி நேர்மையில் சிரத்தில் தாங்கிட
வருணனும் செய்தனன் முன்பு மாதவம்
(திருநாவு.புரா. பா.எண்.130)

என்று ஐந்தெழுத்து மந்திரத்தின் சிறப்பினைப் பாடும் சேக்கிழார், புரந்த அஞ்செழுத் தோசை பொலிதர அரந்தை தீர்க்கும் அடியவர் திருக்கூட்டத்துள் ஒருவராக நாவரசரைக் குறிப்பிடுகின்றார். ஐந்தெழுத்தின் சிறப்புக்களை ஒரு நாமத்தஞ்செழுத்து, திருநாமம் அஞ்செழுத்து, அருநாமத்தஞ்செழுத்து, கலையின் உண்மையாம் எழுத்தஞ்சும், அற்றமுன் காக்கும் அஞ்செழுத்து, அருள் நயந்து அஞ்செழுத்து என்றெல்லாம் விதந்தோதுகின்றார். "ஓதியவெழுத்தா மஞ்சு முறுபிணி வரத்தாம் அஞ்சும்" என்று ஐந்தெழுத்து ஓதிய இடத்தில் நோய்பிணியும் பிறவிப்பிணியும் நெருங்கா என்பதைப் பதிவு செய்கின்றார். திருஞானசம்பந்தர் தாம் பெற்ற சிவஞானம் தமக்கு மந்திரம் உணர்த்த வந்த அந்தணர்க்குத் தாவில் சராசரங்கட்கும் திருவைந்தெழுத்தையே உபதேசித்தார்.

மந்திரங்கள் ஆன எலாம் அருளிச் செய்து
மற்று அவற்றின் வைதிகநூல் சடங்கின் வந்த
சிந்தை மயக்குறும் ஐயம் தெளிய எல்லாம்
செழுமறையோர்க்கு அருளி அவர் தெருளும்
ஆற்றலால்

முந்தை முதல் மந்திரங்கள் எல்லாம் தோன்றும்
முதல் ஆகும் முதல்வனார் எழுத்துஅஞ்சு என்பார்
அந்தியின் உள்மந்திரம் அஞ்செழுத்துமே என்று
அஞ்செழுத்தின் திருப்பதிகம் அருளிச் செய்தார்
(திருஞான.புரா.பா.266)

எனவரும் சேக்கிழார் வாக்கு அவ்வந்தணர்க்கு உணர்த்திய அருமறை ஐந்தெழுத்தின் பெருமையை விளக்கும். திருவாளன் எழுத்தஞ்சும் தூய இசைக்கிளை கொள்ளும் (பா.எண்.26) என்றவாறு ஆனாய நாயனார் தம் குழலில் சிவனின் எழுத்தஞ்சும் தொடுத்த முறை ஏழிசையின் சுருதிபெற வாசிக்கும் பான்மையில் நின்றதாகவும் ; அன்பு நாரா அஞ்செழுத்து நெஞ்சு தொடுக்க அவர்தொடுத்தே (ஏயன்கோன்.புரா.பா.எண்.226), என்று சங்கிலியாருக்கு ஒரே நேரத்தில் இருமாலை தொடுக்க ஐந்தெழுத்து துணைநின்றதாகவும் இட்டமாஞ்சிவ மந்திரம் ஓதலின் இருவிசும்பு ஏழப்பாய்ந்தது, (பா.எண். 36) என்ற நிலையில் சுந்தரரின் தோழர் சேரமான் வெள்ளையானை மீது திருக்கையிலைக்குச் சென்ற திறமறிந்து தாமும் உடன்செல்ல ஒருப்பட்டு அருகிலிருந்த குதிரைக்கு ஐந்தெழுத்தோதி சிவபரம்பொருளை அடைந்ததாகவும் ; ஓங்கிய வாக்கின் செய்கை உயர்ந்த அஞ்செழுத்துக் காக்கி பா.எண்.3) என்று முருகர் காலந்தோறும் திருக்கோயிலுக்குச் சென்று திருமாலை தொடுத்து அணிவித்து ஐந்தெழுத்தோதியதாகவும் சேக்கிழார் பெருமான் குறிப்பிடும் இடங்கள் ஐந்தெழுத்தின் மேன்மையை உணர்த்துவதோடு, அம்மந்திரத்தை ஓதிச் சிந்தையில் நிறுத்திய அடியவர்கள் அடைந்த இனிய நற்பேறுகளையும் தெளிவாக்குகின்றன.

திருவிசைப்பாவில் கருவூர்த்தேவர் ஐந்தெழுத்தின் உட்பொருளறிந்து ஓதுபவர்களுக்கு என்னவெல்லாம் கிடைக்கும் என்பதைப் பட்டியல் இடுகின்றார்.

அற்புதத் தெய்வம் இதனிமற் றுண்டே
அன்பொடு தன்னைஅஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளம்அள் ளூறும்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே

(திருவிசைப்பா, பா.135)

என்ற பாடல் மூலம் அறிய முடிகின்றது. இதில் இகத்துக்கு வேண்டிய உலகியல் இன்பங்களையும் பரத்துக்கு வேண்டிய மெய்யுணர்வையும் தருவது திருவைந்தெழுத்து என்று உரைக்கின்றார்.

மந்திரங்களுள் மகா மந்திரமாய் நினைப்பாரைக் காக்கும் மறைமொழியாய் இருப்பது திருவைந்தெழுத்து என்பது சைவக் கோட்பாடு. வடமொழியில் இது பஞ்சாக்கரம் எனப்படும். திருவைந்தெழுத்தின் வகைகளாக ஐந்தினைக் குறிப்பிடும் போது, ஐந்தெழுத்து ஐந்து நிலையில் நின்று நம்மை உய்ய வைக்கின்றது என்பர் (குருவருட் பயன், ப.54). அவ்வைந்து நிலைகளாவன :

1. தூலத்திருவைந்தெழுத்து - பருமை
2. சூக்குமத் திருவைந்தெழுத்து - நுண்மை
3. அதி சூக்குமத் திருவைந்தெழுத்து - மீநுண்மை
4. காரணம் - முதல்
5. மகாகாரணம் - மாமுதல்

என்று ஐவகைப்படும். இந்நிலைகளை விளக்கும் பாடல்கள் **திருமந்திரத்தில்** அதிகமாகக் காணப்படுகின்றன. சைவ சமயத்தில் இம்மந்திரத்தினை அவரவர் நிலைக்குத் தக்கபடி தீட்சை அளித்துக் குருநாதரே உபதேசம் செய்து வைப்பார். எனவே இம்மந்திர நிலைப் படிமுறையில் உயிர்கள் பக்குவப்பட்டுப் பெறுவதாகும்.

நாயன்மார்கள் தங்களுக்கு நேர்ந்த இடர்களைக் களையவும், தாங்கள் செய்யும் காரியங்களின் மங்களத் தொடக்கமாகவும், இறைக்காப்பாகவும் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதினார்கள். வேதியர் வடிவில் வந்த இறைவன் அளித்த திருக்கோவணத்தைக் கைவிட்ட அமர்நீதி நாயனார் எடைக்கு எடை கொடுக்கப் பொன்னையும் பொருளையும் குவித்தபோதும் நிறைவராதது கண்டு,

> **இழைத்த அன்பினில் இறைதிரு நீற்றுமெய் அடிமை**
> **பிழைத்திலோம் எனில், பெரும்துலை நேர் நிற்க என்று**
> **மழைத்த டம்பொழில் திருநல்லூர் இறைவரை வணங்கித்**
> **தழைத்த அஞ்செழுத்து ஓதினார் ஏறினார் தட்டில்**
>
> (எறிபத்த.புரா.பா.எண்.43)

என்றவாறு, தம் மனைவி மக்களோடு ஐந்தெழுத்தோதித் தட்டில் ஏறியதும் தட்டுக்கள் நேர் நின்றதாகவும், இறைவன் திருக்காட்சி தந்து வான்பதம் அருளியதாகவும் சேக்கிழார் பாடுகின்றார். மேலும் திலகவதியார் மருள்நீக்கியாருக்குத் திருநீறு அளிக்கும்போது ஐந்தெழுத்தை ஓதியதாகவும் (பா.எண்.1336) புகழ்ச்சோழர் தீக்குளிக்கப் போகும்போது மந்திரத்தை ஓதியதாகவும் (பா.எண்.3985) குறிப்பிடுகின்றார்.

தண்டியடிகள் நாயனார் சிவபெருமானுக்கு யான் தொண்டு செய்வது உண்மையாயின் மன்னன் எதிரே, யான் கண்பெறுதல்

வேண்டும்; சமணர்கள் கண் இழத்தல் வேண்டும் என்றுரைத்து ஐந்தெழுத்தை ஓதிக்கொண்டே திருவருளால் மூழ்கி எழக் கண்பார்வை பெறுகின்றார்.

**ஆய்ந்த பொருளும் சிவபதமே**
**ஆவது என்றே அஞ்சு எழுத்தை**
**வாய்ந்த தொண்டர் எடுத்து ஓதி**
**மணிநீர் வாவி மூழ்கினார்** (பா.எண்.3615)

என்று பாடுகின்றார் சேக்கிழார். திருஞானசம்பந்தர் முத்துச்சிவிகையில் மீதேறும்போது, ஆதியார் அருள் ஆதலில் அஞ்செழுத்து ஓதி ஏறினார் உய்ய உலகு எலாம் என்றும், பாண்டிநாட்டிற்குப் புறப்படும்போது, ஒரு நாமத்து அஞ்சு எழுத்தும் ஓதி என்றும் ஐந்தெழுத்து ஓதுவதினால் அடைந்த இறையடி நிழலின் தன்மையைப் போற்றுகின்றார்.

## சமயக்குரவர்கள் போற்றிய திருவைந்தெழுத்து

இறைவன் மீது பக்தி கொள்வதனால், உலகில் உள்ள அனைத்தும் மறந்து போகும் வண்ணம் இறைவன் அருள் செய்து, தன்னிடம் சேர்த்துக் கொள்வான்.

> இறைப்பொருளைப் பற்றிக் கொள்ளவேண்டும் என்று மனித மனம் முயல்கின்ற முயற்சியே பக்தியாகும். அப்பரம்பொருளைப் பற்றி நின்று, அதனுடன் இரண்டறக் கலந்து அனுபவிக்க நினைப்பதே பக்தி என்றும், அளவற்ற பற்றோடு இறைவன்பால் கொள்ளும் உண்மையான அன்பே பக்தியாகும்

என்றும் குறிப்பிடுவர் (அ.சா.ஞானசம்பந்தன், பெரியபுராணம் ஓர் ஆய்வு, ப : 245).

> கடவுளும், மனிதனும் ஒருவருக்கொருவர் உள்ள அன்பால் ஐக்கியமாவதே பக்தி என்பதன் பொருள். பக்தர்பால் அவர் பெருவிருப்பம் கொண்டு தன் அன்பு மூலமாக அவர்களோடு ஐக்கியமாகின்றார். மனிதனைப் பொறுத்தவரையில் பக்தியாவது கடவுளிடத்துப் பூண்டொழுகும் அன்பு

என்று மரியசூசை தவமணி குறிப்பிடுவதாக மேற்கோள் காட்டுகின்றார் ச.சகுந்தலை (**காதலாகிக் கசிந்து**, ப.74).

பக்தி மேலீட்டினால் நெஞ்சுருகி, கண்களில் நீர் பெருகுவது பக்தியின் செறிவைக் குறிக்கின்றது.

**இடையறாப் பேரன்பும் மழைவாரும் இருவிழியும்**
**உழவாரத்தின்**

**படையறாத் திருக்கரமும் சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சமும்**
**கடையறாப் பெரும்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானப்பாடல்**
**தொடையறாச் செவ்வாயும் சிவவேடப் பொலிவழகும் துதித்து வாழ்வாம்**

(அப்பர் பெருமான் வாழ்வும் வாக்கும், ப:40)

என இராமநாத ஞானதேசிகர் சிவஞான வள்ளலாகிய நாவரசப் பெருமானைப் போற்றிப் புகழ்ந்து பாடியுள்ளார். இதே போன்று பக்தி மேலீட்டால் ஞானசம்பந்தப் பெருமானும்,

**காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி**
**ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது**
**வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது**
**நாதன் நாமம் நமச்சிவாயவே** (3: 307:1)

என உருகிப் போற்றுகின்றார். அருணகிரிநாதரும் தம் **கந்தரனுபூதிக்** காப்பில் 'நெஞ்சக் கனக் கல்லும் நெகிழ்ந்துருகும்' என விரித்துரைக்கின்றார். அபிராமி பட்டர் தம் **அபிராமி அந்தாதியில்**, 'விரும்பித் தொழும் அடியார் தம் விழிநீர்மல்கி' எனப் பாடுகின்றார். இப்பாடலில் அன்பின் வடிவாக இறைவனை உள்ளக் கோயிலில் எழுந்தருளச் செய்வது, பக்தி என்ற பக்குவ நிலையே என்பது இதனால் புலனாகின்றது. 'அன்பின் வழியது உயிர்நிலை' ஆதலால் அன்புப் பிணைப்பில் தன்னை மறந்து கண்ணீர் சொரிவது மானுட இயல்பு. ஆதலால் உயிர்கள் உய்யும்வகை, கண்ணீரால் இறைவனின் திருவடிகளை அர்ச்சித்தலே ஆகும்.

**யானே பொய் என்நெஞ்சம் பொய் என் அன்பும் பொய்**
**ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே**
**தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்**
**மானே அருளாய் அடியேன் உனைவந்து உறுமாறே**

(மாணிக்கவாசகர்,திருவாசகம்,திருச்சதகம்: பா:94)

என மாணிக்கவாசகப் பெருமான் பாடுகின்றார். இதனால் கடவுளை அடையச் சாதனமாக விளங்குவது பக்தி என்பது அறியலாகின்றது. பக்தியில் மனமுருகி, மெய்யுருகி, நீண்டநாட்கள் இறைத்தொண்டாற்றி இறைவனடி சேர்ந்தவர் நாவரசர். செல்வமும், அறிவும், ஆற்றலும், பெருகி அறத்தின் வழி நின்று, பெறற்கரிய பெரும்பேறாகிய வாழ்வினை இனிதாக்கிடச் செய்வதற்கு, உணர்வரிய மெய்ஞ்ஞானம் வாய்க்கப்

பெறுவதே முதன்மையானது. இறைவனருள் பெற்று அவனை அடைந்தவர்கட்கு, அருள் செய்வான் ஞானம் கொடுத்துப் பக்தி நெறியில் நிற்கச் செய்வான்.

மனம் என்பது அணைக்கட்டு போன்றது. அதில் நிரம்பியுள்ள நீர் ஆத்மசக்தி அல்லது சீவசக்தி ஆகும். மனிதர்களிடையே காணப்படும் தீக்குணங்களான புறங்கூறல், பொய்பேசுதல், கோபம், பேராசை, பிறர் பொருளை விரும்புதல், வஞ்சனை, கஞ்சத்தனம் போன்றவை அவ்வணைக்கட்டின் ஓட்டைகளாகும். இத்தீயகுணங்கள் ஆத்மசக்தியை அழித்துவிடக்கூடியன. இதனை மனதிற்குள் நுழையவிடாமல் தடுப்பதே பக்தியாகும்.

**இம்மை மறுமை எனும் இருமை வாழ்க்கைக்கும்**
**செம்மை நெறிகாட்டும் சிந்தை நெறி - வெம்மை நிலை**
**மாற்றும் உயர் மந்திரமாம் மன்னு திருமுறைகள்**
**போற்றவரும் பொறுப்புகள் எல்லாம்** (2:16:7)

என்ற வாக்கினுக்கேற்ப உயர்நெறியாம் சைவ சமயத்தில் பிறந்து, வாக்கிலுயர் மந்திரமாம் திருமுறைகளைத் தந்த மூவர் பெருமக்கள் மொழியால் செய்த தொண்டே **தேவாரம்**. அவ்வகையில் அவர்களின் பக்திநெறியானது இம்மை மறுமையிலும் புகழ் நல்கக் கூடிய சிறந்த நெறியான சைவநெறியாகும்.

பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்குச் சுரநோய் கண்டது. திருஞானசம்பந்தரின் கரத்தால் திருநீறு பூசப்பெற்ற பாண்டியன் தன்னுடைய பண்டைவினை நீங்கப் பெற்று இறைவனை அறியும் தன்மை எய்தினான். திருஞான சம்பந்தர் பாடிய திருப்பாசுரத்தில் வேந்தனும் ஓங்க வேண்டும் என்று வாழ்த்தினார். அப்பாசுரத்தைப் புனல்வாதத்தின் பொருட்டு வையை ஆற்றில் இட்டபோது நீரை எதிர்த்துக் கொண்டு ஏடு முன்னேறியது. அப்பாடலில்,

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே (3,54,1)

என்று அரன் நாமம் சூழ்க என்று திருவைந்தெழுத்தினை வாழ்த்தினார். இத்திருப்பாசுரத்திற்குச் சேக்கிழார் தம் **பெரியபுராணத்தில்** இருபத்து நான்கு பாடல்களில் உரை வகுத்துள்ளார். அதில் ‘அரன் நாமமே சூழ்க’ என்ற வரிக்கு உரையாக,

**ஆழ்க தீயதென் றோதிற் றயல்நெறி**
**வீழ்க என்றது வேறெல்லாம் அரன்பெயர்**

**சூழ்க என்றது தொல்லுயிர் யாவையும்**
**வாழி அஞ்செழுத் தோதி வளர்கவே** (பெரிய.பா.2726)

என்றவாறு அரன்நாமமாகிய ஐந்தெழுத்தை அனைத்து உயிர்களும் ஓதி வளர வேண்டும் என்கின்றார் சேக்கிழார். இதற்குச் சிவக்கவி மணியவர்கள், "தொன்றுதொட்டு வரும் உயிர்கள் எல்லாம் வாழ்வு தரும் திருவைந்தெழுத்தை ஓதி வளர்க" என்று உரை வகுக்கின்றார் (தி.12 உரை, பக்.1009).

## நாமம் உரைத்து நல்லருள் பெறுதல்

மனமானது மற்ற உறவுகளை மறந்து, இறைவனை மட்டும் நினைந்து உருகி நாமம் கூறி வழிபடுதல் ஒரு வகை. இந்நிலையைத் திருநாவுக்கரசர் தம்முடைய பதிகத்தில் முழுமையாக இறைவனைச் சார்ந்து அனைத்தும் அவனாகவே மாறிப்போய்விட்ட தன்மையைப் பாடியருளுகின்றார். இறைவனது நாமங்களை வடமொழியாலும், தமிழ்மொழியாலும் எடுத்துரைத்து வழிபடுவது வழக்கம்.

**சயசய என மிகு துதி செய!** (1 : 20 : 9)

**நாதா எனவும் நக்கா எனவும் நம்பா**
**என நின்று பாதம் தொழுவார்!** (1 : 67 : 1)

**பெண்ணேர் பாகா பித்தா பிரானே**
**என்பார்க்கு நண்ணா வினைகள்!** (1 : 102 : 4)

எனத் திருஞானசம்பந்தர் பாடியருளுகின்றார். இதிலிருந்து இறைவனது திருநாமங்களைத் தமிழ்ச் சொற்களால் போற்றி ஓதி வழிபட்டமை தெரியவருகின்றது.

இறைவன் நாமத்தைக் கூறுதல்அன்றிக் கேட்டலும் ஓர் வழிபாடாகும். திருநாவுக்கரசர் பாடியருளிய திருஅங்கமாலைப் பதிகத்தில் செவிகாள் கேண்மின்களோ' என்று குறிப்பிட்டருளுகின்றார். திருஞானசம்பந்தரும் பின்வருமாறு பாடுகின்றார்.

**அரன் நாமம் கேளாய் நம் கிளை கிளைக்கும்!** (1 : 62 : 1)

**புகழ் நாமம் செவிகேட்ப!** (2 : 41 : 3)

**சொல்லுதல் கேட்டல் வல்லார் துன்பம் துடைப்பாரே!**
(1 : 42 : 6)

**சொலக்கேட்டு உகந்தவர் தம்மை வாதியா வினை**
**இம்மைக்கும், மறுமைக்கும் வருத்தம் வந்தடையாவே!**
(2 : 106 : 11)

**சொல்லுவார்க்கும் இவை கேட்பார்க்கும் துயரில்லையே!**
(2 : 116 : 11)

என்றவாறு இப்பதிகங்களை ஓதுகின்றவர்களுக்கு மட்டுமின்றிக் கேட்டார்க்கும் கூடப் பலன் உண்டு என்பதனைக் குறிப்பிட்டுப் பாடியருளி இருப்பது தனிச்சிறப்பு என்பதனை உணரமுடிகின்றது. பெரியாழ்வாரும் கண்ணன் குழலூதற்சிறப்புப் பாடலில் பின்வருமாறு பாடியருளுகின்றார்.

**திரண்டெழுதழை மழைமுகில் வண்ணன்**
**செங்கடல் மலர்சூழ் வண்டினம் போலே**
**சுருண்டிருண்ட சூழல் தாழ்ந்த முகத்தான்**
**ஊதுகின்ற குழலோசை வழியே**
**மருண்டு மான் கணங்கள் மேய்மை மறந்து**
**மேய்ந்த புல்லும் கடைவாய் வழி சோர**
**இரண்டு பாடும் துலங்காப் புடைபெயரா**
**எழுது சித்திரங்கள் போல நின்றனவே**
(பெரியாழ்வார் திருமொழி: சுட்டறுத்தல் : பா : 9

என்பதில் இறைநாமம் கேட்டு மான், பசுக்கூட்டங்கள் மெய்மறந்து நின்றதாகக் காட்டுவது இவண் நோக்கத்தக்கதாகும். மாணிக்கவாசகர் தம் திருச்சதகத்தில்,

**போற்றிஓம் நமச்சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்**
**போற்றிஓம் நமச்சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை**
**போற்றிஓம் நமச்சிவாய புறம் எனைப் போக்கல் கண்டாய்**
**போற்றிஓம் நமச்சிவாய சயசய போற்றி போற்றி** (8.5.62)

என்று தூலத்திருவைந்தெழுத்தினால் இறைவனிடம் முறையிடுகின்றார். வினைகளின் தாக்கத்தினால் அல்லல்படும் உயிர் இறைவனிடம் அரற்றி நைவதாகக் காணப்படும் இப்பாடலைக் குறித்து இம்மந்திரம் தூலமாதல் பற்றியும், போகத்தை விரும்பும் உயிர்களால் செபிக்கப்படுதல் பற்றியும், தீக்கைப் பேறுடையார் அஃதில்லார் ஆகிய யாவர் முன்னும் சொல்லத் தக்கதாதல் பற்றியும் என்று நமச்சிவாய மந்திரத்தின் சிறப்பை உரைப்பர் (**திருவாசக ஆராய்ச்சியுரை**, ப.209).

திருமுறை ஆசிரியர்கள் திருவைந்தெழுத்தினைப் பிணி தீர்க்கும் மருந்து என்று பல இடங்களில் குறிப்பிடுகின்றனர். பிறவிப் பிணியும், உடற்பிணியும் ஒருங்கே தீர்ப்பது திருவைந்தெழுத்து என்று எடுத்தோதுகின்றனர். ஐந்தாம் திருமுறையில்,

**இருந்து சொல்லுவன் கேண்மின்க ளேழைகாள்**
**அருந்த வந்தரும் அஞ்செழுத் தோதினால்**
**பொருந்து நோய்பிணி போகத் துரப்பதோர்**
**மருந்து மாகுவர் மன்னுமாற் பேறரே** (5,60,4)

என்று பிணி தீர்க்கும் மருந்தாக ஐந்தெழுத்தைக் குறிப்பிடுவர்.

**பெரியபுராணத்தில்** சோழநாட்டு மக்கள் ஐந்தெழுத்தினை ஓதிக் கொண்டே இருப்பதால் உடற்பிணிக்கான நோய்கள் வர அஞ்சுகின்றன என்பர் (பெரிய., பா.84). இதற்கு வாரியார் சுவாமிகள் அஞ்சும் என்பது பஞ்சாட்சரத்தைக் குறிக்கும் போது பெயர்ச் சொல்லாகவும், நோய்களைக் குறிக்கும் போது வினைச்சொல்லாகவும் பயன்படுத்தப் பட்டுள்ளது என்று குறிப்பிடுகின்றார் (**சிவனருட்செல்வர்**,ப.50). திருநாவுக்கரசர் திருவைந்தெழுத்து மந்திரம், தந்திரம், மருந்து என நின்று பிணி தீர்க்கின்ற முறையைக் கூறுகின்றார். மந்திரம் என்பது திருவைந்தெழுத்து; தந்திரம் என்பது அதனை மேற்கொள்ளும் முறையைக் கூறும் ஆகமங்கள்; மருந்து என்பது அவ்வாகமங்களின் வழிநின்று செய்யும் செபம், பூசை, தியானம், முதலியனவாகும் (6,54,8). தீராநோயாகிய அறியாமை நோய்க்கு மருந்தாகும் திருவைந்தெழுத்து உடலைப் பற்றியுள்ள நோய்க்கும் மருந்தாக அமையும் என்பதை இப்பாடலில் காட்டுகிறார்.

நாவினுக்கு அழகு செய்யும் திருவைந்தெழுத்தை நாவானது வணங்கி மகிழ்கின்ற இயல்புடையது என்று ஞானசம்பந்தர் சுட்டுவார். "நாவணங் கியல்பா மஞ்செழுத் தோதி" (3,120,8) என அப்பர் பெருமான் பல்வேறு இடங்களில் வாயினால் வாழ்த்தி இறையருள் பெற அறிவுறுத்துகின்றார்.

**வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்** (5.90.7)

**கற்றுக் கொள்வன வாயுள நாவுள** (5.9.6)

என்று உடன்பாட்டு முகமாகக் கூறும் அப்பர் அவ்வாறு செய்யாதவர்களின் இழிவைக் கூறும்போது,

**பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்**
**நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்**
**ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து**
**காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே** (5.90.5)

என்றுரைக்கின்றார். நாவின்பயன் ஐந்தெழுத்து நவில்தல். அவ்வாறு நவிலாதவர்கள் உடலுக்காக உணவு தேடி அவல வாழ்வு வாழ்ந்து, இறுதியில் காக்கைக்கு உணவாகி அழிவர் என்று எச்சரிக்கின்றார். எனவே, உயிர்போகும் முன் இறைவன் திருநாமம் வாழ்த்தக் கற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்கின்றார்.

**கயிலைபாதி காளத்திபாதி அந்தாதியில்** உடற்பிணிக்கான மருந்தை உண்ட பின்னரே இரத்தத்தில் கலந்து பயன்கொடுக்கும். ஆனால் பிறவி நோய்க்கான மருந்தான ஐந்தெழுத்தினை வாயிலே வைத்தவுடன் பயனளிக்கும் என்பார் (பதி. **கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி**, பா. 39).

திருஞானசம்பந்தரும் மருந்து, மறுமை, நன்னெறி மந்திரம் அனைத்தும் இறைவன் திருநாமமே என்று போற்றுகின்ற தன்மையைக் காண முடிகின்றது (3,92,1). திருமாளிகைத் தேவர் உணர்வில் நிறைந்து உயிரில் கலந்தது திருவைந்தெழுத்து என்று கூறி,

**ஐந்தெழுத்தும் பிதற்றி**
**பிணிதீர் வெண் ணீறிடப் பெற்றேன்** (திருவிசைப்பா, பா.31)

என்று கூறும் போது "திருவைந்தெழுத்து ஒரு திருப்பெயராக வாயளவில் நிற்காமல் உயிரில் கலந்து அறியாமை அகற்றும் பேருதவியைச் செய்கின்றது" என்கிறார் முனைவர் இரா. மணிமேகலை (**சைவ இலக்கியங்களில் திருவைந்தெழுத்து**. ப. 96).

திருத்தொண்டின் நெறி நின்ற திருநாவுக்கரசர் ஒருநாளும் மறவாமல் திருநாமம் கருதி வழிபட்டவர் என்பதை அவர் அருளிய முதற்பதிகத்திலேயே காணலாம்.

**நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்**
**உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்** (4.1.6)

இறைவன் திருப்பெயரை நன்மையிலும் தீமையிலும் மறவாது ஓதிய மரபைக் காணமுடிகின்றது.

எவ்வறிவு இல்லையெனினும் திருவைந்தெழுத்து ஓதும் அறிவு மட்டும் இறையருளால் வாய்த்துவிட்டால் அதுவே எல்லா நற்கதிக்கும் வழிவகுக்கும் என்று திருமுறை ஆசிரியர்கள் வலியுறுத்துகின்றனர். அரிய பல தவங்களைச் செய்து பெறக்கூடிய அறங்களையெல்லாம் இம்மகா மந்திரம் அருளும் என்பதை,

**ஏது மொன்று மறிவில ராயினும்**
**ஓதி யஞ்செழுத் தும்முணர் வார்கட்குப்**
**பேத மின்றி யவரவ ருள்ளத்தே**
**மாதுந் தாமும் மகிழ்வர்மாற் பேறரே** (5,60,1)

என்பார் அப்பர். அதனால்தான் திருவைந்தெழுத்தைக் கற்ற கலைஞானிகளோடு கலந்து நல்வினை அடைய விரும்பாமல் போனதை எண்ணி மணிவாசகர் மனம் வருந்தி,

**எண்ணி லேன்திரு நாமஅஞ் செழுத்தும்என்**
**ஏழைமை யதனாலே** (8,26,6)

என்று உரைக்கின்றார். திருவைந்தெழுத்தை அறியாமல் இருப்பதே அறியாமை என்று அறிவுறுத்துகின்றார். எனவே, எழுத்தறிவதாகிய கல்வியறிவு எனப்படும் பாசஞானம், பசுஞானத்தினால் திருவைந்தெழுத்தினை அறிய முடியாது என்பதை உணர முடிகின்றது. திருமூலர் இதனை,

**எழுத்தறி வோம்என் றுரைப்பார்கள் ஏதர்**
**எழுத்தை அழுத்தும் எழுத்தறி யாரே** (திரு. பா. 2673)

என்று நகைச்சுவையாகக் குறிப்பிடுகின்றார். பள்ளியில் ஆரம்பக் கல்வியாகிய எழுத்தறி கல்வியைக் கற்றவர்கள் கூட ஐந்தெழுத்துக்களை அறிவதாகப் பொதுவாகக் கூறுவர். ஆனால் வேதம் முதலாக அனைத்து மெய்யறிவு நூலைக் கற்றவர்கள் கூட ஊழை நீக்கும் ஐந்தெழுத்தை அறியமாட்டார்கள் என்கிறார். எனவே, தூயமலர்களும் ஐந்தெழுத்து மந்திரமுமே இயல்பான வாழ்வுக்குரிய வழிபாடாக எளிமையாக மணிவாசகர் குறிப்பிடுகின்றார்.

**இப்பிறப்பினில் இணைமலர் கொய்துநான்**
**இயல்பொடஞ் செழுத்தோதி** (8,41,7)

என்று கூறுவார்.

பிறந்தார் எல்லாம் இறப்பது உறுதி என்னும் உண்மையை அறிந்திருந்தாலும் உயிர் போகின்ற நிலைக்கு அஞ்சி அஞ்சியே வாழ்ந்து கொண்டிருப்பது மனித இயல்பு. உயிரச்சமே எமன் மேல் உள்ள அச்சமாக மாறிவிடுகின்றது. திருவைந்தெழுத்துத் திருப்பதிகங்கள் காலபயத்தை அகற்றிக் கவலையின்றி வாழச் செய்கின்றன. வாழ்கின்ற நாள்களில் இறைநாமம் வாழ்த்தும் நல்வினையைச் செய்து வாழ வழிகாட்டுகின்றன.

**இயமன் றூதரு மஞ்சுவ ரின்சொலால்**
**நயம்வந் தோதவல் லார்தமை நண்ணினால்** (3,49,4)

**வஞ்சக மற்றறடி வாழ்த்த வந்தகூற்**
**றஞ்சவு தைத்தன அஞ்செழுத்துமே** (3,22,1)

**கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத்**
**தல்லல் கெடுப்பன அஞ்செ ழுத்துமே** (3,22,4)

**ஓவு நாள்உணர் வழியும்நாள் உயிர்**
**போகும் நாள்உயர் பாடைமேல்**
**காவு நாள்இவை என்ற லாற்கரு தேன்** (7,48,3)

இயமன்தூதரும், நமன்தமரும், கூற்றுவனும் ஐந்தெழுத்து ஓதுபவர் அருகில் கூட வர அஞ்சுவர் என்று மூவர் திருப்பதிகங்களும் உரைக்கின்றன. எவ்வளவு வறுமை வந்துற்ற போதிலும் இறைவனைத் துதித்து வழுத்தினால் செல்வம் மிகும். வீடு பேற்றை அடைதலும் எளிதாகும் என்பதை,

**வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்**
**பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்**
**மாடு கொடுப்பன** (3,22,7)

என்றும், இகழப்படும் நாள்கள், கெட்ட நாள்கள் என்று கருதப்படும் நாள்கள், மறக்கப்படும் நாள்கள் என்றெல்லாம் பிரிவினை செய்யாமல் திருவைந்தெழுத்து ஓத வேண்டும் என்பதை,

> **இட்ட நுன்னடி ஏத்து வார்இகழ்**
> **திட்ட நாள்மறந் திட்டநாள்**
> **கெட்ட நாள் இவை என்ற லாற்கரு தேன்** (7,48,2)

என்றும் **தேவாரம்** குறிப்பிடுகின்றது. இறைவன் திருவைந்தெழுத்தை ஓதாத நாள்களே உணர்வழிந்த நாள்களாகவும், உயிர் போன நாள்களாகவும் கருதலாமேயன்றி அவை நல்லநாள்கள் என்று கருதமுடியாது என்றும் சுந்தரர் இப்பாடலில் எடுத்துரைக்கிறார்.

## முக்தியும் திருவைந்தெழுத்தும்

'முக்தி' என்பது துன்பமில்லாத எதிர்மறை நிலை, மட்டுமன்றிப் பேரின்பமயமான உடன்பாட்டு நிலையுமாகும். ஆன்மா இறைவனோடு 'இரண்டறக் கலத்தல்', 'இறைவனோடு ஆன்மா ஐக்கியப்படுதல்' என்பது சித்தாந்தக் கொள்கை முடிபு (கி.இலட்சுமணன், **இந்தியத் தத்துவ ஞானம்**, ப: 401)

இறைவனின் திருவடி பற்றி, அவன் திருவருளையே உணர்ந்து, அதன்கீழ் அடங்கி நிற்றலே அடிசேர் முக்தி எனப்படும் 'பரமுக்தி' நிலையாகும். சிவானந்தம் சிவனது அருட்குணம் ஆதலால் அதனை, அவன் திருவடி நிழல் அடைந்து பெறுவதே சிறந்தது எனச் சித்தாந்தம் கூறுகின்றது. சிவபெருமானின் திருவடி இன்பமே, சித்தாந்தம் கூறும் முக்தி நெறி இன்பமாகும். மாணிக்க வாசகர் இறையருள் தம் முக்திக்கு வழிகாட்டிய நெறியினை,

> **நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனை**
> **சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்**
> **குறியொன்றும் இல்லாத கூத்தன்தன் கூத்தை யெனக்கு**
> **அறியும் வண்ணம் அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே**
> (மாணிக்கவாசகர், திருவாசகம், அச்சோப்பதிகம், பா: 2)

என்ற வரிகளால் விளக்குகின்றார். ஒரு நெறியில் நின்று ஒழுகாமல் தடம் புரள்வது மனித இயல்பு. ஆதலால் சிறுநெறியின் பக்கம் சென்று சேர்ந்து விடாமல் நன்னெறிக்கண் வழிகாட்டி அருள் செய்த இறையருள் ஒன்றினையே மாணிக்கவாசகர் தம் உள்ளக் கிடக்கையாகக் கூறியுள்ளார்.

முக்தி நிலையில் ஆன்மா எல்லையற்ற இன்பத்தை அனுபவிக்கும். இத்தகைய வீடுபேற்றிற்குச் சாதனமாக விளங்குவது ஞான நெறியாகும்.

**ஞானத்தால் வீடென்ற நான்மறைகள்**
**புராணம் நல்ல ஆகமஞ் சொல்ல......**

என்று **சிவஞான சித்தியாரும்,**

**ஞானத்தால் மிக்க அறநெறி நாட்டிலில்லை**
**ஞானத்தின் மிக்கவை நன்முக்தி நல்காவாம்**
(திருமந்திரம், பா: 1467)

என்று திருமூலரும் தம் **திருமந்திரத்தில்,** ஞானத்தாலேயே வீடு பேறு உண்டாகும் என்பதனை வலியுறுத்தியுள்ளார்.

இந்நால் வகை நெறிகளும் ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபட்டவை அல்ல. ஒன்றின் படிநிலை வளர்ச்சியே மற்றொன்றாகும்.

**விரும்பிய சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும்**
**அரும்பு மலர் காய் கனி போன்றன்றோ பராபரமே**
(தாயுமானவர், பராபரக்கண்ணி, பா.154)

என்ற தாயுமான சுவாமிகளின் வரிகளின் மூலம் இப் படிநிலை வளர்ச்சியினை அறிந்து கொள்ள முடிகின்றது. இந்நால்வகை நெறி நின்று சமயக் குரவர் நால்வரும், இறைவனின் திருவடிப்பேறு எய்தி, சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியப் பேற்றினை அடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திருஞானசம்பந்தர் முதன் முறையாகக் காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்கி, ஓதினால்தான் ஐந்தெழுத்துங்கூட நல்ல நெறியில் செலுத்தும் என்று கூறிய கருத்தில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்னும் நோக்கில் இம்மந்திரத்தை முறையாக ஓதினால் கிடைக்கும் பயன்களையும் குறிப்பிட்டருளுகின்றார்.

**நம்புவார் அவர் நாவில் நவிற்றினால்**
**வம்புநாண் மலர்வார் மது ஒப்பது** (3 : 49 : 2)

**கொல்வாரேனும் குணம் பல நன்மைகள்**
**இல்லாரேனும் இயம்புவராயிடின்**
**எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்**
**நல்லார் நாமம் நமச்சி வாயவே** (3 : 49 : 5)

**மந்தரமான பாவங்கள் மேவிய**
**பந்தனையவர் தாமும் பகர்வரேல்**
**சிந்தும் வல்வினை; செல்வமும் மல்குமால்**
**நந்தி நாமம் நமச்சிவாயவே** (3 : 49 : 6)

என்றவாறு ஐந்தெழுத்தை நம்பிக்கையுடன் காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்க ஓதுவாரிடம், இயமன் தூதரும் வர அஞ்சுவர் என்றும்,

பஞ்சமாபாதகங்கள் செய்தவர் ஆயினும், ஐந்தெழுத்தை ஓதுவர் எனின் அத்தீங்குகளிலிருந்து நீங்குவர் என்றும் கூறியது மக்கள் மனதில் நம்பிக்கையை வளர்த்தது. மேலும் ஆணவம் மனிதனை என்றும் கீழ் நிலைக்குக் கொண்டு செல்லும் கருவியாகும். இராவணன் கயிலை மலையைத் தம் ஆணவத்தால் எடுத்துப் பின் துன்புற்று ஐந்தெழுத்து ஓதிப் பிழைத்தான் என்ற கருத்தையும் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**இலங்கை மன்னன் எடுத்த அடுக்கண்மேல்**
**தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்**
**மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை**
**நலங்கொள் நாமம் நமச்சி வாயவே"** (3 : 49 : 8)

இவற்றிலிருந்து ஐந்தெழுத்தின் சிறப்பும் ஆற்றலும் தெரியவருகின்றன. திருநாவுக்கரசரும் ஐந்தெழுத்தினைச் சிறப்பித்துப் பாடியருளுகின்றார்.

**நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே** (4 : 12 : 2)

**நற்றுணையாவது நமச்சிவாயவே** (4 : 12 : 4)

**நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே** (4 : 12 : 6)

**படைக்கலமாக உன் நாமத்து எழுத்து அஞ்சும்**
**என் நாவிற் கொண்டேன்** (4 : 81 : 8)

என்ற வகையில் பாடியருளியது குறிப்பிடத்தக்கது. சுந்தரமூர்த்தி நாயனாரும் திருவைந்தெழுத்தைப் போற்றுகின்றார்.

**மற்றுப் பற்றெனக்கின்றி நின்திருப் பாதமே மனம் பாவித்தேன்**
**பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மை**
**வந்தெய்தினேன் கற்றவர் தொழுது ஏத்தும் சீர்**
**கறையூரில் பாண்டிக் கொடுமுடி நற்றவா உனை**
**நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே** (7 : 48 : 1-10)

**அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி** (7 : 83 : 1)

என்று இதன் பெருமையைக் கூறுகின்றார். இதனைத் திருமூலரும்,

**ஒன்று கண்டீர் உலகுக்கொரு தெய்வமும்**
**ஒன்று கண்டீர் உலகுக்கு உயிராவது**
**நன்று கண்டீர் இனி நமச்சிவாயப் பழம்**
**தின்று கண்டேற்கு இது தித்தித்தவாறே** (10 : பா : 2962)

என்று ஐந்தெழுத்தைப் பாடுகின்றார். சேக்கிழார் பெருமானும் பின்வருமாறு போற்றுகின்றார்.

மந்திரங்களானவெலாம் அருளிச் செய்து
மற்றவற்றின் வைதிக நூற் சடங்கின் வந்த
சிந்தை மயங்குறும் ஐயம் தெளிய எல்லாம்
செழுமறையோர்க்கு அருளி அவர் தெருளும் ஆற்றால்
முந்தை முதல் மந்திரங்கள் எல்லாம் தோன்றும்
முதலாகும் முதல்வனார் எழுத்தஞ்சு என்பார்
அந்தியினுள் உன்மந்திரம் அஞ்செழுத்துமே என்று
அஞ்செழுத்தின் திருப்பதிகம் அருளிச் செய்தார்
(12 : 2169)

என்று போற்றுகின்றார். மேலும் பிற அருளாளர்கள் போற்றிய ஐந்தெழுத்துச் சிறப்பு வள்ளலார் திருவருட்பா மூலம் அறியப்படுகின்றது.

பெற்ற தாய்தனை மக மறந்தாலும்
பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்
கண்கள் நின்றிமைப்பது மறந்தாலும்
நற்றவத்து உள்ளிருந்தோங்கும்
நமச்சிவாயத்தை நான் மறவேனே - திருவருட்பா

என்று வள்ளல் பெருந்தகையார் போற்றுகின்றார்.

இவற்றிலிருந்து ஐந்தெழுத்து என்னும் அடித்தளத்தின் மேல் பக்திமார்க்கச் சைவக்கோட்டையை எழுப்பியுள்ளமையை அருளாளர்கள் பல பாடல்களின் மூலம் நிறுவியுள்ளமையை அறியமுடிகின்றது. திருஞானசம்பந்தர், ஐந்தெழுத்து, அன்பு என்ற இரண்டையும் இன்றியமையாதவை ஆக்கினார். இதனைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

வம்பின் அடியீர் நாண்மலர் இட்டுத் தொழுதுய்ய
உம் அன்பினொடு எம் அன்பு செய்து ஈசன் உறைகோயில்
(1 : 11 : 3)

அகனமர்ந்த அன்பினராய் அறுபகை செற்றுதும்
புலனும் அடக்கி (1 : 132 : 6)

அரவ நீள் சடையானை உள்கி நின்று ஆதரித்து
முன் அன்பு செய்தடி பரவுமாறு வல்லார் பற்றறுப்பாரே
(2 : 50 : 3)

என்பன அன்பின் தேவையைத் திருஞானசம்பந்தர் வலியுறுத்திய பகுதிகளாகும். இக்கருத்தினைத் திருநாவுக்கரசரும்,

> **வாமனை வணங்க வைத்தார் வாயினை வாழ்த்த வைத்தார்**
> **சோமனைச் சடைமேல் வைத்தார் சோதியுள் சோதி வைத்தார்**
> **ஆமனெய்யாட வைத்தார் அன்பெனும் பாசம் வைத்தார்**
> **காமனைக் காய்ந்த கண்ணார் கழிப்பாலைச் சேர்ப்பனாரே'**
> (4 : 30 : 3)

> **இரப்பவர்க்கு ஈயவைத்தார் ஈபவர்க்கு அருளும் வைத்தார்**
> **கரப்பவர் தங்கட்கெல்லாம் கடு நரகங்கள் வைத்தார்**
> (4 : 38 : 10)

என்று அருளுகின்றார். இதில் இரப்பவர்க்கு ஈயவைத்தார் என்ற அடி தனிச்சிறப்புடையது. உயிர்கள் மாட்டு அன்பு செய்யவில்லை. ஆனால், கிடைப்பது கடு நரகம் என்று கூறுவது சமூகம் பற்றி இவர்கள் கொண்டிருந்த பரிவு புலப்படுகின்றது. ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தர் ஐந்தெழுத்து, அன்பு என்னும் இரண்டையும் வலியுறுத்திப் புரட்சி செய்தார். இது ஒன்பதாம் நூற்றாண்டில் மாணிக்கவாசகரால் முடிவுபெற்றதாகக் கூறலாம். மாணிக்கவாசகரும் ஐந்தெழுத்து அன்பு ஆகியவற்றின் நுணுக்கத்தை அறிந்து இவை இரண்டையும் **திருவாசகத்தின்** உயிர் நாடி ஆக்கினார் (அ.ச. ஞானசம்பந்தன் : 1999 : 168).

திருமூலரும் ஐந்தெழுத்து, அன்பு ஆகியவற்றின் பெருமையை உணர்ந்து,

> அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
> அன்பே சிவமாவது யாரும் அறிகிலார் (10 : 18 : 1)

என்று தெளிவுறுத்துகின்றார்.

## திருநீற்று மகிமை

மந்திரமாவது நீறு என்பது சைவம். இறைவனின் திருமேனி நீறுபூசியதாகத் திகழ்வதை, "வெள்ள நீர்ச்சடை மெய்ப்பொருளாகிய வள்ளல் சாத்தும் மதுமலர் மாலையும் அள்ளும் நீறும்" என்று சேக்கிழாரும், "காடுடைய சுடலைப்பொடி பூசி என் உள்ளங்கவர் கள்வன்" என்று திருஞானசம்பந்தரும் குறிப்பிடுகின்றனர். நீற்றப்படுவது நீறு அதாவது உயிர்களின் வினைகளை நீறு செய்வது என்னும் மெய்ப்பொருளை உணர்த்துகின்றது.

> **கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை**
> **மங்காமற் பூசி மகிழ்வீரே யாமாகில்**

**தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி**
**சிங்கார மான திருவடி சேர்விரே**

என்னும் **திருமந்திரப்**பாடலில் திருநீற்றின் சிறப்புப் பேசப்படுகின்றது. இந்நீற்றினால் நோய்நொடி நீக்கமும், உயிர்த்தெழச் செய்தலும் ஆகிய நிகழ்வுகள் நாயன்மார்களின் வாழ்வில் நிகழ்ந்ததாகச் சேக்கிழார் காட்டுகின்றார்.

"திருநீறு மந்திரமும் மருந்தும் ஆகும்" (திருஞான, பா.எண்:764) என்றும் ; "நிரந்த நீற்றொளியால் நிறைதூய்மை" (திருக்கூட்டச்சிறப்பு, பா.எண்:3) என்றும் ; "வெண்ணீற்றின் விரிந்த சோதி" (திருஞான, பா.எண்.858) என்றும் ; பொய்ம்மை அழித்துப் பாவத்தை மாற்றும் எல்லையில்லா நலஞ்சேர்க்கும் திருநீற்றின் பெருமை விதந்தோதப்பட்டுள்ளது. "மந்திரமாவது நீறு" எனத்தொடங்கும் பாடலில் திருநீறு மந்திரமாகவும் விளங்குகின்றமை போற்றப்படுகிறது; சக்தியின் வடிவமாகத் திருநீறு விளங்குவதைப் பராவணமாவது நீறு என்னும் தொடர் குறிப்பிடுகின்றது. பவளம் போல் மேனியில் பால்வெண்ணீறும், **மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த மேனியான், தூண்டு சுடர்மேனித் தூநீறாடி** ஆகிய தொடர்கள் இறைவனின் நீறு பூசிய மேனியை அலங்கரிக்கின்றன.

அடியார்கட்கு அன்பராகி, மாலறியா பெருமையுடைய பெருமானின் திருவடியை நினைந்து வெண்ணீறு அணிகிலாதவரைக் கண்டு மாணிக்கவாசகர் அஞ்சுகின்றார் :

**பிணியெலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோடு இறப்பும் அஞ்சேன்**
**துணிநிலா அணியி னான்தன் தொழும்ப ரோடு அழுந்தி அம்மால்**
**திணிநிலம் பிளந்தும் காணாச் சேவடி பரவி வெண்ணீறு**
**அணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே**

என்னும் பாடலில் திருநீற்றின் மேன்மையையும், அதன்மீது கொண்ட பேரன்பையும் மாணிக்கவாசகர் புலப்படுத்துகின்றார்.

உறுவது நீற்றின் செல்வம் எனக்கொள்ளும் உள்ளம் நீரார் என்றும், ஆய்ந்த மெய்ப்பொருள் நீறு என வளர்க்கும் அக்காப்பு என்றும் ஆதி முதல்வன் திருநீற்றின் அடைவே பொருள் என்றும் **பெரியபுராணம்** திருநீற்றின் சிறப்பினைப் பேசுகின்றது. சேக்கிழார் முழுநீறு பூசிய முனிவர் வரலாற்றில் திருநீற்றின் வகைகளையும், திருநீறு தயாரிப்பு

முறைகளையும் எடுத்தியம்புகின்றார். அகற்பம், கற்பம், அனுகற்பம், உபகற்பம் என நால்வகைத் திருநீற்றினைக் காட்டும் சேக்கிழார் அகற்பம் என்ற ஒன்றை நீக்கிக் கற்பம், அனுகற்பம், உபகற்பம் என்னும் மூவகைத் திருநீற்று வகைகளைத் தெளிவுபடுத்துகின்றார். திருநீற்றை அணியலாகாத இடங்களைப் பற்றிப் பேசும் சேக்கிழார்,

**அந்தமிலா அரன் அங்கி ஆறு மெய்மை**
**அறிவித்த குருநன்மை அல்லாப் பூமி**
**முந்த எதிர் அணியாதே**

என்கின்றார். திருநீற்றை உத்தூளனமாகவேனும், திருபுண்டமாகவேனும், பிறை வடிவமாகவேனும், தீப வடிவமாகவேனும், வட்ட வடிவமாகவேனும் அணிதல் நலம் என்பதைச் சேக்கிழார் உணர்த்துகின்றார்.

திருநீற்றை அபிடேகப் பொருளாக, உருத்திராட்சக் கண்டிகை அணிகலனாக, சடைமுடியைத் திருமுடியாகக் கொண்டு மும்மையால் உலகாண்டவர் மூர்த்தி நாயனார். திருநீற்றிடத்தும் திருநீறு அணிந்த சிவனடியாரிடத்தும் சேரமான் பெருமாள் கொண்ட அன்பின் எல்லையைச் சேக்கிழார் முன்வைக்கின்றார். "மோகாதி குற்றங்கள் அறுக்கும் நீற்றை மொழிவது நமக்கு வினைகள் கழிவதாக" என்ற பாடல் வரிகளில் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மார்ச்சர்யம் என்னும் அறுவகைக் குற்றங்களை அறுக்கவல்லது திருநீறு என்று புகழ்கின்றார் சேக்கிழார். இத்தகு சிறப்புக் கொண்ட நீரை வழங்கும் முறையை,

**அருந்தவர் எழுந்து செய்ய அடியினை விளக்கி வேறோர்**
**திருந்தும்ஆ சனத்தில் ஏறிப் பரிகலந் திருத்து முன்னர்**
**இருந்துவெண்ணீறு சாத்தி இயல்புடை இருவ ருக்கும்**
**பொருந்திய நீறு நல்கிப் புதல்வர்க்கும் அளிக்கும் போழ்தில்**
(திருநாவு., பா.எண்:31)

என்ற பாடலில் விளக்குகின்றார். "தூய திருநீற்று நெறி எண்டிசையும் தனிநடப்ப, எனத் திருநீற்று நெறியும், நீறு வாழ்வென நிகழ்திருத்தொண்டர்" எனத் திருநீற்று வாழ்வும் கூறப்படுகின்றன. திருநீற்றின் சார்பு கொண்டவருக்குக் கவலையில்லை என்பதை, "பார்மேல் கண்ணுதலான் திருநீற்றுச் சார்வினோர்க்குங் கவலை வருமோ" என்னும் சொற்கள் உணர்த்துகின்றன. ஏனாதிநாதரை எதிரிட்ட அதிசூரன் வஞ்சத்தால் வெல்ல, நெற்றியில் நீறுபூசிக் கொண்டு வந்து, அதை மறைத்து ஏனாதிநாதர் வாளால் துணிக்க நேர்ந்தபோது, நீற்றை மறைத்திருந்த பலகையை நீக்கினான். அதைக்கண்ட ஏனாதிநாதர் "கெட்டேன் முன்பு இவர்மேல் காணாத வெண்திருநீற்றின் பொலிவு

மேற்கண்டேன் வேறினி என் அண்டர்பிரான் சீரடியார் ஆயினார்" என்று எண்ணிப் போரிடுவார் போல் வாழா நின்றார். அவனும் தன் கருத்தை முடித்துக்கொண்டதாகச் சேக்கிழார் காட்டுமிடம் வெண்ணீறு உடையாரை வீழ்த்துதல் அறப்பாவம் என்னும் கூற்றை மெய்ப்பிக்கின்றது. மெய்யெல்லாம் நீறு பூசி, வேணிகள் முடித்துக்கட்டி, தம்மையே கொல்ல வந்த முத்தநாதன் தம்மை வஞ்சனையால் வீழ்த்தியபோதும் திருநீற்றுப் பெருமை காத்தவர் மெய்ப்பொருள் நாயனார். மெய்ப்பொருள் நாயனாரை வஞ்சத்தால் வீழ்த்த வந்த முத்து நாதனைச் சேக்கிழார்,

**மெய்எலாம் நீறுபூசி வேணிகள் முடித்துக் கட்டிக்**
**கையினில் படை கரந்த புத்தகக் கவளி ஏந்தி**
**மைபொதி விளக்கே என்ன மனத்தின்உள் கறுப்பு வைத்துப்**
**பொய்தவ வேடம் கொண்டு புகுந்தனன் முத்தநாதன்**

(மெய்ப்பொருள்., பா.எண்.31)

என்று காட்சிப்படுத்துகின்றார். அன்பர் வேடமே சிந்தை செய்வாராகிய மெய்ப்பொருள் நாயனார் கொலையுண்ட வேளையிலும் நாயனார் சிவவேடத்தின்மீது கொண்ட அன்பினின்று சிறிதும் பிறழாதவராய்த் தம்மைக் குத்தியவனை மாற்றானெனக் கருதாமல், அவன் வேடத்தின்மீதே கருத்துக்கொண்டு நீறுபூசிய மெய்த்தவ வேடமே மெய்ப்பொருளெனத் தொழுதது நாயனாரின் மெய்யான சிவபக்தி நிலையைப் புலப்படுத்துகின்றது.

சைவப்பெருமக்களுக்கு வழிபாட்டு நெறியில் முதன்மையாகக் கருதத்தக்கது திருநீறு ஆகும். திருநீறு, விபூதி, பசுமம், பசிதம், சாரம், இரட்சை என்ற பல பெயர்களைக் கொண்டு திகழ்வது திருநீறு.

**நீடலுறுந்தீ வினையனைத்தும்**
**நீற்றி விடலால் நீறென்றும்**
**வீடில் வெறுக்கை தருதலினால்**
**விபூதி என்றும் உயிர்தோறும்**
**கூடு மலமாசினைக் கழுவுங்**
**குணத்தால் சாரம் என்றும், மடம்**
**ஓட வளர் சோதியைத் தரலால்**
**பசிதம் என்றும் உரைப்பரால்** (பேரூர்ப்புராணம்)

என்னும் பேரூர்ப்புராணப் பாடல் திருநீற்றின் பெருமையைக் காட்டுகின்றது.

1. திருநீறு - ஆன்மாக்களின் பாவங்களை எல்லாம் நீறு செய்வதனால் திருநீறு – பசுமம்.

2. விபூதி - (வி-மேலான பூதி- ஐசுவரியம்) மேலான ஐசவரியத்தைத் தருவதால் விபூதி. இங்கு மேலான ஐசவரியம் என்பது முக்திப் பேறு என உணரலாம்.

3. பசிதம் - அறியாமை அழியும்படி சிவஞானமாகிய சிவ தத்துவத்தை விளக்குவதால் பசிதமாகிறது.

4. சாரம் - ஆன்மாக்களின் மல, மாசினைக் கழுவுவதால் சாரம்.

5. இரட்சை - ஆன்மாக்களைத் துன்பத்தினின்றும் நீக்கி இரட்சிப்பதனால் இரட்சையாகிறது.

மனிதனுக்கு மிகவும் தேவையானவை நல்வாக்கு, இனிய பால்சோறு, நல்லார் இணக்கம், உயர்ந்த நற்குணங்கள், குறைவில்லாத செல்வம் இவை ஐந்தும் 'சிவாய நம' என்று ஓதித்திருநீறு தரிப்பதனால் எளிதில் உண்டாகும். இக்கருத்தை இராமலிங்க அடிகளார்,

**பாடற்கினிய வாக்களிக்கும்**
**பாலும் சோறும் பகிர்ந்தளிக்கும்**
**கூடற்கினிய அடியவர்தம்**
**கூட்டமளிக்கும் குணமளிக்கும்**
**ஆடற்கினிய நெஞ்சே நீ**
**அஞ்சேல் என்மேல் ஆணை கண்டாய்**
**தேடற்கரிய திருவளிக்கும்**
**சிவாய நம என்றிடு நீறே** (திருவருட்பா)

என்று போற்றுகின்றார். "நீறில்லா நெற்றி பாழ்" என்ற ஔவையார் கூற்று திருநீற்றை ஒருவருக்குத் தரும்போதும் நாம் பூசிக்கொள்ளும் போதும் சிவபெருமானுடைய ஐந்தெழுத்தை அன்புடன் ஓதுதல் வேண்டும்.

நாள்தோறும் அன்புடன் ஐந்தெழுத்தை ஓதித் திருநீறு தரித்துக் கொண்டால் சிவபெருமானிடம் சிவகதியைத் தந்தருள வேண்டும் என்று வருந்திக் கேட்க வேண்டிய அவசியமில்லை. 'தருவாய் சிவகதி' என்று திருநாவுக்கரசர் பின்வருமாறு பாடுகின்றார்.

**கருவாய்க் கிடந்துன் கழலே நினையும் கருத்துடையேன்**
**உருவாய்த் தெரிந்து உன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்**
**திருவாய்ப் பொலியச் சிவாயநம என்று நீறணிந்தேன்**
**தருவாய் சிவகதி நீ பாதிரிப் புலியூர் அரனே** (4 : 94 : 6)

என்றவாறு. மார்க்கண்டேய மாமுனிவர் நீற்றினை நிறையப் பூசி நித்தமும்

நியமத்துடன் சிவ பூசை செய்தார். அதனால் பிறவியை வென்றார் என்று அப்பர் பெருமான் சுட்டும் பாடல்,

**நீற்றினை நிறையப் பூசி நித்தலும் நியமம் செய்து**
**ஆற்று நீர் பூரித்தாட்டும் அந்தணனாரைக் கொல்வான்**
**சாற்றுநாள் அற்றதென்று தருமராசற்காய் வந்த**
**கூற்றினைக் குமைப்பர் போலும் குறுக்கை வீரட்டனாரே**
(4 : 49 : 2)

என்பதாகும். உலகிலுள்ள பொருட்களை எரியிலிட்டுச் சுட்டால் சங்கைத் தவிர மற்ற எல்லாப் பொருட்களும் கருமையாகி விடுகின்றன. உதாரணமாக வெள்ளைத்துணி, வெள்ளைத் தாள் இவற்றை எரியில் இட்டால் வெந்து கரியாகிவிடுகின்றன. கரிய சாண உருண்டையை எரியவிட்டால் அது வெண்மையாகின்றது; கருமை வெண்மையாகின்றது ; இதுவே திருநீற்றின் தனிச்சிறப்பு ; எனவே இது உள்ளக்கருமையை மாற்றி ஞானஒளியை நல்கும் தெய்வத்தன்மை வாய்ந்தது.

அக்கினியால் பசுவின் சாணம் வெந்து நீறாகின்றது. அதுபோல் சிவாக்கினியால் ஆன்மாக்களின் ஆணவ மலம் வெந்து நீறாக வேண்டும். இந்நுட்பத்தைத் திட்பமாகத் தெரிவிப்பது திருநீறாகும். பசுவாழ்ந்தால் உலகம் வாழும்; அதனால்தான் திருமூலர்,

**கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை**
**மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்**
**தங்கா வினைகளும் சாரும் சிவகதி**
**சிங்காரமான திருவடி சேர்வரே** (10:பா :1666)

என்று போற்றுகின்றார். சிறப்பு வாய்ந்த பசுவுக்கு உணவு தருவது பெரும் புண்ணியம்; அதனால்தான் திருமூலர், யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை (10 : பா : 252 ) என்று சுட்டுகின்றார். பசுவைக் காத்தல் பெரும் புண்ணியம். இத்தகைய பசுவின் சாணம் வெந்து நீறாகி நமது வினைகளை நீக்குகின்றது. பசு சிவபெருமானுடைய திருமஞ்சனத்துக் குரிய ஐந்து பொருள்களையும் தருகின்றது என்று திருஞானசம்பந்தர் காட்டுகின்றார். திருநாவுக்கரசரும்,

**பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை**
**ஆவினுக் கருங்கலம் அரன் அஞ்சாடுதல்**
**கோவினுக் கருங்கலம் கோட்டம் இல்லது**
**நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே** (4 : 11 : 2)

என்று போற்றுகின்றார். பல பிறவிகளில் செய்த பெரும் புண்ணியம் இருந்தால்தான் ஒருவனுக்குத் திருநீற்றில் மெய்யன்பு உண்டாகும்.

திருநீறு உடம்பில் அணிந்து கொள்ளும் வகையன்றி மருந்தாக உட்கொள்ளும் சிறப்பும் உடையது. விதிப்படி அமைத்த திருநீற்றை உட்கொண்டால், உடம்பின் அசுத்தங்களைப் போக்கி எழுபத்தீராயிரம் நாடிகளுக்கும் வலிமையை உண்டாக்கும்.

திருநீறு தரிக்காதவர் செய்யும் தவம் முதலியன உவர் நிலத்திலிட்ட விதை முளையாது வீணாவது போல் பயன்தர மாட்டாது. தவம் செய்யும் ஆற்றல் இல்லாதவர் திருநீற்றை உள்ளன்புடன் பூசிக் கொண்டால் தவம், தானம், தருமம், விரதம் முதலிய யாவும் செய்த பயனைப் பெறுவார்கள். ஏழுகோடி மந்திரங்களும், எண்ணில்லாத தவமும், கங்கை, யமுனை, கோதாவரி, சரசுவதி, நருமதை, சிந்து, காவேரி முதலிய சிறந்த தீர்த்தங்களும், அசுவமேதம் முதலிய வேள்விகளும், திருநீறு தரும் நலத்தை நல்கமாட்டா. திருநீறு தன்னை அணிந்தாருக்கு எல்லையற்ற நலன்களை நல்கும். இதனை,

**ஏழு கோடி மந்திரமும்**
**எண்ணில் தவமும் இரு நிலத்தில்**
**ஆழமுடைய கங்கை முதல்**
**ஆகந்துக நதியும் அமரேசன்**
**வீழுந்துரகம் ஈறாம் அவ்**
**வேள்வி அனைத்தும் விளம்புங்கால்**
**தாழும் சடையோன் திருநீறு**
**தகும் பேறொன்றும் தாராவே**

(பிரமோத்திர காண்டம் - வரதுங்கராம பாண்டியர் : 1913 )

என்று குறிப்பிடுவர். மதுரையில் திருஞானசம்பந்தரும், சிவனடியார்களும் தங்கியிருந்த மடாலயத்தில் சமணர்கள் எரிகொள்ளுமாறு செய்ததற்குக் கூன் பாண்டியன் காரணமாகிச் செய்த வல்வினையால் வெப்புநோய் பற்றி வேதனை அடைந்தார். சமணர்கள் தங்கள் மந்திரங்களால் நோய் தீர்க்க முயன்று தீர்க்கவில்லை. மங்கையர்க்கரசியாரின் வேண்டுகோளுக்கு இரங்கித் திருஞானசம்பந்த சுவாமிகள் எழுந்தருளி ஆலவாய் அண்ணலின் திருக்கோயிலிருந்து திருநீற்றைக் கொண்டுவந்து,

**மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு**
**சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு**
**தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு**
**செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவாயான் திருநீறே**

( 2 : 66 : 11)

என்று திருநீற்றுப்பதிகத்தைப் பாடியருளித் திருநீற்றைப் பூசியருளியதும், வெப்பு நோய் பகலவனைக் கண்ட பனிபோல் விலகியது. இப்பதிகத்

திருக்கடைக்காப்பில், தென்னன் உடல் உற்ற தீப்பிணி தீரச் சாற்றிய பாடல் என்று வரலாற்றுச் செய்தியைக் குறிப்பிட்டுள்ளார்.

"இத்திருநீற்றுப் பதிகத்தை ஓதித் திருநீறு அணிந்தால் எல்லா நோய்களும் நீங்கப் பெறுவர் இது கண்கூடு" (கிருபானந்தவாரியார் : 2001 : 23) என்னும் வாரியார் சுவாமிகளின்கூற்று இவண் நோக்கத்தக்கது.

## நிறைவாக

திருவைந்தெழுத்தினை மனம், மொழி, மெய் துணைக்கொண்டு ஓதினால் சிவபதம் அடையமுடியும் என்பதை அடியார் பெருமக்கள் விளக்கிக் காட்டியுள்ளனர். ஐந்தெழுத்து மந்திரத்தின் வடிவமாகிய சிவப்பரம்பொருளைச் சிந்தையில் நிந்தனை செய்த நாயன்மார்களின் வரலாறு மூலமாக ஐந்தெழுத்து மந்திரத்தின் சிறப்பினை உணரமுடிகின்றது. தொட்ட இடமெல்லாம் திருநீற்று மாண்பு எங்கும் ஓங்கும் அருந்தமிழ் நூல் **பெரியபுராணம்**. துன்பம் எனும் கடலிலிருந்து கரையேறுவதற்கும், அறியாமை இருளைப் போக்கி இறையருள் பேரொளி உண்டாவதற்கும், பற்றுக்களை அறவே ஒழிப்பதற்கும், இறைவன் திருவடிப்பேற்றினை அடைவதற்கும் திருநீறு வழிகாட்டுவதைச் சேக்கிழாரின் **பெரியபுராணம்** புலப்படுத்துகின்றது. சைவநெறி திருநீறு நெறியாகவும், சைவநெறியில் வாழ்தல் திருநீற்று வாழ்வாகவும் சைவ நாயன்மார்களின் வாழ்வில் திகழ்ந்த தன்மை விளக்கம் பெறுகின்றது.

வினையின் காரணமாகப் பிறப்பெடுக்கும் ஒவ்வொரு ஆன்மாவும், இருளாகிய ஆணவமலத்தில் சிக்குண்டு தவிக்கும் என்பதையும், அத்துன்பத்தில் இருந்து மீள இறைவனின் திருவடியடைதலே கதி என்பதையும் தேவாரப் பனுவல்கள் புலப்படுத்திக் காட்டுகின்றன. தன் தலைவனிடம் உண்மையான அன்பு கொள்ளும் நாயைப் போல இறைவனிடமும் களங்கமற்ற பக்தி செலுத்தவேண்டும் என்பதையும், பிறவிப் பெருங்கடலை நீந்துவதற்கு அதுவே வழி என்பதையும் அடியார் பெருமக்கள் பாடியருளியுள்ளனர். இறைவனுக்காக உடலால் செய்யும் அறத்தொண்டுகள் இறைவனுக்கு மட்டுமின்றிப் பிற உயிர்களுக்கும் ஏதாவது ஒரு வகையில் பயன்படும் போது அவை மக்கள் சேவையாகின்றன. அப்பர் பெருமான் தம்முடைய பதிகங்களில் இத்தகைய தொண்டு நெறியையே மிகுதியாகப் பாடியுள்ளார். கிரியை நெறியின் அங்கங்களாகக் கருதப்படுகின்ற, வழிபாட்டு நெறிகளின் மூலமாக இறைவனை அடைய முடியும் என்பதையும், மனமானது தீநெறியின் கண் செல்லாது நன்னெறியின் கண் நிற்பதற்கு அதுவே வழிகாட்டும் என்பதையும் தேவாரப் பதிகங்களும் பெரியபுராணப் பாடல்களும் தெளிவாக உணர்த்துகின்றன.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

## சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா | 145.00 |
| அறிஞர் அண்ணா - மொபசான் சிறுகதைகள் - ஒப்பாய்வு | 160.00 |
| இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் | 55.00 |
| கடலடியில் தமிழர் நாகரிகம் | 55.00 |
| படைப்பு நெறிமுறைகள் | 150.00 |
| Comparative Studies in Literary Cultures | 100.00 |
| Sangam Classics : New Perspectives | 105.00 |
| கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்) | 150.00 |
| அரங்கியல் நோக்கில் கபிலர் பாடல்களில் காணலாகும் கதைமாந்தர்கள் | 100.00 |
| சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் | 55.00 |
| தமிழ் வாழ்க்கை வரலாற்றியலக்கியம் | 170.00 |
| கவிஞர் குலோத்துங்கனின் மானுடயாத்திரை காவிய வானில் புதிய தாரகை | 45.00 |
| தமிழ் நாடக வகையும் வரலாறும் | 110.00 |
| வா.செ.கு.என்ற ஆளுமையாளர் | 50.00 |
| உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன் | 45.00 |
| மருதத்தில் மக்கள் வாழ்வியல் | 40.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 1 பாயிரம் - 1 | 85.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 4 எழுத்தியல் - 2 | 140.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 2 பாயிரம் - 2 | 75.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 6 உயிரீற்றுப்புணரியல் - 1 | 125.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 7 உயிரீற்றுப்புணரியல் - 2 | 160.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 8 மெய்யீற்றுப்புணரியல் | 160.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 9 உருப்புணரியல் | 95.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 12 வினையியல் | 190.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 13 பொதுவியல் - 1 | 140.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 16 இடைச்சொல்லியல் | 90.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 17 உரிச்சொல்லியல் | 55.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 18 தொல். நன்னூல் | 120.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் (ம.ப.) | 65.00 |
| வல்லம் புராணம் | 200.00 |
| இதழியல் உலகம் | 120.00 |
| தமிழும் தமிழ்க் கற்பித்தலும் | 60.00 |
| படைப்பிலக்கியம் - விளம்புநிலை மக்கள் ஆய்வுநோக்கு | 100.00 |
| பழந்தமிழும் கிளைமொழிகளும் | 65.00 |
| உலக மொழிகளில் தமிழ்ச்சொற்களும் இலக்கணச்கூறுகளும் | 85.00 |
| அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும் | 115.00 |
| பெயரியல் | 55.00 |
| தமிழ இகலாம் உருவாக்கமும் திருக்குர் ஆன் தமிழ் வாசிப்பும் ஆய்வியல் சிந்தனை | 45.00 |
| தலித் அறம் | 45.00 |
| பொதுவுடைமை இயக்க இதழ்கள் | 115.00 |
| தமிழில் இதழியல் | 270.00 |

திருமுறைகளில் அகப்பொருள் மரபுகளும் தொண்டு நெறிகளும்